2846.

# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: VII NO: 3

JUNE 12th 1985

©

D
V211, 31 N85
N85 . 7 . 3
136402

வெளியீடு 14-3-1986 Issued 14—3—1986

718/

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூன் 12, 1985 - தொகுதி VII எண் 3

Wednesday, the 12th June 1985 - Volume VII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly, Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

விலை : ரூ. 3-00 காசுகள்] [Price Rs. 3-00 paise

D
V... ...

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
13640 2-1
சென்னை 600 008

உள்ளடக்கம்

பக்கங்கள்

1 வினாக்கள் — விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள். . ... .. 559—605

2 தகவல் கோரல்—
(அ) யூனியன் பிரதேசங்களாக பெரு நகரங்கள் ஆக்கப்படும் என்ற திட்டத்தின் கீழ் சென்னை நிலை குறித்து. 605—607
(ஆ) மானியக் கோரிக்கைகளுக்கான குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டி அனுப்புதல் 607

3 கவன ஈர்ப்புகள்—
(அ) குறிஞ்சிப்பாடியிலுள்ள சிங்கபுரி நெசவாளர் சங்கத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் 607—611
(ஆ) பாபநாசம் அணையிலிருந்து கன்னடியன் கால்வாயில் தண்ணீர் திறந்து விடாததால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை 611—615

4 வரவு-செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு—
தொடர்ச்சி கோரிக்கை எண் 28—சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் 615—718

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் 615, 616, 699—718
திரு. ஜே. எம். தங்கமணி .. 616—626
திரு. எப். எம். இராசரத்தினம் .. 626—630
திரு. அ. செல்வராசன் .. 630—641
திரு. கூடலூர் இ. வி. வேலு .. 641—647
திரு. எம். செல்லமுத்து ... 647—656
திரு. மா. சின்னராசு .. 656—664
திரு. கே. அன்பழகன் .. 665—669
திரு. சோ. கலிதீர்த்தான .. 669—674
திரு. சா. துரைசாமி .. 674—681
திரு. கு. சுப்பராயன் .. 681—687
டாக்டர் கே. சமரசம் .. 687—693
திரு. டி. வெங்கடரெட்டி .. 693—698

5 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 719

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**1985, ஜூன் 12, புதன்கிழமை.**

**வைகாசி 30, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு-2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி".

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சாப்டூரில் வழங்கப்பெற்ற 2. சி. பட்டாக்கள்.

**234—(*வினா எண் 367)—திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை மிகுந்த எண்ணிக்கையில் 2—சி. பட்டா பெற்ற தனியார்கள் மதுரை மாவட்டம் சாப்டூரில் உள்ளனரா ?

(ஆ) அவ்வாறு மிகுந்த எண்ணிக்கையில் பெற்றுள்ளதால் பல தவறுகள் நடந்துள்ளதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாவட்ட ஆட்சியருக்கு புகார் வந்துள்ளது.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2-சி பட்டா தரவேண்டும் என்றால், அந்தப் பகுதியினுடைய ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானம் தேவைப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு வருகின்ற வரை தீர்மானம் போடக்கூடாது என்று அரசு உத்தரவிட்டு இருந்தும், இப்போது பல இடங்களில் 2-சி பட்டாக்களைப் பெற்று விடுகிறார்கள். ஆகவே அப்படி வழங்கப் பட்ட 2-சி பட்டாக்களை நீக்கவும், அப்படி பட்டா வழங்கிய அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று விதிமுறைகளுக்கு மாறாக எங்கேனும் நடைபெற்று இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், விசாரணை செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கும். தேவைப் பட்டால் 2-சி பட்டாவை ரத்து செய்வதற்கும் அரசு முயலும்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காடுகளை வளர்ப்பதற்கு தனியார்களுக்கு 2-சி பட்டா வழங்குகின்ற கொள்கை அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையின் பேரில் 2-சி பட்டா வழங்கப்படுகிறது. ஆனால் ரிசர்வ் பாரஸ்டைப் பொறுத்தவரையில் தரப்படுகிறதா என்பதைப் பற்றி விளக்கக் குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விளக்கம் தரப்படும்.

### கேத்தனூரில் கால்நடை மருத்துவமனை.

235—(*வினா எண்—418) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் பொங்கலூர் ஒன்றியத்தில் கேத்தனூரில் கால்நடை மருத்துவ நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதியாக 50 ஆயிரம் ரூபாய் பங்கு நிதியாக அளிக்கப்பெற்றிருக்கிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியும் வர இருக்கிறது. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு 1985-86-ல் கட்டி முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கலூர் ஒன்றியம் மட்டுமல்லாது, எல்லா இடங்களிலும் கால்நடை மருத்துவ நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில்தான் இருந்து வருகின்றன. தன்னிறைவுத் திட்டத்தை எடுத்தது போல், சுமார் மூன்று ஆண்டுகளில் எல்லா இடங்களிலேயும் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற மருத்துவ நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் விசேஷ செயற்குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எந்த கருத்துருவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், அதனை ஆய்ந்து தக்க விடை சொல்லப்படும்.

**திரு. செ. இரத்தினவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் புதிதாக கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டுவதற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? அப்படி உள்ளன என்றால், எத்தனை இடங்களில் கட்டுவதற்கு திட்டங்கள் இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி. எனவே தனிக் கேள்வி போடவும்.

[1985 ஜூன் 12

## தஞ்சை மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிப்பு.

**236—(*வினா எண். 832)—திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இன்றையதினம் உற்பத்தியாகின்ற பாலின் அளவு எவ்வளவு? இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற பால் வேறு மாவட்டங்களிலிருந்து வாங்கப்படுகிறதா? இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் இதை விரிவுபடுத்தும் நோக்கம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலவரப்படி, தஞ்சை நகரத்திற்கு 15 ஆயிரம் லிட்டர் பால் நாள்தோறும் பாலிதீன் பையிலே விநியோகிக்கப்படுகிறது. ஆனால், தஞ்சையை ஒட்டி இருக்கின்ற பகுதிகளில் ஏறத்தாழ 6,000 லிட்டர்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, இவைகளை எல்லாம் அனுசரித்து, இன்றைக்கு இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் உருவாக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து அது செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலே தஞ்சை மாவட்டத்தில் இந்த இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் வருகின்ற நேரத்தில் அங்கே இருக்கிற, குறிப்பாக தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் இன்றைய தேவை ஒன்றரை லட்சமாக இருக்கிறது. 1989-90 ஆம் ஆண்டில் அது இரண்டு லட்சமாக உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவைகளை நிறைவேற்றுகின்ற வகையில்தான் இன்றையதினம் இரண்டாவது பால்



1985 ஜூன் 12]

பெருக்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1989-90-ல் இந்த இரண்டாவது பால் பெருக்குத் திட்டக் காலத்தில் சுய தேவையை இந்த மாவட்டங்கள் மூன்றும் எய்தும்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பால் பெருக்குத் திட்ட அடிப்படையில் எந்தெந்த மாவட்டங்களிலே புதிதாக பால் பவுடர் தொழிற்சாலை உருவாக்க அரசு முன்வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இப்போது இல்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் 'சில்லிங் பிளாண்ட்' குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சில இடங்களில் அது இருக்கிறது. அந்த இடங்களிலே இருக்கின்ற அந்த 'சில்லிங் சென்டர்கள்' விரிவுபடுத்தப்படும். குறிப்பாக இந்த மூன்று மாவட்டங்களில், திருச்சி மாவட்டத்தில் கரூர், பெரம்பலூர் ஆகிய இரண்டு இடங்களிலேயும், புதுக்கோட்டையிலும், தஞ்சையில் பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை ஆகிய இரண்டு இடங்களிலும், மொத்தம் ஐந்து இடங்களில், (1) பட்டுக்கோட்டை, (2) மயிலாடுதுறை, (3) கரூர், (4) பெரம்பலூர், (5) புதுக்கோட்டை ஆகியவற்றில் 20,000 லிட்டர் திறன் கொண்ட சில்லிங் சென்டர் இரண்டு கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க இன்றைக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக புதுக்கோட்டையிலே சில்லிங் சென்டர் தொடங்கப்பட இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் திட்டத்திலே அங்கே விஸ்தரிக்கப்பட்டு

இருப்பதால், மேலும் அரசாங்கம் பரிசீலனை செய்து, பால் பவுடர் தொழிற்சாலையை தஞ்சையில் ஏற்படுத்துவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தில், இரண்டு லட்சம் அளவு பால் உற்பத்தி செய்தாலும் கூட, அது அங்கே இருக்கிற மக்களுக்கான தேவைக்கே சரியாக இருக்கிற காரணத்தால் பால் பவுடர் தொழிற்சாலை தேவை இல்லை என்று தற்போது முடிவு எடுத்து இருக்கிறது. அப்படி ஏதாவது உபரியாக வந்தால் கூட, இன்றைக்கு இரண்டு பால் பவுடர் தொழிற்சாலைகள், ஒன்று ஈரோட்டிலும், இரண்டாவது சேலத்திலும் இருக்கின்றன. சேலம், ஈரோடு ஆகியவை அந்த மூன்று மாவட்டங்களுக்கு அருகிலே இருக்கின்ற காரணத்தால் முடிந்த அளவுக்கு உபரியாக இருக்கும் பாலைக் கொடுத்து பால் பவுடராக உருவாக்கலாம். அப்படி உபரியாக வரும் நேரத்தில், பால் பவுடர் தொழிற்சாலை வைக்க அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, வினா எண்கள் 237, 238 மற்றும் 239 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### தேசிய கல்வித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.

240—(*வினா எண் 713)—**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தேசிய கல்வி கடன் தொகைகளில் 1985 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய வசூலிக்க வேண்டிய நிலுவை எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, (அ) ரூ. 467.59 இலட்சம்.

(ஆ) உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





### சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு பட்டப்படிப்பு.

241—(*வினா எண். 820) **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐந்தாண்டு சட்டப்படிப்பு தமிழகத்தில் எந்தெந்த சட்டக் கல்லூரிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) முதல் இரண்டு ஆண்டுகளுக்கான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, (அ) ஐந்தாண்டு சட்டப்படிப்பு 1983-84 ஆம் கல்வியாண்டு முதல் சென்னை, மதுரை, திருச்சி, மற்றும் கோவை சட்டக் கல்லூரி களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) பாடத்திட்டத்தின் பகுதிகள் பல சிறந்த புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. அவைகள் தொகுக்கப்பட்டு ஒரே புத்தகமாக இல்லை. குறிப்பிட்ட புத்தகங்களின் படிகள் கல்லூரி நூலகங்களில் உள்ளன. தவிரவும் ஆசிரியர்கள் வகுப்புகளில் விரிவுரையுடன் பாடக் குறிப்புகள் தருகின்றனர். பாடத் திட்டத்தின்படியான புத்தகங்கள் அச்சில் உள்ளதாக அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் அறிவித்துள்ளது. அவற்றை விரைவில் வழங்குமாறு 'அம்மன்றத்திடம் கேட்கப்பட்டுள்ளது. மேலும் பாடக் குறிப்புகள் மாணவர்களுக்கு கல்லூரியிலேயே அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-10)

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, வக்கீல் படிப்பிற்குத் தேவையான புத்தகங்களை காலாகாலத்தில் அச்சடித்து வழங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன? சாதாரணப் பள்ளிப் புத்தகங்கள் அல்ல இவை. ஓரளவுக்குச் சிறந்த முறையிலே தயாரிக்கப்படுகிற புத்தகங்களாக இருக்கிற காரணத்தினால் தக்க காலத்திலே அவைகளைத் தயாரித்துக் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? கோவை சட்டக் கல்லூரிக்கு போதிய கட்டட வசதி இல்லாத காரணத்தினால் வாடகைக் கட்டடத்திலே இருப்பதால் பல கஷ்டங்கள்

இருப்பதால் அதைப்பற்றி பல தடவை எடுத்துத் தெரிவித்தும் கூட நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலில் சொல்லியது போல அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் அந்தப் புத்தகங்களை அச்சடித்துத் தருகின்ற வேலையைச் செய்துகொண்டு இருக்கிறது. அவை வந்தவுடன் அந்தப் புத்தகங்களை அவர்களுக்குத் தரமுடியும். ஆனால் இதற்கிடையிலேயே பாடக்குறிப்புகளை கல்லூரிகளிலே இருப்பவர்கள் தயாரித்து மாணவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப் படிப்பிற்கு அவர்கள் குறிப்பிட்ட பாடப்புத்தகம் என்று பிரஸ்கிரைப் செய்யவில்லை. பல்வேறு புத்தகங்களிலே உள்ள செய்திகளைத் தொகுத்து புத்தகங்களாகத் தருகிறார்கள். அதனால்தான் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. இந்த ஐந்து ஆண்டுகள் சட்டப் படிப்பு என்பது அகில இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் ஆலோசனையின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கருத்து, பல்வேறு பட்டப்படிப்புகளைப் படித்துவிட்டு பல்வேறு முயற்சிகளை அவர்கள் செய்துவிட்டு வேறு வேலைக்குப்போக முடியாமல் கடைசியிலே வக்கீல் ஆக வரலாம் என்று சொல்லி லா காலேஜிலே அட்மிஷன் வாங்கிக்கொண்டு இங்கே சேருகிற காரணத்தினால் சிறந்த வழக்கறிஞர்கள் வரமுடியாமல் போய்விடுகிற காரணத்தினால்தான் பிளஸ் டூ படித்துவிட்டு வக்கீலாகத்தான் போகவேண்டுமென்று நினைக்கிறவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சிறந்த முறையிலே பாடங்கள் சொல்லித் தர வேண்டுமென்ற முறையிலே—அதுவும் இரண்டு ஆண்டுகள் அல்ல, ஐந்து ஆண்டுப் படிப்பு என்ற முறையிலே—கொண்டுவந்து சிறந்த வழக்கறிஞர்களாக உருவாக்கவேண்டுமென்ற முறையிலே நல்ல நோக்கத்தோடுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் மொத்தத்திலே அவர்களுக்கு ஒரு ஆண்டு கூட குறைகிறது என்று கருதுகிறேன். ஆகவே இடையே அப்படி ஒரு சிக்கல் ஏற்பட்டது. அதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே பாடப் புத்தகங்கள் வந்தவுடன் பிரச்சினை தீர்ந்துவிடும். கோவை சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே அதற்கு இடம் கிடைப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. சட்டக் கல்லூரியை குறிப்பிட்ட ஒரு இடத்திலே வைக்கலாம் என்று



முயற்சி செய்தபோது பக்கத்திலே உள்ளவர்கள் அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே அது இல்லாமலிருப்பது நல்லது என்று அவர்கள் சொல்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவிலே ஒரு இடத்தை நாம் எடுத்துக்கொண்டு கட்டடம் கட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து தரலாம்.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, தண்டனைபெற்றுச் சிறை கைதிகளாக இருப்பவர்கள் சட்டப் படிப்பு படிக்க முன்வருகிறபோது அவர்களுக்கு சட்டக் கல்லூரியில் அனுமதிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இது ஒரு ஆபத்தான கேள்வி. சிறைக்கு ஏன் போனார்கள் என்றால் சட்டத்தை மீறித்தான் உள்ளே போனார்கள். அவர்கள் சட்டக் கல்வி படிக்க விரும்புகிறார்கள் என்றால் ஏன் விரும்புகிறார்கள்? முதலிலே சட்டப்படிப்புப் படிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புத் தரலாமா என்பதே தீவிரமாக யோசிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் முன்னுரிமை பற்றிப் பேச வேண்டும்.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, ஒரு இடத்திலே இருந்த சட்டக் கல்லூரி இன்றைக்கு நான்கு இடங்களிலே நாம் அவைகளை ஆரம்பித்து இருக்கிறோம். தனியார் ஒருவர்கூட உயர்நீதிமன்றத்தினுடைய உதவியைக் கொண்டு இப்போது சேலத்திலே ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பித்திருக்கிறார். இந்தக் கல்லூரிகளிலே எல்லாம் படித்து வெளியே வருகின்ற மாணவர்கள் நமக்குப் போதுமானதாக இருக்கும் காரணத்தினால் வேறு இடங்களிலே ஆரம்பிக்க வேண்டியதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே வேறு நல்ல கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமானால் ஆரம்பிக்கலாம். அதற்கு நாம் ஆதரவும் தந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. கு. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்குரிய பாடப் புத்தகங்கள் கிடைக்காததால் காலதாமதம் ஏற்பட்டிருப்பதால் அந்த மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குகிற நேரத்திலே தாராள மனப்பான்மை கடைப்பிடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது ஒன்றிரண்டு மாணவர்கள் பாதிக்கப்படுகின்ற பிரச்சினையல்ல. பொதுவாக எல்லா மாணவர்களும் பாதிக்கப்படுகிற பிரச்சனையாக இருப்பதால் அதை அவர்கள் கணக்கிலே எடுத்துக் கொள்வார்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று நிறுவுவதற்கான உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது அங்கே பலவிதமான புரபசனல் கோர்ஸ் களுக்கான கல்லூரிகள் இருக்கின்றன. அதேமாதிரி குமரி மாவட்டத்தில் பார்க்கிறபோது புரபசனல் கோர்ஸ் கல்லூரி என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒன்று கூட இல்லை. மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக அந்த அமைச்சரை அணுகி கேட்கும்போது அதற்கு பல கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். விவசாயக் கல்லூரி வேண்டும் என்று கேட்டால் அதற்கும் பல கோடி ரூபாய் செலவாகும் என்று அந்த அமைச்சர் கூறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குமரி மாவட்ட மக்கள் மீது கருணை வைத்து சட்டக்கல்லூரி ஒன்றை குமரி மாவட்டத்திற்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திற்கு சட்டக்கல்லூரி ஒன்று வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் இந்தக் கேள்வியை பார்த்தால் மற்ற எல்லா மாவட்டங்களிலும் நாங்கள் அமைத்து விட்டது போல்வும், குமரி மாவட்டத்கில் மட்டும் அமைக்கவில்லை போலவும் தெரிகிறது. அந்த மாதிரி அவர்கள் நினைப்பார்களானாலும் அல்லது அந்த கேள்வியைப் படிப்பவர்கள் ஆனாலும் அது தவறு. எல்லா மாவட்டங்களுக்கும் சட்டக் கல்லூரி தரவில்லை. இப்போது



சென்னை, திருச்சி, மதுரை, கோவையில் இருக்கிறது. சேலத்தில் ஒன்று தனியார் ஒருவர் ஆரம்பித்து இருக்கிறார். நாங்கள் ஆட்சிக்கு வருகிறபோது சென்னையில் மட்டும்தான் இருந்தது. ஆகவே சென்னையில் மட்டும் இருப்பதை நான்கு பிராந்தியமாகப் பிரித்து நான்கு இடங்களுக்கு போகட்டும் என்று நாங்கள் பிரித்தோம். அது கூட அந்த அந்த இடத்திற்குப் போகவேண்டும் என்ற காரணத்தை விட மிக முக்கியமான காரணம் இவர்கள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்கிற காரணத்தால் லா காலேஜ் என்பது * * அமைந்து இருக்கிறது. ஆகவே இத்தனைபேரை ஒரே இடத்தில் வைப்பதை விட நான்காக பிரித்து விட்டால் இந்தப் பிரச்சினை அதிகமாக வராது என்ற காரணம் தான் முக்கியமான காரணம். அந்த காரணத்திற்காகத் தான் நான்காக பிரித்து அந்த அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு ஒரு சட்டக் கல்லூரி வந்தது போலவும் இருக்கும், இதனால் இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக நமக்கும் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. இதுதான் முக்கியமான காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. சட்டக் கல்லூரிக்கு இடம் தேடி போகிற இடங்களில் இந்த இடத்தில் சட்டக் கல்லூரி வைக்காதீர்கள் என்று சொல்லுகிற நிலைமை தான் பல பகுதியில் இருந்து கொண்டு வருகிறது. ஆனால் இப்போது மாறி வருகிறது. அதுவும் குறிப்பாக இந்த ஐந்து ஆண்டு சட்டப் படிப்பு வந்ததற்குப் பிறகு சட்டக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நல்ல ஒழுக்கமும், கட்டுப்பாடும் இருந்து வருகிறது. இனி நல்ல வழக்கறிஞர்களை பெறக்கூடிய நிலையில் நம்முடைய சட்டக் கல்லூரிகள் பயன்படும். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்குத் தரக்கூடாது என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. நான்கு இடங்களில் இருக்கிறது. அது போதும் என்ற காரணத்தால் மற்ற மாவட்டங்களில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நாம் கருதுகிறோம். அதிலே குமரி மாவட்டம் வருகிறது. வேறு கல்லூரிகள் ஆரம்பிக்கக்கூடாதா என்று கேட்டால் அது தனித் தனியாக நாம் பரிசீலிக்க வேண்டிய ஒன்று. பாலிடெக்னிக்குகளை நிறைய அங்கே தந்து இருக்கிறோம். நிறைய ஆரம்பித்து இருக்கிறார்கள். அது தான் குமரி மாவட்டத்திற்கு உண்மையான பயனைத் தரப்போகிறது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : லா காலேஜ் * * என்று கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் மறைத்து பேச வேண்டிய நிலை இல்லாமல் யதார்த்தமான நிலையில் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தது உண்மையா? இல்லையா? இப்போது அப்படி இல்லை என்பது உண்மையா? இல்லையா?

ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மோசமாகப் பேசவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. உயர்க்கல்வி ஸ்தாபனங்களில் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளை நாம் ஒழுங்காக ஆராய்ந்து பார்க்கிறபோது அங்கே நாமே சொல்கிறோம், அங்கே ஒழுங்காக கல்லூரி நடைபெறுவது இல்லை, போராட்டம் நடந்து வருகிறது, போராட்டங்களால் கல்லூரிகள் மூடப்படுகின்றன என்பதை எல்லாம் பார்க்கிறபோது உயர்க்கல்வி ஸ்தாபனங்களைப் பற்றி நாம் பேசுகிறபோது இந்தக் கருத்தைத்தான் நாம் எல்லோரும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அந்தக் கருத்தை நாம் புரிந்து கொண்டால் தான் உயர்க் கல்வி ஸ்தாபனங்களை திருத்த முடியுமே தவிர அதை நாம் மூடி மறைத்துக்கொண்டு போனால் உயர்க்கல்வி ஸ்தாபனங்களை நாம் அபிவிருத்தி செய்யவோ அதை நல்ல முறைக்கு கொண்டுவரவோ முடியாது. நான் சொன்னது, இரண்டு, மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இருந்த நிலைமைகளைச் சொன்னேன். அப்போது நாம் இதற்கு என்ன பரிகாரம் என்று பார்க்கிறபோது உடனடியாக இப்படிச் செய்தால் நல்லதாக இருக்கும் என்று செய்தோம். உதாரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் நாம் இன்ஜினியரிங் கல்லூரி ஆரம்பிக்கும்போது அதைப் போலவே தான் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கோயம்புத்தூர் கல்லூரியிலே. அந்தப் பகுதியைச் சார்ந்த மாணவர்களுக்கும், அங்கேயிருக்கின்ற மாணவர்களுக்கும் தகராறு வருகிறது என்று வருகிறபொழுது, சரி, ஒரு என்ஜினியரிங் கல்லூரியையும் ஆரம்பிக்கலாம், இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்று சொல்லி நாம் அங்கே சொல்லியிருந்தோம்.

(முற்பகல் 9-20)

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உயர்க் கல்வி ஸ்தாபனங்களிலே பல இடங்களிலே சாதி அடிப்படையிலேகூட தகராறுகள் நடைபெறுகின்றன என்று இந்த மாமன்றத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். கொலைகள் நடைபெற்றிருக்கின்றன, அதையும் நான் இங்கே சொல்லியிருக்கின்றேன். ஆகவே, அவைகளையெல்லாம், இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி பரிசீலனை செய்தால்தான் நாம் பிரச்னைகளைத் தீர்க்க முடியுமே தவிர, அவைகளை மறைத்துக் கொண்டே போவதன் காரணத்தால் பாவத்தான் செய்யும். நாம் இதற்காக யாருக்கும் பயந்துகொண்டு இந்தக் காரியங்களிலே தலையிட விரும்ப வேண்டியதும் இல்லை. மற்றக் கட்சிக்காரர்களும், எதிர்க்கட்சிகளும் ஒத்துக்கொள்ளுகின்ற அளவிற்கு இந்தப் பிரச்னைகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் சர்வ கட்சிக் கூட்டம் போட்டு, இன்னும் சொல்லப்போனால் Violant Acts, வன்முறைச் சம்பவங்கள் கல்லூரியில் நடந்தால் போலீஸ் நடவடிக்கை எடுக்கலாம் என்ற முடிவை சர்வ கட்சிக் கூட்டத்தில் நாம் எடுத்திருக்கிறோம். அதெல்லாம் எந்தக் காரணத்தால் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எல்லோரும் சேர்ந்து கண்டிக்கின்ற பொழுதுதானே இந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகக் குறைந்திருக்கிறது. ஆகவே, நாம் உண்மை நிலையை எடுத்துப் பேசியிருக்கின்ற காரணத்தினாலே தான் வளர்ச்சி ஏற்படுகிறது.

**திரு. கு. ரமணி** : * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நாட்டிலே உள்ள நடைமுறையைத் தான் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. திரு. கு. ரமணி அவர்கள் குறுக்கிட்டதில் இருந்து, இதுவரை நடைபெற்ற விவாதங்கள் அனைத்தும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. செ. இரத்தினவேலு** : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மையப் பகுதியாக உள்ள திருச்சியிலே தனியார் சட்டக் கல்லூரி அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி அனுமதி அளிப்பதாக உத்தேசமில்லை.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்திய வரலாற்றுப் பாடம்.

242—(*வினா எண் 886)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய வரலாற்றில் தமிழகம் பற்றிய செய்திகள் மிகக் குறைவாக உள்ளதென்றும், அது நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றும் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியா முழுவதும் இருக்கின்ற வரலாற்று நூல்களில், தமிழகத்தைப் பற்றிய வரலாற்றுப் பகுதிகளில் உரிய அளவிற்கு, அதுவும் குறிப்பாக சுதந்திரப் போராட்ட கால வரலாற்றில் தமிழகத்தின் பங்கு, ஆரம்ப கால வரலாறு போன்றவை சேர்க்கப்படவில்லை என்ற குறையை வரலாற்று ஆசிரியர்களே பல்வேறு காலங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் மாநில அரசும் கடந்த காலங்களில் தமிழக வரலாற்றை முழுமையாக எழுதுவதற்கு ஒரு குழுவையும் நியமித்திருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு இன்னும் கூடுதலாக தமிழகத்தின் வரலாற்றை இந்திய வரலாற்றுப் பகுதிகளில் சேர்ப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, புது டெல்லி தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இந்திய சுதந்திர இயக்கம் பற்றி பள்ளி வகுப்புகளில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் திட்டத்தினை தேசிய அளவில் செயல்படுத்தி வருகிறது. அதன்படி தற்போதைய பாடப்புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் பல மாநிலங்களின் பாடப்புத்தகங்களில் தென்னிந்தியாவின் பங்கு



குறித்து மிகக் குறைந்த அளவிலேயே வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து மைய அரசு எவ்வித ஆணையும் இதுவரை பிறப்பிக்கவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பிற மாநிலங்களில் இருக்கிற பாடப் புத்தகங்களில் தமிழகம் பற்றிய வரலாறு குறைந்த அளவில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். அதை உரிய அளவில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் வற்புறுத்துவோம் என்பது மட்டுமல்ல ; அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு நல்ல நிலைமை எல்லா கல்வி நிலையங்களிலும் இருக்கும். எல்லா மாநில மக்களும் பிற மாநிலங்களைப் பற்றி தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கும். அப்படித் தெரிந்துகொள்ளாத நிலையிலே இந்தியா ஒரே நாடு என்கிற ஒரு கொள்கைக்குப் பொருந்தி வராது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திர வரலாற்றில் தமிழகத்தின் பங்கு என்ற தலைப்பில் குறைந்தபட்சம் தமிழ்நாட்டிலே பயில்கின்ற மாணவர்களுக்காவது அனைத்துப் பள்ளிகளிலும் பாடப் புத்தகமாக, தனி வரலாற்று நூலை இயற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியும் அதிலே தமிழ் நாட்டின் பங்கு பற்றியும் போதுமான அளவுக்கு நாம் பல்வேறு வகுப்புகளிலே, பல்வேறு புத்தகங்களிலே இடம் பெறச் செய்திருக்கிறோம். தேசிய விடுதலைப் போராட்டத்தில் நம்முடைய பங்கைப் பற்றி மாணவர்கள் நல்லமுறையிலே தெரிந்து கொள்ளவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைக் காலம் முதல் நிகழ் காலம் வரையிலான தமிழக வரலாற்றை எந்தவிதமான விருப்புவெறுப்புற்ற வரலாற்றுக்

கண்ணோட்டத்தோடு தொகுப்பதற்குரிய தகுதியும் திறமையும் வாய்ந்த அறிஞர் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு தனிக் கேள்வி போட்டால் முழுமையான விவரம் தரலாம். காரணம், அதுபற்றி நாம் முயற்சி எடுத்து இரண்டு மூன்று புத்தகங்களும் வெளி வந்திருக்கின்றன. மீதிப் புத்தகம் எப்படி வரும், என்ன என்பது பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காங்கிரஸ் பேரியக்கம் தனது நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்குத் தரப்படுகின்ற வரலாற்றுப் புத்தகங்களில் காங்கிரஸ் பேரியக்கத்தின் வரலாற்றைப் பற்றியும் தெரிவிக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. காரணம், இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி தெரிந்து கொண்டால்தான் இந்திய சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வும் தகுதியும் அதற்கேற்ப தம்மைத் தயாரித்துக்கொள்கிற நிலைமையும் ஏற்படுகிற காரணத்தாலே நாம் அதை விரும்புகிறோம்.

காங்கிரஸ் பேரியக்கம் பற்றி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டாடுகிறீர்கள். மாணவர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் தெரிந்து கொள்கிற வகையிலே பிரமாண்டமான முறையிலே கொண்டாடப் போவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, எல்லோரும் தெரிந்துகொள்ள வாய்ப்பு அங்கே இருக்கிறது. அதற்கு மாறாக, அங்கே ஒரு [illegible] என்ற அடிப்படையிலே வகுப்புகளிலே சொல்ல ஆரம்பி[illegible]மானால் அது தவறான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே அது



தவிர்க்கப்பட வேண்டும். மற்றும் காங்கிரஸ் பேரியக்கம் விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்டது என்ற உண்மையை யாரும் மறைக்க முடியாது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் பொறுத்து, தமிழகத்திலேயே அந்த வரலாற்றுச் சிறப்புகளை அதற்காக தியாகம் செய்தவர்கள் வரலாற்றை, பாடப் புத்தகங்களில் வைப்பதற்குத் தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஆரம்பக் கல்வியில் இருக்குமா? அல்லது உயர்தரக் கல்வியில் இருக்குமா? அல்லது கல்லூரிக் கல்வியில் இருக்குமா? எந்தக் கல்வி அளவிலே அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர அரசு விரும்புகிறது. இன்றைக்கு நூற்றாண்டு விழா அகில இந்திய ரீதியிலே காங்கிரஸ் கொண்டாடுகிற நாளிலே, காங்கிரஸ் கட்சியிலே சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள், தந்தை பெரியார் போன்றவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு நம்முடைய மாநில முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குக் கூட அந்த விழாவுக்கு வருமாறு அழைப்பு அனுப்பியிருந்தார்கள்; அவர்களுக்கும் சிறப்பு அழைப்பு வந்தது. ஆகவே அப்படிப்பட்ட வரலாற்றிலே கட்சிப் பாகுபாடு இல்லாமல் சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்டு சிறைபுகுந்து தங்களை இந்த நாட்டுக்காக அர்ப்பணித்த தியாக வரலாற்றைச் சிறப்பாக பாட நூலிலே வைப்பதற்கு, எந்தத் தகுதியை அரசு நிர்ணயம் செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் 3 ஆம் வகுப்பிலேயிருந்து சொல்லித் தரப்படுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே இல்லாத அளவுக்கு அதிகப்படியான அளவில் நாம் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய கருத்துக்களையும் தலைவர்கள் பற்றிய கருத்துக்களையும் சொல்லித் தந்திருக்கிறோம். நாம் சொல்லித் தந்திருக்கிற தலைவர்களுடைய பெயர்கள் கூட பல காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். அந்த அளவிற்கு மாணவர்களுக்கு நாம் சொல்லித் தந்து கொண்டிருக்கிறோம். இதிலே அவர்கள் நாட்டுக்காக செய்த தியாகமும்

மாணவர்களுக்குத் தெரிய வேண்டுமென்று விரும்புவதற்குக் காரணம், இப்பொழுதும் இந்தத் தேச பக்தி உணர்வும் தியாக மனப்பான்மையும் மாணவர்களுக்கு இருக்க வேண்டுமென்று கருதுகிறோம். ஆகவே, அந்த உணர்வை வளர்ப்பதற்காக அந்த வரலாற்றைச் சொல்லித் தர விரும்புகிறோம், அந்தத் தலைவர்களைப்பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

(முற்பகல் 9-30)

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்கத்தின் வரலாற்றில் தீவிர வாதம், மித வாதம் என்று போராட்டம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், தீவிர வாதம் வெல்ல வேண்டுமென்று தமிழக காங்கிரஸ் முன்நின்று போராட்டம் செய்து, சூரத்தில் அடிதடிகள் எல்லாம் நடந்த வரலாற்றை தமிழக வரலாற்றுப் பாடத்தில் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட புத்தகத்தில் ஒரு இயக்கத்தின் வரலாற்றை புத்தகமாக ஆக்க முடியாது. அதிலே பல்வேறு செய்திகளைச் சொல்ல வேண்டும். அதிலே இவற்றைச் சொல்ல வேண்டும். அவற்றைச் சொல்வதற்குக் காரணம், இந்தப் பாட புத்தகத்தின் மூலம் மாணவர்களுக்கு தியாக உணர்வும், தேசபக்தி உணர்வும் வளர வேண்டுமென்பதற்காக—இத்தகைய தேசபக்தி விடுதலை இருக்கவேண்டும் என்பதல்ல—விடுதலைப் போராட்டத்திற்கு தேவைப்படுகின்ற அல்லது விடுதலை போராட்ட இயக்கத்தைப் பொறுத்தவரை அறிந்துகொள்வது இப்போதைய தேவை, அது ஒவ்வொருவருக்கும் தேவை என்ற அடிப்படையில் நம் கல்வி நிறுவனங்களிலே படிக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் அந்தப் போராட்ட உணர்வு வரவேண்டும் என்பதற்காக நம்முடைய வரலாற்றிலே ஒரு பகுதியாக இருக்கின்ற அந்த தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நாம் அதைச் சேர்த்து வருகிறோம்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய விடுதலைப் போராட்டத்திற்காக பாடுபட்ட பலரில் தமிழகத்தைச் சார்ந்த செண்பகராமன் பற்றி அரசு அறியுமா?



மிகச் தீவிரமாகப் போராடி, இந்தியாவை விட்டு வெளியேறி, பல்வேறு நாடுகளைச் சுற்றி, அங்கெல்லாம் பலரைக் கண்டறிந்து, இந்த நாட்டு விடுதலைக்காக மிகப் பெரிய அளவில் போராட்ட வீரர்களைத் தயாரித்து, சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு குருவாகவும் இருந்திருக்கிறார்; சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களைச் சந்தித்தும் இருக்கிறார்; அப்படிப்பட்ட சுதந்திர போராட்ட புருஷர் செண்பகராமன் பெயர் இந்த சரித்திர புத்தகத்தில் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா? ஆகவே, அப்படிப்பட்டவர்களுடைய பெயர்களையெல்லாம், இந்த வரலாற்றுப் பாடத்தில் இணைத்து, மாணவர்களுக்கு போதிக்கின்ற முறையில் வழிவகை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் நாட்டு தியாகிகளைப் பற்றி, தமிழக விடுதலை வீரர்களைப் பற்றி தமிழ்நாட்டு மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறையில் இந்த பாட புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்காக எல்லா போராட்ட வீரர்களையும்பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்பதல்ல. ஓரிருவரைப் பற்றிச் சொன்னால், மாணவர்கள் அவர்களைப் பற்றி தெரிந்துகொண்டு, மற்றவர்களைப் பற்றி அவர்களே படித்து தெரிந்துகொள்ளவேண்டும். எல்லோரையும் பற்றி தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், அது போராட்ட வரலாறாக இருக்கும். அது தமிழ்நாடு சரித்திரமாக இருக்காது.

### நடமாடும் நீதிமன்றங்கள்.

243—(*வினா எண் 251)—திரு. மா. மணிமாறன் மற்றும் திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொதுக் குற்றங்கள் மற்றும் போக்குவரத்துக் குற்றங்களை (General Crimes and Traffic offences)

ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் விரைவில் நீதி பெற முடியவில்லை. ஆகையால் விரைவாக நடவடிக்கை எடுத்து, உடனடியாக இந்த ஆண்டிலேயே நாகையில் ஒரு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, தாம்பரத்தில் ஒரு நீதிமன்றம் அமைப்பதுபற்றி அங்குள்ள வழக்கறிஞர்களும் பொதுமக்களும் நீண்ட நாட்களாக அரசுக்கு முறையீடு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதன்மீது அரசு என்ன பரிசீலனை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மேலும் நான்கு பகுதிகளில் இத்தகைய ஸ்பெஷல் கோர்ட்ஸ் என்று சொல்லுகின்ற தனி நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. பண்ருட்டி பகுதி, நாகைப் பகுதி, கோவைப் பகுதி, தாம்பரத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் செங்கை ஆகிய இடங்களில் இந்த நீதிமன்றங்கள் ஏற்படவிருக்கின்றன.

**சேரன் பொறியியல் கழகத் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகை**

246—(*வினா எண். 42)—**திரு. கு. ரமணி** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி சேரன் பொறியியல் கழகம், மேட்டுப் பாளையம் டயர் புதுப்பிக்கும் பிரிவு போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அதிக உற்பத்தி செய்தால் ஊக்கத் தொகை (Incentive) கொடுக்க நிருவாகத்துக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் 15—1—1981-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் சரிவர அமுலாக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை சரிவர அமுல் நடத்த அரசு என்ன செய்துள்ளது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேரன் பொறியியல் கழக நிர்வாகத்தினருக்கும் அதன் தொழில் சங்கங்களுக்குமிடையே 15—5—1981



அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே சம்பந்தப் பட்ட பிரிவுகளில், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வி 15—1—1981-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றியது. அந்த ஒப்பந்தத்தின் சரத்துக்கள், ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை என்று தொழிலாளர்களிட மிருந்தும் தொழிற்சங்கங்களிடமிருந்தும் நீண்டநாட்களாக புகார் வந்துகொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக என்ன விவரங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, ஏற்கெனவே போடப்பட்ட ஒப்பந்தத்தில் இருந்த பிரச்சனை களைத் தீர்ப்பதற்காக தொழிற்சங்கங்கள் வைத்த கோரிக்கை பற்றி பேசியிருக்கிறார்கள். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில் 1981-ல் போட்ட ஒப்பந்தத்தின்படிதான் நாங்கள் பட்டுவாடா செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேற்கொண்டு என்ன விளக்கம் கேட்கிறார்கள் என்று புரிய வில்லை.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, அந்த ஒப்பந்தத்தில் அவர் களுக்கு இன்சென்டிவ் வழங்குவது பற்றி நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட பணிக்கு மேல் அவர்கள் அதிகப்படியான ஊக்கத்தோடு வேலை செய்தால் அந்த உற்பத்திக்கு ஏற்ப அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகை, அதாவது இன்சென்டிவ் பேமென்ட் ஒப்பந்தத்தின்படி கொடுக்கப் படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கையில் அந்த விவரம் இப்போது இல்லை என்றாலும், இந்த விஷயங்களை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, தொழிற்சங்கங்கள் கூறுகின்றபடி அந்த ஒப்பந்தம் மீறப்பட்டிருந்தால் அதை ஒழுங்குபடுத்தி, அவர் களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, இப்போது கொடுக்க வேண்டிய தொகையை சரியாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் ; நிர்ணயித்த அளவுக்கு பணி நடைபெறாமல் இருந்தால் மட்டுமே கொடுக்காமல் இருக்கிறோம் என்ற கருத்தைச்

சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் மீறப்பட்டிருந்தால் அரசாங்கம் அந்த நிர்வாகத்திற்குச் சொல்லி, கண்டிப்பாக தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்யும்.

**டாக்டர் க. முகம்மது சலீம் :** தலைவரவர்களே, கொடைக்கானலில் ஒரு பஸ் நிலையம் கட்ட ஏற்பாடாகியுள்ளது. அந்த பஸ் நிலையம் ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் மதிப்பு உள்ளதாக இருக்கிறது. ஆனால் வேலை தொடங்கவில்லை. சென்ற ஒரு மாதமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை. விரைவிலே வேலை நடக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

### மதுரை மாநகருக்கு வட்டச் சாலைகள்

**247—(*வினா எண் 786)—திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தடுத்து ஒழுங்குபடுத்தும் வகையில் நகரைச் சுற்றி வட்டச் சாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜித வேலைகள் யாவும் முடிவுற்ற பின்னர் மதுரை மாநகரத்தைச் சுற்றி வட்டச் சாலைகள் அமைக்கும் பணி பற்றிப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### பாலாற்றின் குறுக்கே பாலம்.

**248 — (* வினா எண். 844) — திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம்-வேலூர் செல்லும் சாலையில் பாலாற்றில், பள்ளிக்கொண்டான் மேம்பாலம் கட்டும் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### அர்ஜுனா ஆற்றின் குறுக்கே பாலம்.

**249—(*வினா எண் 978)—திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி-விருதுநகர் சாலையில் வடமலாபுரம் அருகே அர்ஜுனா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி எப்பொழுது தொடங்கப்படும் ?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்ட பாலம் அமைக்கும் பணி இதுவரை எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் கீழும் மேற்கொள்ள இயலவில்லை.

(முற்பகல் 9-40)

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி, விருதுநகர் போன்ற பெரிய தொழில் நகரங்களை இணைக்கின்ற சாலையாக அங்கே அது இருக்கின்றது. அந்தச் சாலையின் குறுக்கேதான் இந்த அர்ஜுனா ஆறு சென்று கொண்டிருக்கின்றது. மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றபோது ஒரு வார காலத்திற்கு அந்த ரோட்டின் வடக்கே இருக்கின்ற தொழிலாளர் களும் பாலிடெக்னிக் படிக்கின்ற மாணவர்களும் ஏறத்தாழ சிவகாசியைச் சுற்றி 45 கிலோ மீட்டர் வந்து உரிய இடத்தை அடைய வேண்டி இருக்கின்றது. எனவே உடனடியாக இந்த ஆண்டிலேயாவது அந்த வேலைகளைத் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 12

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்படுமா என்று இப்போது என்னால் சொல்ல முடியாது. ஆனால் அதனுடைய அவசர முக்கியத்துவத்தைக் கருதி தீவிரமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பாலங்கள் பற்றிக் கேட்கின்றபோது சில பாலங்கள் கட்டும் பணி பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருப்பதாக அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த பார்ட் 2 ஸ்கீமில் இருக்கும் முக்கியமான பாலங்கள் கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவற்றிற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வந்ததற்குப் பிறகு அந்த வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைப் பொறுத்தவரையில் பணம் எப்போது ஒதுக்கப்படும், எவ்வளவு ஒதுக்கப்படும் என்பதைத் தெரிந்துதான் சொல்லவேண்டும். மொத்தமாகச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லை.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் நிதியாண்டில் இந்த பாலங்களைக் கட்டுவதற்காக அரசின் மூலமாக ஆய்வு நடத்தப்பட்டு அந்தக் கோப்பு போக்குவரத்துத் துறைக்கு வந்து மூன்று ஆண்டுகாலமாக இருந்து வருகின்றது. எனவே உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்த ஆண்டிலே அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வைப் பொறுத்தவரையில் இங்கே பிரச்சினை இல்லை. பணப்பிரச்சினைதான் இருக்கின்றது. எனவே அதைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் காமராஜர் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற காரணத்தால் மழைக்காலங்களில் இந்த சிவகாசி-விருதுநகர் சாலையில் இந்த வடமலாபுரம் அருகேயுள்ள அர்ஜுனா ஆற்றின்



1985 ஜூன் 12]

குறுக்கே பஸ் போக்குவரத்து போக முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கின்றது. அங்கே வெள்ளம் வந்தபோது சுமார் 45 குழந்தைகள் அதே இடத்திலேயே வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். எனவே அவசர முக்கியத்துவத்தைக் கருதி மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் சிவகாசிக்கு வருகை தந்தபோது அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்டு இது அவசியமான பாலம் என்று கூறியிருப்பதன் காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வாக்குறுதிக்கேற்ப மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை விரைவாக நடத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி உடனடியாக இதை எடுத்துக்கொள்ள முடியுமா என்று இப்போது சொல்வது சரியாக இருக்காது. முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் என்று இப்போது சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். ஆனால் நிச்சயமாக அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி அது கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மண்டபம் அகதிகள் முகாமில் கூடுதல் குடியிருப்புகள்.

**250—(* வினா எண். 620) — திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபம் அகதிகள் முகாமில் அதிக குடியிருப்புகள் கட்டவும், நீர் மின்சாரம் வழங்கவும் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மாநில அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மண்டபம் முகாமில் 728 அகதிகள் தங்கும் குடியிருப்புக்களில் 261 குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் இருந்தன. அவற்றைப் பழுது பார்த்து புதுப்பிக்க ரூபாய் 13.30 இலட்சமும், குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க ரூபாய் 5

இலட்சமும் ஆக மொத்தம் 18.30 இலட்சம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டு வேலைகள் இந்த மாத இறுதிக்குள் முற்றுப் பெறும்.

மேலும் 700 குடியிருப்புகள் கட்டுவதற்காக 87 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. 200 குடியிருப்புகளை பொறுத்தவரையில் பொதுப்பணித்துறை 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணியை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள்ளாக வேலை முற்றுப்பெறும். அடுத்ததாக 500 வீடுகள் கட்டுவதற்காக 80 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப் பட்டிருக்கின்றது. தமிழ்நாடு கட்டுமானக் கழகம் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது. வேலைகள் துவக்க நிலையில் இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய குடியிருப்புகளுக்கு 12.50 லட்சம் செலவில் குடிதண்ணீர் மின் சாரம் வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இன்றையதினம் மண்டபம் முகாமைப் பொறுத்த மட்டில் குடிதண்ணீர் வசதி சரியாக இருக்கவும், மின்சார வசதி சரியாக இருக்கவும் சம்பந்தப்பட்ட துறைகள் கேட்டுக் கொள்ளப்பட் டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மண்டபம் முகாமில் இருக்கிற அகதிகள் அனைவரும் குடி-தண்ணீர் மற்றும் மின்சாரம் போதிய அளவு கிடைக்கக்கூடிய அளவுக்கு தன்னிறைவு பெற்று இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** போரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் அகதிகள் மட்டும் அல்லாது, தமிழகத்தில் உள்ள மொத்த அகதிகளுக்கும் முக்கியமாக கட்டிடம் கட்டுவதற்கு மத்திய அரசிடம் எவ்வளவு நிதியை நமது அரசு கேட்டது? எவ்வளவு நிதிக்கு மைய அரசு அனுமதி கொடுத்துள்ளது? போதிய அளவு நிதி கொடுக்காமல் இருந்திருந்தால் மத்திய அரசிடம் கடிதம் மூலமாக தொடர்பு கொள்வதை விட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாக டெல்லிக்குப் போய் நமது பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்தித்து வாதாடி போராடி தேவையான நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறியவிரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; தூத்துக்குடி, மண்டபம் ஆகிய பகுதிகளில் குடியிருப்புகளைக் கட்டுவதற்காக 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு அனுமதி வேண்டி அனுப்பப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக மண்டபம் முகாமில் 500 வீடுகளைக் கட்டு வதற்கு 80 லட்சம் ரூபாய்க்கு மத்திய அரசு அனுமதி வழங்கி யிருக்கிறது. மண்டபம் முகாமில் 2,500 வீடுகளைக் கட்ட அனுமதி கேட்டதற்கு, அதில் முதல் கட்டமாக 500 வீடுகளுக்கு அனுமதியை வழங்கி அதற்காக 80 லட்சம் ரூபாய்க்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல தூத்துக்குடியில் ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்காக கேட்ட நேரத்தில் 100 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 10 லட்சம் ரூபாய்க்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கேயெல்லாம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

நமது மைய அரசு அகதிகளுக்காக எவ்வளவு பணம் செல வழிப்பதற்கும் தயார் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் பொவாக, தமிழக மக்களின் இதயத்தில் நமது இதய தெய்வம், தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் பிரதான மாக வீற்றிருக்கிறார்கள். அவர் ஒரு கண் ஜாடை காட்டினாலே போதும், நான் போய் பிரதமரை சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில் எத்தனை பேர்கள் இளைஞர்கள் வந்திருக்கிறார்கள்? அது மட்டும் அல்லாது திருச்சி அகதிகள் முகாமில் குடியிருப்பவர்களுக்கு தண்ணீர் இல்லை, மின்சார வசதி இருக்கிறது, அவர்கள் வெய்யில் காலத்தில் ஃபேனை போட்டுக் கொண்டால், அங்கே உள்ள அதிகாரிகள் ஏன் ஃபேன் போடுகிறீர்கள் என்று அதை தடை செய்வதாகச் சொல் கிறார்கள், அந்த தடைகளை நீக்குவதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நாட்களில் தமிழகத்திற்கு அகதி களாக வந்து, முகாம்களில் தங்கியிருக்கக்கூடிய அகதிகளின் எண்ணிக்கை 21,750. கடந்த 10 ஆம் தேதி வரை அகதிகள்

வந்திருக்கிறார்கள். வெளி மாவட்டங்களில் 15,258 அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மண்டபம் முகாமில் மட்டும் 6,492 அகதிகள் இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு அகதிகள் முகாம்களில் தமிழகத்தில் சென்று பார்க்கிற நேரத்திலே அவர்கள் நாங்கள் அனைத்து வசதிகளோடுதான் இருந்து கொண்டிருக்கிறோம்; தமிழகத்திற்கு வந்ததற்குப் பிறகு தான் உயிருக்கு உத்திரவாதம் உள்ள மாநிலம் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. இதற்காக தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, கோட்டப் பட்டுலே உள்ள முகாமைப் போய் பார்த்த நேரத்திலே அங்கே குடிதண்ணீர் பிரச்னைதான் சற்று குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சொல்லி இப்போது நிலைமை சீராக இருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே அங்கே அவர்கள் ஃபேனை தாராளமாக உபயோகிக்கலாம். அப்படி ஃபேனை உபயோகிப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதை தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக அடிப்படையில் போதுமான வசதிகளற்ற நிலையில் குடியமர்த்தப்பட்டு இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத நேரத்தில் திடீரென்று சுமார் 21 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகள் தமிழகத்திற்கு வந்து விட்டார்கள். அவர்களைப் பாதுகாக்கவேண்டிய பெரிய பொறுப்பு தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் உண்டு. இன்றையதினம் பல்வேறு இடங்களில் உள்ள அகதிகள் எல்லாம் ஒரே இடத்திலோ அல்லது இரண்டு இடங்களிலோ குடியமர்த்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் 3,500 வீடுகள் கட்டுவதற்கான அனுமதியைக் கேட்டு இருக்கிறோம். அந்த அனுமதி கிடைத்ததற்குப் பிறகு, பல்வேறு மாவட்டங்களில் இருக்கக்கூடிய அகதிகள் அனைவரும், திருச்சி, கொட்டப்பட்டு, தூத்துக்குடி மற்றும் மண்டபம் போன்ற பகுதிகளில் அவர்கள் குடியிருப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படும்.



**கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டோர் மறுவாழ்வு.**

**251—(* வினா எண் 1605)—திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான கொத்தடிமை நீக்கும் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கொத்தடிமையில் இருந்து மீட்கப் பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு மறுவாழ்வு எப்படி? எங்கே தரப்பட்டு உள்ளது?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1976ம் ஆண்டு முதல் தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப்பகுதி நீங்கலாக இதுவரை 2,929 கொத்தடிமைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். தென்னாற்காடு மாவட்டத்தை பொறுத்தவரையில் கல்ராயன் மலைப்பகுதியில் 24,945 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். ஆகவே இதுவரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மறுவாழ்வு அளிக்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை 27,874 ஆகும். ஆனால் தற்போது தமிழ்நாட்டில் கொத்தடிமைகளாக யாரும் இல்லையெனப் போலீஸ் கணக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) மேற்சொன்ன அனைவருக்கும் சிறு விவசாயிகள் திட்டம் மற்றும் வேளாண்மை தொழிலாளர் திட்டங்கள் மூலமாக கல்லுடைக்கும் தொழில் போன்ற திட்டங்கள் மூலம் மறு வாழ்வு வசதிகள் அவர்கள் கொத்தடிமைகளாக தங்கியுள்ள அல்லது அவர்கள் சொந்த மாவட்டங்களிலேயே செய்து தரப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 12

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு எந்தெந்த இடங்களில் மறு வாழ்வு தரப்பட்டு உள்ளது, பொருளாதார சீரழிவினால்தான் அவர்கள் இந்த நிலைக்கு ஆளானார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீட்கப்பட்ட கொத்தடிமைகள் தென் ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம், பெரியார், புதுக்கோட்டை, தர்மபுரி, நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் கல் ராயன் மலை போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டு உள்ளனர். அந்தந்த மாவட்டங்களில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், விவசாய நிலம் வழங்குதல், விவசயாக் கருவிகள் விநியோகம் செய்தல், கோழிப்பண்ணை வைக்க, ஆட்டுப் பண்ணைக்காக ஆடுகள் வழங்குதல், கறவை மாடுகள் வழங்குதல், ஏர் மாடுகள் வழங்குதல், சொந்தமாக தொழில் நடத்துவதற்கு அரசுடமை யாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் வேலை வாய்ப்பு வசதிகளில் சி. அன்ட் டி. தொகுதிகளில் வயது வரம்பு கொத்தடிமைகளுக்கு 40 ஆக தளர்த்தப்பட்டுள்ளது. கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காக அரசு உதவியின் வரம்பு நபருக்கு 4 ஆயிரம் என்று வரையறுக்கப் பட்டு, அதிலே 50 சதவீதம் மத்திய அரசும், 50 சதவீதம் மாநில அரசும் ஏற்கும். இதற்கு மேலும் 6 ஆயிரம் ரூபாய் வரம்புக்கு உட்பட்டு, என். ஆர். எல். இ. ஜி. பி. மற்றும் என். ஆர். இ. பி திட்டங்கள் மூலமாக வீடு கட்டுதல் மற்றும் வேலை வாய்ப்பு போன்றவற்றிற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காக, 8.72 லட்சம் செலவிடப்பட்டு உள்ளது. இதைப்போன்று 1984-85-ல் 1,294 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும் என்ற இலக்கை மத்திய அரசு நிர்ணயித்தது, அதற்கு இந்த அரசு எல்லா மாவட்டங்களையும் சேர்த்து, 1,584 பேர்களுக்கு ரூ. 8.9 லட்சம் செலவில் செய்து, இந்த அரசு புனர் வாழ்வு அளித்துள்ள அரசு சாதனையைப் புரிந்து உள்ளது. மேலும் 1985-86 ஆம் ஆண்டுக்கு 1 ஆயிரம் கொத்தடிமைகள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 0.20 லட்சம் ஒதுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துரிதப்படுத்தப்பட்டு கொத்தடிமைகள் மறுவாழ்வுக்கு, புதுத்



1985 ஜூன் 12]

திட்டங்களை போட்டு நபர் ஒன்றுக்கு 4 ஆயிரம் என்ற முறையிலே, உதவி தேவைப்படும் கொத்தடிமைகளுக்கு உதவும் பொருட்டு, திட்டம் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கு கூட உதவி புரிந்து வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீட்கப்பட்ட கொத்தடிமைகளில் அரிசனங்கள் எத்தனை பேர்? பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக மீட்கப்பட்ட கொத்தடிமை களின் கணக்கைத் தான் இங்கே என்னிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். தனியாக கேள்வி கேட்டால் எந்த எந்த பிரிவைச் சேர்ந்தவர்கள், எத்தனை பேர் மீட்கப்பட்டு இருக் கிறார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீட்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரி வித்தார்கள். வெளி மாநிலங்களிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடி மைகளின் எண்ணிக்கை எவ்வளவு? இந்த மீட்கப்பட்ட கொத்தடி மைகளுக்கு அரசு அளிக்கின்ற சலுகைகள் என்பது அவர்களுக் குத் தெரிந்த அந்த தொழிலை சலுகையாக அளிக்காமல் அவர் களுக்குத் தெரியாத ஒன்றை சலுகையாக கொடுப்பதால் அதை அவர்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ளவில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. எனவே அதை கவனத்தில் கொண்டு இனி மேல் அவர்களுக்கு—குறிப்பாக கல் உடைக்கும் குவாரிகளி லிருந்து தான் அவர்கள் மீட்கப்பட்டு இருக்கிறார்கள், எனவே அந்தப் பணியை அவர்களுக்கு—கொடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலத்திலிருந்து மீட்கப்பட்ட கொத்தடி மைகளின் எண்ணிக்கை 4,254. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் மலைவாழ் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட

கொத்தடிமைகளுக்கு கல் உடைக்கும் தொழிலை ஆரம்பிப்பதற்காக வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதைப் போன்ற அங்கே மலையில் வாழ்கின்ற அவர்களுக்கு கூட கல் உடைக்கின்ற அந்த தொழிலுக்கு தாட்கோ மூலமாக நிதி வழங்கப்படுகிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் தாளவாடி பகுதியில் 60 குடும்பங்கள் கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அவர்களுடைய வேலைவாய்ப்பு வசதிகளுக்கு, அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி நிலம் ஒதுக்கப்பட்டு இருந்தால் அவர்களுக்கு முதலீட்டுத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 557 கொத்தடிமைகள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிகள் எப்படி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் சொல்ல முடியும்.

**திரு. கி. ராமன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பொதுவாக கொத்தடிமை தொழிலிலிருந்து விடுவிக்கப்படுகின்ற மக்கள் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள் ஆவார்கள். இவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் புனிதப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கும் சில அதிகாரிகள் அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய கடன்களை பொய்யான முறையில் ரெக்கார்டுகளை தயாரித்து, பல லட்சக்கணக்கான பணத்தை கையாடியிருக்கிறார்கள் என்பது, அரசின் கவனத்திற்கு ஏற்கனவே வந்து இருக்கிறது. இதில், எத்தனை அதிகாரிகள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? அல்லது சில அதிகாரிகள் ஏற்கனவே பதவியிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொத்தடிமைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் களவாடப்பட்டு இருப்பதாகவும் அதை செய்தவர்கள்





யார்? யார்? எந்த அதிகாரி என்ற விவரங்கள் என்னிடம் குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பார்களானால் கட்டாயம் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

**திரு. சோ. கலிதீர்த்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தென் ஆற்காடு மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் கல்ராயன் மலையில் வசிக்கக்கூடியவர்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்தை அரசாங்கம் இதுவரையில் அவர்கள் அனுபவித்து வந்த நிலத்தை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவில்லை. இப்படி அரசு பட்டா வழங்காத காரணத்தால் வன இலாகாவிற்கும் மலைவாழ் மக்களுக்கும் நிறைய தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இதை அரசு ஆராய்ந்து உடனடியாக பட்டா கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையைப் பொறுத்தவரையில், 24,945 கொத்தடிமைகள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே பட்டா வழங்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வழங்கப்படாதவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்குகின்றதில் உள்ள சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொத்தடிமைகள் கல்வராயன் மலையில் மீட்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலைமை, அவசர கால நிலை இருந்த போது எடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அரசு, மலை வாழ் மக்களுக்காக அறிவிக்கும் சலுகைகள் அங்குள்ள அதிகாரிகள் மூலமாக மக்களுக்குக் கிடைப்பதில்லை. குறிப்பாக கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அதனுடைய மேற்பார்வையில் இருக்கும் அரசுப் பள்ளிகளில் இருக்கக்கூடிய தலைவர்கள், அந்தோணிசாமி என்ற வார்டனை வைத்துக்கொண்டு சரியான

முறையில் பள்ளி மாணவர்களுக்கு உணவுகள் கொடுப்பது இல்லை. அவர் தற்போது மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறார். ஆனால் அவர் மீண்டும் அங்கேயே வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார். ஆகவே, இது போன்ற தவறு செய்கின்ற வார்டன்கள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையைப் பொறுத்தவரையில் இப்போதுகூட ஒரு உறைவிடப் பள்ளி ஆரம்பிக்கப்பட இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட உறைவிடப் பள்ளியிலே பணி புரிபவர் தவறு செய்து, திரும்பவும் வருவதற்கு முயற்சிப்பதாக சொல்கிறார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அப்படி இருந்தால், அவருடைய பெயர், விவரத்தை என்னிடம் குறித்துக் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### “ஆலடி பாசனத் திட்டம்.”

**252—(* வினா எண் 526)—திரு. க. சோலைராசு மற்றும் திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்கு நோக்கி பாயும் நதிநீரை தமிழகத்திற்கு திருப்பும் திட்டப்படி “ஆலடி” நீர்ப்பாசனத் திட்டம் எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, கேரளாவிலுள்ள பெரியாறு ஆற்றின் உபரி நீரை திருப்பி விடுவதன் மூலம் ஆலடி பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வியலும். இந்த உபரி நீரைத் திருப்பி விடுவதின் சாத்தியகூறுகள் பற்றி ஆய்வு செய்வதற்கு, பெரியாறு படுகையின் நீரியல் பற்றிய விவரங்கள் தேவைப்படுவதால், அவற்றை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்படுகிறது என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. 149 இலட்சம் ஏக்கர் பாயக்கூடிய அந்தத் திட்ட ஆய்வு முடிந்த பிறகு, கேரளாவினுடைய சாத்தியக்



கூறுகள் பற்றிய, அதனுடைய பதில்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இத்திட்டத்தின் மூலம் கம்பத்திலிருந்து, பெரிய குளம், என்னுடைய தொகுதியிலே இருக்கிற பொன்னடியாறு வரை வரவுள்ள திட்டத்திற்கு மத்திய அரசின் தாக்கீது, உதவி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக ஆலடிப் பகுதிக்கு பயன் கிடைக்கும் என்றாலும் கூட, அவ்வாறு பயன் தருவதற்கு தேவையான பெரியாறு படுகையின் நீரியல் பற்றிய விவரங்கள் தமிழக அரசுக்கு கேரள அரசு, அதன் பொதுப்பணித் துறை அனுப்பி வைக்க வேண்டும். அந்தப் பணியிலே கேரளம் ஈடுபடவேண்டும் என்ற கோரிக்கையை தமிழகம் வற்புறுத்தினாலும் கூட, இதுவரை, கேரள அரசிடமிருந்து அத்தகைய நீரியல் பற்றிய புள்ளி விவரங்கள் வந்து சேரவில்லை. அவை வந்து சேர்ந்த பிறகு தான் கேரள அரசுடைய ஒப்புதலோடு தான், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியும். எனவே, அதற்குரிய புள்ளி விவரங்களை, நீரியல் பற்றிய விவரங்களை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேரள அரசை வற்புறுத்த, தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டு இருக்கிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதி நீரை தமிழகத்திற்குத் திருப்பும் வகையில் 1976 ஆம் ஆண்டிலே ஒரு தொழில் நுட்பக் குழு அமைத்து அந்த அமைப்பின் மூலமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு எனில், அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1976-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு, அதனுடைய அறிக்கையில் கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில், உபரி பாசன நீர் இருப்பதாகவும், அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்கு அல்லது கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் தன்னுடைய அறிக்கையிலே விவரங்களைத் தந்திருக்கின்றன. அவ்வாறு அறிக்கையை அளிக்கின்ற நேரத்தில், ஒப்பந்தம் செய்யப்பட்ட நதிகளைப்பற்றி ஆய்வு நடத்த, கேரள மாநிலம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்ததன் காரணமாக பெரியாறைப் பொறுத்தவரையில், பெரியாறில் உள்ள

நீரியல் அளவுகளை மேற்கொள்ள அந்தத் தொழில் நுட்பக் குழுவால் முடியவில்லை என்றாலும் இது நீங்கலாக, கேரளத்தைப் பொறுத்தவரையிலும், வாமனாபுரம், அச்சங்கோவில் ஆறு, கல்லடா, காங்கனா ஆகிய நான்கு ஆறுகளில் உபரி தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விடக் கூடிய அளவிற்குக் கிடைக்கும் என்பதுதான் 1976-இல் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையாகும். அது நீங்கலாக, இன்னொரு நுட்பக்குழு மைய அரசால் திரு. சி. வி. கோல் தலைமையில் அமைக்கப்பட்டது. அது பெரியாறு படுகையின்கீழ் 31.9 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் அளவிற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறது.

**திரு. க. சோலைராசு:** தலைவரவர்களே, இடுக்கி மின் திட்டத்திலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் பெறும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கருதப்படுகிறதே, அது உண்மையா? அதிலே அதிக வாய்ப்பு இருக்கிறதா? மத்திய அரசும் தமிழக அரசும் விரும்புகின்ற அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவுகின்ற எண்ணத்தோடு இருந்தாலும் கேரள அரசோடு தமிழக அரசு மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்கு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவரவர்களே, இடுக்கி மின் திட்டத்திற்குத் தற்போது பெரியாறு ஆற்றிலிருந்துதான் தண்ணீர் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அவ்வாறு மின் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட தண்ணீரை மின் உற்பத்தி செய்த பிறகு தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால்கூட 10 டி.எம்.சி. தமிழகம் நன்மை பெறும் என்றாலும், அந்தத் தண்ணீரைக்கூட இந்தப் பகுதிக்குத் திருப்பிவிட முடியாது என்பதுதான் கேரள அரசு இதுவரையில் மேற்கொண்ட நிலையாகும். அதைத் திருப்பி விடுவதற்கு மட்டுமல்லாமல் கேரளாவிலுள்ள உபரி நீர் அத்தனையையும் கிழக்கு நோக்கி பாயவிட்டால் அதன்மூலம் மதுரை, முகவை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்குப் பயன்படுத்துகின்ற அளவிற்குத் திட்டங்களைத் தீட்டத்தான் நம்முடைய மாநில அரசும் கேரள அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கேரளத்திலுள்ள முதல்வரிடத்தில் இதைப்பற்றிக் கடிதம் எழுதி



இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தேதி குறிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். இதுவரை பதில் வரவில்லை என்றாலும் விரைவிலே பதில் வரும் என்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகம், தென் மாநிலங்கள் முழுவதும் செல்வம் கொழிக்கும் நிலங்களாக மாறும் வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குக் கேரளாவானது மறுப்பும், எதிர்ப்பும் தெரிவித்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே, அது பற்றி மத்திய அரசிடம் கலந்து இந்தத் திட்டத்திற்கு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க நம்முடைய திறமையான தலைமை தமிழகத்தில் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் நிச்சயமாக உரிய நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுத்து தமிழக மக்களினுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, தமிழக மக்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் பெற்றுத் தருவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள், இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவரவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிநீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டம் பற்றி ஏற்கனவே பழைய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களும், நமது தமிழக முதல்வர் அவர்களும், கேரள கவர்னர், கேரள முதலமைச்சர் ஆகியவர்களெல்லாம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதேமாதிரி மீண்டும் பேச்சு நடத்துவதற்கு நமது அரசு முயற்சிக்குமா? அதுமட்டுமல்லாமல், இந்த நதியைத் திருப்புகின்ற அளவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள அழகர் அணைத் திட்டம் இருக்கிறது, அந்தத் திட்டம் செயலுக்கு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருமணம் ஆன பிறகு மருத்துவமனைக்குச் செல்வதைப்பற்றி குழந்தை பெறுவதைப்பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூன் 12

(முற்பகல் 10-10)

**திரு. வே. இரா. ஜெயராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாநில எல்லைப் பிரச்னை களைப் பற்றி பேசும்பொழுது தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழகத்தோடு இணைந்திருந்தால் அதிக நீரும், மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளுடைய உபரி தண்ணீரும் அதன் வாயிலாக உபரி மின்சாரமும் அன்னியச் செலாவணியை ஈட்டும் விளைபொருள்களும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிற காரணத்தால், அன்றையதினம் அண்ணா அவர்கள் தேவிகுளம், பீர்மேடு பகுதியைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று கூறினார்கள். இப்பொழுது மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளில் உபரி நீர் இருக்கிறது என்று மத்திய வல்லுநர் குழு தெரிவித்திருந்தும் கேரள அரசு கிழக்கு நோக்கி திருப்பி விடுவதற்கு எந்தவிதமான நீரும் இல்லை என்று மறுத்து ஒரே பிடிவாதமாக இருக்கிற காரணத்தால், தமிழகத் தினுடைய எல்லைகளை மறு பரிசீலனை செய்கின்ற விதத்திலே தேவிகுளம், பீர்மேடு பகுதியை தமிழகத்தோடு இணைக்க மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசைப் பொறுத்த வரையில் பிடிவாதமாக இருக்கிறது என்று யாரும் இங்கே சொல்லவில்லை. அவர்களுக்கு உரிய பிரச்னைகள் அவர்களுக்கு இருக்கின்றன. தமிழகத்திற் குரிய பிரச்னைகள் தமிழகத்திற்கு இருக்கின்றன. ஆகவே, அந்த, அந்த அரசுகள் அவர்களுடைய பொறுப்பை உணர்ந்து தான் மற்றைய அரசுகளோடு பேச்சு வார்த்தை நடத்தும். அந்த வகையிலேதான் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடக்க தமிழக அரசு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. பேச்சு வார்த்தை யைச் சுமுகமாக மேற்கொண்டு முடிக்க கேரள அரசு உரிய முயற்சிகள் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் கேரள அரசினுடைய பிடிவாதப் போக்கு குறித்து குறிப்பிட்டு, இழந்து விட்ட எல்லையை மீட்க வேண்டுமென்றுதெரிவிக்கிறார். திராவிட



1985 ஜூன் 12]

முன்னேற்றக் கழகமும் அதை வழிமொழிகிறது. எனவே, இந்த அரசு கேரள அரசின் பிடிவாதமான போக்கை எதிர்க்க மீண்டும் தேவிகுளம், பீர்மேட்டை வாங்குவதற்கு உரிய முயற்சியை உடன் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கலைப் போட்டுவிட்டு, அதற்குப் பிறகு முடிச்சை எடுக்கக் கூடிய இக்கட்டான சூழ்நிலையில் இந்த அரசை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விட்டுவிடக் கூடாது. தனியான முயற்சியை மேற்கொண்டால் உரிய பரிகாரம் அவர் களுக்கு உரிய முறையிலே கிடைக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவிகுளம், பீர்மேடு பகுதி களைத் தமிழகத்தோடு இணைக்கவேண்டுமென்று 1956 ஆம் ஆண்டிலே எல்லா அரசியல் கட்சிகளும் நாடு தழுவிய வகையில் வேலை நிறுத்தங்கள், பொது வேலைநிறுத்தங்கள், கடையடைப்புகள் நடத்தி கோரிக்கை களைத் தெரிவித்ததற்குப் பிறகு மத்திய அரசு உட்கார்ந்து பேசிய வகையில் முடித்து விட்ட முடிந்துவிட்ட சங்கதி அது. ஆகவே, இவ்வளவு ஆண்டுக்காலத்திற்கு, 30 ஆண்டுக் காலத்திற் குப் பிறகு மறுபடி அந்தப் பிரச்னையைக் கிளப்புவதன் மூலம் வீண் தகராறும், வீண் நேரமும் வீண் செலவும் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் வரும். அது முடிந்து விட்ட ஒன்று. அது முடிவதற்கு முன்பு எவ்வளவு தெளிவுபடுத்தமுடியுமோ அவ்வள வும் தெளிவுபடுத்தியாகிவிட்டது.

இப்பொழுது கேரளத்தில் இருக்கிற நீர்ப் பகுதியை நாம் பெற வும் அவர்களுக்கு உணவுப் பற்றாக் குறை இருக்கிற காரணத் தால், அவர்களுடைய தேவையை நிறைவு செய்கின்ற வகையில் நாம் உணவு தரவும் என்கின்ற முறையில் கேரள அரசும் தமிழக அரசும் ஒரு உடன்பாடு செய்து கொள்ள முடியும் என்ற நல்லெண் ணம் இருக்கிறது. அதைப்பற்றிப் பேசலாம் என்று முன்பே தெரிவித்தார்கள். அதற்கு மத்திய அரசும் உதவி செய்ய வேண்டும். ஆனால், உதவி செய்கிற கட்டமும் வந்து, கேரளம் தங்களிடத்திலே மீத மிஞ்சிய தண்ணீரை நமக்குத் தரவும், உணவிலே நாம் மார்ஜினலி சர்ப்ளஸ் ஸ்டேட்டாக இருப்பதால், நம்மிடத்திலே இருந்து உணவு தர வேண்டிய நிலையில் இருப் பதால், அப்படிப் பட்ட ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதன் மூலம் நல்ல

நன்மைகள் ஏற்படும். ஆகவே, பிடிவாதம் என்றோ, அவர்கள் தர மாட்டேன் என்கிறார்கள் என்றோ அப்படிப்பட்ட சொற்களைச் சொல்லி, சூழ்நிலையைக் கெடுக்க வேண்டாம். ஆனால், பேச்சுவார்த்தை நடந்தால் நமக்கு நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத்திட்டத்தின் கீழ் பெறப்படும் தண்ணீர்.**

253 (* வினா எண் 1647)—**திரு. கந்தசாமி**: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத்திட்டத்தில் கேரள அரசுடன் செய்துள்ள ஒப்பந்தத்தின்படி முழு அளவு தண்ணீரைத் தமிழகம் பெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், ஒப்பந்தம் செய்துள்ள முழு அளவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்**: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டத்தில் கேரள அரசுடன் செய்துள்ள ஒப்பந்தத்தின்படி முழு அளவு தண்ணீரை இம்மாநிலம் பெறவில்லை.

(ஆ) ஒப்பந்தம் செய்துள்ள முழு அளவு 30.5 டி.எம்.சி.

**திரு. பி. கந்தசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே புதிதாக விஸ்தரிப்பு செய்துள்ள பரம்பிக்குளம் ஆளியாறு பகுதிகளுக்கு, ஏற்கனவே கிடைக்கின்ற தண்ணீரை வைத்தே பாசன வசதி செய்து கொடுக்க முடியுமா ? அல்லது முழு அளவு கிடைத்த பிறகு பாசன வசதி செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பி.ஏ.பி. திட்டத்தைப் பொறுத்தமட்டில் செய்ய வேண்டிய நீடிப்புப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது நீங்கலாக, கூடுதலாக தண்ணீர் கிடைக்குமானால், அந்தத் தண்ணீரைத் தேவையான அளவு கூடுதலான





அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். அந்த முறையிலே கூடுதலாகத் தண்ணீர் கிடைக்குமானால் அது நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

**திரு. மா. சின்னராசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது கேரளாவோடு ஒப்புக்கொள்ளப்பட்ட தண்ணீரை நாம் இன்னும் பெறவில்லை என்றார்கள். இப்பொழுது 30.5 டி.எம்.சி.யில் எவ்வளவு தண்ணீரைப் பெற்று வருகிறோம்; இன்னும் எவ்வளவு தண்ணீரைப் பெற வேண்டியிருக்கிறது; அந்த முழு அளவு தண்ணீரைப் பெறும்போது எவ்வளவு ஏக்கர்களுக்கு நாம் அதிக அளவிலே நீர்ப் பாசனம் கொடுக்க முடியும் என்பதையும் விரைவாக எந்தக் கட்டத்தில் தண்ணீரைப் பெறுவதற்கு முயற்சியை அரசு எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்**: தலைவரவர்களே, ஏற்கெனவே 1970 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்நாடு 30.5 டி.எம்.சி. நீரைப் பயன்படுத்தலாம். என்றாலும்கூட தற்போது ஆனைமலையில் 2.5 டி.எம்.சி. தண்ணீர் நீங்கலாக 28 டி.எம்.சி. தமிழ்நாடு பெற்று வருகிறது. 2.5 டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்காக துணை ஒப்பந்தம் ஒன்று கேரள அரசோடு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை கேரள அரசுக்கு வைத்திருக்கிறோம். அந்த ஒப்பந்தம் உருவாவதற்கான செயற்குறிப்பு ஒன்று கேரள அரசின் இசைவுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

**கொருக்கையில் உப்பு ரசாயன ஆலை.**

237—(* வினா எண் 149)—**திரு. பொ. உத்திராபதி** மற்றும் **திரு. கு. சுப்பராயன்**: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டிக்கு அருகாமையில் "கொருக்கையில் உப்பு ரசாயன தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவரவர்களே, இந்தத் தொழிலைத் தொடங்குவதற்கான அடிப்படை வசதிகள், வாய்ப்புகள் எல்லாம் இருந்தும் அரசு அதுபற்றி அக்கறை செலுத்தாமல் இருப்பது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள கொருக்கையில் 5,000 ஏக்கர் அளவுக்கு உப்பு உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறு நிறைய இருக்கிறது. அங்கு காஸ்டிக் சோடா தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் அரசிடம் இருக்கிறது. அது நடைமுறைக்கு வர சற்று காலதாமதம் ஆகும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பட்டுக்கோட்டைக்கு அருகில் இருக்கிற தம்பிக்கோட்டையில் உள்ள உப்புத் தொழிற்சாலைக்கு சேஷசாயி பேப்பர் நிறுவனம் உப்பு வாங்கிய வகையில் 8 இலட்சம் ரூபாய் பாக்கியை நீண்ட காலமாக வைத்திருக்கிறது என்பதை அரசு அறியுமா? தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற அந்த உப்புத் தொழிற்சாலைக்கு சேரவேண்டிய பாக்கியை வசூல் செய்து கொடுத்து, அந்தத் தொழிற்சாலையின் சுமையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடையளிக்கலாம்.

திரு. ந. சிவஞானம்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு அருகில் தம்பிக்கோட்டையில் இப்படிப்பட்ட உப்பு இரசாயனத் தொழிற்சாலை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டியிருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கேள்வி போடவும்.



## சேலம் உருக்காலை.

238—(* வினா எண் 775)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் உள்ள எஃகு ஆலையை விரிவுபடுத்தி தனியாக எஃகு தயாரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலையை விரிவான திட்ட அறிக்கையில் உள்ளபடி எஃகு தயாரிக்க மத்திய அரசிடம் மாநில அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு, இதற்காக ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா (Steel Authority of India Limited) நிறுவனம் ஏற்கனவே முயற்சிகள் எடுத்து வருகிறது என்று தெரிவித்துள்ளது.

## முதுவத்தூர் சிமெண்ட் தொழிற்சாலை.

239—(*வினா எண் 853)—திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் கல்லக்குடி அருகே முதுவத்தூர் என்ற இடத்தில் இயங்கி வந்த சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் (Cement Research Institute) நடத்தி வந்த மினி சிமெண்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை மீண்டும் இயக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இவ்வாலையை நடத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவரவர்களே, பல்வேறு கால கட்டங்களில் இந்த மாநிலத்தினுடைய சிமிண்ட் தேவையை பூர்த்தி செய்கிற அளவுக்கு நம்மால் உற்பத்தி செய்ய முடிய

வில்லை. 1982-83 ஆம் ஆண்டில்கூட 5 இலட்சம் டன் சிமிண்டை இந்த மாநிலத்தின் தேவைக்காக இறக்குமதி செய்திருக்கிறோம். அதனால், சிமிண்ட் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் ஏராளமாக இருப்பதால், தமிழ்நாடு சிமிண்ட் நிறுவனம் வேறு ஏதாவது சிமிண்ட் தொழிற்சாலை தொடங்க ஏற்பாடு செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வேறு யாரும் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற முயற்சி எதும் சமீபத்தில் இல்லை. மூலக் கேள்வி சிமெண்ட் ரிசர்ச் செய்வது பற்றியதாகும். எனவே தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடை தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் அருகே பாளையத்திற்குப் பக்கத்தில் நன்கு உலர்ந்த சுண்ணாம்புக் கற்கள் கிடைப்பதன் காரணத்தால், மத்திய அரசும் அனுமதி தந்துவிட்டதன் காரணத்தால் அங்கே தமிழக அரசின் சார்பாக ஒரு சிமெண்ட் ஆலை தொடங்குகின்ற நோக்கம் அரசுக்கு இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு இரண்டு சிமெண்ட் ஆலைகளை நடத்திக் கொண்டு வருகின்றது. எனவே மேலும் ஒரு சிமெண்ட் ஆலையைத் தொடங்குவதற்கான குறிப்பு தற்போது என்னிடத்தில் எதுவும் இல்லை.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதாலும், அது ஒரு வளர்ச்சி மாவட்டமாக இல்லாத காரணத்தாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதனக் கோட்டைப் பகுதியில் நல்ல தரமுள்ள சுண்ணாம்புக் கற்கள் கிடைப்பதால், அரசினுடைய ஆய்வில் இல்லை என்று சொன்னாலும் கூட அந்தப் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. தகவல் கோரல்.**

**(அ) யூனியன் பிரதேசங்களாக பெரு நகரங்கள் ஆக்கப்படும் என்ற திட்டத்தின் கீழ் சென்னை நிலை குறித்து.**

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம், கல்கத்தா, பம்பாய் போன்ற பெரு நகரங்கள் எல்லாம் யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட வேண்டும் என்ற செய்தியை ஒட்டி மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் கடுமையான ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து தமிழக அரசினுடைய நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அடிக்கடி தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் தலைநகரை சென்னையிலிருந்து தஞ்சை, திருச்சிக்கு அருகே மாற்ற இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த செய்திக்கும், டெல்லி வட்டாரங்களில் சொல்லப்படுகின்ற இந்த பெரு நகரங்கள் எல்லாம் யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்ற செய்திக்கும் தொடர்பு உண்டா என்பதை நானும் அறிய விரும்புகிறேன், நாடும் அறிய விரும்புகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை யூனியன் பிரதேசமாக ஆக்க வேண்டும் என்ற குறிப்பு தமிழக அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ வரவில்லை. அப்படி ஏதேனும் வருமேயானால் இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ளாது. ஆகவே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இப்போது எப்படி

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1985 ஜூன் 12

சென்னை மாவட்டம் என்ற தனி நிர்வாக அமைப்பின் கீழ் இருக்கின்றதோ அந்த வகையில்தான் இருக்க வேண்டுமே தவிர யூனியன் பிரதேசமாக ஆக்குகின்ற எந்த ஒரு முயற்சிக்கும் தமிழக அரசு இடம் தராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைநகரத்தை மாற்றுவது பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றது. தலைநகரத்தைத் திருச்சி, தஞ்சைப் பகுதிக்கு மாற்றவேண்டும் என்ற எண்ணம் உண்டு. அவ்வாறு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆராயும்படி சொன்னார்கள். இன்றைக்கு இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் டெல்லி மிகவும் வளர்ந்திருக்கின்றது. எனவே அதைப் புறக்கணித்துவிட்டு தலைநகரத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அதன்படி வேறு ஒரு இடத்தை உருவாக்க இயலுமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றுதான். அதேபோன்று சென்னையும் வளர்ந்திருக்கின்ற ஒரு மாநகரம். எனவே அதனையையும் மாற்றி ஒரு புதிய தலைநகரை உருவாக்க வேண்டும் என்றால் ஏற்படுகின்ற செலவுகளைக் கணக்கிடுகின்ற போது அது அவ்வளவு எளிதில் அமைகின்ற ஒன்றல்ல.

வேறு சிலபல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. உலகத்திலே முதல் தலைமையிடம், இரண்டாவது தலைமையிடம் என்று சிலபல இடங்களில் வைத்திருக்கிறார்கள். அமெரிக்காவிற்கு வாஷிங்டன் தலைமையிடமாக இருந்தாலும் நியூயார்க்கை இரண்டாவது தலைமையிடமாக வைத்திருக்கிறார்கள். அதேபோன்று இரஷ்யாவைப் பொறுத்தவரையில் மாஸ்கோ தலைமையிடமாக இருந்தாலும் இரண்டாவது தலைநகராக லெனின்கிராடை வைத்திருக்கிறார்கள். அதே அடிப்படையில் சென்னை மாநகரை முதல் தலைநகரமாக வைத்துக்கொண்டு திருச்சி, தஞ்சை போன்ற பகுதிகளை இரண்டாவது தலைநகரமாக வைத்து இனி வருகின்ற சிலபலவற்றை மாற்ற இயலுமா என்பதைப் பற்றிய சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திட்டவட்ட மாக தலைநகரை மாற்றுகின்ற தன்மை எதுவும் எழவும் எழாது. அவ்வாறு எழுந்தாலும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதற் கில்லை.



### (ஆ) மானியக் கோரிக்கைகளுக்கான குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டி அனுப்புதல்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதே மன்றத்தில் வினாப்பட்டியல் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டபோது வினாப்பட்டியல் ஒன்றிரண்டு நாட்கள் அட்வான்ஸாக அனுப்பப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 28 ஆம் எண் மானியக் கோரிக்கையினுடைய பட்டியல் எப்போது வந்தது என்றால் நேற்று ராத்திரி வந்தது. அப்படி வந்தால் நாங்கள் எப்படி படிப்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் சொல்கிறேன். நேற்று மாலைதான் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து இந்தத் துறைக்கு வந்தது. வந்தவுடன் உங்களுக்கு அனுப்பியிருக்கி றார்கள். நான் மற்றத் துறைகளைக் கேட்டுக்கொள்வது எல்லாம் மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட குறிப்புகளை எல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இத்துறைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான். இங்கே வந்தவுடன் நாங்கள் அனுப்பிவிடுகிறோம்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) குறிஞ்சிப்பாடியிலுள்ள சிங்கபுரி நெசவாளர்கள் சங்கத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "தென்னாற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடியிலுள்ள சிங்கபுரி நெசவாளர் சங்கத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை அப்பகுதியிலுள்ள ஆடு, மாடுகள் குடித்து இறந்து விட்டதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சிங்கபுரி தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் தென்னாற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப் பாடியிலுள்ள சிங்கபுரி நகரில் அமைந்துள்ளது. இக் கூட்டுறவு சங்கம் இத்தொழிற்சாலையை நடத்துகிறது. இது கடலூர் விருத்தாசலம் சாலையில் கடலூரிலிருந்து 39 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதன் வடமேற்கில் ஒரு சிறிய பகுதி தவிர ஏனைய பக்கங்களில் சுற்றுச் சுவர்கள் உள்ளன. இதன் பின் புறத்தில் கடலூர்-விருத்தாசலம் மீட்டர்கேஜ ரயில் பாதை கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1955-லிருந்து இயங்கி வருகிறது. இந்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 180 கிலோ கிராம் அளவுள்ள நூலைப் பதப்படுத்துகிறது. இத் தொழிற்சாலை 1955-லிருந்து 1984 வரை பாவு ஓட்டுதல், கஞ்சி ஏற்றுதல் மற்றும் தறி நெய்தல் போன்ற உலர்முறையைக் கையாண்டு வந்தது. சாயம் ஏற்றும் வேலை 7—12—1984-ல் தொடங்கப்பட்டது. நூலிலுள்ள அழுக்கைப் பிரித்தெடுக்க காஸ்டிக் சோடா, சோடா ஆஷ், சோடியம் ஹைடிரோ சல்பேட் மற்றும் சோப்பு எண்ணெயுடன் ஆவியில் வேகவைக்கப்படுகிறது. பின் இந்நூல் வாட், நேப்தால், கந்தக சாயம் போன்றவை கொண்டு ஐந்து பாத்திரங்களில் சாயம் ஏற்றப்படுகிறது. சூடான நீரையோ அல்லது குளிர்ந்த நீரையோ பயன்படுத்தி சாயம் ஏற்றப்படுகிறது. சாயம் ஏற்றப்பட்ட நூலில் உள்ள ஒட்டாத சாயங்களை நீக்குவதற்காக இதனைத் தெளிந்த நீரில் அலசி பின் உலர்த்தப்படுகிறது. உலர்ந்த நூல் பாவாக நான்கு மில்களில் மாற்றப்பட்டு கஞ்சி ஏற்றப்படுகிறது. அளவாக நறுக்கப்பட்ட நூல்கள் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் தங்கள் வீட்டில் தறியில் நெய்யப்படுகின்றன.

இத்தொழிற்சாலையில் 70 தொழிலாளர்கள் வேலை செய்கி றார்கள். நாள் ஒன்றுக்கு 1000 லிட்டர் குடி-நீர் பயன்படுத்தப் படுகிறது. தொழிற்சாலைக்காகப் பயன்படுத்தப்படும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 4000 லிட்டர் ஆகும். தொழிற்சாலை இந்த நீரை தொழிற்சாலை வளைவுக்குள்ளேயே உள்ள இருதுளைக் குழாய்க் கிணறுகள் மூலம் பெற்றுக்கொள்ளுகிறது. தொழிற் சாலையிலிருந்து வெளியேற்றப்படும் அன்றாடக் கழிவு நீர் மற்றும் ஆலைக் கழிவு நீரின் அளவு நாள் ஒன்றுக்கு முறையே 1000 லிட்டர் மற்றும் 4,000 லிட்டர் ஆகும். அன்றாடக் கழிவு நீர் ஒரு





நச்சுத்தடைத் தொட்டியில் சுத்திகரிக்கப்படுகிறது. சாயம் ஏற்று கின்ற பிரிவிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரே தொழிற் சாலை கழிவு நீராகும். தொழிற்சாலைக் கழிவு நீரானது காரத் தன்மை கொண்டது. இது பி.ஓ.டி. மிதக்கின்ற திடப் பொருள்கள், கரைந்த திடப் பொருள்கள் கொண்டது. சுத்தி கரிக்கப்படாத கழிவு நீர், நீர் நிலைகளை அடையும்போது, நீர் நிலைகளில் பிராணவாயு காற்று குறைகிறது. இந்த சுத்தி கரிக்கப்படாத கழிவுநீர் நிலத்தில் வெளியேற்றப்படும்போது நிலத்தடி நீரும் மாசுபட்டு விளைநிலமும் பாதிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இத்தொழிற்சாலை 7—6—1985 அன்று பார்வையிடப்பட்டது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நிலத்தில் விடப்பட்டு ஒரு கால்வாய் மூலம் வெளியேறி ரயில்வே மதகு வழியாகச் சென்று இறுதியாக விளப்பாக்கம் ஏரியில் கலப்பது தெரியவந்தது. ஒரு ஆண்டில் சில மாதங்கள் தவிர பெரும்பாலும் இந்த ஏரி வறண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சுற்று வட்டாரத்திலுள்ளவர்களைக் கேட்டறிந்தபோது இந்த நீரைக் குடித்ததால் கால்நடைகள் ஏதும் இறந்ததாகத் தெரிய வில்லை. இதுபற்றி உள்ளூர் கால்நடை ஆய்வாளரையும் கேட்டு உறுதி செய்யப்பட்டது.

இத்தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய படிய வைப்பதற்கான ஆயத்த தொட்டி, காற்று ஏற்று தொட்டி மற்றும் வடி கட்டுகின்ற தொட்டி முதலியவற்றின் கட்டுமான வேலைகள் முடிந்துள்ளன. இதர வேலைகள் நடைபெற்றும் வருகின்றன. கழிவு நீரை தொழிற்சாலையிலிருந்து வெளியேற்ற 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில் 26-வது பிரிவின்படி இவ்வாரியத்திற்கு அனுமதி கேட்டு விண்ணப்பிக்கு மாறு தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொழிற் சாலைக்கு அனுமதி வழங்கும்போது, வாரியம் நிர்ணயிக்கிற வரைமுறைகளுக்குட்பட்டு, கழிவு நீரைச் சுத்திகரித்து வெளியிட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, விவர அறிக்கையில் அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதுபோல்தான் பெரும்பாலும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது

எல்லாம் அங்கே பேரூராட்சியின் மூலம் போடப்பட்டிருக்கிற போரிங் பைப்பின் தண்ணீரும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல குறிஞ்சிப்பாடி மின் வாரியத்தின் அலுவலகத்தில் போடப்பட்டிருக்கும் குடிதண்ணீருக்கான போரிங் பைப்பின் தண்ணீரும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இந்த நிலையில், அந்த நிறுவனத்திலிருந்து வெளி வருகிற தண்ணீர் மிகவும் விஷம் வாய்ந்த தண்ணீராக இருப்பதால் இப்படிப்பட்ட பாதிப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அங்கேயிருந்து வெளியேறும் கழிவு நீரை வெளியே வராமல் தடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவுக்கும், குடிதண்ணீர் நல்ல நிலைமையில் கிடைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, அந்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் நான் அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் இந்த ஒரு நிறுவனத்தின் மூலமாக நாள்தோறும் 5 ஆயிரம் லிட்டர் தண்ணீர் வெளியே விடப்படுகிறது. அந்தத் தண்ணீரைப் பொறுத்தவரையில் எஃபிளுயன்ட் என்று சொல்லப்படும் கழிவு நீர் என்று சொல்லப்படுகிறது. அந்த கழிவு நீரை சுத்திகரித்துத்தான் விட வேண்டும் என்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். Water (Prevention and Control of Pollution) Act, 1974. என்னும் சட்டத்தின் 26-வது ஷரத்தின்படி, அவர்கள் சுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் அதற்காக நாம் அந்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அதேநேரத்தில் நாம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த கால் அட்டென்ஷனை எழுப்பிய உடனே, அவர் எழுப்பியிருக்கக்கூடிய கருத்துக்களை உணர்ந்து 7—6—1985 அன்று ஒரு அதிகாரியை அனுப்பி அந்த நிறுவனத்தைப் பார்த்து வரச் சொன்னோம். பார்த்து வந்ததற்குப் பிறகு அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் படி, அந்த நிறுவனத்தினர் அந்த இடத்தில் கோயாகுலேஷன் டேங்க் என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன் பக்கத்தில் ஏரியேவின்





டாங்க் என்ற ஒன்றையும் ஏற்படுத்தி, அதற்குப் பிறகு ஃபில்டர்
பெட்ஸ் யூனிட் என்று சொல்லப்படும் அமைப்பையும் உருவாக்க
வழி வகைகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று கொடுத்
திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் முடித்து விட்டால்,
அதன் மூலம் வெளியிடப்படும் அந்த தண்ணீர் சுத்திகரிக்கும்
வாய்ப்பு ஏற்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இவை
களைப் பயன்படுத்தி அதன் வழியாக அந்த கழிவு நீரை
அனுப்பும்போது அது சுத்திகரிக்கப்பட்ட நீராக மாறிவிடும்
என்று சொல்லப்படுகிறது. ஆகவே 2, 3 மாதங்கள் பொறுத்
திருந்து பார்ப்போம், இவைகளை அமைத்ததற்கு பின்னர்
இயங்கச் செய்வதற்கு அவர்களுக்கு போதிய நேரம் கொடுப்
போம். அதற்குப் பிறகும் அந்தத் தண்ணீர் சுத்திகரிக்கப்பட
வில்லை என்று சொன்னால் 1974 ஆம் ஆண்டு, நீர் (மாசு தடுப்பு
மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி அந்த நிறுவ
னத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள அரசு தயாராக இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) பாபநாசம் அணையிலிருந்து கன்னடியன் கால்வாயில் தண்ணீர் திறந்து விடாததால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை.**

(பேரவைத் துணைத் தலைவர்)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்,**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம்
பாபநாசம் அணையிலிருந்து முதல் கால்வாயான கன்னடியன்
கால்வாயைத் திறந்து விவசாயிகளுக்குத் தண்ணீர் விடாத கார
ணத்தால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த"
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. யா. சை மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி
ஆற்றின் கீழ் உள்ள கால்வாய்களுக்கு கார்பயிருக்காக வழக்கமாக
பாபநாசம் நீர்த்தேக்கத்திலிருந்து ஜூன் 1-ந் தேதி தண்ணீர்
திறந்துவிடப்படும். தாமிரபரணி ஆற்றிலிருந்து 11 கால்வாய்கள்

பாசனம் பெறுகின்றன. இவற்றின்கீழ் சுமார் 70,000 ஏக்கர் நிலங்கள் கார் பருவத்தில் பயனடைகின்றன. இந்த வருடம் ஸ்ரீவைகுண்டம் வடக்கு கால்வாயில் 3,731 ஏக்கர் நிலங்களுக்கு முன்னதாகவே அட்வான்ஸ் கார்பாசனத்திற்கு தண்ணீர் 1—4—1985-லிருந்து விடப்படுகிறது. சாதாரணமாக ஜூன் 1-ந் தேதி 725 மி.க. அடி நீரளவு நீர்த்தேக்கத்தில் கார் பாசனத்தின் நாற்று நடவுக்காக வைத்து, மீதி தண்ணீரைக்கொண்டுதான் அட்வான்ஸ் கார் பயிருக்கு தண்ணீர் விடப்பட வேண்டும். ஆனால் பாபநாசம் நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவு தண்ணீர் இருந்ததால், மேற்குறிப்பிட்டுள்ள நீரளவு அதாவது 725 மி.க. அடி வைக்க வேண்டாம் என்று அரசின் ஒப்புதலுடன் அட்வான்ஸ் கார் பயிருக்கு தண்ணீர் விடப்பட்டது. இந்த வருடம் மீதியுள்ள நிலங்களுக்கு (அதாவது 70,000—3,731 66,269 ஏக்கர்) நிலங்களுக்கு கார் பாசனத்திற்காக 1—6—1985-லிருந்து தண்ணீர் விடவேண்டும். தண்ணீர் விடுவதைப்பற்றி கண்காணிப்புப் பொறியாளரும், மாவட்ட ஆட்சித் தலைவரும், சேர்ந்து முடிவு செய்யலாம்.

இவ்வருடம் பாபநாசம் நீர்த்தேக்கத்தில் ஜூன் 1-ந் தேதி நீர்மட்டம் 30.8 அடி: அதன் நீரளவு 238 மி.க.அடி மட்டுமே இருந்தது. ஆகையால், விவசாயிகளை கார் பாசன பயிருக்கு வேண்டிய ஆரம்ப வேலைகளை 1—6—1985-ல் இருந்து தொடங்க வேண்டாம் என்று ஓர் அறிவிப்பை நிர்வாகப் பொறியாளர், தாமிரபரணி கோட்டம் அவர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

கன்னடியன் கால்வாய் தாமிரபரணி ஆற்றின் நான்காவது கால்வாய் ஆகும். மற்ற கால்வாய்கள் எப்பொழுது திறக்கப்படுகின்றனவோ அதே நாளில்தான் கன்னடியன் கால்வாயும் திறக்கப்படும். தென்மேற்குப் பருவ மழை வலுவடைந்து, பாபநாசம் நீர்த்தேக்கத்தில் போதிய நீர்வரத்து வந்தவுடன் கால்வாய்கள் திறப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்பமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்)**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னடியன் கால்வாய் திறப்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பேசி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, 30 அடி தண்ணீர் இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். கடந்த காலங்களில், அந்த அணையில் 11 வாய்கால்கள் இருந்தாலும் கூட, அந்தக் கன்னடியன் கால்வாய்க்கு முன்னுரிமை கொடுக்கின்ற முன்னுதாரணங்கள் எல்லாம் இருந்து இருக்கின்றன. இந்த பாபநாசம் அணையிலே 20 அடி தண்ணீர் இருக்கின்ற காலக் கட்டத்திலே கூட, இந்த கன்னடியன் கால்வாய்க்கு முன்னுரிமை கொடுத்து, தண்ணீர் கொடுக்கின்ற நடைமுறைகள் நீர்ப்பாசனத் துறையால் கடந்த காலங்களில் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. எனவே இந்த சூழ்நிலையை கருத்திலே கொண்டு 10, 15 தினங்களுக்கு முன்பாக தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். அங்கேயிருக்கிற விவசாயிகள் எல்லாம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில், நெல் வளர்ப்பதற்காக நாற்று கூட நட்டுவிட்டு, இன்றைக்கு அந்தப் பயிர்கள் எல்லாம் வாடிக்கொண்டு இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே கடந்த கால முன்னுதாரணத்தை வைத்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனே, இந்தக் கன்னடியன் கால்வாயிலே தண்ணீர் திறந்துவிட்டு, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிரிட்டு இருக்கிற, அந்த விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா; என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 20 அடி தண்ணீர் அந்த நீர்த் தேக்கத்தில் இருக்கின்ற நேரத்தில் இத்தகைய வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கன்னடியன் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டதாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏற்கனவே முன்னுதாரணமாக இருப்பதும் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே வகுத்துக்கொடுத்த, அந்த அடிப்படையில் இப்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தண்ணீரைத் திறந்து விடுவதற்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னடியன் கால்வாயில் தண்ணீர்

திறந்து விடுவதில் உரிய காலங்களில் திறந்துவிடாத காரணத்தால், பல ஆண்டுகள் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, ஒவ்வொரு முறையும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் தலையீட்டிலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலையீட்டின் பேரிலும், முறையீட்டின் பேரிலும், தண்ணீர் திறந்துவிடப்படுகிற ஒரு நிலை கடந்த காலங்களில் இருந்து வருகிறது. இந்தக் கன்னடியன் கால்வாய்க்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று கடந்த காலத்தினுடைய தாமிரப் பட்டயங்களிலே இருக்கிறது. எனவே இந்த நிலையை எல்லாம் மாற்றி, தண்ணீர் திறந்து விடுவதிலே இப்படிப்பட்ட காலதாமதங்களைத் தவிர்த்து, உரிய காலத்தில், அதாவது 20 அடி தண்ணீர் வந்தவுடன் இந்தக் கன்னடியன் கால்வாய்க்கு—தாமிரப்பட்டயத்திலே சொல்லியிருப்பதைப் போன்று, இதற்கு முன்னுதாரணம் கொடுத்து, தண்ணீர் திறந்துவிட்டு, அந்தக் கால்வாயை நம்பி இருக்கிற அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஒரு நிரந்தரமான நிலையை அரசு எடுத்து, ஒரு நிலையான அரசு ஆணையை வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அந்தப் பகுதியில் உள்ள விவாயிகள் 15. 20 நாட்களாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே அருள் கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளை அந்தக் கன்னடியன் கால்வாயில் தண்ணீரை விட்டு அந்த விவசாயிகளுக்கு உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் புதிய விவரம் ஒன்றை தந்திருக்கிறார்கள். ஏதோ பட்டயத்தை ஆதாரம் காட்டி சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அந்தமாதிரி தகவல் இல்லை. பட்டயத்தை மட்டுமே காரணமாக வைத்துக்கொண்டு தண்ணீர் விட்டுவிட முடியாது. எந்த பகுதியில் எவ்வளவு தூரத்திற்கு பாசனம் நம்முடைய வேளாண்மைத்துறையின் சார்பில் நடைபெறுகிறது என்பதையும் எவ்வளவு தூரத்திற்கு தேவைப்படுகிறது என்பதையும் தெரிந்துகொண்டு தான் உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆகவே, பொதுவான ஒரு அரசு ஆணையை இந்த கருத்தைப் பொறுத்த வரையில் போடக்கூடிய திட்டமோ,





எண்ணமோ இந்த அரசுக்கு இல்லை என்பதையும் அது இயலாத காரியம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தண்ணீர் விட வேண்டும் என்ற கோரிக்கை அவ்வப்போது எழுகிற போது நிச்சயமாக உரிய கவனம் அந்த கன்னடியன் கால்வாயைப் பொறுத்த வரையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு செலுத்தியிருக்கிறது. அவ்வப்போது வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம். அதற்கு முக்கிய காரணம் தாங்கள் தான் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தங்களை தேர்ந்து எடுத்த அந்தத் தொகுதி மக்கள் அவ்வப்போது உரிய முறையில் தங்களால் அந்த மக்களுடைய கோரிக்கைகள் எடுத்துச் சொல்லப்பட்டு, அந்த கோரிக்கைகளின் வாயிலாக உரிய நிவாரணம் கிடைத்து இருக்கிறது. ஆகவே இந்த முறையும் அந்தக் கோரிக்கையை வேறு விதமாக நீங்கள் இந்த அவையில் வைத்து வழிவகை செய்து இருக்கிறீர்கள். நாளைய தினம் தண்ணீர் உங்களுடைய கன்னடியன் கால்வாயில் திறந்து விடப்படுவதற்காக அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி.

### 4. வரவு-செலவுத் திட்டம், 1985-86 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### கோரிக்கை எண் 28—சமுதாயநல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,32,70,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

[1985 ஜூன் 12

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி நிர்வாகத்தின் முறைகேடுகள் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,32,70,52,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின் கீழ் உள்ள பள்ளிகளில், மாணவ மாணவிகள் உட்கார்ந்து படிக்க பெஞ்சுகள் இல்லாமலும், ஆசிரியர்கள் உட்கார நாற்காலிகளும் மற்றும் மேஜைகளும் இல்லாமலும் ஆரம்பப் பள்ளிகளிலும், அதற்கு மேல் எட்டாவது வகுப்புகள் வரையிலும் பெரும் குறைபாடு இருந்து வருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 28-சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,32,70,52,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், இடுவம்பாளையத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, அரசு உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 28-சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைபபின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,32,70,52,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



1985 ஜூன் 12]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசின் சார்பில் அளிக்கப்பட்டு இருக்கிற கொள்கைக் குறிப்புகளை* நான் பேசியதாக அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் கொடுக்கப்பட்டு இருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி சில கருத்துக்களை இந்த மா-மன்றத்தில் எடுத்து வைக்கலாம் என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் இன்றையதினம் நகர மன்றங்களுடைய நிலை பரிதாபகரமாக இருக்கின்றது. அவல நிலையில் இன்றைக்கு நகர மன்றங்கள் இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றன. துப்புரவு தொழிலா ளர்களுக்கு சுகாதார தளவாடங்கள் வாங்குவதற்கு நிதிநிலை இல்லை என்ற நிலையில் நகராட்சிகள் விளங்குகின்றன. வீதி விளக்குகள் இன்றையதினம் எரியவில்லை என்ற வகையில் நலிந்த நகராட்சிகளாக இன்றையதினம் தமிழகத்தில் நகராட்சிகள் இருக்கின்றன. அந்த வகையில் எங்களுடைய திண்டிவனம் நகராட்சி மிகவும் நலிந்த நகராட்சியாக இருக் கிறது. டி.பி. நோயால் பிடிக்கப்பட்ட ஒரு நோயாளியைப் போல் அந்த நகராட்சி இன்றையதினம் காணப்படுகின்றது. இது போன்ற பல நகராட்சிகள் இருக்கின்றன. அந்த நகராட்சி களுக்கு எல்லாம் புதிய வருமானத்தைப் பெறுகிற வகையில் சிறு கடைகளைக் கட்டலாம், அங்காடிகளைக் கட்டலாம், திருமணக் கூடம், திரைப்பட அரங்கம் போன்றவைகளைக் கட்டி வருமானத்தைப் பெருக்கலாம். அதற்காக, அரசு மானிய மாகவோ, கடனாகவோ தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். திண்டிவனம் நகராட்சிக்கு தமிழக அரசு

---

பக்கங்களில் இணைப்புகள் மற்றும் ஆக அச் அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. கே. எம். தங்கமணி] [1985 ஜூன் 12

அதிக அளவிலே உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திண்டிவனம் நகரில் இன்றையதினம் குடிநீர்

(முற்பகல் 10-40)

பற்றாக்குறை இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற குடிநீர்த் திட்டம் போதாது. ஏற்கனவே அது நகரமன்றம் என்று துவக்கப் பட்டபோது போடப்பட்ட திட்டமாகும். இன்றையதினம் வளர்ந்து வருகிற மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டிருக்கிற காரணத்தால், திண்டிவனம் தொகுதியிலே இருக்கிற தாய் மார்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை எண்ணி, உடனடியாக ஒரு நிரந்தரமான குடிநீர்த் திட்டம் வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

கடந்த 4, 5 ஆண்டுகளாகவே, 7-வது சட்டமன்றக் கூட்டத்திலே நான் பேசுகின்றபோதும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தும் வலியுறுத்தி, அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோதும் சொல்லி வந்திருக்கிறேன். திருவெண்ணெய்நல்லூர் ஆற்றுப் படுகையி லிருந்து தண்ணீர் கொண்டு வந்து திண்டிவனத்திற்கு தர வேண்டும். அது, அனந்தபுரம், செஞ்சி போன்ற ஊர்களுக்கும் பயன் தரும். கிராமங்களுக்கும் அந்த வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு முன் வடிவுகள் தயாரிக்கப்பட்டு, இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரிய சீஃப் இன்ஜினீயருக்கு வந்திருப்பதாக அறி கிறேன். எனவே, தமிழக அரசு உடனடியாக அந்தக் குடி நீர்த் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றையதினம் திண்டிவனத்தில் எங்கு பார்த்தாலும் இருளாக கிடக்கிறது. தெரு விளக்குகள் எரியாத சூழ்நிலை இருக்கிறது. இருட்டு என்று சொன்னாலே, திருடர்களுக்கு எல்லாம், பக்தர் களுக்கு கோயில் பிரசாதம் எப்படியோ அது போல இருக் கின்றது. இன்றைக்கு பல பெரிய முக்கியமான அதிகாரிகள் வீட்டிலெல்லாம் திருட்டு நடைபெறுகிறது. என்னுடைய வீட்டிலே கூட திருட்டு நடந்து ஒரு மாதம் ஆகிறது. போலீஸ் ஸ்டேஷனிலே போய் மற்றவர்கள் கம்ப்ளெயின்ட் கொடுத்தது போல் நானும் கொடுத்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை. எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், விளக்கு இல்லாத சூழ்நிலையைப் பயன்படுத்தி திருடர்கள் இன்றையதினம்



1985 ஜூன் 12] [திரு. கே. எம். தங்கமணி]

திருடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, திண்டிவனம் நகரிலே முக்கியமான பகுதியிலே சோடியம் வேப்பர் விளக்குகள் போட வேண்டும். அதற்கு தமிழக அரசு உதவவேண்டும்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில், இன்றையதினம் நலிவுற்ற நகராட்சிகளுக்கு வாழ்வு தர, பொருளாதாரம் தர, கடன் தர, மானியம் தருவதற்கு வகை செய்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் இதிலே ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். அதுதான் துப்புரவுப் பணி யாளர்கள் நிலைமை ஆகும். அவர்கள் தங்கள் தலையிலே மலத்தைச் சுமந்து செல்கிற அவலத்தை கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்றையதினம் தமிழகத்தின் நகராட்சியிலே, என்றையதினம் முனிசிபாலிடிகள் உருவாக்கப் பட்டனவோ, அன்று எடுக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்களே பணி செய்கிறார்கள். இன்றையதினம், அவர்களுக்கு 'ஓர்க்-லோடு' அதிகமாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய நகரத்தின் வளர்ச்சியை எண்ணி, பெருகி வருகின்ற மக்கள் தொகையைக் கணக்கிட்டு, துப்புரவுப் பணிகளைச் செய்வதற்கு அதிகமான துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். என்னுடைய திண்டிவனம் நகரத்திலே துப்புரவுப் பணிகளுக்கான தளவாட சாமான்கள், கூடை போன்ற சாமான்களைக் கூட வாங்குவதற்கு வசதி இல்லாமலே நகராட்சி இன்று இருக்கிறது. எனவே, நீங்கள் அதற்கெல்லாம் ஒரு வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலக உத்தமர், தேசப் பிதா காந்தியடிகள் இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார்கள். கிராம ராஜ்யம், சுய இராஜ்யம் அடையவேண்டும் என்று அவர் கனவு கண்டார். நம்மை எல்லாம் பத்திரமாக வைத்துவிட்டு போய் இருக்கும் நம்முடைய ஜவஹர்லால் நேரு அவர்கள் அறிவார்ந்த சூழ்நிலையில், அவருக்குப் பின்னாலே எஸ். கே. டே, பல்வந்தராய் மேத்தா போன்ற தேசிய தலைவர்களுடைய கூட்டு முயற்சியில், சமுதாய நலத் திட்டத்தை அன்றையதினம் தயாரித்து, தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக தமிழகத்திலே செயல்படுத்தினார் என்பதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களுக்கு, ஊராட்சி ஒன்றிய

[திரு. கே. எம். தங்கமணி] [1985 ஜூன் 12

அலுவலகங்கள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளுக்கு அதிகாரங்கள் எல்லாம் அன்றையதினம் நிறைய இருந்தன. கல்வி இருந்தது அன்றையதினம். மருத்துவத் துறை இருந்தது அன்றையதினம். விவசாயம் இருந்தது அன்றையதினம். ஆனால், இன்றையதினம் அந்தத் துறைகளை எல்லாம் தமிழக சர்க்கார் பல தாய் துறைகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். இன்றையதினம் நகரசபைகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல்கள் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதற்கு அவருக்கு நன்றி சொல்லிக்கொள்ளுகிறேன். அதன்மூலம் வருகின்ற புதிய ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் அதிகாரம் இல்லாத தலைவர்களாகத்தான் — வெறும் கொலுப் பொம்மை தலைவர்களாகத்தான் இருக்க போகிறார்கள் என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மறுபடியும் அந்த அதிகாரத்தை யூனியன் இடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றையதினம் ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற மூன்று பெரிய திட்டங்கள் மத்திய சர்க்காராலே, காங்கிரஸ் சர்க்காராலே எடுத்துக் கொள்ளப்பட்டு, தமிழக சர்க்காரும், அவற்றை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறது. சாகின்ற வரையில் என்னுடைய இரத்தம் இந்த நாட்டிற்குத்தான் பயன்படும் என்று கூறி தன்னுடைய இன்னுயிரையே அர்ப்பணித்துக் கொண்ட அன்னை இந்திரா காந்தி அவர்களுக்குப் பிறகு, அவர் போட்ட பாதையில் அடி வைத்துச் செல்வேன் என்று சொல்லி இன்றைக்கு ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்ற நம்முடைய புதிய தலைவர், புதிய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் தலைமையிலே இந்தத் திட்டங்கள் அமலாக்கப்பட்டுக்கொண்டு, செயல்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்கின்றோம்.

இந்த மூன்று பெரிய திட்டங்களும் கிராமப் புற ஏழை எளியவர்கள், இல்லாத மக்கள், சாமானியமானவர்கள், சாதாரணமானவர்களெல்லாம் தங்கள் வாழ்க்கையிலே வளம் காண வேண்டும், புதிய பொருளாதார மேம்பாடு காண வேண்டும் என்பதற்காகப் போடப்பட்டிருக்கின்ற திட்டங்களாகும்.

ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திலே 1985-86-லே 41 கோடி ரூபாய் புதிதாக மத்திய அரசு உதவி செய்கிறது என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட



1985 ஜூன் 12] [திரு. கே. எம். தங்கமணி]

திட்டங்களாகப் பல கோடி ரூபாய்களை மத்திய சர்க்காரிடமிருந்து உதவியாகப் பெற்று தமிழக சர்க்கார் செலவழித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்கார் செய்யும் திட்டங்களெல்லாம் ஏதோ தமிழ் நாட்டிலே மறைத்து விட்டுத் தமிழக அரசு திட்டங்களைத் தாமே அமல்நடத்துவதைப்போல ஒரு பிரமையை இன்றையதினம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இது என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சமுதாய நலக் கூடம் என்ற பெயரில் இன்றைக்குப் பல புதிய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தக் கட்டிடங்களிலே, முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்ற பெயரை வைத்து நீங்கள் விளம்பரப்படுத்துகிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன் ஒரு வரி அதில் எழுதினால் என்ன? மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் உதவியோடு இந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது என்று எழுதினால் மிக நன்றாக இருக்குமே என்ற ஆலோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்.ஆர்.இ.பி. போன்ற இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு, வேலையற்றுக் கிடக்கின்ற பட்டதாரிகளுக்குத் தமிழக அரசு உதவி செய்ய வேண்டுமென்ற திட்டத்தை நம்முடைய மாநில அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றியைச் சொல்கிறேன்.

ஐ.ஆர்.டி.பி. என்ற திட்டத்திலே, சிறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அப்படி வழங்கப்படுவதில் தவறுகள் இருக்கின்றன என்று கண்டுகொண்ட அமைச்சரவர்கள், அதைப் புரிந்துகொண்டு இன்று அதற்காக குழு போடப் போகிறேன், அதன்மூலம் அந்தக் கார்டுகள் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அப்படிப் போடப்படுகின்ற குழுக்களிலே அதிகமாக ஆளுங்கட்சிக்காரர்களைத் தயவு செய்து நீங்கள் நியமிப்பதற்கு முயல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கருத்தை நான் வலியுறுத்திச் சொல்வதற்கான காரணம், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்திலே காய்கறி உற்பத்தியாளர் சங்கம் என்று ஒவ்வொரு யூனியனிலும் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலே உள்ள அவ்வளவு பஞ்சாயத்து யூனியன்களிலேயும், எல்லாவிடங்களிலேயும் என்று நான் எண்ணுகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னு

டைய தொகுதியில், மரக்காணம், மயிலம் என்ற இரண்டு இடங்களிலேயும் முழுக்க முழுக்க நீங்கள் நாமினேஷன் செய்திருக்கின்ற அத்தனைபேர்களும் உங்களுடைய கட்சிக்காரர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். ஆளுங்கட்சிக்காரர்கள்தானே என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இந்த முறையில் நீங்கள் ஆட்களை நியமிக்கக்கூடாது.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்றபொழுது காய்கறி மொத்த உற்பத்தியாளர் சங்கத்திலே ஆளுகின்ற இயக்கத்தைச் சார்ந்தவர்களே இருக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதை நான் வன்மையாக மறுக்கிறேன். என்னுடைய மருங்காபுரி தொகுதியிலே இருக்கின்ற இரண்டு கூட்டுறவுச் சங்கங்களை மருங்காபுரி வடக்கு வட்டார காங்கிரஸினுடைய தலைவர் திரு. கருப்பையா என்பவர் நடத்தி வருகிறார் என்பதைக் கூறுகிறேன். எனவே, முழுக்க முழுக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களே இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுப்படையாக, தமிழ்நாடு முழுவதும் என்று சொல்ல வேண்டாம்.

**திரு. கே. எம். தங்கமணி:** நம்முடைய நண்பர் அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். அவர் சொல்வது, ஆளுங்கட்சிக்காரர்கள் நியமிக்கப்படவில்லை என்பது. ஆனால் என்னுடைய தொகுதியிலே மயிலம், மரக்காணம் என்ற இடங்களில் ஆளுங்கட்சிக்காரர்கள்தான் அதிகமாக இடம் பெற்றிருக்கிறார்கள், மற்றக் கட்சிக்காரர்களில் ஒருவர் கூட இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இன்றையதினம் இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு தருவதற்கு ஐ.ஆர்.டி.பி. என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் காரணமாக, கிராமப்புறங்களில் இருக்கிற இளைஞர்கள் பொருளாதார மேம்பாடு காணுகின்ற தன்மையில், இன்றையதினம் அவர்கள் எல்லாம் புதிய வேலை





பெறுவதற்குத் திட்டம் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மைலம் யூனியனிலே ஒரு 'ரீயர் ஓயின்டிங்' பயிற்சிப் பள்ளி இருக்கிறது. திண்டிவனத்திலே அதை நடத்துகிறார்கள். அதிலே 20 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மைலம், வல்லம், மரக்காணம், ஓலக்கூர் போன்ற யூனியன்களிலிருந்து மாணவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், அங்கு படிக்கின்ற மாணவர்களில் ஒருவருக்குக்கூடச் சரியாகச் சொல்லிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. 6 மாத காலமாக நாங்கள் படிக்கிறோம், எங்களுக்கு எந்தப் பயிற்சியும் கொடுக்கப்படவில்லை, சொல்லிக் கொடுப்பதற்கான தளவாடங்களும் அங்கே இல்லை என்ற குறைபாட்டை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை என் கையிலேயே வைத்திருக்கிறேன். பின்னாலே, உங்கள் வாயிலாக அதை அமைச்சரிடத்திலே கொடுக்க இருக்கிறேன். நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது, பி.டி.ஓ., டி.டி.ஓ. போய் அங்கே விசாரிக்க வேண்டும். சொல்லிக் கொடுக்கிறார்களா, இல்லையா, முறையாக, சரியாக நடத்துகிறார்களா, இல்லையா என்று பார்க்க வேண்டும். ஏறக்குறைய ரூ. 50,000-ஐக் கொள்ளை அடித்து இருக்கிறார் பள்ளி நிர்வாகத்தினர். 6 மாதத்திற்கு, மாதா மாதம் அந்தப் பணத்தைப் பயிற்சி பள்ளி நிர்வாகத்தினர் திருப்பிக் கட்ட வேண்டுமென்ற உத்தரவைப் போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற மைலம் யூனியனிலே சாலைகள் எல்லாம் இன்றையதினம் போடப்பட்டு வருகின்றன. அதிலே, வெங்கந்தூர்—வேட்டைக்காரன்புதூர் என்று ஒரு சாலை போடப்பட்டிருக்கிறது. அந்தச் சாலை போடும்போது, டெண்டரிலே என்ன கன்டிஷன் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், கருங்கல் ஜல்லியைப் போட்டுத்தான் ரோடு போட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதை கான்ட்ராக்ட் எடுத்தவர், பக்கத்திலே இருந்த கிணற்றுப் பாறையை எடுத்து ரோடு போட்டுவிட்டார். நான் தேர்தலிலே வெற்றி பெற்று நன்றி சொல்வதற்காக அந்தக் கிராமத்திற்குப் போனபொழுது, அதனை நான் கண்டேன். உடனடியாக எங்களுடைய யூனியன் இன்ஜினீயர் திரு. சௌந்தரராஜன் அவர்களை அணுகி, முறைகேடாக, ஊழல் புரிகின்ற தன்மையில் அந்த கான்ட்ராக்டர் வேலை செய்கிறார். அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். பட்ஜெட்

[திரு. கே. எம். தங்கமணி] [1985 ஜூன் 12

கூட்டத்திலே கலந்து கொண்டு ஊருக்குப் போன உடனே, உடனடியாக பணம் பட்டுவாடா செய்வதற்கு பில்கள் எல்லாம் போடப்பட்டிருப்பதாக நான் அறிந்தேன். அவ்வளவு மோசமான சூழ்நிலையில் பில்கள் தயாரிக்கப்பட்டதை நம்முடைய சி. எம். செல்லுக்கு உடனடியாக தந்தி கொடுத்து நடவடிக்கை எடுக்கக் கோரினேன். இதுவரையிலே அவர்கள் பணம் பட்டுவாடா செய்யவில்லை என்று நான் அறிகிறேன். இதுபோன்று ஊழல் நடைபெற்று முறைகேடுகளுக்குக் காரணமாக இருந்த யூனியன் இன்ஜினியர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே அந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் எல்லா இடங்களிலும் பம்ப் செட் போடுகிறார்கள்; ஆழ் குழாய் பம்ப் செட்கள் போடுகிறார்கள். அவற்றில் பாதிக்கும் மேலே பழுதாகிப் போயிருக்கின்றன. யூனியனிடத்திலே சொன்னால் ட்வாடைப் போய்க் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். ட்வாடைப் போய்க் கேட்டால், யூனியனைப் போய்க் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். இரண்டு துறைகளுக்கும் ஏதோ போர் நடப்பதைப் போல இருக்கிறது. இன்றையதினம் உருப்படியான ஒரு காரியமும் நடக்கவில்லை. 25 பம்புகளுக்கு ஒரு பிட்டர் வீதம் போட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். வறட்சியான காலமாக, கோடைக் காலமாக இருக்கிற காரணத்தாலே, தேவையின் அவசியத்தை உணர்ந்து, அந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 18 கிராமங்களில் (A. B. D.) எ.பி.டி. எ.பி.டி. டாங்குகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஜி.எல்.ஆர். டாங்குகளாக மாற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு மைலம் ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் கட்டத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக இருந்தது. 3-வது கட்டத்திலே எடுத்துக் கொள்ளப்பட்ட இடங்களுக்கு எல்லாம் அதிகமான தொகையைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த



1985 ஜூன் 12] [திரு. கே. எம். தங்கமணி]

ஒன்றியத்திற்கும் அதிக தொகை ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய மைலம் ஊராட்சி ஒன்றியத்தில் மினி எஸ்.எஸ். திட்டம் என்று ஒன்றைத் தயாரித்தார்கள். ரூ. 20 இலட்சம் தேவை. உடனடியாக, அந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நன்னாளில் புதிய தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மைலம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால், ரெட்டணையிலிருந்து நாரேரிகுப்பம், நெடிமொழியனூரிலிருந்து நெடி, சின்ன நெற்குணத்திலிருந்து எடப்பாளையம், பெரமண்டூரில் இருந்து பெரப்பந்தாங்கல், வி. நல்லாளத்திலிருந்து வி. பாஞ்சாலம், மரக்காணம் ஒன்றியத்தில் எண்டியூரில் இருந்து குருவம்மாபேட்டை, ஜக்காம்பேட்டையிலிருந்து கர்ணாவூர் ஆகிய பஞ்சாயத்துக்களைப் பிரித்து பிறகு தேர்தலுக்கு உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். புதிதாக 5 ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நான் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, வெட்டுத் தீர்மானங்களிலே அந்தப் பஞ்சாயத்துக்களைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன், இப்பொழுதும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் பல முற்போக்கான திட்டங்களை எல்லாம் போட்டு, அவற்றை மக்கள் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எத்தனை ஆண்டு காலம் பதவியில் இருந்தோம் என்பதை விட நாம் பதவியில் இருந்த காலத்தில் எத்தனை வேலைகளை மக்களுக்குச் செய்தோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று சொன்னதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த எண்ணத்தைத் தலையாய கொள்கையாகக் கொண்டிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி

இன்றையதினம் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த தமிழக சர்க்கார், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு மேலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைய மானியக் கோரிக்கைகள் மீது 18 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, விவாதத்தில் பங்கு கொள்கின்ற உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்குள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1985-86 ஆம் ஆண்டிற்கான சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் இவற்றிற்காக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையை வரவேற்று பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வழியில், சமுதாய வளர்ச்சியையும், சமத்துவ உணர்வையும், ஏழை எளியோர் நல்வாழ்வையும், அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்கும் அடிப்படை வசதிகளை வழங்கிட வேண்டும் என்னும் உன்னதமான உணர்வுகளை எண்ணங்களாகக் கொண்டு இயங்குகின்ற அரசுதான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு.

அந்த வகையிலேதான் ஜனநாயகம் ஓர் போலி நாடகமாக இருந்து விடாமல் தடுக்கவும், அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்தவும் வேண்டிதான் ஊராட்சி ஒன்றிய தலைவர்களையும், ஊராட்சித் தலைவர்களையும், ஊராட்சி உறுப்பினர்களையும் பொதுமக்களே நேரடியாகத் தேர்வு செய்யும் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அறிவித்துள்ளது.





இதைப்போல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகவும், தாய்க்குலத்திற்காகவும் கூடுதலான இடங்களை ஒதுக்கீடு செய்த புரட்சிகரமான திட்டத்தை உதட்டளவிலேதான் எதிர்க்கட்சி நண்பர்கள் வரவேற்றார்கள். ஏட்டளவிலேதான் ஏற்றுக் கொண்டார்கள். உள்ளத்தாலே அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமேயானால் எங்கள் இதய தெய்வம், நாலரை கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், மூன்று பிறவி கண்ட முதல்வர், அண்ணாவின் இதயக்கனி, புரட்சித் தலைவர் அவர்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற புகழை என்றைக்கும் வீழ்த்த இயலாது என்னும் எண்ணத்தால் நீதிமன்றம் சென்று தேர்தலுக்கு தடை வாங்கிய தொடை நடுங்கிகளும் உண்டு, இந்த நாட்டில்.

ஆனால் இன்றைக்கு எந்த அளவிலும் ஜனநாயக உணர்வுகள் மக்கள் உள்ளங்களிலிருந்து முளை மழுங்காமல் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் தூய உள்ளத்தோடு இவ்வாண்டு பழைய முறைப்படி தேர்தல் நடைபெற அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு புத்துணர்ச்சி இன்றைக்கு ஊட்டப்பட்டுள்ளது. அதிகாரிகளின் முடியாட்சி போய் நாட்டு மக்களின் குடியாட்சி வருவது போன்ற உணர்வு தமிழகமெங்கும் பரவலாக இன்றைக்கு உள்ளது.

கிராமங்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு, இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைய இந்த புண்ணிய பூபாகத்திலே இருக்கிற மக்களை எல்லாம் ஒரே அணியில் திரட்ட ஒன்றரை முழத்துண்டை இடுப்பிலே கட்டிக் கொண்டு கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பாதயாத்திரை செய்தாரே தேசப்பிதா காந்தியடிகள், அவர்கள் கிராமப்புறம் வளர்ச்சியடைந்தால்தான் இந்த நாடு வளர்ச்சியடைந்ததாக ஏற்றுக்கொள்ள இயலும் என ஒரு காலத்தில் சொன்னார்கள்.

அந்த எண்ணங்கள் புரட்சித் தலைவர் அவர்களால் தன்னிறைவுத் திட்டங்களின் மூலமாக இன்றைக்கு ஈடேறி வருவதை நாடறியும். எவ்வளவுதான் சட்டங்களாலே பயனுள்ள திட்டங்களை நிறைவேற்றினாலும், ஆண்டுதோறும் பல்வேறு

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 ஜூன் 12

பணிகளுக்காக வளர்ச்சித் திட்டங்களுக்கென்று திட்டங்கள் தீட்டப்பட்டாலும் சிறு குறைபாடுகள் சில சமயங்களில் மக்களுக்கு பெருந்தடைகளாகவே இருந்துவிடுகின்றன.

பேரூராட்சிகள் வருமானமில்லாத வறுமை நிலையிலுள்ள, பணி புரிகின்றவர்கட்கே சம்பளம் எடுக்க முடியாத மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள பேரூராட்சிகளுக்குக் கூடுதலாக மானியமாகவும், கடனாகவும் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் வெள்ளிமலை பேரூராட்சியில் மின்சார இலாகாவிற்கு முழுப்பணமும் கட்டாத காரணத்தால், மின்சார இலாகா மின் இணைப்பைத் துண்டித்ததின் விளைவாக இரண்டு வாரமாக வெள்ளிமலை பேரூராட்சி பகுதிகளில் தெரு விளக்குகளே எரியவில்லை. இப்படிப்பட்ட அவல நிலைகளும் உள்ளன. எனவே தமிழகத்தில் வறுமை நிலையில் உள்ள பேரூராட்சிகளை தேர்வுசெய்து அவைகளை வளப்படுத்தும் நோக்கமாக கூடுதலாக அவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-00)

பேரூராட்சிகள் மட்டுமல்லாமல் நகராட்சிகளும் இதைவிட தாழ்ந்த நிலையில் உள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ள நகராட்சிப் பட்டியலில் குளச்சல், பத்மனாபபுரம் நகராட்சிகளை இணைத்ததற்காக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். குளச்சல் நகர மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சல் நகர் வளர்ச்சியை முன்னிட்டு காருண்யமிக்க புரட்சித்தலைவர் அவர்களின் அரசு மானியமாகவும். கடனாகவும் பலநோக்குக் கடைகள் கட்டிக் கொடுக்கின்ற பணியைச் செய்திட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குளச்சல் நகராட்சியைப் பொறுத்தமட்டில் எவ்வித வருமானமும் இல்லாத ஒரு நகராட்சியாகும். வெறும் நகராட்சி வருமானத்தை வைத்து எவ்விதத் திட்டங்களையும் தீட்ட இயலாத நிலையில் உள்ள ஓர் நகராட்சியாகும் அது. எனவே குளச்சல் நகராட்சிக்கென்று கூடுதலாகக் கடனாகவும், மானியமாகவும் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுகிறேன்.



1985 ஜூன் 12] [திரு. எப். எம். இராசரத்தினம்]

எனது தொகுதிக்குட்பட்ட திங்கள்நகர் பேரூராட்சியில் வருட வருமானம் 5 இலட்சத்திற்கு மேல் வருவதாகத் தெரியவருகிறது. கணிசமான அளவு மக்கள் தொகையைக் கொண்டதாகவும், கணிசமான வருமானம் வருகின்ற பேரூராட்சியாகவும் அது இருப்பதன் காரணத்தால் அந்த திங்கள்நகரை நகராட்சியாக மாற்றிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலில் பாதாளச்சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படும், அதற்கான திட்டம் தயார் நிலையில் உள்ளது என்று அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அது வெறும் காகிதத் திட்டமாகத் தெரியவருகின்றது. எனவே உடனடியாக நாகர்கோவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும். மேலும் நாகர்கோவில் நகரசபைப் பூங்காவிற்கும், நகரசபை பேருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட சாலை காலையிலும், மாலையிலும் மிக நெருக்கடியான நிலையில் உள்ளது. அடிக்கடி அப்பகுதியில் விபத்துக்கள்கூட ஏற்படுகின்றன. எனவே நகரசபை பூங்காவிற்கும், நகரசபை பேருந்து நிலையத்திற்கும் இடையில் ஓர் சுரங்கப்பாதை அமைத்திட வேண்டும். அவ்வாறு அமைத்து அந்தப் பகுதி மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் எப்போதும் வற்றாத நீர் அருவியாக உலக்கை அருவி என்று ஒரு நீர் ஊற்று உள்ளது. அதிலிருந்து நாகர்கோவில் நகருக்குக் குடிநீர்த்திட்டம் வகுக்கப்பட்டால் அப்பகுதி மக்களுக்கு என்றைக்கும் பயனுள்ளதாக அமையும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்

குளச்சல் நகருக்குக் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வேகமாக அமல்படுத்த வேண்டும். குளச்சல் நகரைப் பொறுத்தவரையில் குடிநீர்ப் பிரச்சனை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. எனவே குழித்துறை ஆற்றின் மூலமாக உலக வங்கியின் உதவியோடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டத்தை வேகமாக அமல்படுத்தி குளச்சல் நகரில் இருக்கின்ற மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 ஜூன் 12

மேலும் வசதியுள்ள நகராட்சிகளில் இருப்பது போன்று தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தேவையான நேரங்களில் குடிநீர் வினியோகம் செய்ய தண்ணீர் லாரிகளை நிரந்தரமாக வைத்திட ஆணை பிறப்பித்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் இராசாக்கமங்கலம் ஒன்றியப் பகுதியில் முகுந்தன் கிணறு என்ற இடத்தில் ஒரு நீர் ஊற்று இருக்கின்றது. அதைப் பயன்படுத்தினால் இராசாக்க மங்கலத்தில் இருக்கின்ற வறண்ட பகுதி மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய இயலும். அதோடு குருந்தன்கோடு பகுதியில் கல்லுக்குட்டம் நீர் ஊற்று இருக்கின்றது. அந்த நீர் ஊற்றிலிருந்தும் மக்களுக்கு குடிநீர் கொடுக்கின்ற திட்டத்தைத் தயாரித்து அதனைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகராட்சிகளில் துப்புரவுத் தொழிலாளர்கள் மிகக் குறைவாக இருப்பதன் காரணத்தால்தான் பணிகள் சரியாக நடைபெறவில்லை என்று சொல்கிறார்கள். எனவே கூடுதலாக துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டங்களாலும், ஊரக வளர்ச்சித் திட்டங்களாலும் கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டங்களாலும் மற்றும் நல்லபல திட்டங்களாலும் தமிழகத்தில் புரட்சிகரமான பொற்காலத்தை உருவாக்கிவரும் பொன்மனச் செம்மல் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைச் செலுத்தி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் மானியக் கோரிக்கையை வரவேற்ற அமர்கிறேன்.

**திரு. அ. செல்வராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் சமுதாய நல வளர்ச்சித் திட்டம், நகராட்சி நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற விழைகிறேன்.



1985 ஜூன் 12] [திரு. அ. செல்வராசன்]

நாங்கள் எல்லாம் சென்னையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற முறையிலே சென்னையைப் பற்றிப் பேசுவது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். முதலிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்தவுடன் அவர்கள் இந்தத் துறைக்கு அமைச்சராக வந்த பிறகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை சென்னை மாநகராட்சியில் ஏற்படுத்த முயற்சி செய்து எங்களை எல்லாம் அழைத்துப் பேசினார்கள். அந்த உயர் மட்டக் குழுவிலே பேசுகின்றபோது மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அப்படி ஒரு உயர் மட்டக்குழு அமைக்கின்றபோது சென்னையிலே உள்ள 14 சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தக் குழுவிலே இடம்பெறச் செய்கின்ற வகையில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படிச் செய்தால்தான் எங்களுடைய குறைகளைப் பற்றி அந்தக் குழுவிலே எடுத்துக் கூற முடியும் என்று திட்ட வட்டமாகப் பேசினோம். ஆனால் அந்தக் குழு அமைக்கப்பட்டதற்குப்பிறகு பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரே ஒரு உறுப்பினர்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பிரச்சினையைப் இப்போது லிங்க் பண்ணிப் பேசுவது சரியல்ல. ஏனென்றால் அதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பல்ல. எனவே அதை ரெஃபர் பண்ணிப் பேசவேண்டாம். அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

**திரு. அ. செல்வராசன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கோருவது, எண்ணிக்கையின் பெயரிலே இடம் தருவதாக இந்த மன்றத்திலே பேசப்பட்டது. அப்படி அந்த எண்ணிக்கையின் பெயரிலே அந்தக் குழுவிலே இடம் பெறுவதாக இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சென்னையிலே நாங்கள் 8 பேரும், எங்களுடைய ஆதரவு பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்களும் சேர்ந்து 9 பேர்கள் இருக்கிறோம். குறைந்த பட்சம் அந்த அடிப்படையில் 3, 4 இடங்களையாவது தந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டு

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. செல்வராசன்] [1985 ஜூன் 12

இடங்களுக்கு கூட அதிலே வழியில்லாமல் தரப்பட்டிருக்கிறது. எப்படி தொகுதியைப் பற்றி அங்கே மற்றவர்கள் எடுத்துச் சொல்ல முடியும். என்னுடைய தொகுதி பற்றி எனக்குத்தான் தெரியும், நான் போனால் என் தொகுதியைப் பற்றி பேசியிருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் இடம் பெற்றிருந்தால் அவர் போய் அவருடைய தொகுதியைத்தான் பேசுவார். என்னுடைய தொகுதியைப் பற்றி அவர் பேச முடியாது. ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்று சொன்னால் என்னுடைய தொகுதிப் பிரச்னைகளை மற்றவர்கள் எப்படி புரிந்துகொள்ள முடியும்? அல்லது அவர்கள் தொகுதிப் பிரச்னை எனக்கு எப்படிப் புரியும்? சம்பந்தப்பட்டவர்கள் அதிலே இடம் பெற்றால்தான் அந்தப் பிரச்னைகளைப் பேச முடியும். சென்னையை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்று 8 ஆண்டுகளுக்குப் பிறகாவது இப்போது முடிவெடுத்து குழு அமைக்க இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தக் குழுவிலே குறைந்த பட்சம் 14 பேர்களையாவது இடம் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகம் வர முடியாது. அவர்களுக்கு நிறைய பணி இருக்கும். தமிழ்நாடு முழுவதும் பார்க்க வேண்டும். ஆகவே, அதிகாரிகளிடத்திலே இந்தப் பிரச்சனைகளை சொல்லியிருக்கிறோம். பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் மீண்டும் வற்புறுத்துகிறேன்.

அடுத்து சாலைகள் பராமரிப்பு. 37 ஆம் பக்கத்திலே சாலைகள் பராமரிப்பு என்ற வகையில் மொத்தம் 1,570 கிலோ மீட்டர் சாலையை மாநகராட்சி பராமரித்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே பேருந்து வழித்தடங்கள் என்று 268 கிலோ மீட்டர் ஒதுக்கப் பட்டிருப்பதாக கணக்கு காட்டியிருக்கிறார்கள். மீதம் உள்ளவை பஞ்சாயத்து சாலைகள் உட்பட 1,302 கிலோ மீட்டர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சாலைகளை புதுப்பித்து பராமரிப்பதற்காக ஓர் ஆண்டிற்கான உத்தேச செலவு 14.00 கோடி என்றும், அதிலே ஏற்கெனவே 4 ஆண்டுகளாக 6.00 கோடி ரூபாய்தான் சராசரியாக ஒதுக்கப்பட்டு வருவதாகவும் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், ஆண்டுக்காண்டு 6 கோடி என்றால், இந்த 4 ஆண்டுகளில் 32 கோடி ரூபாயை செலவிடாமல் விட்டிருக்கிறார்கள் என்று பொருள் கூட்டி,



1985 ஜூன் 12] [திரு. அ. செல்வராசன்]

கழித்துப் பார்த்தால். ஆகவே, இந்த 14 கோடி ரூபாய் என்பதை சுமார் 30 கோடி ரூபாயாக ஒதுக்கி, அதை முழுவதுமாக செலவிட்டால் தான் சென்னையிலே இருக்கும் சாலைகள் சரியாக பராமரிக்க வாய்ப்பு ஏற்படும். கடந்த 10 ஆண்டுகளாக சென்னை சாலைகள் சரியாக பராமரிக்காத நிலையிலேயே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, அந்தக் கமிட்டியிலே நான் பேசிய பிறகு, அங்கு வந்திருந்த எஸ்.ஓ. அவர்களையும் கமிஷனர் அவர்களையும் பொதுவாக சந்தித்துப் பேசினேன். அந்த அதிகாரிகள் சென்னைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். ஆகவே, அப்படி எண்ணம் உடைய அவர்களுக்கு நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கித் தந்தால், அவர்களால் இன்னும் சிறப்பாக பணி ஆற்ற முடியும். ஆகவே அதை நான் மாண்புமிகு அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த 8 ஆண்டு காலமாக ஒரு எஸ்.ஓ. வாவது ஒரு ஆண்டுக்கு மேலே மாநகராட்சியிலே இருந்ததாக வரலாறே இல்லை. இந்த மாநகராட்சியைப் பொறுத்த வரையில் அதில் பொறுப்பேற்று அதைப் புரிந்துக் கொள்ளவே 6 மாதம் ஆகும். 6 மாதத்திற்குப் பிறகு ஏதாவது சிறப்பான பணிகளைச் செய்யலாம் என்று அவர்கள் கருதினால், அந்த இடைப்பட்ட நேரத்தில் அவர் திடீர் என்று மாறிவிடுவார். அது ஏன் என்று புரிவதில்லை. இந்த முறையாவது தேர்தல் வரும் வரையில் அந்த அதிகாரிகளை தொடர்ந்து அந்தப் பணிகளை ஆற்றும்படிச் செய்யுங்கள்.

அந்த அதிகாரிகள் யார் என்று எனக்குத் தெரியாது. அந்தக் கமிட்டியிலேதான் நான் அவர்களைப் பார்த்ததே. அதற்குப் பிறகு அவர்கள் எப்படி பணிபுரிகிறார்கள், அவர்களுடைய எண்ணம் எப்படி இருக்கிறது என்று அறிந்து கொள்வதற்காக ஒரு முறை அவர்களுடைய அறைக்குச் சென்று பேசினேன். 5 நிமிடம் தான் பேசியிருக்கிறேன். நாங்கள் ஏதாவது பணியைச் செய்ய நினைக்கிறோம். நீங்கள் எல்லாம் பழைய உறுப்பினர்கள், ஏதாவது எங்களுக்கு திட்டங்களைத் தந்து உதவினால் இந்த நகரத்திற்கு நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே

தான் சொல்கிறேனே தவிர, தனிப்பட்ட முறையில் அந்த எஸ்.ஓ. யார் என்றே எனக்குத் தெரியாது. அந்தக் கமிஷனர் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆகவே அருள்கூர்ந்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, இந்த ரோடுகள் போடுவதைப் பற்றி நான் ஏற்கனவே கமிட்டியிலே பேசும்போது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அவர்களும் அதைக் கவனமாகக் கேட்டு இருக்கிறார்கள். ரோடுகள் மட்டும் போட்டால் போதாது. காரணம் நாங்கள் எங்களுடைய அனுபவத்திலிருந்தும், பழக்கவழக்கங்களிலிருந்தும் சொல்கிறோம். ரோடுகள் போடும்போது, உடனே வாட்டர் டேபிள் போட வேண்டும். என்னுடைய தொகுதியிலே கூட இப்போது ரோடுகள் போடுகிறார்கள். புதுத் தெருவிலே போடுகிறார்கள். ரோடு போட்டால், வாட்டர் டேபிள் போடுவதில்லை. பிறகு புட் பாத் போடுவதில்லை. இந்த இரண்டையும் போட்டால்தான் அந்த ரோட்டினுடைய முழு வேலைகளும் முடிந்துவிட்டதாகக் கருத முடியும். ஆகவே இந்த ரோடுகளுக்காக இனிமேல் எஸ்டிமேட் போடுகின்றபோது, வாட்டர் டேபிள், மற்றும் புட் பாத்துக்கும் சேர்த்து எஸ்டிமேட் போடவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விளக்குகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். 2 ஆயிரம் புதிய சோடியம் வேப்பர் விளக்குகள், மற்றும் 4 ஆயிரம் மெர்க்குரி விளக்குகள் போடுவதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஒரு விளக்குக்கு 833 ரூபாய் வருகிறது. நீங்கள் எப்படி கணக்குப் போட்டுப் பார்த்தீர்கள் என்று தெரியவில்லை. இந்த 833 ரூபாயிலே ஒரு போஸ்ட் தான் வாங்க முடியும். பிறகு, அதற்கு வேண்டிய பிட்டிங், மற்றும் பல்ப் இவைகளை எல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட 3 ஆயிரம் ரூபாயாவது ஆகும் என்று கருதுகிறேன். ஆகவே 3 ஆயிரம் ரூபாய் ஒரு விளக்குக்கு என்று சொன்னால், இந்த 6 ஆயிரம் விளக்குகளுக்கும் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் நீங்கள் கொடுத்திருக்கிற கணக்கைப் பார்த்தால், 50 லட்சம்தான். எனவே இது எந்தக் கணக்கு என்று எனக்குத்





தெரியவில்லை. நான் மின்சாரத் துறை அதிகாரிகளைச் சென்று பார்த்தேன். ஆனால் நான் போகும்போது அவர்கள் வரவில்லை. ஆகவே இது எப்படி கணக்குப் போட்டார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிதண்ணீர், இப்போதுதான் அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் வெளியே போய் இருக்கிறார்கள். சற்று முன்வரையில் இங்கே இருந்தார்கள். குடிநீர்ப் பிரச்சனையைப் பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்தக் காலத்திலேயிருந்த மக்கள் தொகை என்ன, இந்தக் காலத்திலே இருக்கிற மக்கள் தொகை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். இதைப் பற்றி நான் கமிட்டியிலே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். இரண்டு அமைச்சர்களும் வரவேண்டும், தனியாக நீங்கள் ஒருவர் மட்டும் வந்தால் போதாது என்று நான் சொன்னேன். அதற்கு என்று தனியாக குடிநீர் வடிகால் வாரியம் இருக்கிறது. நாங்கள் உங்களையும் பார்க்க வேண்டும், பிறகு அவர்களையும் போய்ப் பார்க்க வேண்டும். வடிகால் வாரியத்திடமிருந்து, சென்ற வாரம் எனக்கு ஒரு குறிப்பு வந்தது. அமைச்சர் காளிமுத்து அவர்களிடமிருந்து வந்தது. சென்னை ஜார்ஜ் டவுனிலே 21 ரோடுகள் சரி செய்யப்பட்டு, பாதைகள் பாதாள சாக்கடைகள் சரி செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். சென்னையில் ஜார்ஜ் டவுனில் மட்டும் ஏறக்குறைய 500 தெருக்கள் இருக்கும். அந்த 500 தெருக்களில் 20 தெருக்கள் தான் வடிகால் வாரியத்தாலே சுத்தமாக்கப்பட்டு இருக்கிறது என்றால், மற்ற தெருக்களின் நிலை என்ன என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, சென்னையிலே மணிக்கூண்டு சத்திரம் என்ற அந்த ரோடிலே ஒரு சுரங்கப் பாதை அமைக்கப்போவதாகவும், அதற்கு 1 கோடி ரூபாய் செலவிடப்போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடம் எங்கிருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அங்கே நீங்கள் சுரங்கப்பாதை அமைப்பதாக இருந்தால், அந்த வெல் கிராசிங் பக்கத்திலே, ஸ்டான்லி மருத்துவமனைக்கும், ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைக்கும் இடையிலே உள்ள இடத்தில்தான் நீங்கள் அமைக்க வேண்டும். அதற்கு ஒரு கோடி ரூபாய் போதுமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே பார்த்தால், 100 லட்சம் இதற்கு ஒதுக்கப்படுவதாகவும், இந்த ஆண்டு அதற்கு 10 லட்சம்

[திரு. அ. செல்வராசன்] [1985 ஜூன் 12

ரூபாய் செலவு செய்யப்போவதாகவும் குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆர்.பி.ஐ. சுரங்கப் பாதை. இந்தப் பாதைக்கு 1983-84-லே 23 லட்ச ரூபாய் என்று எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். அதை அப்போதே செய்திருந்தால், 23 லட்சம் ரூபாயிலே முடிந்திருக்கும். இப்போது 40 லட்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். 17 இலட்சம் ரூபாய், சென்னை மாநகராட்சியிலே குறைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இதைப் பற்றி இன்னொரு புத்தகத்திலே பார்த்தால் 50 இலட்சம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்த்தால் 27 லட்சம் ரூபாய் கூடுதலாக வருகிறது. இது ஏன் வருகிறது என்றால், குறிப்பிட்ட நேரத்தில் அந்த வேலையைச் செய்திருந்தால், நிச்சயமாக இந்தத் தொகை வந்திருக்காது. நமக்கு நஷ்டமும் வந்திருக்காது. அப்போது அதை நீங்கள் கவனிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வந்திருக்கிறார்கள் இந்தத் துறைக்கு. இதைப்பற்றி எல்லாம் அதிகாரிகளிடத்திலே பேசி, 1983-84-லே இதைச் செய்திருந்தால் என்ன என்று அவர்களிடம் கேட்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது அதைப் பழுது பார்க்கும் வேலைகள் நடப்பதாகத் தெரிகிறது. இந்த பாலத்தைச் சுற்றி 3 பம்பிங் ஸ்டேசன்கள் இருக்கின்றன. கடல் தண்ணீரால் இந்தப் பாலம் கெட்டுவிட்டது. எனவே அமைச்சர் அவர்கள், இதைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அதைச் சரி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை ரிப்பேர் செய்தால் மட்டும் போதாது. இதைப்பற்றி கமிஷனர் அவர்களுக்கு, அல்லது எஸ்.ஓ. அவர்களுக்குத் தெரியுமோ, என்னவோ தெரியாது. அதைக் கட்டுவதற்கு மூல காரணமாக இருந்தவர்களில் நானும் ஒருவன். நான் அப்போது எஸ்டிமேட் கமிட்டியில் உறுப்பினராக இருந்தேன். இப்படிப்பட்ட சுரங்கப் பாதை சென்னையில் முதன் முதலாக கட்ட வேண்டும் என்று வற்புறுத்தியதே நான் தான். அதை இப்போது பழுது பார்க்கிறார்கள். சுற்றிலும் இருக்கிற அந்த 3 கிணறுகளை பழுது பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 12] [திரு. அ. செல்வராசன்]

அடுத்து, பேசின் பிரிட்ஜ் பவர் அவுஸில் இருந்து வருகிற புகையைப் பற்றி நான் சுமார் 8 முறை பேசும்போதும் பேசியிருக்கிறேன். அந்த புகையை நிறுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் எங்களிடம் சொன்னார்கள், நிச்சயமாக அது கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் மின்சாரத்துறை போர்டு சேர்மனிடம் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக கேட்டேன். அதற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்தால் அந்தப் புகை எப்படி வரும் என்று சொன்னார்கள் என்றால் சிகிரெட் புகைக்கிறோமே அப்போது விடுகிற அந்த புகை மாதிரி கூட அல்ல, அதை கையில் வைத்துயிருக்கும்போது அது எரிந்து வெளியே வருகிற புகை போல் இருக்கும். அதற்கு ஒரு கோடி ரூபாயில் திட்டம் தீட்டுவதாகச் சொன்னார்கள். நான் அதை இங்கே சட்டமன்றத்தில் பேசினேன். அப்போது மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நிச்சயமாக அது கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை அதை கவனித்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அது என்னுடைய தொகுதிக்கு பெரிய குறையாக இருக்கிறது. அங்கே ஸ்டான்லி மருத்துவ மனை பக்கத்தில் இருக்கிறது. அங்கே டி. பி. நோயால், ஆஸ்த்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அந்த புகையைத் தான் சுவாசிக்கிறார்கள். ஆகவே அருள்கூர்ந்து இந்த அரசு நிச்சயமாக அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாடி பூங்கா என்று ஒன்று இருக்கிறது. பூங்காக்களை எல்லாம் அதிகாரிகள் வந்து பார்ப்பதாகச் சொன்னார்கள். இன்னும் வரவில்லை. வருவார்கள் என்று கருதுகிறேன். லோன் ஸ்குயர் பூங்கா பற்றி உங்களுக்குத் தெரியும். இப்போது அதைப் பார்த்தால் அதைப் பற்றி என்ன சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. அதற்கு என்ன பெயர் வைப்பது என்று தெரியவில்லை. நீங்கள் தயவுசெய்து ஒரு முறை வந்து பார்க்க வேண்டும். நீங்கள் சின்னவராக இருக்கும்போது பார்த்து இருப்பீர்கள். எங்களோடு பழகியிருக்கிறீர்கள். அந்த லோன் ஸ்குயர் பூங்காவிற்கு பூங்கா என்று பெயர் வைப்பதா அல்லது வேறு என்ன பெயர் வைப்பது என்று வந்து பாருங்கள். மாடி பூங்கா என்னுடைய தொகுதியில் இருக்கிறது. பம்பாயில் இருப்பதைப்போல் ஹாங்கிங் கார்டன் என்று சொல்வார்களே அது போல் என்னுடைய தொகுதியில் மாடி பூங்கா ஒன்றை

நான் எவ்வளவோ பிரயத்தனப்பட்டு சென்னை மாநகராட்சி அதிகாரிகளை வைத்து மிகவும் சிறப்பாக வைத்து இருந்தேன். இப்போது அது சமாதி பீடமாக சுடுகாடு மாதிரி இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் எல்லாம் கட்டாயமாக போய் பார்க்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 3, 4 லட்ச ரூபாய் செலவு செய்யப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 50-வது வார்டில் ஒரு மாநகராட்சி பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் சுமார் 500, 600 பிள்ளைகள் படிக்கக்கூடிய இடம் தான் அது. அருமையான இடம். அருமையாக கட்டினோம் அந்தக் காலத்தில். இப்போது அதில் படிக்கும் பிள்ளைகள் 40, 50 பேர் தான். கார்ப்பரேஷன் பள்ளி என்பதால் யாரும் வருவது இல்லை. ஆகவே நான் சொல்கிறேன், அந்த பள்ளிக்கூடத்தை பாழாக்காமல் அதை ஒரு திருமணக் கூடமாக மாற்றுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். கல்வித் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் சென்று பார்க்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் அதை சென்று பார்க்க வேண்டும். ஏன் என்றால் அதை வீணாக்க வேண்டாம்.

அடுத்து, மாநகராட்சி குடியிருப்பு அல்லாபுரத்தில் இருக்கிறது. அதன் ஒரு பக்கம் மிகவும் பாழடைந்து, அவர்கள் சுமார், 7, 8 வருடமாக வாடகை கட்டாமல் இருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் இதை சரி செய்யவில்லை, தண்ணீர் வசதி இல்லை, ரோடு வசதி இல்லை நாங்கள் எப்படி வாடகை கட்டுவோம் என்று சொல்லி வாடகை கட்டாமல் இருக்கிறார்கள். நீங்கள் அதை சரி செய்து கொடுத்தால் வாடகை வாங்கலாம். இதனால் மாநகராட்சிக்குப் பணம் வராமல் வீணாக போய்க் கொண்டு இருக்கிறது. நான் இதைப்பற்றி பலமுறை பேசியிருக்கிறேன். அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 51-வது டிவிஷனில் அன்னை சத்தியா நகர் என்று இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயார் பெயரால் அன்னை சத்தியா நகர் என்று 3 இடங்கள் இந்த சமாதான மண்டபத்திற்கு எதிரில் இருக்கின்றன. பொருட்காட்சி போடுகிற இடத்திற்கு எதிரில் 2 நகர் இருக்கிறது, போர்ட்



டிரஸ்டு பில்டிங்குக்கு பக்கத்தில் ஒரு நகர் இருக்கிறது. இந்த 3-க்கும் பெயர் அன்னை சத்தியா நகர். அங்கே குடிப்பதற்கு தண்ணீர் இல்லை, விளக்கு வசதிகள் இல்லை. இவைகளை தான் அன்றைக்கு அண்ணா அவர்கள் சொன்னார்கள். மக்கள் எல்லாம் புழுக்கள் ஆக வாழ்கிறார்கள், அந்த நிலை தான் அங்கே இருக்கிறது. தயவுசெய்து நீங்கள் அந்த இடத்தை மாற்றி கொடுங்கள் அல்லது வேறு கட்டிடமாவது கட்டிக்கொடுங்கள் அல்லது அவர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச வசதிகளை செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கொசுக்கள் தொல்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னார்கள் 'சிங் பார்' 60 வாங்கி இருக்கிறார்கள், சென்னை மாநகரத்திற்கு என்று சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய கமிஷனர் அவர்களை கேட்டுச் சொன்னார். அடுத்த வாரம் உங்கள் தொகுதிக்கு வரும் என்று சொன்னார், சொல்லி 2 மாதங்கள் ஆகின்றன. அந்த சிங் பார் நான் பார்க்கவில்லை. அப்போது நாங்கள் இட்டாலியிலிருந்து வாங்கினோம். இப்போது எங்கே எந்த ஊரிலிருந்து வாங்கியிருக்கிறார்கள். எண்ணிப் பார்க்க வேண்டும். 60 வாங்கியதாக சொல்கிறார்கள். அதிகாரிகள் சொன்ன உடனேயே நீங்கள் சொன்னீர்கள். அதை நாங்கள் பார்க்க வேண்டும். அதை அடித்தால் கொசுக்கள் நிச்சயமாக இருக்காது. கொசுக்கள் சேருவதற்கு முதல் காரணம்—சென்னையில் நான் அறிந்த வகையில் ரோடு போட்ட உடனேயே கால்வாய் போட்டால் ஒழுங்காக இருக்கும். மாட்டுக் கொட்டகை, சாணித் தண்ணீர், சிறுநீர் எல்லாம் சேர்ந்து அப்படி ஆகிறது. ரோடு போட்டால், கால்வாய் போடவேண்டும். ஆகவே கொசுத் தொல்லையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

லோன் ஸ்கொயர் பூங்காவிலே ஏதோ ஒரு லெட்ரின், சிறுநீர் கழிப்பிடம், கழிப்பறை கட்டப் போவதாக கேள்விப்பட்டேன். தப்பித் தவறி லோன் ஸ்கொயர் பூங்காவிலே கட்டிவிடாதீர்கள். 7, 8 இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிலே பார்த்தேன். பீகாரிலே கட்டுவதுபோல் இங்கே கட்டலாம் என்று லோன் ஸ்கொயர் பூங்கா என்று போட்டிருக்கிறார்கள். நான்

இருந்தவரை, லோன் ஸ்கொயா என்றால் ஸ்ரீராம் நாயுடு பூங்கா தான். தயவுசெய்து அதிலே கழிப்பறை கட்டவேண்டாம் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மூலக்கொத்தளம் சுடுகாடு—சுடுகாடு என்று சொன்னாலே பாழ் அடைந்த இடம் தான் — அங்கே ஒரு விளக்கு கிடையாது. சில நேரங்களில் அரசியல் கட்சித் தலைவர்கள் யாரேனும் இறந்து விட்டாலும் 1,000, 2,000 பேர் போகிறார்கள். குளிப்பதற்கு தண்ணீர் கிடையாது. ஆகவே, அங்கே சுடுகாட்டிலே பல விளக்குகள் போடவேண்டும், குளிப்பதற்கு அங்கே குளியல் அறைகள் தேவை. இதை எல்லாம் அருள்கூர்ந்து செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து டிரான்ஸ்போர்ட். சென்னையிலே ரோடிலே போக முடியுமா என்றால், லாரித் தொல்லை பெரிதாக இருக்கிறது. நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். லாரிகளை சென்னைக்குள்ளே இரவு 10 மணிக்குள்ளே வரவழையுங்கள். காலை 6 மணிக்கு அப்புறப்படுத்துங்கள். இது ஒன்றும் பெரிய காரியமாக எனக்குத் தெரியவில்லை. இதில் என்ன சிரமம் இருக்கிறது என்றும் தெரியவில்லை. ஆக்சிடெண்டுகளை அதன்மூலம் தவிர்க்கலாம். பகலிலே வண்டி ஓட்டினால் ஆக்சிடென்டே வராது. மதுரையிலிருந்து காலை 6 மணிக்கு எடுத்தால், சென்னைக்கு இரவு 10 மணிக்குள் வந்து விடலாம்: இங்கே லோடிங், அன்லோடிங் எல்லாம் மற்றவர்கள் தான் செய்யப் போகிறார்கள். டிரைவர்கள் செய்யப்போவதில்லை. அவர்கள் பிறகு திருச்சி, மதுரை, தஞ்சாவூருக்கு போகமுடியும். இது டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் செய்ய வேண்டும் என்று சொல்லி விடப் போகிறீர்கள். எல்லோரும் கூட்டாகச் செய்யும் வகையில், தாங்களும் பேசி அதுபோன்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஸ்டான்லி மருத்துவமனைதான் சென்னையிலே கொஞ்சம் பெரிய மருத்துவமனை. அதிலே டென்டல் டிபார்ட்மென்ட் ஒன்று இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் டாக்டர் அண்டே அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். ஆகவே, அதையும் கலந்து பேசி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





இதெல்லாம் செய்யச் சொல்கிறீர்களே, ஏது வருமானம் என்று என்னை நீங்கள் கேட்கலாம். வெஹிகில் டாக்ஸ் சென்னையிலே நீங்கள் தானே கலெக்ட் பண்ணுகிறீர்கள். அதில் 50 சத வீதம் சென்னை கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தால், அவர்கள் நன்றாக காரியங்கள் செய்வார்கள். ஆகவே, அதையும் வற்புறுத்திக் கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகம் பற்றிய 28-ம் எண் மானியக் கோரிக்கையில், ரூ. 232,70,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று, ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

நடைபெறுகின்ற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில், நம்முடைய காந்தி அவர்கள் கண்ட கிராம ராஜ்யம் நனவு ஆக்கப்படவேண்டும் என்கிற உணர்வோடு, கிராமங்கள் எல்லாம், சிறு நகரங்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழாகவும், ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற திட்டத்தின் கீழும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழும், கிராமப் பகுதிகளுக்கெல்லாம், குடிநீர் வழங்குதல், இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் கட்டுதல், வடிகால்கள் அமைத்தல், பாசன வசதிகள் செய்து கொடுத்தல், மயான சாலைகள் அமைத்தல், சாலை விளக்குகள் பொருத்துதல் போன்ற பல்வேறு பணிகள் செய்யப்பட்டு, கிராமங்கள் எல்லாம் சிறிய நகரங்களாக இன்றையதினம் ஆக்கப்படுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை இந்த மாமன்றத்திலே சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அதே நேரத்தில், வறுமைக் கோட்டிலே இருக்கின்ற ஏழைஎளிய விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு, மானியமாக பல்வேறு தொகைகள் கொடுக்கப்பட்டு, கறவை மாடுகள், ஆடுகள், விவசாயிகளுக்கு வண்டி மாடுகள் போன்றவைகளும் கொடுத்து உதவி,

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1985 ஜூன் 12

அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அதே நேரத்தில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட இன மக்கள் வளர வேண்டும் என்ற உணர்வோடு எரியாத வீடுகளை நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே இந்த உள்ளாட்சித் துறை மூலமாகக் கட்டிக் கொடுத்தார்கள். நகரங்களில் வாழ்பவர்கள், நகரவாசிகளெல்லாம் கேஸ் என்று சொல்லப்படுகின்ற வாயுவின் மூலம் அடுப்புகளை எரிக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களிலும் அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு எரி சாண வாயு என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதன் மூலமாக இன்றைக்குக் கிராமங்களிலே உள்ளவர்களும் நன்மை பெறுகின்ற அளவிற்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

ஆரோக்கியமான உடல் நலத்தோடு வாழ வேண்டுமென்பதற்காக என்.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலமாகச் சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டு, இன்றைக்குப் பல்வேறு திட்டங்கள் கிராமப்புறங்களில் தீட்டப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அனைத்து நகராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகப் பாதைகளைச் செப்பனிடுதல், ட்ரெய்னேஜ் அமைப்பது, மருந்தகம் அமைப்பது போன்ற பல்வேறு பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாநகராட்சியைப் பொறுத்தவரையில், கோவை மாநகராட்சி இந்த ஆண்டு புத்துயிர் பெற்று விளங்க வேண்டுமென்ற உணர்வோடு 640 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதை உருவாக்குவதற்காக இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட. போதிலும், நடப்பு ஆண்டிலே அண்ணா பேருந்து நிலையத்திலே கடைகள் கட்டி வருமானத்தை ஏற்படுத்துவதற்காக 51 இலட்சம் ரூபாயையும், சென்ட்ரல் மார்க்கெட்டை நவீனப்படுத்த 15 இலட்சம் ரூபாயையும், மதுரை மக்கள் எத்தனையோ நாட்களாக வேண்டிக்கொண்டிருந்த மதுரை அரசினர் மீனாட்சி கலைக் கல்லூரியின் இரண்டு பகுதிகளையும் இணைக்கின்ற நடைபாதை பாலம் கட்டும் திட்டத்தையும் உருவாக்கித் தருவதற்கு இந்த அரசில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.



1985 ஜூன் 12] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

பகைவனுக்கு அருளுகின்ற பண்பாளர் புரட்சித் தலைவர் ஆட்சியில், இந்தச் சென்னையிலே, இது மேம்படுத்தப்பட வேண்டுமென்ற உணர்வோடு, எல்லாம் எனக்குத் தெரியும், என்னைத் தவிர வேறு யாருக்கும் எதுவும் தெரியாது என்ற சர்வாதிகார ஆட்சி நடத்துகின்ற ஆட்சியாளர்களெல்லாம் போய், இன்றைக்கு அனைவருடைய உணர்வுகளுக்கும் மதிப்பு அளிப்பேன் என்று சர்வ கட்சித் தலைவர்களையும் தமிழகத்தின் தலைநகரத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக அழைத்து காலையிலும், மாலையிலும், சென்னை நகரத்தை எப்படிச் சீர்படுத்த வேண்டும், எப்படி அழகு படுத்த வேண்டும், மக்களுக்குள்ள குறைகளை எப்படி நிவர்த்திப்பது என்பதுபற்றி கூட்டத்தைக் கூட்டி புரட்சித் தலைவரவர்கள், சென்னையைப் பொறுத்தவரையில் துப்புரவுப் பணிகளுக்காக லாரிகள் வாங்குவது, மழை நீர் வடிகால் அமைப்பது, மின் கேபிள்கள் புதைத் திட்டம் துவங்குவது, பாதை அமைப்பது பற்றியெல்லாம், அந்த நிர்வாகத்திலே போதிய வருமானம் இல்லையென்றாலும், அரசின் மூலமாகக் கடனாகவும், மானியமாகவும் வழங்குவதற்கு இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லும் நேரத்தில் அதை உள்ளபடியே நான் மனந் திறந்து பாராட்டுகிறேன். அந்த வகையிலே சென்னையைப் பொறுத்த வரையில் இதுபோன்ற நல்ல காரியங்களை புரட்சித் தலைவ ரவர்கள் ஆட்சியிலே இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லும் நேரத்தில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

அதே நேரத்தில் புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மாதந்தோறும் பயணம் செய்து நகராட்சிகளில் இருக்கின்ற சர்வகட்சியினரையும் அழைத்து, உரிய அதிகாரிகளையும் அழைத்து, மாநகராட்சிகளைப் போல் நகராட்சிகளையும் செயல்படுத்த வேண்டும். நகரங்கள் எப்படி அழகாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கூட்டங்கள் போட்டு சுற்றுப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நல்ல வேலைகளைச் செய்கின்ற நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலே என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்களெல்லாம்

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1985 ஜூன் 12

போகிறோம், அங்கே போனால் கிராமத்திலே இருப்பவர்கள், பள்ளிக்குச் சரியாக ஆசிரியர்கள் வருவதில்லை என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில், ஆசிரியப் பெருமக்கள் சொல்கிறார்கள், பள்ளியிலே தளவாட சாமான் இல்லை, பள்ளிகள் ஓட்டையாக இருக்கின்றன, இதைச் செப்பனிட வேண்டுமென்றால் நாங்கள் பி.டி.ஓ. வினிடத்தில் போக வேண்டியிருக்கிறது. எனவே, எங்களை மாற்றும் அதிகாரம், எங்களிடத்தில் கேட்கின்ற அதிகாரம், குறைகள் இருந்தால் முறையிடும் அதிகாரம் ஆகிய அத்தனையும் எங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக வந்தால்தான் நாங்கள் செயல்பட முடியும் என்று ஆசிரியப் பெருமக்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்ளைப்பற்றியெல்லாம் கல்வித் துறையிலே இருக்கிறது. ஆனால் ஏற்கனவே ஊராட்சித் துறையின் மூலம் இவர்கள் இருந்தார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஆசிரியர் பி.எஃப். லோன் போடவேண்டுமென்றால், இப்பொழுதுள்ள சட்டம் என்னவென்றால், பி.எஃப். லோன் வேண்டுமென்றால் கல்வி உதவி அதிகாரி என்று இருக்கின்ற ஏ.ஈ.ஓ. வினிடத்தில் மனுச் செய்ய வேண்டும். அந்த மனுவைப் பரிந்துரை செய்து பி.டி.ஓ.க்கு அனுப்ப வேண்டும். பி.டி.ஓ. இந்த பி.எஃப். லோனை சேங்ஷன் செய்து மீண்டும் ஏ.ஈ.ஓ.க்குப் போய், ஏ.ஈ.ஓ. தான் அந்த செக்கையே மாற்றி ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால், பி.எஃப்.

(முற்பகல் 11-30)

லோன் கொடுக்கப்படுகிற இடம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற பி.டி.ஓ. இடம். பள்ளிக்குத் தளவாடச் சாமான்கள் கொடுக்கிற இடம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய அலுவலகம். பள்ளிக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கிற அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிறது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த அளவுக்கு, பள்ளிகளுக்கு வேண்டிய அத்தனையையும் செய்கின்ற ஊராட்சி ஒன்றியத்திலேயே ஆசிரியர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்ற நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 12] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

இப்பொழுது கிராமப்புறங்களில் பஞ்சாயத்து வரி வசூல் செய்யப்படுகிறது. அங்கே கிராம நல அதிகாரிதான் வரி வசூல் செய்கிறார். அவர்களுக்கு நில வரி வசூல் செய்கிற அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதனால், பஞ்சாயத்துக்கு வருகிற வருமானம் குறைகிறது. உரிய காலத்தில் வரி வசூல் செய்யப்படவில்லை, காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, கிராம சேவக்குகள் என்று சொல்லப்படுகிற ஊர் நல அலுவலர்கள் மூலமாக, வரி வசூல் செய்ய வேண்டும். பஞ்சாயத்து ஊராட்சி மன்ற வரிகளை வசூல் செய்கிற அதிகாரத்தை, விலேஜ் அட்மினிஸ்ட்ரேட்டர்ஸ் என்று சொல்லப்படுகிற நிர்வாக அதிகாரிகளிடத்திலிருந்து எடுத்து, கிராம சேவக்குகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சியிலே, ஊராட்சி ஒன்றியத் தேர்தலைக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து விவாதம் நடத்தியபோது, ஊராட்சி மன்றத் தேர்தல்களிலே அரசியல் கட்சிகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, நான் நினைவுபடுத்த விரும்புவதெல்லாம், ஒரு கிராமத்திலே தேர்தல் நடைபெறுகிறது; அங்கே பெரிய இனத்தைச் சேர்ந்தவர்கள், பெரும்பான்மையான இனத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் வெற்றி பெறக்கூடும். அப்படி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றால் அங்கே இருக்கிற சிறுபான்மை சமுதாயத்தினருக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? இந்தியாவில் இருக்கிற மகாராஷ்டிரத்திலே பம்பாய் என்ற நகரம் ஒன்று உண்டு. அங்கே, தனிப்பட்ட இனத்தைச் சேர்ந்த சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே வெற்றி பெற்றிருக்கிறார். அந்த இனத்தின் சார்பாக அவர் வெற்றி பெற்றிருக்கிற காரணத்தால், அங்கே இருக்கிற சிறுபான்மை சமுதாயத்தை நசுக்குகிறார்கள்; துரத்தியடிக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த அளவிற்கு, தமிழகத்தைப் பொறுத்த அளவிற்கு, மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், தமிழன் என்ற இனவெறியைத் தூண்டுவதன் மூலமாக, பதவி சுகம் அடையலாம் என்று நினைக்கின்ற இன வெறியர்கள், தங்கள் சுய நலத்திற்காக, அவ்வப்போது, தமிழ்நாட்டு **பால் தாக்கரேவாக** மாறிக் கொண்டு வருகிறவர்கள். நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1985 ஜூன் 12

அவர்களெல்லாம் எதிர்காலத்திலே இன்னொரு பால் தாக்கரேவாக மாறிவிடக் கூடாது என்ற உணர்வோடு கேட்டுக் கொள்கிறேன். இங்கே ஜனநாயக ரீதியாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, அதன் மூலமாக, எங்களுக்கு உள்ளாட்சி மன்றத்தை உருவாக்கித் தர புரட்சித் தலைவர் கொண்டு வருகிற திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிற்கு 7 ஆண்டுக் காலமாக, சரியான முறையிலே, எந்தவித வசதியும் தன்னிறைவுத் திட்டத்திலே செய்யப்படாமல் இருக்கிறது. பொதுவாக, பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் இல்லாத ஒரு நிலைமை என்னு டைய தொகுதியிலே இருக்கிறது. அந்த வகையிலே என்னுடைய தொகுதியிலே பெருங்களத்தூர், அண்டம்பள்ளம், சின்னதாள் பாடி, அரிமாநந்தல், நாளிப்பாடி, கொடக்கால், கோயினம் போளவம் பட்டு, பௌத்திரம் போன்ற கிராமங்களில் இருக்கின்ற உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருங்களத்தூர், தச்சம்பட்டு, வாப்பேரி, தண்டாராம்பட்டு போன்ற இடங்களில் திருமண மண்டபங்கள் அமைத்துச் தர வேண்டும். என்னுடைய தொகுதி 187 கிராமங்களைக் கொண்டது. அங்கே ஒரு திருமண மண்டபம் கூட கிடையாது. அங்கே, மாண்புமிகு பேரவைத் தலைவரை அழைத்து ஒரு திருமணம் செய்யவேண்டுமென்றால், 100 பேர் கூட வேண்டு மென்றால் கூட, ஒரு ஆடிட்டோரியம் இல்லை. எனவே, ஒரு திருமண மண்டபத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையைப் பற்றி இங்கே இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனென்றால், அவரது தாயகம் திருவண்ணாமலை. வட ஆற்காடு மாவட் டத்திலே திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் 70 ஊராட்சி களைக் கொண்ட ஒன்றியம். வட ஆற்காடு மாவட்டத்திலே 37 ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றிலே, மிகமிகப் பெரிய ஒன்றியம் திருவண்ணாமலை ஒன்றியம். அவ்வளவு பெரிய ஒன்றியத்தை அங்கே இருக்கிற ஒன்றிய ஆணையாளரால் பார்க்க முடியவில்லை. ஆகவே, அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 12] [கூடலூர் இ. வி. வேலு]

புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் ஆட்சியில்தான் கிராமப் புறங்கள் எல்லாம் சிறுசிறு நகரங்களாக ஆகிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லி, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் கொண்டு வந்த மானியத்தைத் தலைவணங்கி வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டம் நகராட்சி நிர்வாகம் என்ற 28-வது மானியக் கோரிக்கைமீது நான் சார்ந் திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இப்போது சமுதாய நலத் திட்டங்கள் என்ற வகையில் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் இன்றைக்கு கிராமப்புறங்களில் நடைபெறுகின்றன. இதற்காக ஒதுக்கக் கூடிய பணம் பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லியிருக் கிறார்கள். இலட்சக்கணக்கான மனித உழைப்பு நாளை உருவாக்குவதாகவும் கூலியாக ஒரு கிலோ அரிசியும் 5 ரூபாய் 15 காசும் என்று இருந்ததை மாற்றி ஒரு கிலோ அரிசியும் 6 ரூபாயும் அல்லது 8 ரூபாய் என்று உயர்த்தியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 10 ரூபாய், 8 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களை மேலே கைதூக்கி விடுவதற்காக கொடுக்கப்படுகிற கூலி 8 ரூபாய் என்று சொல்வது நியாயமல்ல. குறைந்தபட்ச கூலி சட்டத்தின் அடிப்படையில் குறைந்தது 10 ரூபாயாவது கொடுக்க வேண்டும்.

குறிப்பாக இப்படிப்பட்டத் திட்டங்களை எல்லாம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் செய்வதாக குறிப்பு கொடுத் திருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் சென்று பார்த்தால் இப்படிப்பட்டத் திட்டங்கள் எல்லாம் ஊரிலே இருக்கிற கான்ட் ராக்டர்கள் மூலமாகத்தான் செய்யப்படுகின்றன என்பது தெரிய வரும். குறிப்பிலே சொல்கிறார்கள், பி.டி.ஓ. மூலம் செய்யப் படுகிறது, கிராம நல அலுவலர்கள் மூலமாகச் செய்யப்படுகிறது, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள்தான் இந்த வேலை

களைச் செய்கிறார்கள் என்று. அப்படியல்ல. கிராமங்களில் இருக்கிற கான்ட்ராக்டர்கள்தான் கொத்தனார்களை வைத்து இந்த வேலைகளைச் செய்கிறார்கள். ஆகவே கிராமப்புற மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு இதனால் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை. ஆகையால் இந்த நடைமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. தமிழ் நாட்டில் 55 சதவிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இருக்கிறது. அவர்களை கை தூக்கி விடுவதற்காக சிறு பாசனத் திட்டம், கால்நடை வளர்ப்புத் திட்டம், வன வளர்ப்புத் திட்டம், பயிற்சித் திட்டம், மீனளத் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படி எல்லாம் சொல்லும் போது ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் 200, அல்லது 300 நபர்களுக்குத்தான் கடன் வழங்குகிறார்கள். வங்கியிலிருந்து கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அரசாங்கம் கொடுக்கிற மானியத்தை வாங்கத்தான் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகிறார்களே தவிர வங்கிகள் உள்ளபடியே நியாயமாக கடன் தரவில்லை. தரப்படுகின்ற பணம் கூட, அரசு மானியத் தொகையை மட்டும் கொடுத்துவிட்டு கடன் தொகையை வங்கியிலேயே டிபாசிட் செய்து விடுகிறார்கள். இதனால் கிராமப் புற மக்களுக்கு நன்மை ஏற்பட வழியில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

வண்டி மாடு வாங்க லோன் கொடுக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே கொடுப்பதில்லை. அந்த மானியத்தை அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட வங்கியிலுள்ளவர்களும் தங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்கிறார்களே தவிர ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பணம் கிடைப்பதில்லை. இப்படி கிராமப் புறங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு நன்மை அளிப்பதற்காக ஒதுக்கப்படுகிற பணம் உண்மையிலேயே அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா





என்றால் நிச்சயமாக இல்லை. இதுபற்றி நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்து தகுந்த முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களைத் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதிலும் 55 சதவீதம் பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பதாக விவரக் குறிப்பு இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஊராட்சியாக எடுத்துக்கொண்டால் 55 சதவீதத்திற்கு மேலேயே இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒவ்வொரு கடன் தலைப்புகளில் 5 லோன், 6 லோன், 7 லோன் என்ற அளவுக்குத் தான் கொடுக்கிறார்கள். அப்படி வருகிறபோது மொத்தமாக 300 லோன் என்ற அளவுக்குத்தான் வரும். ஆக, ஒரு ஊராட்சியில் 40, 50 பேர்கள் லோன் கேட்டாலும் 2 அல்லது 3 பேர்களுக்குத் தான் லோன் கிடைக்கிறது. அப்படிக் கொடுக்கிறபோது கூட கிராம நல அதிகாரிகளும், வங்கி அதிகாரிகளும் பிற அதிகாரிகளும் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிற புரோக்கர்களும் உங்களுக்கு 2,000 ரூபாய் கடன் தருகிறோம், எங்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கக் கூடாதா என்று பேரம் பேசுகிறார்கள். நான் இதுபற்றி வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்க்க கடன் பெறுபவர்களைத் தேர்வு செய்ய, அவர்களுடைய மனுக்களைப் பெற்று குலுக்கல் சீட்டு மூலம் தேர்வு செய்தால் முறைகேடு ஏற்படாது; அந்தவகையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களை கை தூக்கி விடுவதற்கான பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு திட்டங்களைத் தீட்டினாலும் அந்த மக்களுக்கு நேரடியாகப் பயன்கிடைக்காத வரையில் திட்டங்களினால் எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை. இப்போது கிராமங்களை எல்லாம் நகரங்களைப் போல் மாற்றி விட்டதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் நல்லமுறையில் வாழ முடியாமல் அவர்கள் மேலும் மேலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே தான் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர மேலே போனதாக எனக்குத் தெரியவில்லை.

[திரு. எம். செல்லமுத்து] [1985 ஜூன் 12

(முற்பகல் 11-40)

எனவேதான் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்றால் உள்ளபடியே நிலச்சீர்திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து கிராமப்புறங்களில் வறுமையில் இருப்பவர்களுக்கு, உழுபவர்களுக்கு நிலத்தைத் தந்து உற்பத்தியைப் பெருக்கி அந்த உற்பத்தியின் மூலம் வாழ வழி செய்து கொடுக்க வேண்டும். அந்த வகையில் நிலச்சீர் திருத்தச் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிலங்களை வாங்கி ஏழைகளுக்கு வழங்குவது பற்றிய ஒரு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் இருந்தால் அதை உடனடியாக செய்ய வேண்டும். ஆனால் இன்றைய தினம் கிராமப்புறங்களில் உள்ள பெரும் நிலப் பிரபுக்கள் விவசாயத்தில் மூலதனம் போட முன்வருவதில்லை. எனவே அப்படிப்பட்ட பெரும் நிலப்பிரபுக்களிடத்திலிருந்து இந்தத் திட்டத்தின் மூலமாக நிலங்களை வாங்கிக் கொடுத்தால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களைக் கைதூக்கி விட முடியும்.

அடுத்து பஞ்சாயத்துத் தேர்தல் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நிச்சயமாகப் பஞ்சாயத்துத் தேர்தல் வரும் என்று கருதுகிறேன். எனவே அந்தத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுவிடாமல் விரைவாக நடக்கவும், முறையாக நடத்தவும் அதன்படி கிராம நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெரிய ஊராட்சி ஒன்றியங்களை எல்லாம் பிரித்திருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் 57 ஊராட்சிகளைக் கொண்டதாகும். அது கடலோரப் பகுதியாகவும் அதிகவிஸ்தீரணம் கொண்டதாகவும் உள்ளதால் அதை இரண்டாகப் பிரித்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 12] [திரு. எம். செல்லமுத்து]

குடிநீரைப் பொறுத்தவரையில் பைப்புகள் போடுவதாகவும், வாட்டர் போர்டின் மூலமாகத் தண்ணீர் கொடுப்பதாகவும் நிறைய புள்ளி விவரங்களைத் தருகிறார்களே தவிர இன்றைக்கும் பல கிராமங்களில் தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கக் கூடிய தண்ணீரை அந்த ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற மக்களுக்குப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக சில பஞ்சாயத்துக்களில் தண்ணீர் இருக்கின்றது. சிலவற்றில் தண்ணீர் இல்லை. எனவே குடிநீர் திட்டத்தை விரைவாக அமல் நடத்தி எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் தர வேண்டும்.

அடுத்து பைப்புகள் ரிப்பேர் செய்வதைப் பொறுத்தவரையில் 40, 50 ஊராட்சிகளுக்கு ஒரே ஆள் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. அதன் காரணத்தால் ஒரு பைப் கூட சரியாக ரிப்பேர் செய்யப்படாமல் சிரமமாக இருக்கின்றது. மேலும் அதற்கான சாமான்களை வாங்கக்கூடிய அதிகாரம் பி.டி.ஓ. மற்றும் டி.டி.ஓ. ஆகியோர்களுக்கு இருக்கின்றது. அதன் காரணத்தால் கிராமப்புறங்களில் ரிப்பேரான பைப்புகள் பல மாதங்களாக ரிப்பேரான நிலையிலேயே இருக்கின்றன.

கீவளூர் ஒன்றியத்தில் தெற்குப் பனையூர், பல்லவி நாயகன் கோட்டகம் போன்ற பகுதிகளில் குடிநீர் இல்லை. ஆனால் மேல் நிலைத் தொட்டி இருக்கின்றது. ஆறு மாதங் களுக்கு மேலாகிவிட்டது. அங்கே பல இடங்களில் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றது. பல இடங்களுக்குத் தண்ணீர் வந்து சேராத நிலைமை இருக்கின்றது. போடக்கூடிய பைப் சரியாக இல்லாததன் காரணத்தால் பைப்பை ஓட்டைபோட்டு தண்ணீரை எடுத்துக்கொண்டு போகிறார்கள். எனவே அனைவருக்கும் நல்ல தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். நாகப்பட்டினத்தில் குடிநீர் நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கின்றது. எனவே அங்கே குடிதண்ணீர்த் திட்டத்திற்கு ஏற்பாடு செய்து நாகப்பட்டினத்திற்கு நல்ல குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1985 ஜூன் 12

அடுத்து மின் விளக்குகளைப் பொறுத்தவரையில் மின் விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு மின்சார வாரியத்திற்கு இருக்கின்றது. அதற்குப் பணம் கட்டக்கூடிய பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்றது. அது சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தால் கிராமங்களில் அந்த விளக்குகள் எரிவதில்லை. ஒருநாள் போட்டால் மறுநாள் எரிவதில்லை. அதிலே என்ன மோசடி நடக்கின்றது என்று தெரியவில்லை. கேட்டால் சரியான பராமரிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஏன் எரியவில்லை என்று கேட்டால் ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் இருந்து பணம் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசும்போது பணம் கட்டினாலும், கட்டாவிட்டாலும் மின்விளக்கு எரியாமல் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். எனவே அந்த விளக்குகள் எல்லாம் சரியாக எரிய ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கின்ற வரையிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாலைகளைப் பொறுத்தவரையில் பல்வேறு வகைகளிலே பணம் எல்லாம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் போடப்பட்ட சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படாத நிலைமை இருக்கின்றது. போடப்பட்ட கப்பிச் சாலைகள் எல்லாம் பராமரிக்கப்படாததன் காரணத்தால் அந்தக் கப்பிகள் எல்லாம் சிதறுண்டு சாலையே இல்லாத அளவுக்கு நிலைமை இருக்கின்றது. அந்தச் சாலைகளைப் பராமரிப்பதைப் பொறுத்தவரையில் ஒரு நபருக்கு 40 பைசாதான் தருகிறார்கள். குறிப்பாக மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்குவது மாதிரி கீழத்தஞ்சை மாவட்டத்திற்கு பணம் ஒதுக்குவது கூடாது. ஏனென்றால் கீழத் தஞ்சை மாவட்ட மண் ஈரக் களிமண் சேர்ந்த மண். களிமண் அதிகமாக இருக்கும் மண். அதனால் ரோடுகளின் இருபுறங்களிலும் கெட்டிப்பட்ட சிமெண்ட் மனைகள் ரிவிட்மெண்டுகள் கட்டப்பட்டாக வேண்டும். அதற்காக அதிகமான தொகை ஒதுக்க வேண்டும். அது மட்டும் அல்ல. இந்த ரோடுகள் போடுவதற்கான கல், மற்றப் பொருட்கள் எல்லாம் திருச்சியிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் கொண்டு வரப்பட வேண்டும். அதனால் போக்குவரத்துச் செலவும்



1985 ஜூன் 12] [திரு. எம். செல்லமுத்து]

அதிகமாகும் என்ற காரணத்தினால் சாலைகள் போடுவதற்கு இந்த மாவட்டத்திற்கு அதிகமான பணத்தை ஒதுக்கித் தந்து அந்த சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சிகள் இப்போது எப்படி இருக்கிறது என்றால், பண வசதி இல்லாமல் ஏழ்மை நிலையில் இருக்கிறது. எப்பொழுது போய் எதைக் கேட்டாலும் அதற்கு பண வசதி இல்லை என்ற குறையைத்தான் சொல்லுகிறார்கள். தண்ணீர் இல்லை என்று கேட்டால் அதற்குப் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். சாக்கடை உடைந்து ஓடுகிறது, அதை அடைக்க வேண்டும் என்று கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். சாலை வசதி இல்லை என்று கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ் நிலையில் அங்கே சுகாதாரக் குறைவும் அதிகமாக இருக்கிறது. சுகாதார துப்புரவுத் தொழிலாளர்கள் போதுமான அளவுக்கு அங்கே இல்லை. இப்படிப்பட்ட நிலை திருவாரூர், நாகப் பட்டினம், கும்பகோணம், மன்னார்குடி போன்ற பெரு நகரங் களில் எல்லாம் இருக்கிறது. அங்கேயெல்லாம் மிகப் பெரிய சுகாதார கேடு நிலவி வருகிறது. சாக்கடைகள் எல்லாம் சாலை களில் வழிந்து ஓடுகின்றன. எனவே அவைகளையெல்லாம் சீராக்கக்கூடிய நடவடிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடி சொல்ல வேண்டிய குறை, ஆசிரியர்களைப் பற்றியது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆசிரியர்கள் அரசு அலுவலர்கள் என்ற வகையில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நகராட்சிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்படவில்லை. இன்றைக்கும் பல நகராட்சிகளிலே ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடிய வில்லை. குறிப்பாக நாகப்பட்டினம் நகராட்சியில், ஆசிரியர் களுக்கும், மின்சாரத்திற்கும் நகராட்சி ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டிய பணம் கொடுக்க முடியாத நிலையில் இருக் கிறது. சென்ற நிதியாண்டிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக தனியாக பணம் ஒதுக்கித் தந்து நாகை நகராட்சிக்கு உதவி வந்தார்கள். அதைப்போல நம்முடைய

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிகக் கவனம் செலுத்தி நாகை நகராட்சிக்கு, ஒரு மாவட்ட, தலைநகரமாக அறிவிக்கப் பட்ட நகராட்சிக்கு, பண வசதி இல்லாமல் ஆசிரியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதை அறிந்து, அவற்றைப் போக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் நகரம் கழிமுக நகரம். அந்த நகரத்திலே இருக்கிற கால்வாய்கள் எல்லாம் — அதாவது அங்கே சாக்கடைகள் ஓடக் கூடிய கால்வாய்கள் எல்லாம் சுத்தம் செய்வதற்கு கூட சுகாதாரப் பணியாளர்கள் போதுமான அளவுக்கு இல்லாமல் இருப்பதால், நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற நகரங்களில் சாக்கடை நாற்றம் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு, பெண்களுக்காக கழிப்பிடங்களை கட்ட வேண்டும் என்று 11 ஆயிரத்திற்கு மேல் கட்ட வேண்டும் என்று நிதி ஒதுக்கி 10 ஆயிரத்திற்கு மேல் கட்டி முடித்திருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொல்லியிருக் கிறார்கள். அதற்காக 16 கோடியை ஒதுக்கியது உள்ளபடியே வேஸ்ட்டானது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஏனென்று சொன்னால், அதற்குத் தக்க நீர் வசதி கிடையாது. கட்ட வேண்டாம் என்று சொல்வது என்னுடைய நோக்கம் அல்ல. நீர் வசதி இல்லாமல் அதைக் கட்டுவதில் என்ன உபயோகம். கட்டப்பட்ட கழிப்பிடங்கள் முழுவதும் பாழ்பட்டு நாறி ஒரே சுகாதாரக் கேடாக இருக்கிறதே தவிர பயன்படத்தக்க அளவுக்கு இல்லை. எனவே அந்தக் கழிப்பிடங்களுக்கு நீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்து, அதைச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, நீர் வசதி செய்து தருகிற வரையில் அங்கு புதிய கழிப்பிடங்களை கட்டி பணத்தை வீணாகச் செலவு செய்ய வேண்டாம் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): இன்னும் 10 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே சுருக்கமாக முடியுங்கள்.**





**திரு. எம். செல்லமுத்து:** கிராமங்களிலே குளங்கள் இருக் கின்றன. அந்தக் குளங்கள் எல்லாம் பஞ்சாயத்துக்களின் கீழ் தான் வரவேண்டும். சில ஆண்டுக்காலமாக பஞ்சாயத்துக்கள் இயங்காத காரணத்தினால், அந்தக் குளங்கள் எல்லாம் மேடிட்டு இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் விசேஷ கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து, ஒவ்வொரு குளங்களையும் குறைந்த பட்சம் 2 அடி, 3 அடி ஆழமாக வெட்டித் தந்தால், அவைகளில் நீர் ஆதாரம் தேங்கி, ஊற்றுக் கண்கள் திறக்கப்பட்டு, குடிப்பதற் காவது சில இடங்களில் தண்ணீர் கிடைக்கும். அந்த வகையில் குளங்கள் சம்பந்தமாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் தற்போது அந்தக் குளங்களை எல்லாம் மீன் வள இலாகாவிற்கு கொடுக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அதை சரியாக நிர்வகிக்காமல், சாணி போன்றவைகளை அதில் போட்டு பல சுகாதாரக் கேடுகளை உண்டாக்குகிறார்கள். ஆகவே அவைகளை ஊராட்சி ஒன்றியமோ அல்லது பஞ்சாயத் துக்களோ நிர்வகிக்கலாம் என்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூர் மேம்பாலம் 1975-லிருந்து கட்டப்பட்டு வருகிறது. அந்த மேம்பாலத்தை விரைவாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்திலே வெட்டாற்றில் ஓர்க்குடியில் பாலம் கட்ட வேண்டும் என்று 2 ஆண்டு காலமாக நிதி ஒதுக்கப்பட்டும், அது இன்னும் கட்டப் படாமல் இருக்கிறது. அந்த ஓர்க்குடி பாலத்தை விரைவாக கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல திருவாரூர் ஒன்றியத்தை இணைக்கக் கூடிய வகையில் பள்ளி வாரமங்களத்தில் வெட்டாற்றில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கமலா புரம் — கொரடாச்சேரி சாலை என்பது மிக முக்கியமான சாலையாக இருக்கிறது. இந்த தேர்தல் காலத்தில் கூட அந்தச் சாலை வசதியை செய்துக் கொடுக்கவில்லை என்று, அப்பகுதியில் மக்கள் ஓட்டு போடாமல் எதிர்த்தார்கள். பிறகு அதிகாரிகள் வந்து செய்து தருவதாகச் சொல்லி ஓட்டுப் போடச் சொன்னார்கள். ஆனால் இப்போது போய் கேட்டால், அதற் கான செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டு அது தலைமை என்ஜினியா கான செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டு அது தலைமை என்ஜினியரு க்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

அந்தச் சாலையை சரியாகச் செப்பனிடச் செய்து அதை தார் சாலையாக ஆக்கி பஸ் வசதியையும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல திருவாரூர் நகரம் கீழ வீதியிலிருந்து செங்கம் நிரையரங்கம் வழியாக சுக்கானாற்றில் பாலம் ஒன்றைக் கட்டி. மயிலாடுதுறை சாலையோடு அந்தச் சாலையை இணைத்துவிட்டால், அந்தப் பகுதிக்கு போக்குவரத்து மிகச் சிறப்பாக அமையும். போக்குவரத்து சிறப்பாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல், மிக முக்கியமான பாதையாக இருப்பதால், அதை அவசியம் செய்ய வேண்டும். இதைப் பற்றி நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசியபோது கூட சொன்னேன். 7 லட்சம் ரூபாய் செலவு ஆகும். அதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கித் தந்தால் கட்டித் தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனவே இந்தக் கோரிக்கைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-50)

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கையை வரவேற்று, எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன் வருகிறேன். அதற்கு முன்னால், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் தலைவரிடம் சிபாரிசு செய்து, எனக்கு வைக்கப்பட்டு இருக்கிற மைக்கை ஓரளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும். பின்னால் இருக்கிற சைதை துரைசாமி அவர்களுக்கு 4 இன்ச் உயர்த்தியிருக்கிறார்கள். எனவே என்னுடைய உயரத்தையும் கருத்திலே கொண்டு, இதை உயர்த்தினால், நான் முதலிலே சுதந்திரமாகப் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி வளர்ச்சித் திட்டங்கள், மூலம் தமிழகத்திலே இன்று இந்தியாவிலே எந்த மாநிலமும் 20 அம்ச திட்டத்தை நிறைவேற்றி வெற்றி பெற முடியாத அளவிற்கு இருக்கும்போது, தமிழகம் ஒரு முன்மாதிரியாக நின்று, கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டத்திலும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்திலும், வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திலும், பல



சாதனைகளைப் புரிந்து இருப்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குக் காரணமாக இருந்த உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த இயக்குநர்களுக்கும் இந்தத் துறையை நடத்தி வந்த, நடத்தி வருகிற, செயலாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களை தெரிவிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

காரணம் இந்த ஊரக வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுகிற உள்ளாட்சி அமைப்புகள் கடந்த 5 ஆண்டுக் காலமாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே நாம் நிறைவேற்றிய தன்னிறைவுத் திட்டத்தையும், கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தையும், கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தையும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தையும், ஒரு சேர நடத்தி வந்து இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது, அதுவும் சிறப்பான முறையிலே நடத்தியிருக்கிறது என்பதற்குக் காரணம் அங்கேயிருக்கிற நம்முடைய அந்த துறையினுடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்தான். மேல் மட்ட அளவில் மாநிலத்திற்கான திட்டத்தை வகுப்பதும், அந்த திட்டங்கள் கோடிட்டுக் காட்டப்பட்ட, குறிக்கோளுக்கு ஏற்ப நடத்தி முடிப்பதும், சாதாரணமான ஒரு விஷயம் என்று நாம் எண்ணிவிட முடியாது. நிதியை ஒதுக்குகிற மத்திய அரசாங்கம், அதற்கான பல வரைமுறைகளையும், நியதிகளையும் சேர்த்து அந்தத் திட்டத்தை அளிக்கிறது. ஆகவே அந்த வரைமுறைகளுக்கு உட்பட்டு அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தை முறையாக செலவிடப்படுகிற அந்தச் சக்தி மற்ற மாநிலங்களில் குறைந்திருக்கிறது, அல்லது பல மாநிலங்களில் அந்தத் திட்டத்திற்குரிய பணம் செலவிடப்படவில்லை என்ற காரணத்தால், சம்பந்தப்பட்ட மத்திய அதிகாரிகளும், மத்திய அமைச்சர்களும், நம்முடைய திட்டத்தில் உள்ள செயல் முறைகளைப் பாராட்டியிருக்கிறார்கள், என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில், வறுமை ஒழிப்புக்கும், வேலை வாய்ப்புகளை புதியதாக உருவாக்குவதற்கும், ஏற்படுத்தப்பட்ட இந்த திட்டத்தில், தமிழகத்தின் கிராமப் பகுதிகளில், அந்த நிரந்தரமான சொத்துக்கள் பல கோடிகள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. பல கோடிகள் அளவில் நடத்தப்படுகிற திட்டத்தில் ஓரிரு இடங்களில் குறைகள் இருப்பது, என்பதை நான் மறுக்கவில்லை. இருந்தாலும் கூட

ஒட்டுமொத்தமாக இந்தப் பணியின் சிறப்பை நாம் மறந்துவிட முடியாது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது பெரும்பாலும் அந்தந்த ஊர் நல அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களைக் கொண்டு இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசாங்கம் வைத்திருக்கிற நியதி. ஆனால் கிராமப் பகுதியிலே வேலை ஆட்களை தேர்ந்தெடுப்பதும், வேலை செய்கிற இடத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கும், அவர்கள் சில பல ஊழியர்களை நாடுவது என்பது சாதாரணமான காரியம்தான். அவைகளிலே ஆளும் கட்சிக்காரர்களுக்கு முதலிடம் தரப்பட்டு இருக்கிறது என்கிற கூற்றை நான் மறுக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் இதுபோன்ற நியமனம் பெற்றவர்கள் என் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சிக்காரர்கள் என்பதைவிட, மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத்தான் அதிகமாக முக்கியத்துவம் தரப்படுகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதுவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்—அவர்கள் அங்கீகாரம் பெற்று இருக்கிறார்களோ, என்னவோ, ஆனால் இப்போது தேர்தல் முடிந்த பின்னால், ஒவ்வொருவரும் விசிட்டிங் கார்ட்டை எடுத்து, என்னுடைய ஒன்றியத்திலே எல்லாம் தங்களுக்கு அந்தப் பணிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று அச்சுறுத்துகிற நிலையை நான் பார்த்து இருக்கிறேன். நேரடியாக நான் இதிலே பைசல் செய்திருக்கிறேன். ஆகவே அந்த அளவிற்கு, இது முக்கியத்துவம் வாய்ந்த தேசிய திட்டம், நம்முடைய நாட்டின் வளர்ச்சி திட்டம் என்பதை முதலிலே கருத்திலே கொண்டு, செய்யப்பட்டிருக்கிற சாதனையை நாம் கணக்கில் கொள்ள வேண்டுமே ஒழிய, இதிலே ஏதோ, கட்சிகளுடைய பிரச்சனையாகச் சொல்வது, இந்த தேசிய நோக்கத்தைக் குறை சொல்கிற ஒரு முயற்சி என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே நிறைவேற்றப்படுகிற பல சாதனைகளில் டி.ஆர்.டி. மூலம், மாவட்ட வளர்ச்சி முகவர் அமைப்பு மூலம் நாம் கரிமவாயு உற்பத்தி, எரிசாண அடுப்பு இவைகளில் இந்தியாவிலே ஒப்பற்ற ஒரு நல்ல சாதனையைச் செய்திருக்கிறோம். வைக்கப்பட்ட குறியீட்டு அளவு 20 ஆயிரத்தை மிஞ்சி நாம் சாதனை செய்து இருக்கிறோம். இதன் மூலமாக பல கிராமங்களில் விறகு தட்டுப்பாட்டை குறைப்பதற்கும் மற்றும்





அரசு வலியுறுத்திச் சொல்கிற ஆல்ட்டர்னெட்டிவ் எனர்ஜியை நாம் உற்பத்திச் செய்வதற்கு இது வழிவகை செய்து கொடுத்து இருக்கிறது. ஆக இதுபோல் பல துறைகளில் நம்முடைய செயல்பாடுகள் சிறப்பாக இருந்தாலும் சிறு பாசனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழு அளவுக்கு அந்த துறையால் சிறு பாசன மேம்பாட்டுக்கு நமக்கு பயன்பட்டதாக நாம் அறியவில்லை. அதற்குக் காரணம் இன்று கொடுக்கப்பட்டு இருக்கும் புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது 56 ஆயிரத்து 205 எக்டேர் சிறு பாசன மேம்பாட்டு திட்டத்தால் பயன் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது நம்முடைய தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நிலப்பரப்பை கணக்கில் கொண்டது. ஒவ்வொரு மாவட்டத்தையும் சென்று பார்த்தால் கிட்டத்தட்ட 2 ஆயிரத்திற்கும் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கக்கூடும். 3 ஆயிரத்திற்கு குறைவாக இருக்கும். ஆக இது முழு அளவுக்கு நம்முடைய மக்களின் தேவையை நிறைவேற்றத் தக்க வகையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லி ஆக வேண்டும். அந்த திட்டத்தில் சிறு பாசன மேம்பாட்டுக்காகவும், நில மேம்பாட்டுக்காகவும் நாம் இன்னும் கூடுதலாக நிதியை ஒதுக்கி தந்தால் நன்றாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் இன்று இனாமாக, இலவசமாக வழங்குகிற உரம், விதை, இவைகள் இலவசமாக வருகிறது என்ற காரணத்தால் பலர் அதற்கு உரிமை கொண்டாடுகிறார்கள். ஆக அதைக்கூட தவிர்த்து இலவசமாக வினியோகிக்கிற முறையை, அது உரம் ஆனாலும் சரி, விதை ஆனாலும் சரி, உரியவர்களுக்கு சென்று அடைவதில் பலர் இடையூறாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைக்கூட தவிர்த்து விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற இந்த மானியத்தை முழு அளவுக்கு நில மேம்பாட்டுக்காகவும், சிறு பாசன வசதிக்காகவும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிறு பாசன மேம்பாட்டுக்கு கொடுக்கப்படுகிற தொகையை விவசாயிகள் பெறுவதற்கு பல இடர்பாடுகள் இருக்கின்றன. அதிலே ஒன்று கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும் என்ற பணிக்கு உதவ வேண்டும் என்றால் ஜுவாலஜிஸ்டு சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. ஏற்கனவே பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிற கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும் அல்லது அதனுடைய மேல் தளத்தில் பழுது பார்க்க வேண்டும் அல்லது மேலே இருக்கிற சுவரை கட்ட வேண்டும்

என்று சொன்னால் ஜுவாலஜிஸ்டு சர்ட்டிபிகேட் வேண்டும் என்று சொல்கிறபோது பெரும்பாலான ஒன்றியங்களில் அதிலே நீர் இருக்கிற கிராமங்களில் கூட ஜுவாலஜிஸ்டு அவர்களுடைய கணக்கில் அது ஒரு பிளாக் ஏரியா, நீர் வற்றிப் போன, நீர் எடுப்பதற்கு தகுதி இல்லாத பிளாக்குகள், ஏரியாக்கள் என்று வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. அது எந்த முறையில் முடிவு செய்யப்பட்டது என்பதை பற்றி இங்கே பேசி தீர்க்க முடியாத ஒன்று. இருந்தாலும் கூட அந்த கிராமத்தில் ஏற்கனவே பாசனத்திற்கு பயன்பட்டு இருக்கிற கிணறுகள் என்ற வகையில் இந்த உதவியை பெறுவதற்கு பாசனத்திற்கு பயன்பட்டு இருக்கிற கிணறுகள் என்றால் சர்ட்டிபிகேட் இல்லை என்றால் தான் நாம் இதிலே குறிப்பிட்டு இருக்கிற குறியீட்டை உரிய விவசாயிகளுக்கு பெற்று தர இயலும் என்ற வகையில் இதற்கான நிதி ஒதுக்கத்தை அதிகப்படுத்த வேண்டும். இதிலே இந்த சர்ட்டிபிகேட் இருக்கிற கிணறுகளுக்கு தேவை இல்லை என்ற ஒரு விதிவிலக்கை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்கு பெற்றுத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டி கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் பெரும்பாலும் நலிந்த மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க தமிழக அரசு இந்தத் திட்டத்தை பயன்படுத்தி வருகிறது. அந்த வகையில் யாருக்கு அந்த வேலை கொடுக்கப்பட வேண்டும், எந்த பகுதியில் நலிந்த மக்கள் இருக்கிறார்கள் என்று மாவட்ட அளவில் நிர்மானிக்கப் படவேண்டிய விஷயத்தில் எப்படி மாநில அளவில் இந்தத் திட்டத்தை தயாரிப்பதற்கான முயற்சியில் அதிகாரிகள் மத்தியில் அமைச்சர்கள் தலைமையில் நடக்கிறதோ அதுபோல மாவட்ட அளவில் உரிய அளவில் அது கவனம் செலுத்தப்பட்டு அது தயாரிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால் வேலை வாய்ப்பு தர வேண்டிய தகுதி உடைய ஆதிவாசி மக்கள் அல்லது பழங்குடியினர் ஆதி திராவிட மக்கள் மிகுந்து இருக்கிற பகுதியில் அந்த வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஒரு பிளாக்குக்கு 8 லட்சம் என்று ஒதுக்குகிறபோது என்னுடைய மாவட்டத்தில் உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால் பேரூர் ஒன்றியத்தில் இருக்கிற பஞ்சாயத்துக்கள் 4. அதற்கும் 8 லட்சம், 19 பஞ்சாயத்துக்கள் இருக்கிற காரமடை





ஒன்றியம் 85 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கிறது. அவ்வளவு நிலப்பரப்பு இருக்கிற அந்த பகுதிக்கும் ஆதி வாசிகள் பெரும் அளவுக்கு இருக்கிற அந்த பகுதிக்கும் அதே நிதி ஒதுக்கம் என்றால் அது சீராக உரிய முறையில் தேவைக்கு ஏற்ற ஒன்றாக இல்லை. ஆக அதை மாவட்ட அளவில் பகுத்து எந்த எந்த பகுதி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியாக இருக்கிறதோ, அந்தப் பகுதியில் தேவைக்கு ஏற்ப வேலை வாய்ப்பை உருவாக்குகிற திட்டமாக செயற்படுத்த வேண்டும். என்னுடைய தொகுதியின் மிக ஆழமான கோரிக்கை என்பதையும் அதே நேரத்தில் கோவை மாவட்டத்தில் இன்று நம்முடைய சென்னை மாநகராட்சியின் ஆணையராக இருக்கக்கூடியவர் அன்று மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் என்னுடைய பகுதியில் பாலமலை என்கிற ஒரு மலைப் பகுதி இருக்கிறது.

(நண்பகல் 12-00)

ஆதிவாசிகள் வாழ்கிற அந்த மலைப் பகுதிக்கு சாலை அமைத்திட வேண்டும் என்ற தீவிரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தரவை வழங்கினார்கள். வேலைவாய்ப்பும் அங்கே தேவை. ஆதிவாசி மக்களுக்கு அந்த சாலை அமைக்க வேண்டிய அவசியமும் இருந்தது. ஆக, அந்த இடத்திற்கு சாலை அமைப்பதிலே, இன்று அவர் அந்த இடத்திலிருந்து வெளியே வந்தும் கூட, பல ஆண்டுகளாகியும், இன்னும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். தேவைக்கேற்ப அந்த இடத்திலே வேலை வாய்ப்பு உருவாக்குகின்ற திட்டத்தின் மூலமாக தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் அல்லது வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலமாக சாலை அமைத்திடுவதன் மூலம் 5.5 கிலோ மீட்டர் சாலை அந்த ஆதிவாசிமக்களுக்குப் பயன்படும். அவர்களது வேளாண்மைக்கும், மற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், அது மிக அவசியமான ஒன்று என்பதை கருத்தில் கொண்டு அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அதை பிளாக் லிஸ்டிலே யூனியன்லிஸ்டிலே சேர்க்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே இருக்கும் டி.ஆர்.டி.ஏ. திட்டம்—ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டமாக எடுத்துக் கொண்டு, பாலமலை சாலையும், காரமடை ஒன்றியத்தில் இருக்கிற கோப்பநேரி என்கின்ற 12 கி.மீ. அளவு தூரத்திற்கு—பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கிற பகுதிக்கு—இந்தியாவிலேயே, தமிழகத்திலேயே சாலை இல்லாத

ஒரு பெரிய பகுதி, அந்தப் பகுதியாகத் தான் இருக்கக் கூடும். அதையும் கருத்தில் கொண்டு, அதற்கும் முன்னுரிமை கொடுத்து, மாவட்ட அளவில் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

நகராட்சிபகுதி மேம்பாட்டு வகையிலே, நான் சார்ந்திருக்கிற மேட்டுப்பாளையம் நகரத்தில்—இன்று ஊட்டி செல்கிறவர்களுக்கு, வழியில் துர்நாற்றத்தை அளிக்கிற அளவுக்கு சுகாதாரக் கேடுகள் மலிந்து இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால், அந்த நகராட்சிக்காக தனியாக சில உத்தரவுகளை வழங்கி, இன்று அது குறைந்தபட்ச செலவுத் திட்டமாக கழிப்பிடங்கள், சாக்கடைகள் ஏற்படுத்துவதற்கு உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கம் தந்து இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை. மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உரிய சம்பளம் கொடுக்கக்கூட பண வசதி இல்லை. ஆக, அந்த நகராட்சிக்கு தன்னிறைவுத் திட்டத்திலே இடம் அளித்து, நகராட்சியின் முக்கிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிட அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று ஏற்கனவே நான் விடுத்திருக்கின்ற விண்ணப்பத்தை புதுப்பித்துக் கொள்கிறேன்.

இந்த மேட்டுப்பாளையம் நகராட்சியில் சுகாதாரக் கேடுகளை போக்கவும், அந்த நகராட்சியில் குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் 7.5 லட்சம் ரூபாய் இருக்கிற மின் மோட்டார்களை, விசைப் பம்புகளின் திறனை உயர்த்துவதற்குக் கொடுக்கப் பட்டிருக்கிற அந்தத் தொகையை அரசாங்கம் கடனாகவோ, மானியமாகவோ வழங்குவதற்கு 3 ஆண்டுகளாக கோப்பு பரிசீலனையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு அளித்து, அந்த நிதி உதவியை உடனே வழங்கி மேட்டுப்பாளையம் நகரத்திற்கான குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்கவும், அந்த நகரம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட திட்டத்தின்கீழ், முழு அளவு நீரை, குடிநீர் தேவையை நிறைவேற்றாமல் இருக்கிற அந்தத் திட்டத்திற்கு மாற்றான திட்டத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பேரூராட்சிப்





பகுதியில், சிறுமலை பேரூராட்சியில், குடிநீர் திட்டத்திற்காக கேட்கப்பட்டிருக்கிற 8 இலட்சம் ரூபாயை, அரசாங்கம் மானியமாக வழங்கி உதவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இறுதியாக நம்முடைய கோவை மாவட்டத்தின் தலைநகரமாக உள்ள கோவை மாநகராட்சிப் பகுதியிலே, இந்த ஆண்டு 5 உயர் நிலைப் பள்ளிகளுக்காக விண்ணப்பத்தைத் தந்து இருக்கிறார்கள். இம்மாநகராட்சி 1978-இல் 3 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்தது; இன்று அது 7 இலட்சத்தையும் தாண்டி உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, 3 இலட்சம் மக்கள் தொகைக்கு கிடைத்து வந்த வசதிகள்தான் இப்போதும், கல்வித் துறையாகட்டும், மற்ற துறைகளிலும் இருக்கிறது. எனவே, அதற்கேற்ப வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த நகராட்சியினுடைய ஆரம்பப் பள்ளிகளிலிருந்து வருகிற மாணவர்களுக்கு தனியார் பள்ளிகளிலே இடம் கிடைப்பதிலே இருக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, இந்த 4 பள்ளிகளையும், கொப்பகோணாம்புதூர், ரத்தினபுரி, பீளமேடு ஆகியவற்றில் உள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு நகராட்சிக்கு உதவிட துறையும், அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாநகராட்சியின் பாதாளச் சாக்கடைத் திட்டங்களும் தாமதப்பட்டு வருகின்றன. அதை விரைவில் நிறைவேற்ற முயற்சிகளை சம்பந்தப்பட்ட துறையினர் எடுத்துக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, மேட்டுப்பாளையம் நகரத்தில் உள்ள இன்னொரு பிரச்சினையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கே இருக்கிற ஆரம்பப் பள்ளிகள் ஒன்பதுக்கும் உள்ள கட்டிடங்கள், அவற்றுக்குச் சொந்தமானவை அல்ல. எந்த நேரத்தில் கட்டிட உரிமையாளர் வெக்கேட் செய்யச் சொன்னாலும், காலி செய்யச் சொன்னாலும், பள்ளிகளே நடத்தமுடியாத நிலை ஆகிவிடும். எனவே, அவைகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டிட, விரைவாக அரசாங்க உதவிகள் செய்ய முயற்சிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப்பாளையத்திலிருந்து ட்ரெய்னேஜ் வாட்டர் அங்கே இருக்கின்ற பவானி ஆற்றிலே கலப்பதைத் தடுப்பதற்கு, நகராட்சி அல்லாமல், பொல்யூஷன் கன்ட்ரோல் என்ற முறையில் ஒரு சிறப்பான திட்டத்தை அரசின் மூலம் நகராட்சிக்கு வழங்க வேண்டும் என்றும், மீண்டும் இந்த நகராட்சியை இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்திலே உட்படுத்தி அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க அமைச்சரவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் மதுரைக்குச் சென்று மாநகராட்சி பிரச்னைகளையும், சென்னையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே மாநகராட்சி பிரச்னைகளையும் பற்றி விவாதித்ததைப்போல வெகுவிரைவில் கோவை மாநகராட்சிக்கும் வருகை தந்து, அங்கே வேண்டிய தேவைகளைப் பெற்றுத் தருவதற்கும், சீர்கேடுகளைக் களைவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி.

**திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். பொதுத் தேர்தல் என்பது எப்போதும் வரும், ஆனால் பஞ்சாயத்துத் தேர்தல் என்பது என்றைக்குமே வராது என்ற எண்ணம் பொதுமக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த எண்ணத்தை நீக்கும் வகையில் இந்த அரசுக்கு மக்களாட்சித் தத்துவத்திலே நம்பிக்கையிருக்கிறது என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலே, தேர்தலுக்கு நாள் குறித்திருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள். அதற்காக என் இதயபூர்வமான நன்றியைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

ஆனால் அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் முறையானது குழப்பத்தையே உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. கட்சி அடிப்படையில், கட்சிச் சின்னங்களின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிடில் சுமுகமான ஜனநாயக முறையில் தேர்தல் நடக்க வாய்ப்பில்லை என்பதையும்





சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இன்றையதினம் பஸ் ஸ்டாண்டிலே உள்ள போர்ட்டர்கள் சங்கத்திற்குக் கூட கட்சி அடிப்படையிலே தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது.

நடைபெறவிருக்கின்ற பஞ்சாயத்துத் தேர்தலிலே அரசியல் கட்சிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுங்கியிருப்பார்களா என்ன என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவிக்கு நிற்கின்றபொழுது சுயேச்சையாக நிற்கிறேன் என்று சொல்லும்பொழுது, அதே கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் போட்டி இட மாட்டார்களா என்பதையும் இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையை நிவர்த்திக்க நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கட்சி அடிப்படையிலே, கட்சிச் சின்னங்களின் அடிப்படையிலே ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற வளர்ச்சிக்காக, ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கின்றார்கள். தேசிய கிராமப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி போன்ற பல்வேறு வசதிகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டங்களெல்லாம் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகப் போடப்பட்ட பிரத்தியேகமான, விசேஷமான திட்டங்கள். இன்றையதினம் கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம் எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நம் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக கிராம இராஜ்யம் வர வேண்டும். கிராமராஜ்யம் வந்தால்தான் இராம ராஜ்யம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இராமன் மட்டும் காட்டுக்குப் போகவில்லை, இன்றையதினம் பஞ்சாயத்து

நிர்வாகமே காட்டுக்குப் போய் இருக்கக்கூடிய பரிதாபகரமான ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திட்டம் போடுவது மட்டும் அரசின் நோக்கம் அல்ல. அப்படிப் போடப்படும் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா, அதனுடைய பலன்கள் பொதுமக்களுக்குச் சரியாகச் சென்று அடைகின்றனவா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர், சிறு விவசாயிகள், கூலி வேலை செய்பவர்கள் போன்றவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். இந்தத் திட்டத்திலே ஏழை எளிய மக்களுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. இதிலே மத்திய அரசாங்கத்தினுடைய மானியமும் உண்டு. ஆனால் இந்தக் கடன்களை கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் வாங்குவதற்குப் பிரசவ வேதனைப்படும் ஒரு மோசமான நிலைமையிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசும் மாநில அரசும் கொடுக்கக் கூடிய மானியத்தொகை முழுவதும் அந்த ஏழை எளிய கிராமப்புற மக்களுக்குச் சென்று சேராவண்ணம், கிராம நல அலுவலர் முதற்கொண்டு அந்த அதிகாரிகள் வரையில் பங்கிட்டுக் கொள்ளுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்தத் திட்டங்கள் செம்மையாக நடக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இன்றையதினம் கிராமப் புறங்களிலே தெரு விளக்கு எரிவதில்லை. தேர்தல் நேரத்திலேதான் தெரு விளக்கு எரிந்தது, இப்பொழுது தெருவிளக்கு எரிவதில்லை என்று பொது மக்கள் புகார் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆப்பிரிக்கக் கண்டம்தான் இருண்ட கண்டம் என்று சொல்வார்கள். ஆனால், இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற கிராமப் பகுதிகள்





எல்லாம் இருண்ட கண்டம் என்று சொல்லக் கூடிய சூழ்நிலையினை அந்தப் பகுதியிலே இருக்கிற அதிகாரிகள் உருவாக்கி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல்ப் பழுதடைந்தால் மாதக் கணக்கில் மாற்றுவதில்லை. மின்சார வாரியத்திடம் கேட்டால் பல்ப் இல்லை, அதற்கான மெட்டீரியல்ஸ் இல்லை என்று கேட்டுக்கும்போதெல்லாம் திரும்ப, திரும்ப, அந்தப் பல்லவியைப் பாடுகிறார்கள். எனவே, உள்ளாட்சி துறையே பல்புகளை வாங்கி, பழுதடைந்த பல்புகளை மாற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மலைப்பாங்கான பகுதிகள் அதிகம் உண்டு. அங்கிருக்கிற கிராம மக்கள் இரவு நேரங்களிலே வெளியே வர அஞ்சுகிறார்கள். காரணம் விஷப் பூச்சி தீண்டி விடுமோ என்ற அச்ச உணர்வு. ஆகவே, எல்லா இடங்களிலும் புதிதாகத் தெரு விளக்குகள் போடாவிட்டாலும் பரவாயில்லை, போட்ட தெரு விளக்குகள் ஒழுங்காக எரிகின்றனவா என்பதைப் பார்க்கக்கூடிய அளவிலே செம்மையாக நடைபெற எரியாத விளக்குகளை மாற்ற வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்னையைப் பற்றி சொல்லும்போது, கிரமங்களிலே இருக்கிற கை பம்புகள் ரிப்பேர் ஆகிவிட்டால் அவை வாரக் கணக்கில், ஏன் மாதக் கணக்கில் கூட சரி செய்யப்படுவதில்லை. காரணம், ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பிட்டர் இருக்கிறார். 100 கை பம்புகள் இருக்கக் கூடிய இடங்களுக்கு ஒரு பிட்டர் இருக்கிறார். ஆனால், ஒரே சமயத்திலே பல்வேறு கிராமங்களிலே, 4, 5 கிராமங்களிலே கை பம்புகள் ரிப்பேர் ஆகிவிட்டால் அதைப் பழுதுபார்க்க நாதி கிடையாது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் குறைந்தது 2 பிட்டர்களையாவது போட அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆழ்துளைக் கிணறுகள் இருக்கிற இடங்களில் சப்மெரிசிபிள் மோட்டார் கெட்டுவிட்டால் கிட்டத்தட்ட 3 மாதம், 4 மாதம், 6 மாதம் ஆகிறது அவற்றைப் பழுது பார்க்க. காரணம், அந்த மாவட்டத்திலேயே அந்த சப்மெர்சிபிள் மோட்டாரைப் பழுதுபார்க்க மெக்கானிக்குகள் ஒருசிலர்தான் இருக்கிறார்கள்.

[திரு. கே. அன்பழகன்] [1985 ஜூன் 12

அதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகையினாலே, உள்ளாட்சித் துறையோ, குடிநீர் வடிகால் வாரியமோ, பயிற்சி பெற்ற பிரத்தியேகமான மெக்கானிக்குகளைக் கொண்ட ஒரு பிரிவினை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து சாலைகள் பராமரிக்கப்படாமல் பல இடங்களிலே நடப்பதற்குக் கூட இலாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. புதிய சாலைகளைப் போடுவதை விட இருக்கிற சாலைகளைப் பராமரிக்க வேண்டும். மண் சாலைகளே போக்குவரத்திற்கு உகந்ததாக இருக்கின்றன. ஆனால் கருங்கல் ஜல்லி போட்டிருக்கிற இடங்களில் ஜல்லிகள் எல்லாம் பெயர்ந்து நடப்பதற்கோ அல்லது வாகனப் போக்குவரத்திற்கோ பிரயோஜனம் இல்லாத சூழ்நிலையிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் குறைவான நிதி. ரூ. 7 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவும் சமூகக் காடுகள், பாக்லாக் ஒர்க், ஸ்பில் ஓவர் ஒர்க் என்று மொத்தத்திற்கு ரூ. 3 இலட்சம் போக, பாக்கி ரூ. 4 இலட்சத்தை வைத்துக் கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே எப்படி சமுதாயக் கூடங்களையோ, பள்ளிக்கூடங்களையோ கட்டப் போகிறோம்? சாலைகளைப் போடப் போகிறோம்? இருக்கிற சாலைகளைப் பராமரிக்கப் போகிறோம் என்பதைக் கவனத்திலே கொண்டு, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு அதிக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன் அதிகாரங்கள் பிரிக்கப்பட்ட நிலையிலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு இலாகாக்களைக் கொண்ட அமைப்பினை பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் பஞ்சாயத்து யூனியனில் உருவாக்கினார்கள். ஆனால், இன்றையதினம் அந்த அமைப்பினை எடுத்துக் கொண்டாலும் அது வேளாண்மையாகட்டும், சுகாதாரத் துறையாகட்டும், அந்த அதிகாரிகளைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் பஞ்சாயத்து யூனியனிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு,



1985 ஜூன் 12] [திரு. கே. அன்பழகன்]

அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் இந்தக் குறைபாடுகளை எடுத்துச் சொல்கிறேன் என்றால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகரசபை நிர்வாகத்தில் மிகச் சிறந்தவர், திறமைசாலி. நாம் எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் அந்தந்தக் கிராமப்புறங்களில் இருக்கிற அதிகாரிகளினால் மக்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் சீர்படுத்தி, செம்மைப் படுத்தி, மக்களுக்கு நல்வாழ்வு தர வேண்டுமென்று எடுத்துக் கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. சோ. கலிதீர்த்தான் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே புனிதமான உள்ளாட்சித் துறை பொறுப்பை ஏற்று இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்குகின்ற இந்த நேரத்தில், கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும், அவர்கள் பசிப் பிணியைப் போக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல நல்ல திட்டங்களை ஏற்படுத்தி கிராம வளர்ச்சி அடைவதற்கு மிக உன்னிப்பாக பாடுபடுகின்ற இந்த நேரத்தில் நான் இந்தத் திட்டத்தை வரவேற்று, என்னுடைய தொகுதியைச் சார்ந்த சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதியான கல்ராயன் மலைப் பகுதியை இந்த ஆண்டு வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்தி, அங்கே உள்ள மலை வாழ் மக்களுக்கு பல நல்ல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் அங்கே ஊராட்சி மன்றங்கள் இல்லாத நேரத்தில், அங்கே தேர்தலை நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், அங்கே நிதிகளை ஒதுக்கு கின்றபோது, இப்போது குறைவான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே ஆதாரமான எந்த நிதியும்

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1985 ஜூன் 12

இல்லை. ஆகவே, மற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கு கின்ற நிதியைவிட கூடுதலான நிதியை ஒதுக்கவேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்குகிறார்கள் என்றால், இதற்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தால்தான் அங்கே தேவையான காரியங்களை செய்து கொடுக்க முடியும். ஏனென்றால், இதற்கு முன்பு அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பாக போதிய வசதி ஏற்படுத்திக் கொடுக்காத காரணத்தினால் அவர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே பல சாலை வசதிகளை செய்துகொடுக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதேபோல் சோலார் எனர்ஜியைக் கொண்டு தெருவிளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களுக்கும் மின்சாரத் துறையின் மூலம் தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்களுக்கு நிதி ஆதாரம் கிடையாது. ஆகவே, தனியாக அவர்களுக்கு நிதி கொடுத்து, அவர்கள் கேட்கின்ற ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே கிணறுகள், கை பம்புகள் போன்ற வசதிகளை ஓரளவுக்கு செய்து கொடுத்திருக்கிறோம். அந்தப் பகுதியிலே 105 கிராமங்கள் இருக்கின்றன. எனவே, இன்னும் கூடுதலான நிதி ஒதுக்கி கொடுத்தால்தான், குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியும். மேலும், சாலை வசதிகள், ரோடு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி ஒன்றியங்கள் என் தொகுதியிலே இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே சாலை மேம்பாட்டு வசதிகள் செய்வதற்காக கூடுதலாக நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும். கள்ளக்குறிச்சி பஞ்சாயத்து யூனியனிலே காளம்பளம், பொம்பரம்பட்டு, திருக்கணங்கூர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளை தனித்தனியாக மூன்று பஞ்சாயத்துக்களாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியனிலே மைக்கேல்புரம், மேல்சபைசாளுர், உலகம்பாடி, சௌரியார் பாளையம் பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அவைகளையும் தனித்தனியாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஜூன் 12] [திரு. சோ. கலிதீர்த்தான்]

அதேபோல், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பல நல்ல திட்டங்களை அதாவது ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களைத் தீட்டி வருகின்றது. ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றபோது, அங்குள்ள அதிகாரிகளை வைத்து வழங்குகின்ற நிலைமை உள்ளது. அங்கே உள்ள அதிகாரிகள் அதற்காக சர்டிபிகேட் வாங்கி வரவேண்டும் என்று சொல்வதால், அவர்கள் கடன் பெறுவதில் மிகவும் சிரமமான நிலைமை இருக் கிறது. எனவே, அந்த நிலைமையை மாற்ற, பொதுமக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, யார் யாரிடம் பணம் இல்லை என்பதை அறிந்து, அவர்களுக்கு கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்னுடைய தொகுதியைச் சார்ந்த கல்ராயன்மலைப் பகுதியிலுள்ள மலை வாழ் மக்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்ற நிலைமையை அறிந்து, என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக சுமார் 200 வீடுகளை அங்கே கட்டித் தருவதற்கு அனுமதித்திருந்தார்கள். அதே போல் கள்ளக்குறிச்சி ஒன்றியத்திலும் 60 வீடுகளைக் கட்டு வதற்கு அனுமதித்திருந்தார்கள். புரட்சித் தலைவர் அரசு ஏழைஎளிய மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டும் என்பதற்காக ரூ. 6,000 அளவிலே தமிழ்நாடு முழுவதும் கட்டித் தரும் திட்டத்தைத் தீட்டி, செயல் படுத்திக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-20)

அரசினுடைய திட்டங்களின் மூலம் செயல்படுத்தப் படுகின்ற வேலைகளை எல்லாம் எங்கள் பகுதியிலே அதிகாரிகளே செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற பி.டி.ஓ., எஸ்.ஈ.ஓ., சாலை ஆய்வாளர்கள், ஓவர்சீயர் போன்ற அதிகாரிகள் எல்லாம் எல்லா வேலைகளையும் தாங்களே எடுத்துச் செய்து தொழி லாளர்களுக்குச் செல்ல வேண்டிய பணத்தையெல்லாம் அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். தரைப் பகுதியிலே செய்கிற வேலை களுக்கு, கட்டுகிற வீடுகளுக்கு ரூ. 6,000 என்று அரசு பணம் கொடுக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகள் இந்த வீடுகளை ரூ. 8,000, 8,500 செலவில் கட்டுகிறார்கள். தும்பல், பாச்சேரி, பாலப்பட்டு போன்ற இடங்களில் எல்லாம் ரூ. 6,000 செலவில் கட்டவேண்டிய வீடுகளை ரூ. 12,000, 12,500 செலவிலே கட்டியிருக்கிறார்கள்.

அரசு தனியாக மலைப்பகுதிக்காக ஒரு திட்டத்தைத் தீட்டி கல்ராயன் மலைப்பகுதியிலே வீடுகள் கட்டுவதற்கு ரூ. 9,000 அனுமதிக்கிறது. ஆனால் அதிகாரிகள் இந்த மலைப்பகுதியிலே ரூ. 13,000, 13,500 என்ற அளவிலே செலவழித்ததாகக் கணக்குத் தருகிறார்கள். அரசினுடைய விதிமுறைகளுக்கு மாறாக பல காரியங்களை அங்கே இந்த அதிகாரிகள் செய்கிறார்கள். அரசினுடைய திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைவதில்லை என்று தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூடச் சொன்னேன். அவர்களும் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார்கள். வேறு அதிகாரிகளை அனுப்பிப் பார்க்கச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்தப் பகுதியில் கட்டப்பட்டிருக்கிற வீடுகளின் தரையில் காலை வைத்தால் கால் தரையின் கீழே போகிறது. மண்ணைப் போட்டு, மேலாக மணலைப்போட்டு லேசாக தரையைப் பூசியிருக்கிறார்கள். அங்கே கட்டப்பட்டிருக்கிற அத்தனை வீடுகளும் மிக மோசமாக இருக்கின்றன. அங்கே இருக்கிற ஏழை எளிய மக்களிடமே வேலை வாங்கி அந்த வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். வேலை செய்த மலைவாசிகளுக்கு கூலி கூட கொடுக்கவில்லை.

1984 ஏப்ரல் முதல் 1985 மார்ச் வரை மாதம் ரூ. 20,000 ரூ. 30,000 என்ற அளவிலே கணக்கிட்டு ரூ. 50,000 ரூ. 1,00,000 ரூ. 1,50,000 என்ற அளவிலே தொகைகளையெல்லாம் பெற்றிருக்கிறார்கள் அந்த அதிகாரிகள். வேலைகள் முடிக்கப்பட வேண்டிய மார்ச் 30-ம் தேதி கூட அட்வான்ஸ் வௌச்சர் போட்டு பணம் பெற்றிருக்கிறார்கள். இதுபோன்று பல ஊழல்களை அந்த அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை புலன் விசாரணைக்குட்படுத்தி தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களால் வீணாக்கப்பட்ட, எடுத்துக்கொள்ளப்பட்ட அரசாங்கப் பணத்தை திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரின் நோக்கம், கூரை வீடுகளில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு ரூ. 6,000 செலவில் நல்ல வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்பது. ஆனால், இந்த





அதிகாரிகள் அந்த நோக்கமே சரியாக நிறைவேறாத அளவிலே செயல்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தண்ணீர் இல்லாமல் பலர் கஷ்டப் படுகிறார்கள். மூங்கில்துறைப்பட்டு என்ற இடத்திலே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த ஆலையும் தண்ணீர் இல்லாததால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறது. அங்குள்ள மக்களும், குடி தண்ணீர் இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். எனவே, அங்குள்ள மக்களும், அந்த ஆலையும் பயன் பெறத்தக்க அளவிலே ஒரு காம்பௌண்ட் ஸ்கீமைத் தீட்டி, ஒரு பெரிய குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரம்மகுண்டம், ரெங்கப்பனூர், கிரவுந்தக்குறிச்சி, குடுந்த வாயல்நத்தம், மாதவச்சேரி, காடிசித்தூர், சிறுவாங்கூர், ஆலத்தூர் போன்ற பெரிய பெரிய கிராமங்கள் எல்லாம் குடி தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சின்ன கிராமங்களிலே இருக்கிற நீர்த் தொட்டிகளைத்தான் அதிகாரிகள் கவனிக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இந்தப் பகுதிகளிலே குடிநீர் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே 1985-86-ம் ஆண்டுத் திட்டத்திலே செய்ய வேண்டிய சாலை வேலைகளை 25 கி.மீ. தூரம் வரை சென்ற மார்ச் மாதத்திலேயே செய்துவிட்டார்கள். இதற்கு முன் அனுமதி எதுவும் இல்லாமல் வேலை செய்கிறார்கள். அதற்குப் பணமும் வாங்கியிருக்கிறார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளும் மற்றவர்களும் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப, அனுமதி இல்லாமல் வேலைகளைச் செய்கிறார்கள், பணத்தையும் பெற்று விடுகிறார்கள்: அதை முறையாகக் கண்காணிக்க அரசாங்கம் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அதைப்போன்று மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஸ்டோரேஜ் டாங்க்ஸ் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அதிலே ஒன்று கூட வேலை செய்யவில்லை, பயன்படவில்லை. அதற்காக

ஏராளமாக பணத்தை விரையம் செய்திருக்கிறார்கள். இதை ஆராய்ந்து பார்த்து, தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி கிராம மக்கள் முன்னேற்றத்தை, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே குறிக்கோளாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வுகளோடு திட்டங்களைப் போடும்போது, இப்படிப்பட்ட பல தவறுகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் அரசு அதிகாரிகள் சேர்ந்து அங்கே ஆதிபராசக்தி கோவிலும், சித்தர் கோவிலும் கட்டியிருக்கிறார்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்தில். அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் இப்படி அரசு அதிகாரிகள் எப்படி கோவில் கட்டலாம்? இதற்கு எல்லாம் காரணம் அரசு அதிகாரிகள் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் கூட அது தவறு இல்லை என்ற எண்ணத்தோடு செயல்படுகிறார்கள். இது மற்ற முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கோவிலை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் சொல்வதால், சாமி கும்பிடக்கூடாது, கோவில் இருக்கக்கூடாது என்று சொல்வதாக யாரும் எண்ண வேண்டாம். அரசாங்க நடைமுறையில் இல்லாததை அரசு அதிகாரிகள் செய்து, அரசுப் பணிகளுக்கு முட்டுக்கட்டைப் போடுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளுக்கு தகுந்த பரிகாரம் கான சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையில்





என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், சென்னை மாநகரை வளர்ச்சியடையச் செய்யவும், எழில் ஆக்கவும், அழகுப் படுத்தவும் இன்றைக்கு சென்னை மாநகர இம்ப்ரூவ்மெண்ட் கமிட்டி என்று ஒரு கமிட்டியை அமைத்து, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே அந்த கமிட்டியை அமைத்து, ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குழுவிற்கு தலைமை ஏற்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராக இருந்து, அந்தக் குழுவிலே என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அங்கம் பெறச் செய்ததற்கு நன்றியையும் வணக்கத்தையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகரை நல்ல முறையில் ஒரு எழில் மிக்க நகரமாக உருவாக்குவதற்கு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பணிகள் நடைபெறும்போது இந்த மானியக் கோரிக்கையிலே சுட்டிக்காட்டியிருப்பதைப்போல சென்னை மாநகரத்தில் பல்வேறு இடங்களில் தனியார் தெருக்களில் இன்னும் அடிப்படை வசதிகள் கூட செய்யப்படவில்லை. சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, மின்சார வசதி, தெருவிளக்கு வசதி போன்ற வசதிகள் செய்யப்படவில்லை. கிராமப்புறங்களில் இருக்கிற நிலைமையைவிட மிகக் கொடுமையாக இருக்கிறது. இந்த நிலைமைகளை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, இன்றைக்கு அதைக்கூட, மாநகராட்சி வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த அந்தக் குறிப்பைக்கூட இந்த மானியக் கோரிக்கையில் மாநகராட்சி அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறது. அந்த 100 கோடி ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராம மக்கள் எல்லாம் எல்லாவிதமான வசதிகளையும் பெற தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூன் 12

(பிற்பகல் 12-30)

அது கிராமப்புற மக்களுக்கு வாழ்வளித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அதை எல்லாம் அவர்கள் போற்றிப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் தலைநகராம் சென்னையில் இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் வலியுறுத்திச் சொன்னபோது அதற்கு இசைந்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது புரட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு நீங்கள் இந்த தனியார் தெருக்களில் எல்லாம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு துறை இணைந்து அந்தப் பணிகளைச் செய்யவேண்டும் என்ற அறிவிப்பை இந்த மானியக்கோரிக்கையிலே அறிவித்தால் சென்னை மாநகர மக்கள் அத்தனை பேரும் உளம் மகிழ்ந்து புரட்சித்தலைவர் அவர்களைப் பாராட்டுவார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலைகளை அமைக்கின்ற நேரத்தில் வெறுமனே சாலைகளை அமைத்துவிடுகிறார்கள். அவ்வாறு வெறும் சாலைகளை மட்டும் அமைக்காமல் அவற்றின் ஓரத்தில் மழை நீர் செல்கின்ற வகையில் அந்த வாய்க்காலையும் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் சாலைகளை அமைக்கின்ற போது ஃபுட் பாத் என்பதையும் அந்தச் சாலைப் பணியோடு சேர்த்து அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைமாநகரில் பல்வேறிடங்களில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவை கட்சிப் பிரச்சாரச் சுவரொட்டிகளாகட்டும் அல்லது திரைப்படங்களைச் சார்ந்த சுவரொட்டிகளாகட்டும், மாநகராட்சியின் அனுமதியை வாங்கி குறிப்பிட்ட இடங்களில்தான் ஒட்டவேண்டும் என்று ஒரு வரைமுறையை நிர்ணயிக்கவேண்டும். அப்படிச் செய்யாததன் காரணத்தால் பலவிதமான ஆபாசச் சுவரொட்டிகளை எல்லாம் கண்ட, கண்ட இடங்களில் குறிப்பாகப் போக்குவரத்து நெரிசல் அதிகமான இடங்களில் ஒட்டிவிடுகிறார்கள். அதன் காரணத்தால் சாலையிலே நடந்து செல்பவர்களும், வாகனங்களில் செல்பவர்களும் அவற்றையே அண்ணாந்து பார்த்துக்கொண்டு செல்கின்ற நிலையில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைக் கண்காணிக்கின்ற வகையில் சென்னை மாநகரத்தைப் பொறுத்த

வரையில், குறிப்பிட்ட இடங்களில்தான் சுவரொட்டிகளை ஒட்ட வேண்டும், அவ்வாறு ஒட்டப்படுவது பற்றி மாநகராட்சியின் கவனத்திற்குக் கொண்டு வந்து அனுமதி பெற்று ஒட்ட வேண்டும் என்று வரையறையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் இருக்கின்ற மாநகராட்சியின் அனைத்து மருத்துவ நிலையங்களும் மருத்துவத்துறையில் இணைக்கப்பட்டிருப்பதைப் பற்றி நேற்றுமுன்தினம் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதேமாதிரியாக இன்றைக்கு சென்னை மாநகரில் பல்வேறு விளையாட்டுத் திடல்களை மாநகராட்சி பராமரித்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணத்தால் மாநகராட்சிக்கு பல இலட்ச ரூபாய் செலவாகின்றது. தமிழகத்தில் விளையாட்டிற்கென்று தனியாக ஒரு வாரியத்தை புரட்சித்தலைவர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். எனவே அந்த வாரியத்தோடு இந்த விளையாட்டுத் திடல்களைப் பராமரிக்கின்ற பொறுப்பையும் இணைக்கவேண்டும். அந்த வகையிலே சென்னை மாநகராட்சியும், விளையாட்டுத் துறையும் இணைந்து அந்தத் திடல்களைப் பராமரிக்கும்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரம் ஒரு சிறப்பான மாநகரமாகும். எல்லோரும் வருகின்ற ஒரு தலையாய நகரமாகும். இங்கே விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துகின்ற புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சென்னை மாநகரத்திற்கு ஒரு இன்டோர் ஆடிட்டோரியம் இல்லாதது ஒரு பெரும் குறையாகும். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நேற்றையதினம் வாலிபால் டோர்னமென்ட் நடைபெறுவதாக இருந்தது. மழையின் காரணமாக அது ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்படிப்பட்ட மிகச் சிறந்த பல்வேறு விளையாட்டுக்களுக்காக வெளிநாடுகளில் இருந்தெல்லாம் பலரும் வருகின்ற நிலையில் இன்டோர் ஆடிட்டோரியம் ஒன்று அவசியம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூன் 12

அடுத்து சென்னை மாநகரத்தில் குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் ஆகிய இரண்டு வாரியக் குடியிருப்புக்கள் இருக்கின்றன. இந்த வாரியங்கள் எல்லாம் பணியாட்களை வைத்துக்கொண்டு பணியினைச் செய்துகொண்டிருக்கின்றன. ஆனால் இந்த பணிகள் நன்கு செய்யப்படாததன் காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மாநகராட்சியே இந்தக் குடியிருப்புக்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்குத் தேவை யான பணவசதி ஆதாரத்தை இந்த வாரியங்களிடமிருந்து பெற்றுக்கொண்டால் நலமாக இருக்கும். பொது மக்கள் ஏதாவது கோரிக்கைகளை எடுத்துச் சென்றால், அது மாநகராட்சியைச் சார்ந்தது அல்ல என்று மாநகராட்சி அதிகாரிகளும், குடிசை மாற்று அதிகாரிகள் அது எங்களுடையது அல்ல என்று அவர்களும், வீட்டு வசதி அதிகாரிகள் அது எங்களைச் சார்ந்தது இல்லை என்றும் சொல்லி, இன்றைக்கு பல்வேறு குழப்பங்கள் அதனால் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சியே அனைத்துக் குடியிருப்புகளையும் பராமரிக்கின்ற பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு இந்த மானிய கோரிக்கைகள் மீது மாநகராட்சி எடுத்துக் கொண்டிருக்கிற பணிகளைப் பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் அதிலே நீண்டகாலமாக அதிகாரிகளையும் மற்றவர்களையும் கேட்டு வருகிறேன். சைதாப்பேட்டையிலே இரண்டு சுரங்கப்பாதைகள் இல்லாதகி னால் பலவிதமான தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன. ஜோன்ஸ் சாலையில் கட்டப்படவிருக்கின்ற அந்த சுரங் கப்பாதை அப்படியே தடைபட்டு நிற்பதாலும், மார்க்கெட் பகுதியிலே இருக்கிற ரெயில்வே கேட்டிற்கு அருகிலும் ஒரு நாளைக்கு ஆயிரக் கணக்கான பொதுமக்கள் வந்து போகின்ற நேரத்திலும், மூடியிருக்கும் கேட் திறந்து, மறுபடி மூடுவதற்குள் பெரும் குழப்பம் ஏற்படுகிறது. மக்களுக்கு பாதுகாப்பு அற்ற சூழ்நிலையே அங்கு நிலவுகிறது. அந்த இடங்களில் சுரங்கப் பாதையைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். நெடு நாட்களாக பொதுமக்கள்—அந்தப் பகுதி மக்கள்—அதைத் தங்கள் கோரிக்கையாக கேட்டுக்



1985 ஜூன் 12] [திரு. சா. துரைசாமி]

கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைக் குறித்து இந்த மானியக் கோரிக்கையில் எதுவும் குறிப்பிடப்பெறாமல் இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து அந்த இடங்களிலே சுரங்கப் பாதைகளை அமைப்பதையும் தங்கள் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல சுடுகாட்டைப் பொறுத்த வரையில், சென்னை மாநகராட்சி பல்வேறு இடங்களிலும் சுடு காட்டைப் பராமரிப்பதில், அவர்களுடைய பணியில் சற்றுக் கவனக் குறைவாகவே இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். என்னுடைய தொகுதியிலே இருக்கும் சுடுகாட்டுக்கு காம்பவுண்ட் சுவரே இல்லாமல் இருக்கிறது. வெட்டியான்கள் அமர்ந்து பணி செய்வதற்கு அறைகளே கிடையாது. பிறப்பு இறப்பு கணக்கினை பதிவு செய்கின்ற அலுவலகம் கூட சரியாக இல்லை. ஆகவே அவை களை சரிவர அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே சுடுகாடுகளில் பணிபுரிகின்ற வெட்டியான் கள் எல்லாம் காண்டிராக்ட் முறையில் இருக்கிற காரணத்தால், வசதி இல்லாதவர்களிடமும் கூட, அதிகத் தொகையை, பிணத்தை எரிப்பவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். விறகுக்கு, கட்டைக்கு, விராட்டிக்கு என்று எல்லாவற்றிற்கும் சேர்த்து 150 ரூபாய் என்று அங்கே விலைப் பட்டியல் போடப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் பெற்றுக் கொண்டிருப்பது 200, 300 என்று. ஆகவே பொது மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே அந்த வெட்டியான்களை மாநகராட்சின் சிப்பந்திகளாக மாற்றி, அவர்களுக்கு ஊதிய நிர்ணயமும் செய்து விட்டால், இந்தப் பிரச்சினைகள் எதிர் காலத்தில் இருக்காது என்பதையும் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, இன்று சென்னை நகரத்திலே அதன் சிறப்புகளைக் குறைக்கின்ற வகையில் மசாஜ் கிளப்புகள் என்ற பெயராலே ஆங்காங்கே பல கிளப்புகள் தோன்றியிருக்கின்றன. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மசாஜ் கிளப்புகளுக்கான லைசன்ஸ்களை பெற்றுக் கொண்டு,

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூன் 12

அந்த மசாஜ் கிளப்புகளை நடத்துபவர்கள் அங்கே விபச்சாரத்தையே பகிரங்கமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போது பம்பாயில் இருக்கிற ரெட் லைட் ஏரியா போல, நாம் அனுமதி கொடுத்து நடத்துவது போல் அதை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மசாஜ் கிளப்புகளை சென்னை மாநகரத்தை விட்டு அறவே ஒழிக்க அந்த லைசன்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். சென்னை நகரத்தை சீரமைக்கும் பணியை இப்போது மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தை சீரமைக்க வேண்டுமானால், முதலில் கூவத்தை சீரமையுங்கள். கூவத்திலே படகு விட்டு, இரு சாலை ஓரங்களிலும் மரங்களை நட்டு, அழகுப் படுத்தி, சுற்றுலா பயணிகள் வந்து பார்த்துச் செல்லும் வகையில், சீரமைத்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கடைசியாக . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு முறைதான் இறுதியாக, அல்லது கடைசியாக என்று சொல்ல வேண்டியது வரும், எத்தனை முறை இறுதியாக, கடைசியாக என்று சொல்வீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சா. துரைசாமி:** இறுதியாக சென்னை மாநகரத்தின் வளர்ச்சி மேம்பாடு என்ற எண்ணத்தை முன்னிட்டு, அதன் வளர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கிணங்க சாலைகள் சுத்தமாக்கப்பட வேண்டும். குப்பை கூளங்கள், மற்றும் சில குடிசைப்பகுதிகள் கூட அகற்றப்பட வேண்டும் என்பதோடு, கொடி 'கம்பங்கள், மன்றங்கள் போன்றவைகளும் அகற்றப் படவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். அத்தோடு, சென்னை நகர சாலைகளில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தந்தை பெரியார் அவர்களுக்கும் பல இடங்களில் சிலை இருப்பதோடு, சில தேவையில்லாத நபர்களுக்கும் சிலை இருக்கிறது. மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், மக்களால் வெறுக்கப்பட்டவர்கள், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் எல்லாம் சிலைகளாக சில இடங்களில் இருக்கிறார்கள். நீலன் சிலையை அகற்றியதைப் போல—நீலன் சிலை இப்போது கண்காட்சியில் இருக்கிறது—இத்தகைய சிலைகளையும் அகற்று



1985 ஜூன் 12] [திரு. சா. துரைசாமி]

வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் எண்ணத்திற்கு தகுந்த மதிப்பு அளிக்கும் வகையில், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அதேபோல பெருந்தலைவர் காமராஜ் மற்றும் காந்தியடிகள் போன்ற மறைந்த பெரியவர்களின், பெரும் தலைவர்களின் சிலைகள்தான் சென்னை நகர சாலைகளில் இருக்க வேண்டும், மற்ற யாருக்கும் சிலை வைக்கக்கூடாது, வளைவுகள் இருக்கக்கூடாது, அவற்றை எல்லாம் அகற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 12-40)

* **திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற இந்த மானியத்தின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல என்னை அனுமதித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே வைக்கப்பட்டு இருக்கிற மானியங்களில், கடுமையான கண்டனத்திற்கு உள்ளாக்கப்படவேண்டிய ஒரு மானியம் இப்போது நமக்கு முன்னாலே விவாதத்தில் இருக்கிற மானியமாகும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக பொறுப்பேற்றதற்குப் பின்னால், பாழ்படுத்தப்பட்டு விட்ட பழைய மரபுகளை திருத்தி அமைப்பார் என்ற நம்பிக்கையுடன் என் கட்சியின் சார்பாக நல்லெண்ண விழைவைத் தெரிவிக்கிறேன். நம்பிக்கையின் முதல் துவக்கமாக மிக விரைவில் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது, நாங்களும் தேர்தல் நடக்கும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அது நடைபெறுகிறபோதுதான் காரியார்த்தமாக பிரச்சனைகள் தீரும். எனவே, அந்த நல்லெண்ண விளைவை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே குறிப்பாக ஆளுகிற கட்சியைச் சேர்ந்த பல நண்பர்கள் பல்வேறு குறைகளைப்பற்றிப் பேசினார்கள். பல்வேறு நகராட்சிகள் நடைமுறையில் நரக ஆட்சிகளாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. நகராட்சிகளைக் கவனிப்பதற்கு தனிப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்களா? அவைகள் உண்மையில் கவனிக்கப்பட்டு வருகிறதா என்பதே இன்றைக்கு கேள்விக்குரியதாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் உள்ளாட்சித் துறை நிர்வாகம் எந்த அளவிற்கு பாழ்பட்டுக் கிடக்கிறது என்பதைக் கண்டறிய ஒரு ஆராய்ச்சித் தேவையில்லை, ஒரு

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 12

அரை மணி நேரம் தமிழ்நாட்டு ரோடுகளில் நடந்துவிட்டு வந்தாலே போதும். தமிழ்நாட்டின் எந்த நகராட்சியிலாவது, முறைப்படி பாதை வசதிகள் இருக்கிறதா? விளக்கு வசதிகள் இருக்கிறதா? குடிநீர் வசதிகள் உத்தரவாதப் படுத்தப்பட்டு இருக்கிறதா? எங்கும் எதுவும் இல்லை. அந்த அளவிற்கு மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு நிலைமைகள் பாழ்பட்டு கிடக்கிறது. நான் அறிய, கழிவு நீரை போட்டு கழிவு நீரை வெளியேற்றுகிற வடிகால்கள் வேலை நடைபெற்றதாக எனக்கு நினைவு இல்லை. அந்த அளவிற்கு நீண்டகாலம் மக்களின் தேவைகள் கவனிக்கப்படவில்லை. ஜனநாயக மரபுகளை இந்த மாநில ஆட்சி முற்றாக கழுத்தை திருகிக் கொன்று உள்ளாட்சித் தேர்தல்களை தள்ளிப் போட்டதே இதற்குக் காரணமாகும். 9 ஆண்டுக்காலமாக இந்தத் துறைக்கு மக்களால் தெரிவு செய்கிற பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிற உரிமைகளை மறுத்தார்கள். மக்கள் பிரச்சினைகளை மிகச் சிறப்பாக தீர்த்துக் காரியம் ஆற்றுவதற்கு உரிய மக்கள் பிரதிநிதிகள் இந்த லோக்கல் பாடிகளிலே தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் தான், அதிகாரிகள் தாள் அடித்த ஜம்பமாக, தர்பார் நடத்துகிறார்கள்.

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எவ்வளவு ஆண்டுக்காலமாக? 30 ஆண்டுக்காலமாக ஒரு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படவே இல்லை. இந்தத் துறையில் அதிகாரிகள் எதற்காக இருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த மனைப்பிரிவுகளை சாமானியப்பட்ட ஒரு சாதாரண பிரஜை, ஒரு இடத்தை வாங்கி விடு கட்டுகிறான். அவனுக்குத் தெரியுமா? இது அங்கீகரிக்கப்பட்டதா, அல்லது அங்கீகரிக்கப் படாததா என்று. ஆனால் நடைமுறையில் அது அங்கீகரிக்கப் படவில்லை. அங்கீகரிக்கப்படாததற்கு யார் காரணம்? அந்த நகராட்சியிலே இருக்கிற அதிகாரிகள் லஞ்சத்தை வாங்கிக் கொண்டு, சட்ட விரோதமாகக் கட்டுவதற்கு அனுமதித்து விட்டார்கள். அதனுடைய விளைவு, அங்கீகரிக்கப்படாத நூற்றுக்கணக்கான மனைப்பிரிவுகள் தமிழகத்திலே உருவாகி இருக்கின்றன. இதற்கு யார் குற்றவாளி? இந்த மாநில அரசு என்ன சொல்கிறது? நாங்கள் அவர்களுக்கு சாக்கடை, கழிவு



1985 ஜூன் 12] [திரு. கு. சுப்பராயன்]

நீர் வசதி செய்ய முடியாது. சாலை வசதிகள் செய்ய முடியாது, விளக்கு வசதி செய்ய முடியாது. ஏன் என்றால், அவைகள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள். வசதிகளை செய்ய மட்டும் அங்கீகரிக்கப்படவில்லை. வரி வசூலிக்க மட்டும் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறதா? வரியை வசூலிக்கிற இந்த மாநில அரசு, வசதியையும் செய்து கொடுக்கவேண்டிய கடமை இருக்கிறதா? இல்லையா? வரியை மட்டும் வசூலித்துவிட்டு, ஏன் வசதியை செய்யவில்லை? வசதி செய்யவேண்டுமானால், இன்றைக்கு அதற்கு என்று ஒரு சுழல் நிதி திட்டம், நீங்கள் 25 சதவீதம் நிதி கொடுத்தால், அந்த நிதியிலே நாங்கள் செய்து விடுகிறோம் என்கிறார்கள். குற்றவாளி பொதுமக்களா? அப்பாவி மக்களைத் தண்டிக்கிறீர்களா? குற்றவாளிகள் யார்? லஞ்ச ஊழலுக்கு ஆட்பட்டுவிட்டு, சட்ட நெறிமுறைகளை மறந்து, மறுத்து, ஊழல் செய்கிற அதிகாரிகளே தவிர, வேறு யாரும் அல்ல. அந்தக் குற்றத்தைப் புரிந்த அதிகாரிகளைத் தண்டிக்காமல்விட்டுவிட்டு, பாவப்பட்ட பொது மக்களுக்கு வசதி செய்யாமல், தண்டிப்பது என்பது, ஒருபோதும் தர்மமோ, முறையோ, அல்லது நியாயமோ ஆகாது. எனவேதான் இந்த மாநில அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக ஒரு ஸ்பெஷல் ஆர்டர் போடவேண்டும். இந்த மாநிலத்தில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் அனைத்தும் அங்கீகரிக்கப்படும் என்ற விசேஷ ஆர்டர் போட்டு மேற்கொண்டு இவற்றை முறைப்படுத்துகிற நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொள்ளவேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மிக முக்கியமான விஷயம், பகுத்தறிவு நெறி முறைகளை ஏற்றுக்கொண்டு இருக்கிற கட்சி ஆட்சியில் இருக்கிறது. எனவே ஒவ்வொரு விஷயத்திலும் பகுத்து அறிந்து பார்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால் நடைமுறையில் என்ன நிகழ்கிறது நகராட்சியில்? 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் போடப்பட்ட சுகாதார ஊழியர்கள் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். ஒரு லட்சம் பேர் கொண்ட மக்கள் தொகை ஐந்து லட்சமாக இன்று வளர்ந்து இருக்கும். 100 பேர் கொண்ட சுகாதார ஊழியர்கள் 100 பேராகத்தான் இருக்கிறார்கள். என்ன பகுத்தறிவு இது? விரிவு அடைந்து விட்ட நகரத்தில் அதனுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, உரியபடி புதிய ஊழியர்களைக் கொண்டு வரவேண்டுமா,

[திரு. கே. சுப்பராயன்] [1985 ஜூன் 12

இல்லையா? கொண்டு வர வேண்டும் என்று நகர மன்றங்கள் பரிந்துரைத் தீர்மானங்கள் போட்டாலும் கூட, இந்த மாநில அரசு நந்தி மாதிரி இருந்து தடுக்கிறதா என்று கேட்கவிரும்புகிறேன். போடப்பட்ட பரிந்துரைத் தீர்மானங்கள் கூட இன்றைய அளவில் அங்கீகரிக்கப்படவில்லை. மேலும் ஒரு உதாரணத்தைச் சொல்லவிரும்புகிறேன். இதே பாலிசி நோட்டில் சொல்லப்பட்டு இருக்கிறது, சுகாதார பணியாளர்கள் மலத்தை அள்ளி தலையில் சுமத்தப்படுவதை பற்றி இந்த ஆட்சி படுகிற வேதனையை பார்த்தால் கண்ணீர் வருகிறது. எவ்வளவு பரிவுணர்வோடு எழுதியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடந்தது? கடந்த தொடரில் 10 லட்சம் ரூபாய் அவர்கள் மலத்தைத் தலையில் சுமக்கக்கூடாது என்பதற்காக சக்கர வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டு போகவேண்டும் என்பதற்காக, சக்கர வண்டி வாங்க 10 லட்ச ரூபாயை இந்த மாநில அரசு ஒதுக்கியிருக்கிறது. அது பயன்படுத்தப்படாமல் திரும்ப சரண்டர் செய்யப்பட்டதே ஏன்? இந்த பாலிசி நோட்டில் சொல்லப்பட்டு இருப்பது உண்மையானால், ஒதுக்கப்பட்ட 10 லட்ச ரூபாயை செலவழிக்காமல் திருப்பி ஒப்படைத்தது ஏன்? இந்த ஆட்சி எவ்வளவு அக்கறையோடு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதற்காக இது ஒரு அடிப்படையான உதாரணம் அல்லவா? இவற்றையும் புதியதாக பொறுப்பு ஏற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு பணி பிரிவு அடைந்து இருக்கிறது. அதாவது கேங்கு மேன் என்று ஒரு பிரிவினர் இருக்கிறார்கள், நகராட்சியில். 5 பேர், 10 பேர் இருக்கிறார்கள். 5 பேரை வைத்துக் கொண்டு எப்படி நகரத் தேவையை பூர்த்தியாக்க இத்தகைய நடைமுறை நகராட்சிகளுடைய தேவைகளை பூர்த்தி செய்யுமா? பூர்த்தி செய்யாது முடியும்? எப்படி அவர்கள் வேலை செய்வார்கள்? விரிவு அடைந்து வந்து இருக்கிற இன்றைய புதிய நிலைமைகளை எதிர்கொள்வதற்கு உரிய தகுதி உள்ள நிர்வாக எந்திரத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு இந்த மாநில அரசுக்கு உண்டு என்ற முறையில் உடனடியாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து நகராட்சிகளின் நிர்வாக ஊழியர்களையும், சுகாதார பணியாளர்களையும், நியாயமான அளவில்



1985 ஜூன் 12] [திரு. கே. சுப்பராயன்]

உயர்த்த உத்தரவிட வேண்டும் என்று கோருகிறேன். அதே போல் கேங்கு மேன்களையும் அதிகப்படுத்தவும், அந்த கேங்கு மேனுக்கு 5 ரூபாய், 7 ரூபாய் கூலி இருக்கிறது. என்ன அநியாயம், 5 ரூபாய் 7 ரூபாய் கூலி கொடுக்கலாமா? அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவேண்டும். அந்த தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

அடுத்து சாக்கடைப் பிரச்சினை. இது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. பலயிடங்களில் பாதாள சாக்கடை பற்றிய புரபோசல் வந்து இருக்கிறது. அது என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதை பரிசீலிக்கவேண்டும். மேலும் குறிப்பாக மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் டைரக்டர் லெவலில் இருக்கக்கூடியவர்கள் எப்படி இயங்குகிறார்கள் என்று நமக்குப் புரியவில்லை. திருப்பூர் பெரிய நகராட்சி. அந்த நகராட்சிக்கு சொந்தமாக ஒரு டிராக்டர் கிடையாது. தண்ணீர் சப்ளை செய்வதற்கு சொந்த லாரி கிடையாது. எப்படி தண்ணீர் லாரியில் சப்ளை செய்யப்படுகிறது என்றால், வாடகைக்கு தனியார் இடத்திலிருந்து லாரி எடுத்து அவற்றின் மூலம் வினியோகிக்கப்படுகிறது. இது எதற்கு தெரியுமா? * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை ஏற்கனவே நீக்கியிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பற்றி சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

**திரு. கு. சுப்பராயன்:** தனிப்பட்ட ஒரு இனத்தை சொல்வதற்காக அல்ல. ஒரு விஷயத்தை குறிப்பதற்காக சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது * * என்பது ஒரு இனமும் அல்ல, ஜாதியும் அல்ல, அது ஒரு தனிப்பட்ட நபரை குறிக்கிற சொல்லே தவிர வேறு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஒரு பிரிவு. அதனால் அதை சொல்லாமல் வேறு மாதிரி சொல்லுங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(முற்பகல் 12-50)

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, * * என்ற பழமொழி நாட்டில் இருக்கிறது. * * என்றால் என்ன பொருள் என்று நான் தமிழ் அகராதியிலே பார்த்தேன். * * நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று போட்டு இருக்கிறார்கள். அதோடு, * * என்று போட்டு இருக்கிறார்கள். * * என்றும் போட்டு இருக்கிறார்கள். எனவே, சொல்லுகின்ற பொருள் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் என்ற அளவிலே போடப் படவில்லை. எனவே வழக்கில் இருக்கக்கூடிய ஒரு பழம் பெரும் பழமொழியை சபைக் குறிப்பில் ஏற்காமல், அந்த வார்த்தைக்கு தவறான உள்நோக்கம் கற்பித்து குறிப்பிலே இருந்து நீக்கி விடக் கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் நீக்கி ஆகிவிட்டது. அதைப் பேசவேண்டாம். வேறு மாதிரி சொல்லுங்கள்.

**திரு. கு. சுப்பராயன்:** * * என்று சொல்வது காரியம் ஆற்றிக் கொள்வதற்குரியவர்களைத்தான் அப்படிச் சொல்கி றார்கள். எனவே, தனிப்பட்ட நபரிடம் லாரி எடுத்துக்கொள்கிற போது, ஒருவிதமான கமிஷன் பேசிஸ் பேசிக் கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுகிறது. சொந்தமாக நகராட்சிக்கு லாரி வேண்டு மென்று நிர்வாக நடவடிக்கைகளை திருப்பூர் நகராட்சியிலே உள்ள அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, நிதிப் பற்றாக்குறை. அது பூர்வ பீடிகையில் சொல்லப்பட்டு இருக்கிறது. நகராட்சியினுடைய அன்றாடக் கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு, நிதிப் பற்றாக் குறையும், ஜனப் பெருக்கமும்தான் காரணம் என்று சொல்லப் படுகிறது. அது உண்மை அல்ல. ஜனப் பெருக்கம் ஏற்படுகிற போது, வரி வசூலும் அதிகப்படுகிறது அல்லவா? அவற்றின் மூலம் மேலும் காரியம் ஆற்றுவதற்குரிய வாய்ப்புக் கிடைக்கிறது. அதையும், ஒருதலைப்பட்சமாக, ஒரு வழிப் பாதையில்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



சிந்திக்கக்கூடாது. ஒவ்வொருவரும் இரண்டு கைகளோடு தான் பிறக்கிறார்கள். அவர்கள் இரண்டு கைகளோடு பிறந்து, வேலை செய்கிற வாய்ப்பைப் பெறுகிறார்கள். எனவே ஜனத் தொகைப் பெருக்கம் என்கிற மூடு திரை போட்டு மாநில அரசின் கையாலாகாத்தனத்தை மூடி மறைக்க வேண்டாம் என்பதைக் கேட்டுக்கொள்வதோடு மாநிலத்தில் தேர்தல் நடைபெறுகிற வரை, அதிகாரிகளை நம்பி எதுவும் நடக்கப் போவதில்லை. அதிகாரிகள் வாரத்திற்கு ஒரு முறை கட்டாயமாக இன்ஸ் பெக்ஷன் போக வேண்டும் என்று அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். மக்களைச் சந்திக்கவேண்டும். அப்போதுதான் நடு ரோட்டில் தேங்கிக் கிடக்கிற சாக்கடை நீருக்கு அருகிலே, நடுத்தர மக்களைச் சந்திக்கிற வாய்ப்பு அதிகாரிகளுக்கு ஏற்படும். பதில் சொல்லவேண்டிய தார்மீக பொறுப்பும் அவர்களுக்கு வரும். ஆகவே, இந்த மாநில அரசு வாரம் ஒரு முறை இன்ஸ்பெக்ஷன் செல்லவேண்டும் என்று நிர்ப்பந்தத்தை கொண்டு வருவதோடு, சர்வ கட்சிகளின் கண்காணிப்புக்குழுவை உருவாக்கி, அந்தக் கண்காணிப்புக் குழுவினரின் மூலமாக நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று சொல்லி, இறுதியாக, எவ்வளவு பாது காப்பற்ற நிலையில் மக்கள் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்கு ஆண்டிப்பட்டி சிறந்த உதாரணமாக இருக்கிறது. அது பற்றி பத்திரிகைகள் பரவலாகப் புகார்களை எழுதி இருக் கின்றன. மறுக்கமுடியாத அளவுக்கு வீடியோக்களில் பதிவு செய்துள்ளனர். குடிக்கிற தண்ணீர் கழிப்பறைக்கு அருகிலே இருந்து விடப்படுகிறது. கழிப்பறைக்கு அருகிலேயே குடங்களை வைத்து குடி தண்ணீர் பிடிக்கிற கொடுமைகள் ஆண்டிப்பட்டியிலே நடைபெறுகிறது என்றால்—மாண்புமிகு முதலமைச்சரின் தொகுதியிலேயே இந்தக் கதி என்றால்—ஆடிக்காற்றிலே அம்மியே பறக்கிறபோது, இலவம்பஞ்சு எப்படி இருக்கும்'? அதனால், தமிழ்நாட்டின் கதி, ஆண்டிப்பட்டியின் கதிதான். அந்த நிலைமையை மாற்றுவதற்கு புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் பெரும் பகுதியைச் செலவழிப்பார் என்ற நம்பிக்கையோடு முடிக்கிறேன். வணக்கம்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களால் கொண்டு வந்திருக்கக்கூடிய சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் பற்றிய 28-ஆம் எண்

மானியக் கோரிக்கையின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க நான் முன் வருகிறேன். உள்ளாட்சித் துறை என்பது 'ஸ்பைனல் கார்டு' என்று சொல்லுவார்களே, ஒரு நாட்டின் முதுகுத் தண்டு வடம் என்று சொல்வார்களே, அந்த அளவுக்கு இருக்கிற சிறப்பான துறையின் மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய நீங்காத கடமை ஆகும்.

தேர்தல் வருமா, வராதா என்ற ஹேஷ்யங்களை எல்லாம் பொய்யாக்கி தேர்தல் தேதி தெரிவிக்கப்பட்டு விட்டது. அது மட்டும் அல்லாமல், ஆயக்கட்டுதாரர்கள் கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவதற்கு வேண்டிய வழிவகை ஏற்கனவே செய்தாகிவிட்டது. தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய வாக்காளர்கள் ஜாபிதா, சேர்ப்பது, இணைப்பது, மற்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டுவிட்டன. அது மட்டுமல்லாமல், இப்போது நிர்வாக சீர்த்திருத்தம் செய்யக்கூடிய வகையில், அடுத்து வரக் கூடிய சூழ்நிலையில், போர்க்கால அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, நடைமுறைத் தேவைக்குரிய வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய வகையில் இந்த மானியக் கோரிக்கையை இங்கே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுவரையில், பல காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். இந்த மாநிலத்திலே மட்டுமல்ல. இங்கே பேசியவர்களுடைய கட்சிகள் ஆளுகின்ற பல்வேறு மாநிலங்களில் கூட இப்படி ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை உருவாக்கப்பட்டது என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. ஆனாலும் கூட, இந்த நேரத்தில் மக்களின் முக்கிய அத்தியாவசியத் தேவைகளை மனதிலே வைத்துத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதேநேரத்தில் எந்த மாநிலத்தையும்விட, உள்ளாட்சித் துறை தேர்தல் நடைபெறாமல் பல்வேறு நாட்டு நலப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் தான் முன்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

தன்னிறைவுத் திட்டம், தேசீய கிராம வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், பாதுகாக்கப்பட்ட குழாய் கிணறுகள், பாதை சீரமைப்புத் திட்டம், ஆரம்பப்





பள்ளிக் கட்டிடங்கள், சமுதாய நலக் கட்டிடங்கள், சத்துணவுக் கூடங்கள், கசிவுநீர்க் குட்டைகள், ஆதிதிராவிட காலனிகள் போன்ற இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை எடுத்துப் பார்க்கின்றபொழுது, சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து பார்த்தாலும், இந்த ஆட்சியிலே நடைபெற்றிருப்பதைப் போன்று வேறு எந்த ஆட்சிலேயும் எந்த யுகத்திலேயும் நடைபெறவில்லை என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம்.

இங்கே ஒருவர் சொன்னார், வசதிகள் செய்யப்படவில்லை, வரிகளை மட்டும் வசூலிக்கிறார்கள் என்று. நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், ஏற்கனவே இருந்த வசதிகள் என்ன, செய்திருக்கின்ற வசதிகள் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான அறிவுப்புகளையும் இந்த அரசு கொடுத்திருக்கிறது. ஊராட்சிகளுக்கு வேண்டிய வசதிகளை நிறைய அளவில் நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே இருபது அம்சத் திட்டத்தில், நாட்டு நலப் பணிகளை நல்லமுறையில் செய்திருக்கிறோம் என்ற நல்ல பெயரையும் இந்த அரசு எடுத்திருக்கிறது.

ஆனால், ஊராட்சி ஒன்றியம் என்று சொன்னால் அதிலே பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. பொறியாளர்கள் அதிலே இருக்கிறார்கள், விவசாயம் அதிலே இருக்கிறது, இன்னும் இன்ன பிற பல்வேறு அயிட்டங்கள் அதில் இருக்கின்றன. ஆனால் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இதையெல்லாம் ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை இங்கே, ஆனால் அதிகாரம் அங்கே என்ற நிலை இருக்கின்ற காரணத்தால், பொறியாளர்களை வேலை வாங்குவது ஓரிடத்திலேயும், அவர்களைக் கேட்கின்ற அதிகாரம் வேறொரு இடத்திலேயும் இருக்கிறது. இதனால் வேலைகளில் தொய்வுகள் ஏற்படுவதற்கு இதுவொரு காரணமாக அமைந்து விடுகிறது. ஆகவே, இந்த ஒன்றியப் பொறியாளர்களையும் ஆணையாளரையும் ஒருங்கிணைக்க வேண்டியதற்கான வழி

வகைகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்குத் தேவையான இலவச விதை, கருவி, உரம், மானிய விலையில் உதவி, கடன், ஆடு வாங்கக் கடன், மானியம், மாடு வாங்கக் கடன், மானியம், வண்டி வாங்கக் கடன், மானியம் என்று இப்படிப் பல்வேறு கிராமப் பொருளாதார அபிவிருத்திக்கான வேலைகளையும் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இப்படிப் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய நிலையில்கூட அந்த விவசாய அலுவலகமாவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உட்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை. இருந்தாலும்கூட, பட்டவர்த்தனமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒன்றிய நிர்வாகம் ஒன்றிக் கிடக்காமல் பிரிந்து கிடப்பதால் விரிந்து போய் விட்டது என்ற சூழ்நிலையை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடங்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் பற்றி நான்கண்டுக்கால அனுபவம் என்ன? ஆசிரியர்களைத் தேசிய மயமாக்கிவிட்டோம், அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டோம். ஆனால், கட்டிடம் கட்டுவது, பழுது பார்ப்பது, சத்துணவு கொடுப்பது, தண்ணீர் கொடுப்பது யார்? அவர்களுக்குச் சம்பளம், கடன், விடுமுறை மற்றும் பலவும் கொடுப்பது ஒன்றியத்தில். ஆனால் அவர்களை அதிகாரம் செய்வது வேறொரு இடத்தில் என்றால் நிலைமை எப்படியிருக்கும்? எனவே இந்த நிலைமையை மாற்றியமைத்து, அங்கேயிருக்கின்ற பணியாளர்களை வேலை வாங்கக் கூடிய அதிகாரம் அந்த ஒன்றியத்திற்கு இருக்க வேண்டும். அந்த சேர்மனுக்கு இருக்க வேண்டும் என்ற வகையில் செய்ய வேண்டும். நாட்டு மக்கள் எதிர் பார்க்கக் கூடியது அதுவாகத்தான் இருக்கிறது. எந்தக் காலத்திலேயும் பள்ளிகளைச் சென்று பார்த்து, நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பற்றி ஒன்றியப் பெருந்தலைவர்கள் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரத்தை அவர்கள் பெற்றால் அந்த நிர்வாகம் மேலும் தூய்மையாக இருக்கும் என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



(பிற்பகல் 1-00.)

அடுத்ததாக, நகராட்சி என்று வருகிறபொழுது அது நஷ்ட ஆட்சி என்ற வகையிலேதான் இன்றையதினம் இருக்கிறது. பல்வேறு நகரங்களைப் பார்க்கிறபொழுது, நகராட்சிகளின் அந்தஸ்தை உயர்த்திய காரணத்தால் பல்வேறு ஆதாயத்தை அது இழந்திருக்கிறது; மத்திய அரசின் உதவி, மாநில அரசின் உதவி பல்வேறு வகையிலே இல்லாமல் போய் விட்டது. நிர்வாகச் செலவு இலட்சக்கணக்கில் ஆகிறது. கடைசியில் கணக்கு எடுத்துப் பார்த்தால் அங்கே பாதை, போக்குவரத்து, பேருந்து நிலையம், குடிநீர், மின்சாரம், கழிவு நீர் அகற்றல், சுகாதாரம் இன்னும் பல அத்தியாவசியப் பணிகளிலே அவர்கள் ஈடுபட்டாலுங்கூட நிலைமையைக் கடைசியாகப் பார்க்கிறபொழுது நிர்வாகச் செலவு, "வரவு எட்டணா, செலவு பத்தணா, அதிகம் இரண்டனா, கடைசியில் துந்தனா" இதுதான் நகராட்சி ஆட்சி என்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை மனதிலே வைத்து, அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்கக்கூடிய முறையிலே முன் வர வேண்டும்.

அது மட்டுமல்ல, பஞ்சாயத்து என்று சொன்னால் நகராட்சி என்ற பெயர் இல்லாவிட்டால் போகிறது; அது மேஜர் பஞ்சாயத்து, மைனர் பஞ்சாயத்து என்று எல்லாம் சொல்லி, மத்திய, மாநில அரசு உதவிகள் அதற்குக் கிடைக்கக்கூடிய வகையிலே கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுவரையில் அகில இந்தியாவிலும் யாரும் செய்ய முடியாத ஒரு சாதனையாக, வணக்கத்திற்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர், ஒரு மாநிலத்திலே இருக்கிற தலைநகருக்கு, கார்ப்பரேஷன் என்று சொல்லக்கூடிய ஒரு கார்ப்பரேஷனுக்கு ஒரு கமிட்டி போட்டு, அதற்குத் தானே தலைமை ஏற்றிருக்கிறார். இங்கே காலையில் கூட ஒரு பிரச்னை வந்தது. இப்படிப்பட்ட பிரச்னைகளை எல்லாம் சந்திப்பதற்கு, அது மக்களுக்கு உதவியாக இருக்கும். இங்கே, சென்னை மாநகராட்சியிலே ஒரு குழு அமைத்து, சீர் அமைப்பதற்காக; நல்ல திட்டங்களை உருவாக்குவதற்காக, இருக்கிற குற்றங்களை அகற்றுவதற்காக, நியாயங்களை எடுத்து

சொல்லுவதற்காக, வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்காக, மிக அருமையான திட்டத்தைப் போட்டு, அந்தத் திட்டத்தி னுடைய தலைமைப் பொறுப்பை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, அந்தத் துறையினுடைய — உள்ளாட்சித் துறை — அமைச்சர் துணைத் தலைவராக இருக்கிறார் என்ற செய்தியை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் தவிர வேறு எங்கும் இல்லை. அது மட்டுமல்ல, நான் உலகிலே கூட பல்வேறு நாடு களுடைய கருத்துக்களை, எண்ணங்களை, அரசியல் வரலாறு களை சுற்றிப் பார்க்கின்றபொழுது, படித்துப் பார்க்கின்ற பொழுது கூட அப்படி ஒரு கருத்து ஏற்பட்டதாகவே தெரிய வில்லை. ஆனால், போட்டிருக்கிற காரணத்தைப் பார்க்கும் போது பலர் சொன்னார்கள், எப்பொழுதும் இந்த ஆட்சி கிராமத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறது, நகரத்தை மறந்து விட்டது என்று. அப்படிப்பட்டவர்களுக்கு பஞ்ச பாண்டவர் களிடம் கிருஷ்ணன் சொல்லியதைப் போல, நான் உங்களோடு இருக்கிறேன், என்னுடைய படை அங்கே இருக்கிறது என்று சொல்லியதைப் போல, இன்றையதினம் எத்தனை இலாக்காக்கள், எத்தனை நபர்கள், யார், யார், எங்கே இருந்தாலும், புரட்சித் தலைவரே தலைமையேற்று இந்த சென்னை மாநகராட்சியைச் சீர்படுத்தக்கூடிய வகையிலே, நல்லமுறையிலே அதற்குத் தலைமை யேற்று, அதை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில், ஏற்படுத்தி யிருப்பது, உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்று. இது வரலாற்றிலே ஒரு புதுமையான திருப்பு முனை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பல கிராமங்களில் பார்க்கின்ற பொழுது, ஏரி இருக்கிறது, அதனை ஒட்டி ஆறு இருக்கிறது. ஆனால் வழியிலே கால்வாய் இல்லை. குடி மராமத்து மன்னர் காலத்திலே இருந்தது. மக்களாட்சி ஏற்பட்ட பிறகு குடி மராமத்து அற்றுப் போய் விட்டது. குடி மராமத்து அற்றுப் போய் விட்ட காரணத்தால் தண்ணீர் எங்கோ போகிறது, ஏரி எங்கோ இருக்கிறது: கால் வாயே இல்லாமல் போய்விட்ட காரணத்தால் அங்கே சிறிய நீர்ப்பாசனங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிநீர்க் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஓரளவுக்கு அதை மட்டும் நிவர்த்தி செய்தால், இந்த நாட்டிலே 30 சதவீதத்திற்கு மேலாக அந்தப் பிரச்னைக்கு முடிவு கிட்டிவிடும் என்பது என்னுடைய



தாழ்மையான அபிப்பிராயம் ஆகும். ஆகவே, அதை அரசாங்கம் மறு பரிசிலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, ஒரு கிராமம் என்று சொன்னால், அதை ஒட்டிய நகரம் என்று சொன்னால், அதை ஒட்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. காவேரிப்பட்டனம் பேரூராட்சி என்று சொன் னால், காவேரிப்பட்டனத்திற்குப் பக்கத்திலே கிராமங்கள் இருக் கின்றன. இங்கே இருக்கக்கூடிய எல்லா வசதிகளும் வாய்ப்பு களும் அவர்கள் பெற்றுக் கொண்டால்கூட, எக்ஸ்டென்ஷன் ஏரியா என்று வேறு ஒரு பஞ்சாயத்து என்று சொல்லி இருக் கிறார்கள். அதனால், அந்தப் பஞ்சாயத்தில் செய்யக்கூடிய பல்வேறு வேலைகளுக்கு அவர்களுடைய உழைப்புக்கேற்ற நிலை யில்லாமல் போய் விடுகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் பேரூராட்சியாக இணைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது காரமங்கலம், மாஸ்தார் என்ற இரண்டு புதிய ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை நாங்கள் வரவேற்கிறோம். இப்படி பல்வேறு ஒன்றியங்களை ஏற்படுத்த ஏற்கனவே கோரிக்கையினை வைத்திருக்கிறோம். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்னையை மிகப் பெரிய அளவிலே தீர்த்து வைத்திருக்கிறோம். இன்னும் இராயப்பேட்டை, நாகரசம்பட்டி, பாரூர் போன்ற பதிகளிலே குடிநீர்த் திட்டங்கள் நீண்ட நெடு நாட்களாகத் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, மிகத் தேவையான, அத்தியாவசிய சட்டங்களை, திட்டங்களை இணைத்துக் கொண்டு வந்திருக்கிற இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, அமர்கிறேன்.

*Thiru T. VENKATA REDDY: Hon. Deputy Speaker, Sir, on behalf of the Indian National Congress Party, I would like to make some observations on Demand No. 28—Community Development Projects and Municipal Administration. This is a very important Demand for the entire administration. This is a pivot, every Department knows, in the administration. If this Department successfully

implement the Schemes, as enunciated in the Policy Notes, I am sure, soon we will have 'Ramraj' in our State. But if you see the actual working of this Department, I am sorry to say that there are so many lacunae and also mal-practices in the implementation of various schemes by this department. The first and foremost is the tardy way in which the officials implement various schemes. After the advent of Panchayat Raj, the work was entrusted to the Panchayat Unions. But Panchayat elections were not held, the Commissioners were inducted in office and they were entrusted with powers for the implementation of all the schemes. The work done by the officials had deteriorated. Many of the departmental works which are supposed to be under the control of the Commissioners have been diverted to so many other wings. Actually the administrative control over these things is with somebody else. Previously, if a person approached the Commissioner, he can approach him with the intention that his problems will be looked into by the Commissioner; but now when he approaches the Commisioner, he says he is helpless. I am sure the Hon. Minister who is an expert in this department and in the administration will rectify these defects. Unless these defects are rectified and the Commissioner is not placed at the mercy of other Departments, the administration will not be perfect and will not improve. Further the common man will not get his grievances redressed. That is one of the foremost things which the Hon. Minister should look into. For instance, the Elementary Schools administration is removed from the control of the Commissioners Now the teachers do not come to the school and there is no proper check over them. They have taken law into their own hands and have become masters. Our Hon. Chief Minister and also our Leader late Kamaraj have visualised and dreamt that the rural folk, who are the illiterates, must become educated and literacy should spread all over the State. Unfortunately, the basic need of giving proper education is not there. Even a 5th class student does not know the alphabets A,B,C,D or அ or ஆ in Tamil and they are not able to read even the small papers. That is the condition that is prevailing. The lack of control in the administration of schools is conspious. It is not only prevalent in the School Administration, but also in the Agriculture Department. The same fate as in School administration, is existing in Agriculture Department also. The position is same in Irrigation Department. TWAD and Rural Water Supply Department. There are many complaints by villagers about the inadequate supply of drinking water. The M.L.As. are not able to meet the problems of the villagers. Whenever we go to villages, this is a common problem for all. Though





there are pumpsets provided, they are not promptly and properly repaired and put to use. They have been remaining unattended to. Whenever we approach the Collector or the Commissioner of the Municipality concerned, they direct us to contact the TWAD Board, who in turn ask us to approach some other Department. Therefore, I request the hon. Minister to see that these things are remedied without any loss of time. Otherwise, the amount spent on such schemes will go waste.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Another thing is this. The Commissioners very often go for attending the peroidical meetings held at the district headquarters. In a week for two or three days, the Commissioners go to Dharamapuri for attending meetings and for one day he will go to his village nearby. On Saturday, he will go to some other place. With the introduction of 'five-day week' working, he will be actually available in his office only for two days and during this period he will not be able to do anything. That is the unfortunate thing happening in Commissioner's Office. He will not attend to rural work or village work. This is the unfortunate thing happening in each district. This is an important thing which the Hon. Minister has to rectify, so that the Government will earn good name.

(பிற்பகல் 1-10)

Another aspect I want to stress is about the Irrigation Department, particularly with regard to Minor Irrigation. No register is maintained for Minor Irrigation Schemes. In olden days, during the Congress regime and also during the previous regime, every office used to maintain a 'Minor Irrigation Register'. Now if you ask a Minor Irrigation Register in the Commissioner's office, they say they are not maintained. That is the state of affairs existing. This is one of the foremost and important registers which the Commissioner has to maintain. In most of the offices, such a Register is missing. If we ask them how many minor irrigation tanks are there in his area or locality, they are not able to give such information because they do not know which tank is there in their area, what is the percentage of water available, and with the available water how many crops could be raised. Whether the water would be available for three months or four months, is not known. Unless the register is brought upto-date, it would be difficult for the Government to know which are the tanks to be repaired or desilted, which are the tanks that need improvement. For these things, the register has to be brought upto-date. Unless the capacity of the tank is known, it is

difficult for Engineer to know whether the tank has been repaired properly or not. The repairing work is entrusted normally to a contractor. Though the tanks are repaired by a contractor, the breaches take place every year. He will repair it in such a way that he would get the work contract every year. This is the state of affairs. The Engineer, contractor and the Commissioner join together. They do not repair the tanks properly. They do the work for the sake of sharing money and try to have the job continuously. We are spending lakhs and lakhs of rupees for repairing and maintaining a number of minor irrigation tanks every year. If the Hon. Minister goes through the records, he will know that each tank is repaired 5 times or 10 times. In this work, the Engineer, the Commissioner and the contractor will act as one unit. They are not interested in repairing the tank and they are interested in improving themselves. This is the thing which the Hon. Minister and the Government have to watch carefully. Otherwise, the people will not get the benefit and whatever amount we spend on these schemes will not go to benefit the people.

The other thing is about the rural roads. Most of the rural roads in villages are not repaired properly. There are some roads which are not maintained or repaired for the last two or three years. These roads are not motarable. It is also difficult for the villagers to walk on such roads. They are not maintained properly by the officials. There are many good officials. I do not say all the officials are corrupt or inefficient. The honest and efficient officers should be encouraged just as Police Officers who are honoured on Republic Day and Independence Day, so that the erring officers will emulate them, and rectify themselves and will do good to the society. I request the Hon. Minister to give encouragement to efficient and honest officers. That is one of the foremost things which the Hon'ble Minister atleast should do.

With regard to Town Administration I want to say something. There are of course many towns which have grown to two, three folds. But on the Administration side the administrative machinery, i.e., the staff and menials remain the same from 1967 onwards.

I quote one instant case. My Constituency Hosur had a population of 10,000 in 1967 which has grown 4 times now. The present population is about 40,000. But the staff and the menials remain the same. When the staff is so low in number how can you expect any sanitation facility. How can you expect any improvement in sanitary condition. We are criticising the Executive Officers and other officers for not giving proper amentities to the citizen but at the same time we also have to think about their deficiencies and difficulties. Therefore we have been requesting the Hon. Minister and also the Secretaries for the past four years to increase the staff. But unfortunately this aspect has not been looked into for the past so many years. When you entrust some work to some persons and expect them to do it a good manner you must also give them necessary tools. If you do not give them the necessary tools you cannot expect them to work well. Therefore I request the Hon'ble Minister to provide the necessary tools to the workers. Otherwise there will be deficiencies in their work. If we point out fore all their difficulties should be redressed. More staff should be sanctioned and necessary tools should be provided.



I request the Hon'ble Minister to make Hosur as a Township. It is a town where industries are developing vastly. It has become unwieldy and the Town Panchayat is not able to administer it. They cannot provide necessary facilities. I have already taken up the matter with the Director of Town Planning who have promised to do the needful. But nothing has been done so far. Unless it is made a Township the growing Industrial Town will not have proper facilities and proper functions of the Town Administration will not be forthcoming. Therefore I request the Hon. Minister to see that Hosur is declared soon as a 'Township'.

Another aspect with regard to Municipalities which I would like to bring to your notice is about the roads. Recently I found that roads had been laid in some Cities. But drainages had not been provided for in these roads. If you do not provide for drainages, the very purpose of laying the roads will be defeated.

Footpaths are not provided for in many roads. We are advising the people to walk on footpaths. We accuse the pedestrians who violate this rule and charge them under Traffic Rules. If we do not provide for proper footpaths how can we accuse them of violating Traffic Rules. The people must be provided with proper facilities to follow the Rules. Otherwise we will be only enforcing law against the will of the people and without commonsense. Therefore I request the Hon'ble Binister to provide for proper infrastructural facilities simultaneously while laying the roads, in order to provide for Fundamental necessities of the people. (The Chair Sounded the gong).

I would like to bring to the notice of the Hon'ble Minister for Rural Development another important matter. While implementing the Rural Development Schemes, Engineering Graduates and other Graduates are included in the list of beneficiaries. In many places where these schemes are implemented, Graduates—leave alone Engineering Graduates—are not available. Many people who are qualified upto S.S.L.C. are available. They can also be entrusted with the works implemented under Rural Development Programme along with B.E. graduates, Science Graduates, and other graduates who are included in the list of persons who are entitled to be utilised in the Rural Development works, the S.S.L.C. holders should also be made entitled to do the works relating to Rural Development. In many villages we do not find enough graduates and in some places we do not have graduates at all. Therefore I once again request the Hon. Minister to make the S.S.L.C. passed and failed candidates also eligible to participate in the works relating to Rural Development and enjoyo the benefits just like the Graduates.

'With these words I conclude my speech Thank you.

(பிற்பகல் 1-20)

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** தலைவரவர்களே, ஒரு இளாரிஃபிகேஷன். இந்தக் கோரிக்கை எண் 28 குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 55-ல் புட்டுத்தோப்பையும் தத்தனேரியையும் (மதுரை மாவட்டத்தில்) இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 50 இலட்சம் செலவில் பாலம் கட்டும் வேலை நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட உள்ளது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 10-ந் தேதி அன்று என்னுடைய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதே புட்டுத்தோப்பையும் தத்தனேரியையும் இணைக்கும் பாலத்தைக் கட்ட மாநகராட்சி 150 இலட்சம் கட்டினால் நெடுஞ்சாலைத் துறை அந்தப் பணியை ஏற்கும் என்று தெரிவித்தார்கள். அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது. இந்தக் குழப்பத்தை நீக்கி, அரசு எப்படி நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை தன்னுடைய பதில் உரையிலே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கைமீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்காக நான் அரசின் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு தேர்தல் வருமா என்ற சந்தேகம் இன்னும் இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன், வருத்தப்படுகிறேன். நிச்சயமாகத் தேர்தல் வரும், நிச்சயமாக குறித்த தேதியில் தேர்தல் நடைபெறும் என்பதை மட்டும் தொடக்கத்திலே நான் உறுதிமொழியாகத்தர விரும்புகிறேன். நீதிமன்றங்கள் தடை விதித்தாலும் தேர்தல் நடக்குமா என்று கேட்டால், நீதி மன்றம் தடை விதித்தால் நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டும். ஆனாலும் கூட நீதிமன்றங்கள் தடை விதிப்பதற்கு இதில் சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் நம்புகிற காரணத்தால் தேர்தல் நிச்சயம் நடைபெறும் என்று உறுதி கூறுகிறேன்.

1971 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றபோது எந்த முறையில் தேர்தலை நடத்தினார்களோ அதேமுறையில் இப்போது தேர்தலை நடத்த முடிவு செய்திருப்பதால் தடை விதிக்க நியாயம் இருக்க முடியாது என்ற அடிப்படையில் கூறுகிறேன். எனவே, தேர்தலைப் பற்றிய சந்தேகத்திற்கு விளக்கம் தந்துவிட்டேன் என்று கருதுகிறேன்.

இங்கே பேசியவர்கள் கிராமப்புறங்கள் வளர்ச்சியடைய வேண்டும்; கிராமப்புறத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்; மானியங்கள் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்று சொல்லி, அதிலே இருக்கிற குறைகளைச் சொல்லி, இந்தக் குறைகளை எல்லாம் களைய வேண்டும் என்று சொன்னார்கள்.

முதலிலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இங்கே நிறைவேற்றப்படுகின்ற ஊரக வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி, ஆர்.எல்.இ.ஜி.பி.யாக இருந்தாலும் சரி, ஐ.ஆர்.டி.பி.யாக இருந்தாலும் சரி, இவை எல்லாம் மத்திய அரசு கொடுப்பதுதானே, ஆனால் ஏதோ மாநில அரசு இதை எல்லாம் செய்வது

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன் 12

போன்ற உணர்வை ஏற்படுத்துகிறீர்களே என்று வருத்தப்பட்டார்கள். இதை எல்லாம் மாநில அரசுதான் செய்கிறது என்று நாங்கள் விளம்பரம் செய்யவில்லை. இருந்தாலும் உண்மையைச் சொல்வது என்னுடைய கடமையாக இருக்கிறது.

ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திற்கு மட்டும்தான் மத்திய அரசு முழு மானியத் தொகையைக் கொடுக்கின்றது. ஐ.ஆர்.டி.பி.யாக இருந்தாலும் அல்லது ஊரக வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் மத்திய அரசு பாதி, நாம் பாதி என்றுதான் போடுகிறோமே தவிர முழுவதுமாக மத்திய அரசு கொடுப்பது கிடையாது. அதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். சென்ற ஆண்டு ஒதுக்கியதை விட இந்த ஆண்டு மிகவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகின்ற நிதித்தொகை குறைந்துவிட்டது என்பதை நான் துவக்கத்திலேயே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காகச் சென்ற ஆண்டு அதாவது 1984-85-ல் ஒதுக்கப்பட்டது 31 கோடியாகும். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பது 26 கோடி ரூபாய்தான். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1984-85-க்கு ஒதுக்கப்பட்ட தொகை 51 கோடியாகும். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 41 கோடியாகும். அதேபோல் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகை 54 கோடியாகும். இந்த ஆண்டு கொடுத்திருப்பது 34.57 கோடியாகும். எனவே பல வகையிலும் மத்திய அரசின் நிதி வரவு குறைந்திருப்பதன் காரணத்தால் நாம் ஒன்றியத்திற்குக் கொடுக்கப்படுகின்ற தொகையும் இந்த ஆண்டு குறைவாகத்தான் கொடுக்கப்போகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் வந்து என்னைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது மத்திய அரசு கொடுத்திருக்கின்ற தொகை பற்றாது என்றும், அதை அதிகப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் தெரிவித்திருக்கிறேன். இன்றிரவும் கூட அவரோடு பேசுவதாக இருக்கிறேன். அப்படிப் பேசும்போது இதை வலியுறுத்தி நான் சொல்ல



13640 ... 600 008.

1985 ஜூன் 12] [திரு. ப. உ. சண்முகம்]

இருக்கிறேன் என்பதைத் துவக்கத்திலேயே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் காய்கறி விநியோகம் செய்கின்ற வேலைகளுக்கெல்லாம் முழுக்க, முழுக்க உங்கள் கட்சிக்காரர்களையே போடுகிறீர்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப் போட்டிருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி தவறு நடந்திருந்தால் ஒருவேளை திரு. தங்கமணி போன்றவர்கள் சொல்லியிருந்து யாராவது போடாமல் விட்டிருந்தால் நான் அதற்காக வருந்துகிறேன். அப்படி ஏதாவது தகவல் தெரிவித்தால் அதைப்பற்றி கவனிக்கலாம் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் விளக்குகள், தெரு விளக்குகள் எரியவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள். திரு. அ. செல்வராசன் அவர்கள் கூட அதுபற்றிக் குறிப்பிட்டு மாநகராட்சி பற்றியெல்லாம் நீண்ட நேரம் பேசினார்கள். ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். தெருவிளக்குகளில் இனிமேல் பல்புகள் பொருத்துவது பற்றி. இதுவரையில் மின்சாரத் துறைதான் அந்தப் பல்புகளை வாங்கிப்போடுகின்ற வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். இனி அதை மாற்றியமைத்து விடலாம், அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திடம் அதை ஒப்படைத்து விடலாம் என்று முடிவெடுத்து விரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படும். மின்சாரத்துறையில் இருக்கின்ற ஊழியர்களைக் கொண்டே இந்த பல்புகளை எல்லாம் பொருத்திவிட்டு அதற்கான ஊதியத்தை மாதாமாதம் கொடுத்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே விளக்கு எரியவில்லை என்ற குறை இனி இருக்காது. அது போக்கப்படும்.

ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்க வேண்டும் என்றால் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து முடிவெடுத்திருக்கின்றது. இனிமேல் யாரும் கடன்

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன் 12

வாங்குவதற்காக கிராம நல அலுவலர்களிடத்திலிருந்து சொரிசு வாங்கவேண்டும் என்ற முறையை அரசாங்கம் எடுத்துவிட்டது. ஒவ்வொரு ஒன்றியத்தின் அளவிலும் ஒவ்வொரு குழு அமைத்து அந்தக் குழுவினிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறோம். அது இனிமேல் ஊர் நல அலுவலர்களிடத்திலே இருக்காது.

என்.ஆர்.இ.பி. திட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரையில் ஊர்நல அலுவலர்கள்தான் அவற்றைச் செய்து கொண்டு வந்தார்கள். இனி அது தேவையில்லை என்று சொல்லி அந்த கிராமத்தில் நடக்கவேண்டிய வேலைகளைப் பொறுத்தவரையில் அந்த கிராமத்தில் படித்த பட்டதாரிகள் இருந்தால் அவர்களிடத்திலும், அந்த வேலைகளைச் செய்ய முன் வருகின்ற ஆயக்கட்டுதாரர்களிடத்திலும் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அப்படி பட்டதாரிகள் இல்லை என்றால் என்ன செய்வது என்று திரு. வெங்கடரெட்டி அவர்கள் கேட்டார்கள். அப்படி இல்லை என்றால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களிடம் கொடுப்பதுபற்றி அப்படி பட்ட உத்தரவு இல்லை. அந்தமாதிரி பட்டதாரிகளும் இல்லை என்றால் ஆயக்கட்டுதாரர்களும் முன்வரவில்லை என்றால் அதுபற்றிப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்களைப் பறித்துவிட்டார்கள் என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்களை எடுத்துவிட வேண்டும் என்பது அரசினுடைய நோக்கமல்ல.

(பிற்பகல் 1-30)

ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் அரசாங்க ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று நெடுநாளைய கோரிக்கை இருந்தது. அந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அரசாங்க ஊழியர்களாக அறிவித்தார்கள். அதன்படி அவர்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. 4 ஆண்டு காலத்திற்குப் பிறகு இப்போது எல்லோரும் சில குறைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அரசு அவைகளைப் பரிசீலிக்கும் என்ற உத்திரவாதத்தைக் கொடுக்கிறேன். ஆனால் அதற்காக அரசு, அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவித்ததிலிருந்து



1985 ஜூன் 12] [திரு. ப. உ. சண்முகம்]

பின் வாங்குவதாக கருதத் தேவையில்லை என்பதையும் அந்த ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் . . . . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆகவே அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற முறையிலும், அதே நேரத்தில் நீங்கள் சொல்லிய குறைகளை யெல்லாம் களையப்படுகின்ற முறையிலும் ஒரு வழி வகை காணுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு பரிசீலிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களுக்கு இந்த வகையில் இருக்கும் பல சிக்கல்களில் பெரிய சிக்கலாக இருப்பது, சர்வீஸ் கண்டிஷனிலே சீனியாரிட்டி பிக்ஸ் செய்வது. ஒரு யூனியன் என்று வைத்துக் கொண்டால், அந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த மட்டில்தான் அவர்களுடைய சீனியாரிட்டி இப்போது வைக்கப் பட்டிருக்கிறது. அவர்களை மாநிலம் முழுவதற்கும் சேர்த்துக் கொண்டு போய் சீனியாரிட்டி பிக்ஸ் செய்வது என்று சொன்னால், அதிலே பல சிக்கல்கள் ஏற்படும். மாவட்ட ரீதியாகக் கூட அதை வைக்க முடியாது. நிச்சயமாக நடக்காது. எனவே அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆலோசனை செய்து, இருக்கின்ற குறைகளை எப்படி தவிர்ப்பது என்று அரசு முடிவு எடுத்து அரசு ஆணைப் பிறப்பிக்கும், விரைவிலே, என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்பு இருந்த அதிகாரங்களை மீண்டும் அங்கே கொண்டு வருவதற்கு என்னென்ன வழி முறைகளைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதற்கும் அரசு பரிசீலனை செய்யும் என்று உறுதி அளிக்கிறேன்.

அதேபோல பொறியாளர்களைப் பற்றி ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற பொறியாளர்களைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அங்கே பணிபுரிகின்ற பொறியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கூட சட்டப்படி கட்டுப்பட்டவர் அல்ல என்றுதான் விதி தற்போது இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற மரியாதையின் அடிப்படையில் அவர்கள் கேட்பதற்கு கட்டுப்பட்டு பொறியாளர்கள்,

செய்யலாமே தவிர சட்டப்படி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கூட கட்டுப்பட்டவர் அல்லர். ஆனால் அதைக் கொஞ்சம் மாற்றி அமைக்கலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அளவிலாவது அவர்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய வேலைகளை அவர்கள் சொன்னால், கட்டுப்பட்டுச் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று அரசு கருதி, அதிலே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு, மாற்றி திருத்தி விதிகளை அமைப்பதற்கு, அரசு பரிசிலித்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல விவசாயத் துறையினாலும் கூட தரப்படுகிற சில சலுகைகள், இலவசமாக விதைகள், பூச்சி மருந்துகள் போன்றவற்றை வழங்கும்போது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதற்கான அதிகாரங்கள் இருக்க வேண்டும், அப்படி இருந்தால்தான் நல்லது. கிராமங்களில் அந்தப் பணிகள் ஒழுங்காக நடக்கும் என்று கருதி, நிச்சியமாக ஊராட்சிகளின் அதிகாரங்களைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல பல பேரூராட்சிகளைப் பற்றியும் இங்கே தெரிவித்தார்கள். பேரூராட்சிகள் பற்றி மட்டும் அல்ல, நகராட்சிகளிலே கூட, சில இடங்களில் நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால், ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலைமைகள் இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இதைப்பற்றி பேசும்போது மிக வேகமாகக் கேட்டார்கள். மக்கள் தொகை பெருகுகிறபோது வரிகளும் பெருகிறது அல்லவா? என்றார். மக்கள் தொகை பெருக்கத்திற்கும் வரி பெருக்கத்திற்கும் சம்பந்தமே இல்லை. நாம் மக்களுக்கு வரி போடுவது கிடையாது, வீட்டுக்குத்தான் வரி போடுகிறோம். அதிகமாக வீடுகள் வந்தால்தான் அதிகமாக வரி வருமானம் வரும். . . (குறுக்கீடு)

**திரு. கு. சுப்பராயன்**: மக்கள் மீது வரி போடுவதாகச் சொல்லவில்லை. மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்கிறார்கள். அந்தத் தொழில்களுக்கு வரி போடுகிறீர்கள், வீடுகளை அதிகமாகக் கட்டுகிறார்கள், அதற்கு வரி போடுகிறீர்கள், அதனால் வருமானம் வருகிறது என்றுதான் சுட்டிக் காட்டினேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மக்கள் செய்கிற தொழில்களுக்கு எல்லாம் வரி போடுவதில்லை. அதிக லாபம் கிடைக்கின்ற தொழில்களுக்கு மட்டும் தான் லாபத்தின் மீது தொழில் வரி போடுகிறோம்.

அவர்கள் வேறு ஒன்றையும் பற்றிச் சொன்னார்கள். அங்கீகரிக்கப்படாத மனைகள் பற்றி பேசினார்கள். அன்-ஆத்தரைஸ்டு மனைகள் பற்றி எல்லாம் தெரிவித்தார்கள். அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. விரிவாகச் சொல்லப் போனால், மனைகளுக்கு பொறுப்பு ஏற்று வருகின்றவர்கள் மாநகராட்சிக்கு கட்ட வேண்டிய இம்ப்ருவ்மெண்ட் சார்ஜஸ் மற்றும் பெட்டர்மென்ட் லெவி போன்றவற்றை கட்டுவதே இல்லை. அது மாநகராட்சி என்று இல்லை, நகராட்சியாகவோ ஊராட்சியாகவோ இருந்தாலும் சரி அவர்கள் கட்டுவதே இல்லை. கட்டாமல் போய்விடுகிறார்கள். அதைக் கட்டாமல் தவிர்ப்பதில் அதிகாரிகளுக்கு பொறுப்பு இல்லையா என்று கேட்கலாம். அதிகாரிகளுக்கும் பொறுப்பு உண்டு. இல்லை என்று நான் சொல்லவில்லை. கட்டப்போகும்போது தடுத்திருக்கலாம். தடுத்திருக்க முடியும். ஆனால் அப்படி கட்டாமல் இருந்த நிலையை விட இப்போது வேறு சம்பவம் அதிகமாக நடக்கிறது. கட்ட வேண்டாம் என்று தடுத்தாலும் கட்டுகிறார்கள். தடுத்தும் கூட கட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். எப்படி அதை நிறுத்துவது என்று புரியவில்லை. அன்-ஆத்தரைஸ்டு இடமாக இருப்பதால் தடுத்தாலும் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி ஒரு நிலை இருக்கிறது. அதற்காக சட்டத்தைக் கூட திருத்தலாமா என்று யோசனை செய்துக் கொண்டிருக்கிறோம். அப்படி மாநகராட்சியினுடைய உரிமையைப் பெறாமல் கட்டப்படுகின்ற கட்டிடங்களை தடுத்து நிறுத்துவதற்கு சட்டத்திலே அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இருந்து தீரவேண்டும். இல்லை என்றால் கட்டிடத்தைக் கட்டி முடித்ததற்குப் பிறகு, நாம் நோட்டீஸ் கொடுத்தோம் என்றால் அதற்காக மனு போடுகிறார்கள். பிறகு அரசுக்கும் எக்சம்சனுக்காக எழுதுகிறார்கள். இங்கேயும் கிடைக்கவில்லை என்றால், நீதிமன்றம் போகிறார்கள். . இதனால் பல சிக்கல்கள் எழுகின்றன. இதனால் காலதாமதம் ஆகிறது.

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன் 12

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு உறுப்பினர் என்று பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறதே தவிர, வேறு எதுவும் இதிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

மேலும் மற்ற உறுப்பினர் பேசும்போது அன்னை சத்தியா நகர் பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தற்காலிகமாக பொதுப்பணித் துறை இடத்தில் குடிசை போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள். அது அவர்களுடைய சொந்தமான இடம் அல்ல. அந்த இடம் பொதுப்பணித் துறைக்கு வேண்டும் என்று சொன்னால் அதை அவர்கள் காலி செய்து கொடுக்க வேண்டியது தான். ஆகவே அதைப்பற்றி கேட்பது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னையில் நிறைய குடிசைகளைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னால் அப்புறப்படுத்தித் தான் ஆக வேண்டும். சென்னை நகரை தூய்மைப்படுத்த வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டு குடிசைகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. எங்கு பார்த்தாலும் குடிசைகள் இருந்தால் எப்படி சென்னையை தூய்மைப்படுத்த முடியும். கூவத்தின் கரையில் நிறைய குடிசைகளை போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். கூவத்தை சுத்தம் செய்ய முடிவு எடுத்து இருக்கிறோம். அப்படியானால் கூவத்தின் கரையில் உள்ள குடிசைகளை காலி செய்து தான் தீரவேண்டும். வேறு வழியில்லை. குடிசைவாசிகளை வெளியேற்றிவிட்டது எம்.ஜி.ஆர். ஆட்சி என்று சொல்லக்கூடாது. சென்னையை சுத்தப்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தபோது குடிசை வாசிகளை வெளியேற்றித் தான் ஆகவேண்டும். அதற்காக ஆட்சியை குறை சொல்லி பயன் இல்லை. குடிசைவாசிகளை வெளியேற்று வதற்கான நோக்கமே சென்னையை சுத்தப்படுத்த வேண்டும் என்பது தான். பலபேருக்கு நன்மை என்று பார்க்கிற போது சில பேர்கள் கஷ்டத்தை தாங்கிக்கொண்டு தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



1985 ஜூன் 12] [திரு. ப. உ. சண்முகம்]

சென்னையில் இருக்கின்ற பலயிடங்களில் கழிப்பிடங்களுக்குத் தண்ணீர் வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. கழிப்பிடங் களுக்கு எங்கு எங்கு தண்ணீர் வசதி இல்லையோ அதைப் போக்குவதற்கு பெரிய திட்டத்தை வகுத்துக் கொண்டு இருக் கிறோம். விரைவில் அதற்கு ஏற்பாடு செய்யப்படும். அப்படி தண்ணீர் கொடுக்க முடியாத இடங்களில் அந்த கழிப்பிடங்களை அகற்றி மற்ற வசதிகளை செய்வதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன். அதேபோல் கிராமப்புறங்களில் குடியிருப்பவர்களுக்கு மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நமது முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். பெண்களுக்குத் தனியாக கழிப்பிட வசதி இல்லை. ஆகவே அதற்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதன் முதலாக தமிழ்நாட்டில் மட்டும் தான் 12 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதித்து 6 கோடி ரூபாய் செலவு செய்து உடனடியாக கட்டி முடித்து ஆகிவிட்டது. பலயிடங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அந்த இடங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் கிராமப் பகுதியில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு திட்டத்திற்குப் பணம் ஒதுக்கும்போது மத்திய அரசு சில விதிமுறைகளை வகுக்கிறது. அந்த விதிமுறைகளின் படி தான் நாம் பணம் ஒதுக்க வேண்டும். சென்ற முறை எல்லா ஒன்றியத்திற்கும் 8 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அது தவறு என்று மத்திய அரசு சொல்கிறது. மத்திய அரசு சில விதிமுறைகளை வகுத்து இருக்கிறார்கள். அந்த விதிமுறை களுக்கு உட்பட்டு சில முறைகளை கணக்கிட்டு குறைந்தபட்சம் 5 லட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கி மீதியிருக்கிற பணத்தை மத்திய அரசின் விதிமுறைகளின் படி பிரித்துக் கொடுக்கலாம் என்று, அரசு முடிவு செய்து இருக்கின்றது. இதற்கு கூட மத்திய அரசின் அனுமதியை வாங்க வேண்டும். அதை வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாகப் பெற்று விடுவோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீநீர்த்தான் அவர்கள் பேசும்போது தொகுதியில் உள்ள பல குறைகளைப்

பற்றிச் சொன்னார்கள்; முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும். கடைசியாக பேசும்போது அரசாங்க அதிகாரிகள் கோவில் கட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கட்டியிருப்பது உண்மையானால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கோயிலை அப்புறப்படுத்த தக்க நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளை எல்லாம் சென்னை மாநகராட்சி அரசுக்கு ஒப்படைத்து விடுவது என்று முடிவு செய்து விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் சொன்னார்கள். அந்த முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எடுத்துக் கொள்வதாக இருந்தால் மாநகராட்சி கொடுத்து விட தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி தீர பரிசீலித்துத்தான் முடிவு செய்யப்படும் என்றும் இப்போது ஒன்றும் செய்ய முடியாது, உறுதியளிக்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் விளையாட்டு திடல்களை விளையாட்டு வாரியத்திற்கு தருவது என்பது நிகழாத காரியம். மாநகராட்சியில் இருந்து எடுத்து இன்னொரு வாரியத்திற்கு கொடுக்க முடியாது. மாநகராட்சி நிர்வாகம் தான் அதை பராமரிப்பார்கள் என்பதை தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். குடிசைமாற்று வாரிய, வீட்டு வசதி வாரிய கட்டிடம் இவைகளைப் பராமரிக்கிற வேலைகளை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அந்தப் பணியை நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது. நமக்கு இருக்கின்ற சுமையையே பார்க்க முடியவில்லை. அந்தத் துறையையும் சேர்த்துக் கொள்வதென்பது இயலாத காரியம். வெட்டியார்களைப் பற்றிப் புகார் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி ஆணையரிடம் கலந்து பேசி நடவடிக்கைகள் எடுக்க முடிவு எடுக்கப்படும்.

மசாஜ் கிளப்பை ஒழிக்க வேண்டும் என்று கேட்டார்கள். காவல்துறை மானியம் வரும்போது அதைப்பற்றி விரிவாகப் பேசினால், அதில் என்ன செய்ய வேண்டும் என்று அரசு



அறிவிக்கும். மசாஜ் கிளப்புக்கும், மாநகராட்சிக்கும் சம்பந்தம் இல்லை. மசாஜ் கிளப்புகளுக்கு மாநகராட்சி லைசென்சுகள் வழங்குவது கிடையாது.

சென்னை நகரத்தில் எங்கு பார்த்தாலும், மோட்டார் ஒர்க்ஷாப் வைத்து இருக்கிறார்கள். அவை டி ஆண்டு ஓ டிரேட்-இன் கீழ் வருவதில்லை. மோட்டார் ஒர்க்ஷாப் வைத்து இருப்பதானால், எங்கு பார்த்தாலும் இரவு எல்லாம் அடித்துக் கொண்டு, சத்தம் போட்டுக்கொண்டு, சத்தமாக இருக்கிற காரணத்தால், பக்கத்திலே வீடுகளிலே இருக்கிறவர்களுக்கு தூக்கம் இல்லை. தொந்தரவாக இருக்கிறது. அதை முறைப்படுத்துவதற்கு டி ஆண்டு ஓ டிரேடின் கீழ் லைசென்சு முறை கொண்டு வரலாம் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நண்பர் சுப்பராயன் அவர்கள், ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த அவைக்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், எவ்வளவு விரைவாக முடியுமோ — ஓராண்டுக் காலத்திற்குள்ளா? எவ்வளவு காலம் என்று சொல்ல முடியவில்லை—அவ்வளவு விரைவாக, ஊழியர்கள் மலத்தை தலையில் சுமக்கிற கொடுமையைக் குறைத்து, வண்டியில் வைத்து தள்ளிச் செல்கிற நிலைமையை நிச்சயமாக அரசு செய்யும் என்று உறுதி அளிக்கிறேன். அடுத்த ஆண்டு மானியக் கோரிக்கை வரும் போது, நீங்கள் பாராட்டுகின்ற வகையில், நிச்சயமாக அதைச் செய்து முடிப்பேன் என்று உறுதி அளிக்கிறேன். நம்பிக்கை என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகப் பேசிய உறுப்பினர் வெங்கடரெட்டி அவர்கள் சொன்னார்கள்—மைனர் இர்ரிகேஷனுக்கான 'ரிஜிஸ்தர்' ஒன்றும் வைத்துக்கொள்ளப்படவில்லை—என்றார்கள். தற்போது போடப்பட்டிருக்கிற ஆணையின்படி, எல்லா ஊழியர்களும், பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும், எத்தனை மைனர் இர்ரிகேஷன் டாங்க் இருக்கின்றன என்று வைக்க வேண்டும். 100 ஏக்கருக்குக் கீழ் பாசனம் உள்ள ஏரிகளை, குளங்களைப் பராமரிக்கின்ற வேலை ஊராட்சி ஒன்றியத்தின் வேலைகள் தான். அதற்காக இப்போது ரிஜிஸ்தர் மெயின்டெயின் செய்ய வேண்டும். 5 ஆண்டுக்கு ஒரு முறை அதை சைக்கிளில் விட்டு, அதற்கு செலவு செய்து, நிச்சயமாக பராமரிப்பு வேலையை

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன் 12

வழங்க வேண்டும் என்று வெகு சீக்கிரம் ஆணை பிறப்பிக்கப் படும். ரிஜிஸ்டர் மெயின்டெய்ன் செய்ய வேண்டும் என்று ஏற்கனவே ஆணை பிறப்பித்தாகிவிட்டது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஓசூர் டவுன்ஷிப் ஆக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். டவுன்ஷிப் ஆக்குவதிலே எங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லை. உறுப்பினர் வற்புறுத்து வாரானால், அதை டவுன்ஷிப் ஆக்குவதற்கு அரசு தயக்கம் காட்டாது. டவுன்ஷிப் ஆக்கினால் வேறு பிரச்சினை வந்து விடுமோ என்று நினைத்தேன். அரசுக்கு அதை டவுன்ஷிப் ஆக்குவதில் எந்த சிக்கலும் இல்லை. என்னுடைய நினைப்பு என்ன வென்று கேட்டால் ஓசூர் மொழிப் பிரச்சினைக்குரிய ஊர். தெலுங்கு பேசுகிற மக்கள் அதிகம் வாழ்கிற பகுதி. ஓசூர் பற்றி எனக்குத் தெரியும். அதனால்தான் சொல்கிறேன். தெலுங்கு பேசுகிற மக்களிலிருந்து தலைவர் ஒருவரைப் பெறும் வாய்ப்பை அவர்கள் இழந்துவிடுவார்களே என்றுதான் டவுன்ஷிப் ஆக்கக் கூடாது என்ற கருத்தைக் கொண்டிருந்தோம். உறுப்பினர் டவுன்ஷிப் ஆக்கவேண்டும் என்று கருதினால், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. டி. வெங்கடரெட்டி: இன்டஸ்ட்ரியல் ஏரியா அது. மொழிப்பிரச்சினை ஒன்றும் வராது. I am not interested in language. I only want improvement.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: I am also not interested in language. என்ன பிரச்சினை என்றால், தெலுங்கு பேசுகிற ஒருவர் தலைவராக ஆகிற ஒரே ஒரு ஊராட்சி அது. அதைக் கெடுத்து விட்டார்கள் என்று எங்கள் மீது பழி விழக் கூடாது என்றுதான் அதைச் செய்யவில்லை. டவுன்ஷிப் ஆக்க வேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக் கிறது. அப்படி ஆகும் நேரத்தில், அந்தப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(T)hiru T. Venkata Reddy: I assure that there will not be any trouble in that regard.



1985 ஜூன் 12]

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நன்றி. அரசு நிச்சயம் அதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். கல்வராயன் மலைப் பகுதி, முன்பு ஜாகிர்தார்களின் கீழ் இருந்தது. சமீபத்தில்தான் அரசின் வசம் வந்து உள்ளது. எமர்ஜென்சி காலத்தில் ஜாகிர்தார்களை அச்சுறுத்தித் திரும்பப் பெற்று, இப்போதுதான் ஊராட்சி ஒன்றியமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இதெல்லாம் முடிந்த பிறகுதான் அது ஊராட்சி ஒன்றியமாக ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக மானியத்தில் பேசிய அத்தனை உறுப்பினர் களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டவுன் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில், பல டவுன் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகளுக்கு வருமானம் குறைந்து விடுவதற்கு, செலவுக்கான தொகை பற்றாக்குறைக்குக் காரணம், ஊதியத்தைப் பெருக்கி விட்டோம், ஆனால் வரி அப்படியே இருக்கிறது. 14 ஆண்டுக் காலமாக, 1971 ஆம் ஆண்டே போடப்பட்ட வரியேதான் அப்படியே இருக்கிறது. அதில் இன்னும் மாற்றம் செய்யவில்லை. அதில் மாற்றம் செய்திருந்தால் எந்த நகராட்சியும் தன்னிறைவு பெற்றிருக்குமே தவிர இப்படிப் பற்றாக்குறைக்கு ஆளாக வேண்டி வந்திருக்காது. ஆனால் அதேநேரத்தில் அந்தப் பாரம் முழுவதும் டவுன் ஷிப்புகளின் தலையிலும், பேரூராட்சிகளின் தலையிலும் விழுந்தது. அதனால் தான் பெரும் சிக்கல் ஏற்பட்டது. ஆகவே, இப்பொழுது அரசு ஒரு கொள்கையை வகுத்து இருக்கிறது. அதன்படி 1 இலட்சம் ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ள பேரூராட்சிகள்—மொத்தம் 66 பேரூராட்சிகள் — கிராம ஊராட்சிகளாக மாற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவை எந்தெந்த ஊர் என்பதுபற்றித் தனியாகப் பட்டியல் போட்டு அரசாங்க கெசட்டில் வெளியிடப்படும். ஆகவே, இந்த மானியத்தில் பேசிய அத்தனை உறுப்பினர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்த இந்த விளக்கங்களுக்குப் பிறகு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு இந்த மானியத்திற்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் இதை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொடுத்த ஒரு பதிலுரையை நான் முழுமையாக வரவேற்கிறேன். அதிலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளி நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆரம்பப் பள்ளி நிர்வாகத்தைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களும் உள்ளாட்சித் துறையை நிர்வகித்தவர்கள், இன்னும் பல துறைகளையும் நிர்வகித்தவர்கள். ஆகவே, இன்றைக்கு ஆரம்பக் கல்வித் திட்டம் என்ற அந்த நிர்வாகம் கல்வித் துறையினிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. கல்வித் துறையிலே ஒப்படைக்கப்பட்டிருப் பதன் காரணமாக ஆரம்பக் கல்வியும், போதனா மொழியும் ரொம்பவும் சீர்கெட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாதாரணமாக, மானியத்தில் பேசிய உறுப்பினர்களுக்குத்தான் கிளாரிபிகேஷன் கேட்க வாய்ப்பு கொடுக்கப்படும். நீங்கள் கேட்டு விட்டீர்கள், முடித்து விடுங்கள்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி போன்ற கல்வி எல்லாமே கல்வி அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சி.ஈ.ஓ. விடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஆயிரக் கணக்கில் உள்ள அந்த ஆசிரியர்களை ஒரு சி.ஈ.ஓ. நிர்வகிப்பது என்பது கஷ்டமான காரியம். ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற 400 ஆசிரியர்களை நிர்வகிப்பதே சிரமமான காரியம். நான் ஊராட்சி ஒன்றியத்திலே 10, 15 ஆண்டுகள் பொறுப்பிலே இருந்து இருக்கிறேன். அன்றைக்கே அதை நிர்வகிப்பதிலே எவ்வளவோ சிரமங்கள் இருந்தன. ஆனால் இன்றைக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் களை அவர்கள் கவனிப்பதால் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 12 ஆசிரியர்கள் ஒரு ஆண்டுக் காலமாகப் பள்ளிக்கே செல்லாமல் இருந்திருக் கிறார்கள். அதுபற்றிப் புகார் செய்யப்பட்டு, தணிக்கை செய்து தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். ஆகவே, இவர்களை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஊராட்சி ஒன்றியத்தி னிடத்தில் ஒப்படைத்தால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்,





விஸ்தரிப்பு அதிகாரிகள் ஆகியவர்களின் கண்காணிப்பு இருந்தால் இன்னும் நல்ல முறையில் இருக்கும். இதை அமைச்சரவர்களும் அறிவார்கள். இதுகுறித்து ஏதாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சி சட்டங்கள் ஆரம்பத்திலேயே, ஆரம்பக் கல்வி மக்களுக்கு அளிப்பது நகராட்சி, ஊராட்சி ஒன்றியக் கடமை என்றுதான் சட்டத்திலே ஆரம்பமாகிறது. எனவே, நாம் கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கல்வியைப் பொறுத்த மட்டில், ஊராட்சிகளில் இருக்கிற ஆரம்பப் பாடசாலைகள் கல்வி இலாகாவிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அதில் இருக்கிற சிக்கல்களை நீங்கள் சொன்னீர்கள். வேறு பல உறுப்பினர்களும் சிக்கல்களைச் சொன்னார்கள். அரசும் அந்தச் சிக்கல்களை ஒத்துக்கொள்கிறது; வேறுபல சிக்கல்களும் இருக்கின்றன. ஆகவேதான் கல்வியைப் பொறுத்தமட்டில், டெக்னிக்கல் சைட், கல்வி போதனா முறையைக் கல்வி இலாகா கவனித்துக் கொள்ளட்டும்; நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியங்கள் கவனித்துக் கொள்ளலாமா என்பதைப் பற்றியும் ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பான முறை எதுவோ, அந்த முறையில், அவர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருக்கிறது; அதற்குப் பாதுகாப்பான முறை என்னவோ, அதற்கேற்றவாறு சட்டத்தைத் திருத்தி அமைப்ப தற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். எனவே நீங்கள் சொன்னதையெல்லாம் அரசு கவனத்தில் கொள்ளும் என்று நான் சொல்ல விரும்பு கிறேன்.

**திரு. அ. செல்வராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்னை சத்தியா நகர், பி.டபிள்யூ.டி-க்குச் சொந்தம் என்று சொன்னார்கள். அது எனக்குத் தெரியும். ஆனால், அந்த 3 பகுதிகளிலும் வசிப்பவர்கள் சுமார் 1,600 பேர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று. நான் தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக் கிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் பி.டபிள்யூ.டி.-யில் பணியாற்றுகிறார்கள், டெம்பரரியாக . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, காலம் அதிகமாகிவிட்ட காரணத்தால், நான் சீக்கிரம் முடிக்கலாம் என்று சுருக்கிடுகிறேன். வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிற அத்தனை பேருக்கும் ஓட்டு போடத்தான் உரிமை உண்டே தவிர, அவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கிற உரிமை ஒன்றும் கிடையாது. வீதியிலே இருக்கிற சாதாரண— பிளாட்பாரத்தில் படுத்துக் கொண்டிருக்கிறவர்களுக்குக் கூட, ஏழைகளுக்குக் கூட, வாக்காளர் பட்டியலில் இடம் உண்டு, சேர்த்து விடுகிறார்கள். எனவே, வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிற காரணத்தால், பிளாட்பாரத்தையே நாம் அடமானம் செய்து கொடுக்க முடியாது. தற்காலிகமாகக் குடியிருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி.-யைச் சேர்ந்த இடம் இருக்கிற வரையில் சரி, தேவையென்று சொன்னால் காலி செய்ய வேண்டிய கட்டாயம் வரும்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மசாஜ் கடைகள் பற்றி சொன்னார்கள். அவற்றிற்கு அனுமதி வழங்குவது, உரிமம் வழங்குவது, மாநகராட்சி. ஆகவே, அந்த உரிமம் வழங்குவதைத் தடை செய்வார்களா, ரத்து செய்வார்களா? இனிமேல் வழங்கக் கூடாது என்றுதான் சொன்னேனே தவிர, அது நமக்குச் சம்பந்தப்பட்டது, மாநகராட்சிக்குச் சம்பந்தப்பட்டது, மாநகராட்சிக்கு உட்பட்டு வழங்கப்படுகின்ற உரிமம் என்பதைத் தான் நான் நினைவுபடுத்தினேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மசாஜ் கிளப்புகளுக்கு மாநகராட்சி உரிமம் வழங்குகிறது என்று சொன்னார்கள். நான் அப்படி உரிமம் வழங்குவதைத் தவறுதலாகச் சொல்லியிருந்தால், திருத்திக் கொள்கிறேன். அப்படி உரிமம் வழங்குவதாக இருந்தால், உரிமத்தைத் தடுப்பதைப் பற்றி, தடுத்து நிறுத்துவதைப் பற்றி, அரசு நிச்சயமாக பரிசீலிக்கும்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது ஏற்பளிப்புக்கு உட்படாத மனைப்பிரிவுகளுக்கு அடிப்படையான வசதிகளைச்





செய்து தர இயலாது என்று சொன்னார்கள். ஆனால் ஏற்பளிக்கப்பட்டு பல்லாண்டுக் காலம் கடந்ததற்குப் பிறகுகூட அந்தப் பகுதியில் அடிப்படையான வசதிகள் செய்து தராததற்கு யார் காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, சென்னையை அழகுபடுத்துவது என்கிற பெயரால் குடிசைகளை அப்புறப்படுத்துகிறபொழுது, அப்புறப்படுத்துவதால் பாதிக்கப்படுகிற குடிசைகளுக்கு உத்தரவாதமான மாற்று ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதற்கான விளக்கத்தையும் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபொழுது அனுமதிக்கப்படாத இடங்களிலே அடிப்படை வசதிகளைச் செய்ய முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு, அனுமதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் அடிப்படை வசதிகள் செய்யவில்லை, யார் குற்றம் என்றார்கள். வேறு யார் குற்றமும் இல்லை. அவர்கள் மீது வரியை உயர்த்தும் போது, கூடாது, உயர்த்தாதே என்று சொன்ன எதிர்க்கட்சிகளுடைய குற்றம்தான்.

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறபொழுது செப்டம்பர் மாதத்திலே நடைபெறக்கூடிய ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்குக் கட்சியின் அடிப்படையிலே, கட்சிச் சின்னங்களை ஒதுக்க . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைப் பற்றி நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன். கட்சி இல்லை என்று முடிவெடுத்ததற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. ஊராட்சி ஒன்றியங்கள் தான் பெரும்பாலான திட்டங்களை, மத்திய அரசு, மாநில அரசு கொண்டு வருகிற திட்டங்களை நிறைவேற்றுகின்ற இடமாக இருக்கிறது. அப்படி நிறைவேற்றப்படுகிற இடத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மக்களுக்கு நிறைவேற்றப்படுகிற திட்டங்கள், மக்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேராமல், போய் விடுமோ என்ற ஐயப்பாடுதான். அது ஒழுங்காகப் போய்ச் சேரட்டும், ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் அரசியல் கட்சி தேவையில்லையென்ற கொள்கையை, எங்களையெல்லாம்

வளர்த்த பேறிஞர் அண்ணா, தந்தை பெரியார் கற்றுத் தந்த பாடத்திற்கேற்ப கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறல்ல; அரசியல் கட்சிகள் கூடாது என்று சொல்வதற்குக் காரணம், அரசாங்கம் நிறைவேற்றுகின்ற நல்ல திட்டங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மக்கள் அனைவரும் பெறாமல் போய் விடுவார்களோ என்ற ஐயத்தின் காரணமாகத்தானே தவிர வேறல்ல.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது: இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். பி. மணவாளன், கு. ரமணி, கு. சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 232,70,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று; நாளை 13-6-1985 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள். . .

98. கோரிக்கை எண் 28-ன் மீதான சமுதாய வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

99. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த செயலாக்க வரவு செலவுத் திட்டம், 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

100. பேரூராட்சி நிர்வாகம் சார்ந்த செயலாக்க வரவு செலவுத் திட்டம் 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

101. நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய செயல் திறன் குறிப்பு 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண். 42-ஓய்வூதியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

[1985 ஜூன் 12

## இணைப்பு I

(617 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### நகராட்சி நிர்வாகம்.

தமிழ்நாட்டில் தற்போது 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| எண். | நிலை. | நகராட்சிகளின் எண்ணிக்கை. | நகரியங்களின் எண்ணிக்கை. | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சிறப்பு நிலை .. | 8 | .. | 8 |
| 2. | தேர்வு நிலை .. | 11 | 5 | 16 |
| 3. | முதல் நிலை .. | 35 | 1 | 36 |
| 4. | இரண்டாம் நிலை | 31 | 2 | 33 |
| 5. | மூன்றாம் நிலை | 13 | .. | 13 |
| | மொத்தம் | 98 | 8 | 106 |

அண்மைக்காலமாக, நகரங்கள் பல்வகையில் வளர்ச்சியடைந்து வருவதால் கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்து வருவது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதன் விளைவாக நகர்ப்புறங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் அதிகரித்து உள்ளது. இப்பிரச்சினைகளைத் தீர்த்து, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை, இன்றியமையா வசதிகளைச் செய்து தரும் பணி பெருமளவில் அதிகரிப்பது தவிர்க்க இயலாததாகும்.

நகராட்சிகளில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களும், அரசினால் அளிக்கப்படும் நிதியுதவி, நகராட்சிகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 1980-81 முதல் 1982-83 முடிய உள்ள காலத்தில் நபர்வாரி வருவாய், 1981-ம் ஆண்டு மக்கள்



1985 ஜூன் 12]

தொகைக் கணக்கெடுப்பின்படியான மக்கள் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நகராட்சிகளுக்கு வெவ்வேறு சதவீதத்தின் அடிப்படையில் நிதியுதவி அனுமதிப்பதற்காக நான்கு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| தொடர் எண். | வகைப்பாடு. | நபர் வாரி வருவாய். | வாங்கப்படும் மான்யத்தின் சதவீதம். | ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ள நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | IV | ரூபாய் 25 வரை | 95 | 8 |
| 2. | III | ரூ. 26 முதல் 50 வரை | 85 | 51 |
| 3. | II | ரூ. 51 முதல் 75 வரை | 70 | 32 |
| 4. | I | ரூ. 75க்கு மேற்பட்ட வருவாய். | 50 | 15 |
| | | மொத்தம் .. | | 106 |

நகராட்சிகள்/நகரியங்களில் நிறைவேற்றப்படும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் மற்றும் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்களுக்காகவும் அளிக்கப்படும் நிதியுதவி (கடன்கள் மற்றும் மான்யம்) மேற்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ள விகிதாச்சாரத்தில் நகராட்சிகள்/நகரியங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, நகராட்சிகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற, பல்வேறு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கு அரசு நகராட்சிகளுக்கு நிதியுதவி அளித்து அத்திட்டங்களை செயல்படுத்து

[1985 ஜூன் 12

இன்றன. இவற்றில் முக்கியமான திட்டங்களின் விவரம் வருமாறு:—

வளர்ச்சித் திட்டங்கள்.

**1(அ) சிறு மற்றும் நடுத்தர நகராட்சிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.**

ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கள் தொகை கொண்ட சிறு மற்றும் நடுத்தர நகரங்களில், குறிப்பாக மாவட்ட தலைமையிடங்களில் அமைந்துள்ள நகரங்களில், முன்னுரிமை அடிப்படையில், மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டமான சிறு மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம். 1979-80 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம்:**

(1) வேலை வாய்ப்பை அதிக அளவில் ஏற்படுத்துவதும்

(2) மக்கள் கிராமப் பகுதிகளிலிருந்து நகர்ப் பகுதிகளுக்குச் செல்வதைக் குறைப்பது அல்லது தடுப்பதும்

(3) இதுபோன்ற நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதும் ஆகும்.

இத்திட்டத்திற்கு ரூ. 1 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | ரூபாய். |
|---|---|
| (1) மத்திய அரசிடமிருந்து கடனுதவி | 40 இலட்சம் |
| (2) மாநில அரசின் கடனுதவி | 40 இலட்சம் |
| (3) நகராட்சிகளின் பங்கு | 20 இலட்சம் |

இத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:—

(1) வீட்டு மனைகளை மேம்படுத்துதல் (அடிப்படை வசதிகளைச் செய்தல்).

(2) பேருந்து நிலையங்கள் கட்டுதல்.

(3) மண்டிகள்/அங்காடிகள் கட்டுதல், மேம்படுத்துதல்.

(4) சாலைகள், சிறு பாலங்களை மேம்படுத்துதல்.



1985 ஜூன் 12]

இத்திட்டம் 28 நகராட்சிகளில் ரூ. 2048.95 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நகராட்சிகள் மேற்கொண்டுள்ள பணிகளின் விவரம் வருமாறு:—

| தொடர் எண்ணும் பணியின் விபரமும். | நகராட்சிகளின் எண்ணிக்கை | பணிகளின் எண்ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வீட்டுமனை மேம்பாடு அடிப்படை வசதிகள் செய்தல் (வீட்டுமனைகளை மேம்படுத்துதல்). | 19 | 21 | 330.81 |
| 2. மண்டிகள், கிடங்குகள். அங்காடிகள் கட்டுதல் மேம்படுத்துதல் முதலியன. | 27 | 86 | 786.94 |
| 3. பேருந்து நிலையங்கள் கட்டுதல், மேம்படுத்துதல் முதலியன. | 25 | 44 | 832.17 |
| 4. சிறு பாலங்கள் கட்டுதல் சாலைகள் போடுதல். | 7 | 14 | 99.03 |
| மொத்தம் .. | 78 | 165 | 2,048.95 |

**(ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரப் பகுதி வளர்ச்சித் திட்டம்.**

தற்போது பல நகராட்சிகளில் நிதி பற்றாக்குறை உள்ளது. நிர்வாகச் செலவு, பொருட்களின் விலை ஏற்றம் ஆகியவை பெருமளவு அதிகரித்து வருவதை அவைகளால் சமாளிக்க இயலவில்லை. இதன் காரணமாக பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க இயலாமல் உள்ளது. நகராட்சிகளின் நிதி நிலைமையைப் பெருக்குவதற்காகப் பின்வரும் வருவாய் ஈட்டக்கூடிய மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சிகளுக்கு அரசு கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

கடைகள், சிறுகடைகள், அங்காடிகள், டிரக்குகள் நிற்குமிடங்கள், பேருந்து நிலையங்கள், வாடகைக் கார்கள் நிற்குமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் முதலியன போன்ற திட்டப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 1980-81-ல் ரூ. 300.75 இலட்சமும், 1981-82-ல் ரூ. 362.29 இலட்சமும், 1982-83-ல் ரூ. 73.46 இலட்சமும், 1983-84-ல் ரூ. 71.10 இலட்சமும், 1984-85-ல் ரூ. 135.10 இலட்சமும், நகர ஊர் அமைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது. வருவாய் ஈட்டித்தரும் பணிகளை மேற்கொள்ள 1984-85-ம் வருடத்தில் கீழ்க்கண்ட நகராட்சிகளுக்கு ரூ. 140-10 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | நகராட்சியின் பெயர். | மேற்கொள்ளப்பட்ட பணியின் பெயர். | அனுமதியளிக்கப்பட்டுள்ள தொகை. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | வேலூர் .. | பேருந்து நிலையம் (2-வது கட்டிடம்). | 21.80 |
| 2. | குமாரபாளையம் | பேருந்து நிலையம் .. | 25.00 |
| 3. | திருச்சி .. | பேருந்து நிலையம் .. | 25.00 |
| 4. | தஞ்சாவூர் .. | 1. திரையங்கம் .. 2. அங்காடி வளாகம் .. | 25.00 |
| 5. | தூத்துக்குடி .. | அங்காடி வளாகம் .. | 19.80 |
| 6. | மயிலாடுதுறை .. | அங்காடி வளாகம் .. | 23.50 |
| | | மொத்தம் | 140.10 |

இத்திட்டப் பகுதிகளை நிறைவேற்றுவதன் மூலம், இப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள நகராட்சிகள், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருவாயின் மூலம் பெருமளவு வருவாயை ஈட்டுகின்றன.

2. தன்னிறைவுத் திட்டம் :

நிதி பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மக்களுக்கு செய்து தர வேண்டிய அடிப்படை வசதிகளையும் செய்து தர இயலாத நிலையில் உள்ளன. ஆகவே, மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் குறைந்தபட்ச அடிப்படை



வசதிகளை திட்டமிட்டு செய்து தருவதற்காக, அரசு நகராட்சிகளுக்கு "தன்னிறைவுத் திட்டத்தின்" கீழ் நிதி உதவி செய்து வருகிறது. முதல் கட்டத்தில், 20 நகராட்சிகளுக்கு 1982-83-ல் ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில், 1,492 பணிகள் நகராட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டத்தில், 31 நகராட்சிகளுக்கு 1983-84-ல் ரூ. 500 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. அந்த ஆண்டில், 1,738 பணிகள் நகராட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டத்தில், 30 நகராட்சிகளுக்கு 1984-85-ல் ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில், 1,500 பணிகள் நகராட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான்காவது கட்டத்தில், 1985-86-க்கான வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சட்டமன்றம் ஒப்புதல் தந்தபின், பணிகளுக்கான அரசு ஆணைகள் வெளியிடப்படும்.

தன்னிறைவுத் திட்டத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் :—

| வரிசை எண்ணும் பணிகளின் விவரமும். | 1983-84-ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட 2-வது கட்டப் பணிகள். | | 1984-85-ஆம் ஆண்டில் 30 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட 3-வது கட்டப்பணிகள். | |
|---|---|---|---|---|
| | ஒவ்வொரு வகையிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள். | திட்ட மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்). | ஒவ்வொரு வகையிலும் மேற்கொள்ளப்பட்ட மொத்த பணிகள். | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. குடிநீர் வழங்குதல் | 68 | 27.59 | 81 | 47.82 |
| 2. சாலை வேலைகள் | 843 | 266.57 | 471 | 151.10 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. சிறு பாலங்கள் அமைத்தல் வெள்ள நீர் வடிகால் அமைத்தல். | 433 | 97.30 | 451 | 123.10 |
| 4. ஆதி திராவிட குடியிருப்புகளும், இடுகாட்டிற்கு பாதைகள் அமைத்தல்: | 79 | 26.23 | 125 | 40.40 |
| 5. பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல். | 69 | 61.87 | 89 | 80.24 |
| 6. மகப்பேறு குழந்தைகள் நல நிலையங்கள் அமைத்தல். | 22 | 7.31 | 30 | 17.39 |
| 7. பொதுச் சுகாதாரம் அபிவிருத்தி செய்தல். | 179 | 49.61 | 127 | 48.15 |
| 8. தெரு விளக்குகள் அமைத்தல். | .. | .. | 113 | 8.84 |
| 9. துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல். | 45 | 16.15 | 73 | 29.75 |
| மொத்தம் | 1,738 | 5,52.63 | 1,560 | 5,46.79 |

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இத்திட்டத்தை எஞ்சியுள்ள நகராட்சிகளுக்கு செயல்படுத்த ரூ. 1,500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. சுழல் நிதி :**

நகராட்சிகள், நகரியக் குழுக்களிடம் சுமார் 820 மனைத் திட்ட அமைப்புகள் ஏற்பளிக்கப்படாமல் உள்ளன. இம்மனைத் திட்ட அமைப்புகளின் உரிமையாளர்கள், தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி மனைத் திட்ட அமைப்புகளை மேம்படுத்தாமல், சம்பந்தப்பட்ட நகராட்சியின் பராமரிப்பில் ஒப்படைக்கப்படாமல் உள்ளனர். அதன் விளைவாக,



வீட்டுமனை உரிமையாளர்கள், அடிப்படை வசதிகளான சாலை வசதிகள், தெரு விளக்குகள், வெள்ள நீர் வடிகால்கள் போன்ற வசதிக் குறைவால், பெரும் இன்னல் அடைந்துள்ளனர்.

இவ்விடர்பாடுகளை நீக்குவதற்காக, மனை அமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அரசு "சுழல் நிதி" என்னும் புதிய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் அனுமதியளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மனைத் திட்ட அமைப்பு பகுதிகளில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவீதத் தொகை அப்பகுதியில், இப்பணிகளால் பயன் அடைவோரிடமிருந்து நகராட்சிகள் வசூலிக்க வேண்டும். அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகைகளைக் குறித்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு தகவல் அளித்தவுடன், அவர் பணிகளின் மதிப்பீட்டுச் செலவுத் தொகையின் 50 சதவீதத்தை பணிகள் தொடங்குவதற்காக, நகராட்சிகளுக்கு வழங்குவார். எஞ்சியுள்ள 25 சதவீதத் தொகையை நகராட்சிகள் செலவிட வேண்டும். பணிகள் மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதத் தொகையை, பயனடைந்தோரிடமிருந்து, 5 ஆண்டுகளுக்குள் 7 சதவீத வட்டியுடன் சுலபத் தவணைகளில் நகராட்சிகள் வசூலிக்க வேண்டும். இப்பணிகளுக்காக, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வழங்கிய 50 சதவீதத் தொகையை நகராட்சிகள் ஏழு சதவீத வட்டியுடன் 5 ஆண்டு சம தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நகராட்சிகள், நகரியக் குழுக்கள் திருப்பிச் செலுத்தும் தொகை சுழல் நிதியில் சேர்க்கப்பட்டு, மேற்சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு இதைப்போன்ற பணிகள் மேற்கொள்வதற்காக தேவைப்படும் ஏனைய நகராட்சிகளுக்கு இதிலிருந்து தொகை வழங்கப்படும். இதுவரை 30 குடியிருப்புமனை திட்ட அமைப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 516 குடியிருப்புகள் மனைத் திட்ட அமைப்புகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

ஒவ்வொரு நகராட்சியிலும் மனைத்திட்ட அமைப்பு மேம்பாடு மேற்கொள்ளப்பட்டமை, ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்ட தொகை, மேம்பாட்டுப்பணி, மேற்கொள்ளப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை ஆகிய விவரம் வருமாறு :—

| வரிசை எண். | அனுமதி வழங்கப் பட்ட ஆண்டு. | | நகராட்சி களின் எண்ணிக்கை. | மேம்பாட் டுப்பணி நிறை வேற்றப் பட்டுள்ள மனை திட்ட அமைப்பு களின் எண்ணிக்கை. | செலவி டப்பட் டத் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| 1 | 1980-81 | .. | 25 | 167 | 25.00 |
| 2 | 1981-82 | .. | 13 | 36 | 6.31 |
| 3 | 1982-83 | .. | 10 | 35 | 8.1[illegible] |
| 4 | 1983-84 | .. | 9 | 30 | 6.00 |
| 5 | 1984 85 | .. | 12 | 36 | 8.60 |
| | மொத்தம் | .. | 69 | 304 | 54.55 |

**4. சாலைப்பணி (முழுக் கடன்) :**

நகராட்சிகள், நகரிய குழுக்கள் ஆகியவை, தற்போது 5820.213 கி.மீ. தொலைவு உள்ள சாலைகளை பராமரித்து வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | கி.மீ. |
|---|---|
| (1) சிமிட்டி, சிமிட்டி கற்கலவை சாலைகள் | 706.147 |
| (2) தார் சாலைகள் | 3001.145 |
| (3) கப்பிச் சாலைகள் | 1176.478 |
| (4) மண் சாலைகள் | 936.443 |





வணிக வண்டிகள் பெருமளவில் சென்று வருவதன் காரணமாக நகராட்சி சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி உள்ளது. பருவமழை காலங்களில், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படக்கூடிய பெருமழை, வெள்ளம் ஆகியவற்றின் விளைவாக நகராட்சி சாலைகளில் பெருமளவில் சேதம் ஏற்படுவதால், சாலைகளை மோட்டார் வண்டிகள் போக்குவரத்திற்கு ஏற்றதாக மாற்றும் வகையில் செப்பனிடுவதற்கு, நகராட்சிகள் தங்களுடைய வருவாயில் பெரும் பகுதியை செலவிட வேண்டியுள்ளது. பெரும்பான்மையான நகராட்சிகளில் நிதிப் பற்றாக்குறை உள்ளதால் நகராட்சிகள், நகரியக் குழுக்களின் நிர்வாகத்தில் உள்ள சாலைகள் நல்ல நிலையில் பராமரித்து வருவதற்கு தேவையான நிதியுதவியை அரசு திட்டப்படி, திட்டம் சாராத பணி திட்டத்தின் கீழ் 1977-78-ம் ஆண்டு முதல் நிதியுதவி வழங்கி வருகிறது. 1980-81 ஆம் ஆண்டு முதல் நகராட்சி சாலைகளில் செப்பனிடும் பணியை மேற்கொள்வதற்காக நகராட்சிகளுக்கு முழுக் கடன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்ட தொகை விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் ஆண்டும். | | | | | நகராட்சி களின் எண்ணிக்கை. | அனுமதித்த தொகை (ரூபாய் இலட்சங் களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | | | | | (2) | (3) |
| 1 | 1980-81 | .. | .. | .. | 31 | 30.00 |
| 2 | 1981-82 | | .. | .. | 28 | 30.00 |
| 3 | 1982-83 | | .. | .. | 24 | 30.00 |
| 4 | 1983-84 | .. | .. | .. | 22 | 30.00 |
| 5 | 1984-85 | .. | .. | .. | 16 | 30.00 |

**5. தூசி படியாத வகையில் நகராட்சி சாலைகள் அமைத்தல் :**

(பாதி தொகை கடன்—பாதி தொகை மானியம் என்ற அடிப் படையில் வழங்கப்படுகிறது).

திட்டம் சாராப் பணிகள் திட்டத்தின் கீழ் 'பாதித் தொகைக் கடன், பாதித் தொகை மான்யம்' என்ற அடிப்படையில் நகராட்சிச் சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு வருடத் திற்கு ரூ. 30 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது. 1980-81-ஆம் ஆண்டு முதல் நிதியுதவி வழங்கப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை நிதியுதவி அனுமதி ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் ஆண்டும். | | நகராட்சி களின் எண்ணிக்கை. | அனுமதி வழங்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சங் களில்) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 | 1980—81 .. .. .. | 38 | 30.00 |
| 2 | 1981—82 .. .. .. | 32 | 30.00 |
| 3 | 1982—83 .. .. .. | 33 | 30.00 |
| 4 | 1983—84 .. .. .. | 25 | 30.00 |
| 5 | 1984—85 .. .. .. | 28 | 30.00 |

**6. குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் :**

கழிப்பிடங்களை பராமரிப்பது நகராட்சிகளின் கடமை களில் ஒன்றாகும். உலர் கழிப்பிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவில்லை எனில், நகரத்தில் தூய்மையைக் கெடுப்ப தோடல்லாமல், சுகாதாரக் கேட்டையும் விளைவிக்கும். பெரு மளவில் நகராட்சிகளின் மக்கள் தொகை மீள்திறனற்ற வள வாய்ப்பு ஆகியவற்றை கருத்திற்கொண்டு பார்த்தால் நகர்ப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை முறையாக மேற்கொள்வது



அறைகூவலான பிரச்சினையாகும். எனவே நகர்ப்புறப் பகுதி களில் அவசரத் தேவையான, முறையான துப்புரவுப் பராமரிப்புப் பணி தவிர்க்க முடியாத தேவையாக கருதப்பட்டது. எல்லா வகையைச் சேர்ந்த மக்களுக்கும் உதவி செய்யும் நோக்குடன் "குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்" என்னும் புதிய திட்டம் நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் குறைந்த செலவிலான ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டத்தில் கழிப்பிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

துப்புரவு பணியாளர்கள் கழிப்பிடங்களில் இருந்து மலத்தை நீக்கி பின்னர் தங்கள் தலைகளிலேயே சுமந்து செல்லும் அருவருப்பூட்டும் இப்பணியிலிருந்து இப் பணியாளர்களை விடுவித்து எல்லா வகையான சுகாதாரக் கேட்டிலிருந்தும் நகர் முழுவதையும் விடுவிக்கும், சுத்தமான சூழ்நிலைக்கு வகை செய்வதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உயர் வகைக் கழிப்பிடங்களை அமைக்கும் பொருட்டு பின்வரும் நான்கு நிறுவனத்தின் உதவியுடன் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டத்தை செயல்படுத்த கருதப்பட்டுள்ளது.

**(1) உடுமலைப்பேட்டை நகராட்சியில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்.**—உடுமலைப்பேட்டை நகராட்சியில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் மாநில அரசிடமிருந்து 50 சதவீதம் கடனுதவியும் மத்திய அரசிடமிருந்து 50 சதவீதம் மான்யமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. அரசு ஆணை எண் 1636, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, நாள் 30—10—1982-ல் இத்திட்டத்திற்காக மதிப்பீடு ரூ. 54.77 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 34.35 இலட்சம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, இதுகாறும் ரூ. 38.75 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 3820 உலர்வகை கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு 3750 உலர் வகைக் கழிப்பிடங் கள் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. இத்திட்டத் திற்கு ஈட்டு மான்யமாக 16.50 லட்ச ரூபாய் மத்திய அரசு மாநில அரசுக்கு அளித்துள்ளது. இந்திட்டம் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட துப்புரவுத் தொழிலாளர் அனை வரும் மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

(2) **மத்திய அரசு உதவியுடன்.**—புதுடில்லி, வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், நாகர்கோயில், விழுப்புரம் நகராட்சிகளிலும், அம்பத்தூர் நகரியத்திலும் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டத்தை செயலாற்ற கடன் உதவி செய்ய முன் வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இத்திட்ட மதிப்பீட்டின் 50 சதவீதம் இத்திட்டத்தை நிறைவேற்றும் நகராட்சிகள், தங்கள் நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். மீதமுள்ள 50 சதவீத தொகையை வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், புதுடில்லி 5 சதவீத வட்டியுடன் அந்த நகராட்சிகளுக்குக் கடனாக வழங்கும். ஆனால் இத்திட்டத்தை செயல்படுத்த வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் அங்கீகரிப்பதில் மிகுந்த தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சியில் நன்கு செயல்படுத்தப்படுவதை அறிந்த மத்திய அரசு துப்புரவுத் தொழிலாளரை விடுவிக்கும் திட்டத்தை ஏனைய சில நகராட்சிகளிலும், செயல்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

இதற்கிணங்க இம்மூன்று நகராட்சிகளிலும் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 111.27 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அங்கீகாரத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி அனுப்பப்பட்டது.

| வரிசை எண். | நகராட்சி/ நகரியம் பெயர். | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மான்யம். | மாநில அரசின் கடன். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| 1. | அம்பத்தூர் நகரியம் | 38.30 | 19.150 | 19.150 |
| 2. | விழுப்புரம் .. | 32.67 | 16.335 | 16.335 |
| 3. | நாகர்கோவில் .. | 40.30 | 20.150 | 20.150 |
| | மொத்தம் .. | 111.27 | 55.635 | 55.635 |



இத்திட்டத்தின் மதிப்பீட்டில் 50 சதவீதம் பங்கை அந்த நகராட்சிகளுக்கு மாநில அரசு கடனாக வழங்கி அத்தொகையை பயனடைவோரிடமிருந்து 10 அரையாண்டு தவணைகளில் நகராட்சிகள் வசூலிக்கிறது. மத்திய அரசு இத்திட்டத்தை அங்கீகரித்து நடப்பு நிதியாண்டில் (1984-85) ரூ. 27.82 இலட்சம் நிதியுதவியாக அளித்துள்ளது.

இம்மூன்று உள்ளாட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் துப்புரவுப் பணியிலிருந்து விடுவிக்கப்படும் துப்புரவு தொழிலாளர்கள் மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

(3) **உலக வங்கி நிதியுதவியுடன்.**—16,601 உலர் வகை கழிப்பிடங்களையும், 2,461 வாளிமுறைக் கழிப்பிடங்களையும் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1,247 சமூக கழிப்பிடங்களைத் தவிர, மேலும் 17,330 புதிய கழிப்பிடங்கள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும். இத்திட்டம் பின்வரும் 14 நகராட்சிகளில் ரூ. 709.55 லட்சம் மதிப்பீட்டில் (மான்யம் 262.53 லட்சம் கடனுதவி 447.02 லட்சம்) செயல்படுத்தப்படும்.

1. ஆம்பூர்.
2. ஆத்தூர்.
3. அறந்தாங்கி.
4. செங்கற்பட்டு.
5. குன்னூர்.
6. கோபிசெட்டிபாளையம்.
7. கொடைக்கானல்.
8. பண்ருட்டி.
9. பட்டுக்கோட்டை.
10. பொள்ளாச்சி.
11. சீர்காழி.
12. தேனி-அல்லி நகரம்.
13. தென்காசி.
14. துறையூர்.

[1985 ஜூன் 12

இத்திட்டத்தின் கீழ் பயனடைய இருக்கும் குடியிருப்புகள், அவைகளில் உள்ள மூன்று அடிப்படை வசதிகளை கொண்டுள்ளதைக் கணக்கிட்டு (மின்சாரம், தண்ணீர், மற்றும் உலர் கழிப்பிடம்) மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளில், இரண்டிற்கு மேற்பட்ட வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளுக்கு மான்யம் அளிக்கப்படுவதில்லை. இம்மூன்று அடிப்படை வசதிகளில் ஒன்று மட்டும் இருக்குமேயானால், 50 சதவீதம் மான்யமும், இம்மூன்று அடிப்படை வசதிகளுமே இல்லாத குடியிருப்புகளுக்கு 75 சதவீதம் மான்யமும் அளிக்கப்படும். சமூகக் கழிப்பிடங்கள் அமைப்பதற்கு நகராட்சிகளுக்கு ஏற்படும் செலவு முழுவதும் மான்யமாக அந்த நகராட்சிகளுக்கு அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கு அளிக்கப்படும் கடன் 8.50 சதவீதம் வட்டியுடன் 25 வருடங்களில் வசூலிக்கப்படும். முதல் 5 வருடத்திற்கு நகராட்சி கடனை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. நகராட்சிகள் இக்கடனை பயனடைந்தோரிடமிருந்து 50 அரையாண்டுத் தவணையில், வேலை முடிந்த அரையாண்டிற்கு அடுத்த அரையாண்டு முதல் சொத்து வரியுடன் வசூலிக்க வேண்டும்.

### (4) மத்திய அரசு ஆதரவு தரும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டத்தை பின்வரும் 6 நகராட்சிகளில் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான தொகை முழுவதையும் நகராட்சிகளுக்கு கடனாக அளிக்கப்பட்டு இந்நகராட்சிகள் தாங்கள் வாங்கிய கடனை 7 சதவீதம் வட்டியுடன் 25 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். முதல் 5 வருடத்திற்கு கடனை திருப்பிச் செலுத்துவதிலிருந்து நகராட்சிகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிகள் இக்கடன் தொகையை பயனடைவோருக்கு அளித்து அத்தொகையை வட்டியுடன் 20 அரையாண்டுகளில் சொத்து வரியுடன் வசூலிக்க வேண்டும்.

1. ஆரணி.
2. அரக்கோணம்.



1985 ஜூன் 12]

3. காரைக்குடி.
4. சிவகங்கை.
5. மன்னார்குடி.
6. மேட்டுப்பாளையம்.

இத்திட்டத்திற்கான ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்கு ரூ. 81-55 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 68.45 இலட்சத்தை மாநில அரசு ஏற்க உள்ளது.

இந்நகராட்சிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு ஆணை எண் 1099, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, நாள் 21—12—1984-ல் ரூ. 87.48 இலட்சம் நிதியுதவியை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு வாரியத்திற்கு அளித்துள்ளது. இத்தொகையில் மத்திய அரசின் முதல் தவணைத் தொகை ரூ. 47.98 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ. 39.50 இலட்சமும் அடங்கும். 20 அம்ச திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் துப்புரவுப் பணியாளர் கழிப்பிடங்களில் இருந்து மலத்தை நீக்கி தங்கள் தலையிலேயே சுமந்து செல்லும் அருவருப்பூட்டும் இப்பணியிலிருந்து இப்பணியாளர்களை விடுவித்து அவர்கள் தற்போது பெறும் மாத ஊதியத்திலிருந்து இழப்பு இன்றி அவர்களுக்கு மாற்றுப்பணிகளை இத்திட்டத்தை நிறைவேற்றும் 24 நகராட்சிகளிலும் தோற்றுவிக்கப்பட்டு அவர்கள் அப்பணிகளில் அமர்த்தப்படுவர்.

## 7. நலத் திட்டங்கள் :

### (1) விரைவுப்படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

சென்னை மாநகரம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு 1. சாலைகள், 2. குடிநீர் வழங்கும் திட்டம், 3. தெருக்களுக்கு விளக்கு வசதி வழங்கும் திட்டம், 4. பொதுக்கழிப்பிடங்கள் முதலிய அடிப்படை வசதிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் செய்து கொடுக்க வேண்டும் என்று அரசு 1977-ம் ஆண்டு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன நான்கு நகரங்களிலும் எல்லா நகர்ப்புறங்களிலும் உள்ள குடிசைப் பகுதி

மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக விரைவு படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்க தீர்மானிக்கப்பட்டது. 12 இலட்சம் குடிசைவாழ் மக்கள் தொகை உள்ள 102 நகராட்சிகள் நகரியக்குழுக்களில் சுமார் 1,100 குடிசைப் பகுதிகள் உள்ளன. குடிசை வாழ் பகுதி மக்களின் எண்ணிக்கை நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையில் (72,20.954) 16.19 சதவீதம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகள் நகரியங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு பின்வரும் பொது வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளன.

(1) மழை நீரையும், கழிவு நீரையும் அகற்றுவதற்காக சாலையின் இரு பக்கங்களிலும் மழை நீர் வடிவதற்கான வடிகால் களுடன் சாலைகள் போடுதல்.

(2) குடிநீர் வழங்கல்.

40-50 குடும்பங்களுக்கு ஒரு பொதுக் குழாய் போடுதல், பொதுக் குழாய் போட முடியாத இடங்களில் துளைக் கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் தோண்டப்படவேண்டும்.

(3) **பொதுக் கழிப்பிடங்கள்.** ..

பத்து குடும்பங்களுக்கு ஒரு இடம் (One Seat)என்ற வீதத்தில் பொதுக் கழிப்பிடங்களும், சிறுநீர்க் கழிப்பிடங்களும் கட்டப்பட வேண்டும். போதுமான தண்ணீர் வசதியும் அளிக்கப்பட வேண்டும்.

(4) **தெருவிளக்கு வசதி.** ..

குடிசைப் பகுதி முழுவதிலும், வசதியான சந்திப்புக்களில் தெரு விளக்குகள் போட உள்ளன.

கோயம்புத்தூர் உட்பட (தற்போது இது மாநகராட்சியாகும்) 81 நகராட்சிகளுக்கு அரசு இதுவரை ரூபாய் 450 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளித்துள்ளது. இதனால் 319 குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டு, 6,66,675 குடிசைவாழ் மக்கள் பயன்பட்டுள்ளனர்.





| வரிசை எண். | வருடம். | பயனடைந்த நகராட்சி களின் எண்ணிக்கை. | அளிக்கப் பட்ட நிதியுதவி (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1977—78 .. .. .. | 2 | 50.00 |
| 2 | 1978—79 .. .. .. | 6 | 50.00 |
| 3 | 1979—80 .. .. .. | 5 | 50.00 |
| 4 | 1980—81 .. .. .. | 13 | 50.00 |
| 5 | 1981—82 .. .. .. | 12 | 50.00 |
| 6 | 1982—83 .. .. .. | 36 | 50.00 |
| 7 | 1983—84 .. .. .. | 12 | 50.00 |
| 8 | 1984—85 .. .. .. | 35 | 100.00 |
| | மொத்தம் .. | | 450.00 |

இத்திட்டத்தின் கீழ் 180 கிலோ மீட்டர் தொலைவுக்கு சாலைகள் 75 குடிசைப் பகுதிகள் போடப்பட்டுள்ளன. 134 குடிசைப் பகுதிகளில் பொதுக் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 205 குடிசைப் பகுதிகளில் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. 50 குடிசைப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. 153 குடிசைப் பகுதிகளில் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு நகராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம் படுத்துவதற்கு செயல் ஊக்கத் தொகையாக மத்திய அரசு தனி மான்யமாக ரூ. 2.67 கோடி வழங்க முன்வந்துள்ளது. மத்திய அரசு அறிவித்த செயலாக்கத் திட்டத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளித்த ஆண்டு திட்ட இலக்கான ரூபாய் 50 இலட்சத் திற்கும் அதிகமான இலக்கினை எய்துவதற்கான அடிப்படையில் முதல் தவணையாக மத்திய அரசு மாநில அரசுக்கு ரூபாய் 59 இலட்சம் வழங்கியுள்ளது. இத் தொகை 12 நகராட்சிகளுக்கு நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் மூலமாகவும், சென்னை புறநகர் பகுதியில் அமைந்துள்ள 2 நகராட்சிகள் மற்றும் 2 நகரியங்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் அரசு ஆணை எண் 567,

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23—7—1984 மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்ட நகர்ப்புற குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புற சூழ்நிலையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் அடிப்படையில் ரூபாய் 57 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 12 நகராட்சிகளில் 60 குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கு ரூபாய் 57 இலட்சம் மதிப்பீடு செய்து அதற்கான 244 பணிகளை மேற்கொண்டு 42,634 பேர்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதியுதவி, பயனடைவோரின் எண்ணிக்கை ஆகியவைகள் கீழ்வருமாறு :—

இருபது அம்சத் திட்டம்.

நகர்ப்புற குடிசை அபிவிருத்தி சொலாக்கத் திட்டம்.

| வரிசை எண். | நகராட்சிகளின் பெயர். | குடிசைப் பகுதிகள் எண்ணிக்கை | பயனடைவோரின் எண்ணிக்கை 1984-85 குறியீடு | அளிக்கப்பட்ட நிதியுதவி ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பண்ருட்டி .. | 3 | 2,949 | 2.22 |
| 2 | உதகமண்டலம் .. | 13 | 2,665 | 4.00 |
| 3 | கம்பம் .. | 2 | 1,550 | 2.00 |
| 4 | கும்பகோணம் .. | 5 | 3,335 | 5.00 |
| 5 | திருச்செங்கோடு .. | 3 | 2,000 | 3.00 |
| 6 | மேட்டுப்பாளையம் | 2 | 2,980 | 3.00 |
| 7 | பரமகுடி .. | 1 | 540 | 1.00 |
| 8 | திருச்சிராப்பள்ளி .. | 3 | 5,650 | 10.00 |
| 9 | ஸ்ரீரங்கம் .. | 9 | 5,600 | 6.78 |
| 10 | வேலூர் .. .. | 3 | 5,335 | 7.00 |
| 11 | காஞ்சிபுரம் | 6 | 3,400 | 5.00 |
| 12 | திருநெல்வேலி .. | 10 | 6,630 | 8.00 |
| | | 60 | *42,634 | 57.00 |

* இக்குறியீட்டில் 36,704 ஷெட்யூல்டு வகுப்பினரும் 1,520 பழங்குடியினரும் அடங்குவர்.



**பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.**

நகராட்சிகளிலும் நகரியக் குழுக்களிலும் உள்ள சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கும் சமுதாயத்தில் பொருளாதார வகையில், நலிந்த பிரிவினர்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு பிற்பட்ட பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் 1977-78-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் வாழும் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி, பொதுக்கழிப்பிட வசதி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 1982-83-ம் ஆண்டு வரை 94 நகராட்சிகள் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 66 லட்சம் செலவில் மேற்கொண்ட பணிகளை எடுத்துக் கொண்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டும். | | நகராட்சிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 | 1977—78 .. .. | 10 | 10.00 |
| 2 | 1978—79 .. .. | 5 | 3.00 |
| 3 | 1979—80 .. .. | 6 | 3.00 |
| 4 | 1980—81 .. .. | .. | .. |
| 5 | 1981—82 .. .. | 47 | 25.00 |
| 6 | 1982—83 ........ | 26 | 25.00 |

**8. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் :**

106 நகராட்சிகள்/நகரியக் குழுக்களில் 100 நகராட்சிகள் நகரியக் குழுக்கள் 1,040 ஆரம்பப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகின்றன. இப்பள்ளிகளில் சுமார் 3,43,820 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் 1,040 ஆரம்ப மற்றும்

நடுநிலைப் பள்ளிகளில் 254 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும், 126 பள்ளிக்கூடங்கள் கூரை வேய்ந்த கொட்டகைகளிலும் அமைந்துள்ளன. நகராட்சிகள் நகரியக் குழுக்கள் வாடகை கட்டிடங்களில் ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளை நடத்தி வருவதற்காக ஆண்டொன்றுக்கு வாடகையாக ரூ. 7.85 இலட்சம் செலுத்த வேண்டியுள்ளது. எஞ்சிய 780 பள்ளிகளில் பெரும்பான்மையான பள்ளிகளில் போதுமான இட வசதியில்லை. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் மாணவ, மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்ததையொட்டி இப்பள்ளிகளில் கூடுதலான இடவசதியை விரைவில் ஏற்படுத்துவது அவசியமாகியுள்ளது. நகராட்சி குழுக்கள் தங்கள் சொந்த நிதி வாயில்களிலிருந்து இத்திட்டத்தை மேற்கொள்ளுவதற்கு அவற்றிடம் போதுமான நிதி வசதியில்லை. எனவே ஒவ்வொரு வகை நகராட்சிகளையொட்டி விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படும் மானிய வடிவில் நிதியுதவி அளிப்பதன் மூலம் நகராட்சிகளுக்கு நகரியக் குழுக்களுக்கு நிதி உதவி மானியமாக அளிக்க அரசு முன்வந்துள்ளது. 1984-85 ஆம் வருடத்தில் 22 நகராட்சிகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது. வகை நான்கு மற்றும் மூன்றின் கீழ் வரும் நகராட்சிகள் 1980-31 முதல் 1984-85 வரையுள்ள ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு 197 பள்ளிக் கட்டிடங்கள் ரூ. 114.320 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு நகராட்சி பள்ளிகளில் இடவசதி பெருக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 197.48 இலட்சம் செலவில் 224 பள்ளிக் கட்டிடங்களில் கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் சுமார் 18,898 மாணவ மாணவியர்களுக்கு இடவசதி அளித்துள்ளன. இன்னும் பல பள்ளிகளுக்கு இடவசதி அளிக்க வேண்டியிருப்பதால் இத்திட்டம் 1985-86-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. நகராட்சி உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகள் கட்டுதல்:**

106 நகராட்சிகள், நகரியக் குழுக்களில் 20 நகராட்சிகள் 28 உயர்நிலைப் பள்ளிகளையும் 21 நகராட்சிகள் 34 மேல்நிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகின்றன. இப்பள்ளிகளில் 70,026



மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். பல நகராட்சி உயர்நிலை மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் மிகப் பழமையானவை. அவற்றில் படிக்கும் மாணவ மாணவிகள் எண்ணிக்கையையொட்டிப் பார்த்தால் அவற்றில் போதுமான இடவசதி இல்லை. இடைநிலைக் கல்விக்கான மொத்த செலவில் இடைநிலைக் கல்வி மான்யமாக 66-2/3 சதவீத தொகை நகராட்சிகளுக்கு அளிக்கப்படுகிறது. இத்தொகை இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாதோருக்கும் சம்பளம் வழங்குவது தொடர்பான செலவுகளை செய்வதற்கு மட்டுமேயாகும். என்வே நகராட்சிகள் புதிய கட்டிடங்களை மேம்படுத்துதல் போன்ற மூலதனப் பணிகளை மேற்கொள்ளும் நிலையில் இல்லை. எனவே வீதாச்சார அடிப்படையில் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் மானிய வடிவில் நிதியுதவி அளிக்க அரசு முன்வந்துள்ளது. இத் திட்டம் 1981-82-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1981-82-ம் ஆண்டுக்கு ரூ. 25 இலட்சமும், 1982-83-ம் ஆண்டுக்கு ரூ. 25 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 11 நகராட்சிகளில், 11 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் அரசு அளித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி மூலமாக 37 நகராட்சிகளில் 43 உயர்நிலை மேல்நிலைப் பள்ளிக்கூட கட்டிடங்கள் ரூ. 81,29 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு இப்பள்ளிகளில் பயிலும் 4,300 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தை 1985-86-ம் வருடத்திலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. (அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்:**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம் 2 வயது முதல் 4 வயது முடிய உள்ள குழந்தைகளுக்காக 106 நகராட்சிகளிலும் நகரியக் குழுக்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3,95,741 ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2,12,397 குழந்தைகள் சத்துணவு பெறுகிறார்கள். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தற்போது செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களின் மொத்த எண்ணிக்கை 2,965 ஆகும். இவற்றில் 176 மையங்கள்

[1985 ஜூன் 12

வாடகையின்றி பெற்ற கட்டிடங்களிலும், 210 மையங்கள் வாடகைக் கட்டிடங்களிலும், 2,579 மையங்கள் இத்திட்டத்தின்கீழ் புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சத்துணவு பெறும் 2,12,397 குழந்தைகளில் 1,05,155 பேர் சிறுவர்களும், 1,07,242 பேர் சிறுமிகளும் ஆவர். இவர்களில் 65,825 பேர் ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்தவர்களாவார்.

**10. (ஆ) பள்ளி உணவுத் திட்டம்:**

மேற்கூறிய திட்டத்தைப் போன்று, 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள குழந்தைகட்கும், 10 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகட்கும் சத்துணவு வழங்கும் முதலமைச்சர் திட்டம், நகரங்களில் 15—9—1982 முதல் செயல்படுத்தப் படுகிறது. இந்த நகராட்சி ஆரம்பப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் உணவு வழங்கும் பொது உணவுக் கூடங்களும் மைய உணவுக் கூடங்களும் நீக்கப்பட்டு தனித்தனி சமையற் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது 1,023 உணவு வழங்கும் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 256 மையங்களில் நிலையான சமையற்கூடங்கள் உள்ளன. 767 சமையற் கூடங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. பதிவேடு களின்படி இப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3.44 இலட்சமாகும். இத்திட்டத்தின் கீழ் 1.70 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1,049 சமையற்காரர்களும், 1,034 உதவி யாட்களும் 1,023 அமைப்பாளர்களும் பணி புரிகின்றனர். இவர் களில் 180 பேர் ஆடவர். 2,926 பேர் மகளிர். இவர்களில் 360 பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும், 16 பேர் பழங்குடி வகுப்பையும், 1,872 பேர் பிற்பட்ட வகுப்புகளையும், எஞ்சிய 858 பேர் மற்ற வகுப்புகளையும் சேர்ந்தவராவர். இங்கு பணிபுரியும் மகளிரில் 603 பேர் விதவைகள் ஆவர். 266 பேர் ஆதரவற்றோர் ஆவர். இத்திட்டம் பிரபலமாகிக் கொண்டு வருவதால், பள்ளிகளில் சேரு வோரின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இடையில் படிப்பை நிறுத்தி விடுபவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது. இது தவிர குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப் படுவதால் பொதுவாக அவர்களுடைய உடல் நலம் முன்னேறி



1985 ஜூன் 12]

யுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக இத்திட்டம் சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

10. (இ) அரசாணை எண் 1222 (பொது-முதல் அமைச்சரின் சத்துணவு திட்டம்) தேதி 26-7-1984-ல் இத்திட்டத்தை 10 வயது முதல் 15 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு 15-9-1984 முதல் விஸ்தரித்து உத்திரவிடப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப் பட்டுள்ள இத்திட்டத்தை செயல்படுத்த 1984-85-ம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கூடுதலாக 57 சத்துணவு மையங்கள் கட்டப்பட்டு 49,000 மாணவ மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

**10. (ஈ) ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை படிக்கும் பள்ளி சிறுவர்களுக்கு இலவசமாக சீருடை வழங்குதல்:**

முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி சிறுவர் சிறுமியர்களுக்கு இலவச சீருடை 1985-ம் வருடம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதல் வழங்குவதற்குண்டான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**11. வேலூரிலுள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்கக அலுவல கத்துக்கு கட்டிடங்கள் கட்டுதல்:**

வேலூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள நகராட்சி நிர்வாக இயக்கக அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. மேற்சொன்ன அலு வலகங்களுக்கு இடவசதி அளிப்பதற்காக அரசு இக்கட்டிடங் களுக்கு ஆண்டுதோறும் வாடகையாக சுமார் ரூ. 30,000 அளிக் கிறது. பொறியியல் பிரிவு ஒன்றும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தை கவனிப்பதற்காக கூடுதலாகப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டவுடன், வாடகைக் கட்டிடங்களில் தற் போதுள்ள இடம் போதுமானதல்ல என்று கருதப்படுகிறது. வாடகை கொடுப்பதன் பேரில் கூடுதலாக இடவசதியை எடுத்துக் கொண்டால் அரசின் நிதிப் பொறுப்புகள் அதிகரிக்கும். எனவே, படிப்படியான முறையில் நகராட்சி நிர்வாக வட்டார இயக்குநர் களின் அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவது அவசியமென கருதப்பட்டது. சேலத்திலும், மதுரையிலும் ரூ. 4 இலட்சம் மதிப் பீட்டு செலவில் (ஒவ்வொன்றுக்கும் ரூ. 2 இலட்சம்) அலுவலகக்

கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு 1983 ஏப்ரலில் அனுமதியளித்தது. இக்கட்டிடங்கள் பூர்த்தியடையும் தருவாயில் உள்ளன. வேலூரில் உள்ள நகராட்சி நிர்வாக வட்டார இயக்கக அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு 1984-85 ஆம் ஆண்டில் 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இக்கட்டுமானப் பணியை, வேலூர் மண்டல செயற்பொறியாளரின் மேற்பார்வையில் வேலூர் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்கக அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12. இயற்கைச் சீற்றங்கள், வெள்ளத் துயர் தணிப்புப் பணிகள் :**

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மூன்றாம் வாரத்தில் எதிர்பாராத விதமாக வட கிழக்கு பருவமழை தஞ்சாவூர், திருச்சி, தென் ஆற்காடு, இராமநாதபுரம் (கிழக்கு), புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் பெய்ததால் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக நகராட்சி சொத்துக்களுக்கும், சாலைகளுக்கும் பெரும் சேதமேற்பட்டது. வெள்ளம் காரணமாக இம்மாவட்டங்களில் 391.85 கி.மீ. நகராட்சி சாலைகள் பாதிக்கப்பட்டன. சேதமடைந்தவற்றைப் பழுதுபார்க்கும் பொருட்டு நகராட்சிகள் அதிக தொகையை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. போதுமான நிதி வசதியில்லாததால் நகராட்சிகள் இவற்றை பழுது பார்க்கும் நிலையில் இல்லை. கட்டிடங்களுக்கும் சாலைகளுக்கும் ஏற்பட்ட சேதத்தின் அளவு மதிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ. 458.61 இலட்சம் செலவாகுமென உத்தேசித்து, ரூ. 400 இலட்சத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு கோரி செயற்குறிப்பு ஒன்று, மத்திய அரசு அனுப்பிவைத்த தனிக் குழுவிடம் கொடுக்கப்பட்டது. எஞ்சிய செலவை நகராட்சிகள் தங்கள் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். பெரியார் மாவட்டம் தவிர மற்றெல்லா மாவட்டங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் துயர் தணிப்புப் பணிகளுக்காக பாதிக் கடன், பாதி மானியம் என்ற அடிப்படையில் நிதியுதவியின் முதல் தவணையாக ரூ. 200 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.



1984-85 ஆம் வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு கீழ்க்கண்டவாறு அரசு நிதியுதவி அளித்துள்ளது :—

| | முழு மான்யம். |
|---|---|
| 1. அரசாணை எண் 1336 (வருவாய் துறை) தேதி 8-8-84. | 26 நகராட்சிகளுக்கு ரூ. 57.20 இலட்சம் செலவில் நகராட்சி சாலைகளை செப்பனிடவும் ரூ. 1 இலட்சம் செலவில் நகராட்சிக் கட்டிடங்களை செப்பனிடவும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. |
| 2. அரசாணை எண் 1925, (வருவாய் துறை) தேதி 24-11-84. | 10 நகராட்சிகளில் ரூ. 10 இலட்சல் செலவில் நகராட்சி சாலைகளை செப்பனிடவும் ரூ. 5 இலட்சம் செலவில் சத்துணவு திட்ட மையங்களை செப்பனிடவும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. |
| 3. அரசாணை எண் 145 (வருவாய் துறை) தேதி 7-2-1985 | செங்கல்பட்டு மாவட்டத்தில் 10 நகராட்சிகளுக்கு நகராட்சி சாலைகளை செப்பனிட ரூ.34.70 இலட்சமும் நகராட்சி கட்டிடங்களை பழுது பார்க்க ரூ. 10 இலட்சமும், சத்துணவு திட்ட மையங்களை பழுது பார்க்க ரூ. 5 இலட்சமும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. |
| 4. அரசாணை எண் 303 (வருவாய் துறை) தேதி 4-3-85. | தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள நகராட்சி சாலைகளை செப்பனிட ரூ. 10 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. |

அரசாணை எண். 921 (ஊ.வ. மற்றும் உள்ளாட்சித் துறை), நாள் 16—2—1985-ல் குற்றால நகரியத்திற்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஐந்தருவியை செப்பனிட்டு பழுது பார்க்க ரூ. 5 இலட்சம், 50 சதவீத மான்யம் 50 சதவீத கடன் முறையில் அரசு நிதியுதவி அளித்துள்ளது.

அரசாணை எண் 39 (நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை), நாள் 27—6—1984-ல் குன்னூர் நகராட்சிக்கு ரூ. 23.36 இலட்சமும், உதகமண்டல நகராட்சிக்கு ரூ. 5.98 இலட்சமும் வெள்ளத்தால் பழுதடைந்த நகராட்சி சாலைகளை செப்பனிட, 50 சதவீதம் கடனாகவும் 50 சதவிகிதம் மான்யமாகவும் நிதியுதவி அரசு அளித்துள்ளது.

## வறட்சி துயர் தணிப்பு.

அரசாணை எல். 273, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 20—9—1984-ல் 1981-82-ம் வருடத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திண்டிவனம் நகராட்சியில் ஆழ் துளைக் கிணறுகள் தோற்றுவித்ததற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு அரசு திண்டிவனம் நகராட்சிக்கு ரூ. 1.01 இலட்சம் மான்யமாக அளித்துள்ளது. இத்தொகை அரசினரிடமிருந்து பெறப்பட்டு, திண்டிவனம் நகராட்சி சார்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது.

### 13. பயிற்சி நிலையம்:

நகராட்சி நிர்வாகத்தில் முக்கிய பதவிகள் வகிக்கும் அதிகாரிகளும், பணியாளர்களும், நிர்வாகத்தில் பணித்திறமை பெற இயலும் வகையில் அவர்களுக்கு உரியவாறு பயிற்சியளிக்க வேண்டியது அவசியம் என்று அரசு கருதியது. இதனை கருத்திற் கொண்டு, பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு 1981-82-ம் ஆண்டில் ஒப்புதலளித்துள்ளது. இந்நிலையம் "தமிழ்நாடு நகர்ப்பகுதி ஆய்வு நிலையம்" என்ற பெயரில் 24—11—1984 முதல் கோயம்புத்தூரில் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் பின்னர் "ஆராய்ச்சி—புள்ளி விவர நிலையமாக" மேம்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் தமிழ்நாடு நகர்ப் பகுதி ஆய்வு நிலையத்திடம் கொடுத்த நிலத்தில் ரூ. 10.50 இலட்சம் மதிப்பீட்டு செலவில் அந்நிலையத்திற்கு நிர்வாக கட்டிடம் கட்டுவதற்காக, அரசு ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1415 ஆம் எண் அரசாணையில் அனுமதியளித்துள்ளது. இந்நிலையத்திற்கு நிர்வாகக் கட்டிடம் கட்டும் பணி பிற துறைகளுக்காக நிறைவேற்றப்படும் பணியாக நிறைவேற்றுவதற்காகப் பொதுப் பணித்துறையிடம்



ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ரூ. 5 இலட்சமும், பொதுப்பணித் துறையிடம் செலுத்தப்பட்டு இக்கட்டிடத்திற்கான கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

### 14. துப்புரவுப் பணியாளர்களுக்கு சலுகைகள் :

நகராட்சிகள், நகரியக் குழுக்கள் ஆகியவற்றில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரசு பின்வரும் சலுகைகள் அளித்துள்ளது :

(1) துப்புரவுப்படி வழங்குதல்;

(2) இரண்டு அரை நாட்களுக்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரு நாளில் வார விடுமுறை வழங்குதல் ;

(3) சீருடை வழங்குதல் ;

(4) சம்பள விதம் தவிர, எல்லாச் சலுகைகள் தொடர்பாக துப்புரவுப் பணியாளர்களை அடிப்படைப் பணியாளர்களுடன் சமமாக கருதுதல் ;

(5) துப்புரவுப் பணியாளர்களை மீண்டும் பணியிலமர்த்தும் போது ஊதிய உயர்வு வழங்குதல் ;

(6) துப்புரவுப் பணியாளர்களை அடிப்படைப் பணியாளர்களாகவும், துப்புரவு மேற்பார்வையாளர்களாகவும் நியமித்தல் ;

எல்லாச் சலுகைகளையும் பொறுத்தமட்டில் துப்புரவுப் பணியாளர்கள் அடிப்படைப் பணியாளர்களுடன் சமமாகக் கருதப்பட வேண்டும். மேற்சொன்ன சலுகைகள் செயல்படுத்தப்படுகின்றன.

### 15 (அ) நகராட்சிகளின் நிதி நிலைமை :

சமீப காலமாக நகராட்சிகளின் நிதி நிலைமை பொதுவாக திருப்திகரமாக இல்லை என கருதப்படுகிறது. நடைமுறையில் உள்ள பணவீக்கத்தினாலும் பொருட்களின் விலையேற்றத்தினாலும், அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோல், அகவிலை ஈட்டுப்படி, நகராட்சி ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு சமமாக, அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுவதால் ஏற்படும் அதிகப்படியான நிர்வாகச் செலவினையும் நகராட்சிகள் தங்களது வருவாயிலிருந்து சரிக்கட்ட முடியாத நிலையில்

[1985 ஜூன் 12

உள்ளன. இந் நிதிப் பற்றாக் குறையினால் பல நகராட்சிகள், தங்களது பணியாளர்களுக்கு குறிப்பிட்ட திங்களில் அவர்களின் மாதச் சம்பளத்தை வழங்க முடியாமலும், நகராட்சிகள் வாங்கிய கடனுக்கு உரிய தவணைத் தொகைகளையும் மற்ற பொறுப்பு களையும், செலுத்த முடியாத இக்கட்டான நிலையிலும் உள்ளன.

பண வீக்கத்தினை கருத்திற்கொண்டு அதனால் பாதிக்கப்பட் டுள்ள பொதுமக்களுக்கு மேலும் வரிச்சுமை அதிகரிக்கா வண்ணம் கொள்கை அளவில், நகராட்சிகள் சொத்து வரியை திருத்தி அமைக்கும் பணியை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்றம் அமையும்வரை, ஒத்திப் போடுவது என்று அரசு முடிவு எடுத்துள்ளது. நகராட்சிகளின் வருவாயில், சொத்து வரி ஓர் முக்கிய வருவாய் தரக்கூடிய இனமாக கருதப்படுகிறது. 1970-71 ஆம் ஆண்டிற்கு பின் சொத்து வரி திருத்தியமைக்கப் படாததால், நகராட்சி நிதிநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது, இதனால் நிதி பற்றாக்குறையாக உள்ள நகராட்சிகளின் எண் ணிக்கை 1980-81-ல் 49 ஆக இருந்தது, 1983-84-ல் 79 ஆக கீழ்க் கண்டவாறு உயர்ந்துள்ளது:—

| வ. எண். வகை. | 1980-81 | 1981-82 | 1982-83 | 1983-84 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. பொது நிதிக் கணக்கில் உபரியாக உள்ள நகராட்சிகளின் எண்ணிக்கை. | 57 | 59 | 39 | 27 |
| 2. பொது நிதிக் கணக்கில் பற்றாகுறையாக உள்ள நகராட்சிகளின் எண்ணிக்கை. | 49 | 47 | 67 | 79 |
| | 106 | 106 | 106 | 106 |

1984-85-ம் வருடத்தில் 13 நகராட்சிகளுக்கு அவைகளின் நிர்வாகச் செலவுகளை சமாளிக்கும்பொருட்டு, வழிவகை முன் பணமாக, நிதி ஒதுக்கீட்டில் இத் தலைப்பின் கீழ் ரூ. 7 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டு இருந்தபோதிலும் ரூ. 45.20 இலட்சம் அரசு நிதியுதவி அளித்துள்ளது. இதுபோலவே 102 நகராட்சி களுக்கு மக்களுக்கு தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும்



1985 ஜூன் 12]

பொருட்டு ரூ. 150 இலட்சம் வழிவகை முன்பணமாக அரசாணை எண் 486 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை), நாள் 4—12—1984-ல் அரசு அளித்துள்ளது.

இவற்றைத் தவிர மதிப்பிற்குரிய தமிழக முதலமைச்சர் 15—8—1984-ல் அறிவித்துள்ளபடி எல்லா நகராட்சிகளையும் மேம் படுத்தும் இலக்குடன், நிதிப் பற்றாக்குறையினால் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க முடியாமல் உள்ள நக ராட்சிகளில் அவற்றை செயல்படுத்துவதற்காக கீழ்க்கண்ட பணி களை நகராட்சிகள் நிறைவேற்ற ஓர் மூன்று வருட திட்டம் தயா ரிக்கப்பட்டுள்ளது:—

(1) ஆரம்ப பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் ;

(2) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டி டங்கள் கட்டுதல் ;

(3) தற்போதுள்ள நகராட்சி சாலைகளை அபிவிருத்தி செய் வதுடன், நகராட்சி பகுதியில் இணைப்பு சாலைகள் அமைத்தல் ;

(4) நகராட்சி சாலைகள் இருமருங்கிலும் மழை நீரையும், கழிவு நீரையும் அகற்றுவதற்காக வடிகால்கள் அமைத்தல் ;

(5) நகராட்சிகளின் புற நகர் பகுதிகளிலும் நகராட்சிகளின் எல்லைக்குள்ளுர் தெரு விளக்குகள் அமைத்தல் ;

(6) நகராட்சிகளில் தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்துதல் ;

(7) நகராட்சிகளின் மருத்துவமனைகளை மேம்படுத்தல் ;

(8) சமூக கழிப்பிடங்களை அமைத்தல் ;

(9) குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்தல் ;

(10) குடிநீர் வழங்குதல் ;

இப்பணிகளை நிறைவேற்ற ரூ. 145.52 கோடிக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நகராட்சிகளின் நிதி பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, அரசு மேலே விவரிக்கப்பட்ட பல வளர்ச்சி திட்டங்களையும், நிதிப் பற்றாக்குறையினால் நகராட்சிகள் நிறைவேற்றாமல் விட்டு விட்ட, மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் சேம நலத் திட்டங்களையும் நகராட்சிகள் நிறைவேற்ற, அவ்வப் போது உதவி வருகிறது. அவ்வாறு திட்டமிடப்பட்ட சேம நலத்

திட்டங்களில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள், சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கும் ஷெட்யூல்ட் வகுப்பினர்களுக்கும், ஷெட்யூல்ட் பழங்குடியினருக்கும் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் தெரிந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் பயனாகும் வகையில் அமைய திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை ;—

(1) நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் ;

(2) விரைவு படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ;

(3) நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற சூழ்நிலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் ;

(4) துப்புரவு தொழிலாளர்களை விடுவிக்கும் நான்குமுனை திட்டம் ;

(5) பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ;

**15 (ஆ) நகராட்சிகளின் நிதிநிலையை அபிவிருத்தி செய்தல்.**

பின்வரும் வருடங்களில் நகராட்சிகளின் நிதி நிலையை அபிவிருத்தி செய்ய கீழ்க்கண்ட வழிமுறைகளை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

**(1) மோட்டார் வாகனவரியில் நகராட்சிகளின் பங்கை உயர்த்துவதற்கு சிறப்புக்குழு அமைத்தல்.**

மோட்டார் வாகனவரி விதிக்கப்படுமுன் நகராட்சிகள், தங்களது சாலைகளைப் பயன்படுத்தும் மோட்டார் வாகனங்களுக்கு சுங்கமும், உரிமைக்கட்டணமும் விதித்து வந்தன. 1939-ம் வருடத்திய மோட்டார் வாகன வரிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு, மோட்டார் வாகனங்களின் மீது வரி விதிக்கும் உரிமையை நகராட்சிகளிடமிருந்து அரசு மேற்கொண்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு ரூ. 21.33 இலட்சம் நிரந்தர மான்யமாக அளித்து வருகிறது. இத்தொகையில் நகராட்சிகள் நகரியங்களுக்கு ரூ. 14.66 இலட்சம் மட்டிலும் கிடைக்கிறது. இந்த நிரந்தர மானியத் தொகை நெடுங்காலமாக மாற்றியமைக்கப்படவில்லை. மோட்டார் வாகனவரி மூலம் அரசுக்கு வருவாய் வருடத்திற்கு வருடம் அதிகம் கிடைத்து வந்த போதிலும்



நகராட்சிகளின் பங்கு அதிகரிக்கப்படவில்லை. மோட்டார் வாகன வரியில் உள்ளாட்சியின் பங்கை மாற்றியமைக்கும் பொருட்டு அரசு ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தும்பொழுது மோட்டார் வாகன வரி மூலம் கிடைக்கும் வருவாயில் நகராட்சிகளின் பங்கு உகந்த அளவில் உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(2) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.**

திட்டக்குழுவினால் தோற்றுவிக்கப்பட்ட ஆய்வுக்குழு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நகர்புற அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூ. 30 கோடியும் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தலுக்கு ரூ. 250 இலட்சமும் மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட நகர்புற குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற சூழ்நிலையை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு ரூ. 200 இலட்சமும் இத்துறைக்கு அனுமதித்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் இத்துறையில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட ரூ. 30 கோடியில் கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகள் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன.

| மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளின் விபரம். | ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| (1) தனியார் மனைத்திட்ட அமைப்புகளை மேம்படுத்துதல் | 50 |
| (2) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் | 50 |
| (3) நகராட்சி சாலைகளில் மழைநீர், கழிவுநீர் செல்ல வடிகால் அமைத்தல் | 50 |
| (4) தன்னிறைவுத் திட்டம் | 1,500 |
| (5) ஆரம்ப பள்ளிகளுக்கும் நடுநிலைப்பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுதல். | 100 |

| ..மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளின் விபரம். | ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| (6) நகராட்சிகளின் மருத்துவ மனைகளை அபிவிருத்தி செய்தல். | 50 |
| (7) நிதி நலிவுற்ற நகராட்சிகளில் சமூக தொலைக் காட்சி பெட்டி அமைத்தல். | 150 |
| (8) துப்புரவு தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் அமைத்தல். | 150 |
| (9) விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளின் மேம பாட்டுத் திட்டம். | 250 |
| (10) நகராட்சிகள் நிதி உதவி வாரியம் தோற்று வித்தல். | 100 |
| (11) பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம். | 50 |
| (12) நகராட்சிகளில் தாய்சேய் நல விடுதிகளை மேம் படுத்துதல். | 50 |
| (13) துப்புரவு - பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நகராட்சிகளுக்கு மான்யம் அளித்தல். | 200 |
| (14) நகராட்சிகளுக்கு அகவிலை ஈட்டுப்படி மான்யம் அளித்தல். | 250 |
| மொத்தம் | 3,000 |

மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட அதற்கான நிதியுதவி மேலே விவரிக்கப்பட்டவாறு கிடைக்கப்பெற்றபின், வருங் காலத்தில் நகராட்சிகள் நிதிப்பற்றாக்குறையின்றி செயல்படுத்து வதுடன், மத்திய மாநில அரசால் தோற்றுவிக்கப்படும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களில் நகராட்சிகள் முக்கிய பங்கேற்கும் என்று நம்பப்படுகிறது.



## நகராட்சித் தேர்தல்கள்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு 18 சதவீத மும், பெண்களுக்கு 15 சதவீதமும் நகராட்சி உறுப்பினர் பதவி மற்றும் நகராட்சி தலைவர் பதவிகளில் தனியிட ஒதுக்கீடு செய்து 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நகராட்சித் தேர்தல்களை நடத்த அரசு முடிவு செய்து அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டது. எனினும், தனியிட ஒதுக்கீடு செய்வதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களின் காரணமாக, சென்னை உயர்நீதி மன்றம் 23—3—1984 தேதியிட்ட தனது தீர்ப்பில் நகராட்சித் தேர்தலுக்கு தடைவிதித்து தீர்ப்பு வழங்கி யது. எனவே திட்டமிட்டபடி 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நகராட்சித் தேர்தல்களை நடத்த முடியவில்லை. மேலும் ஊராட்சித் தேர்தல்களில் இவ்வாறு செய்யப்பட்ட தனியிட ஒதுக்கீடுகளை எதிர்த்து புது டெல்லி உச்ச நீதி மன்றத்தில் ஒரு மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் இல்லாமல் இருப்பதால், உடனடியாக தேர்தல்களை ஊராட்சித் தேர்தல்களுடன் சேர்ந்து கட்சி சார்பற்ற முறையில் நடத்துவதற்காக 1920 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராட்சிச் சட்டத்திலுள்ள பழைய முறைப்படி ஒதுக்கீடு களைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவு களுக்கேற்ப தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டம் தக்கபடி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளும் அரசினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

## சென்னை மாநகராட்சி.

## கொள்கை விளக்கக் குறிப்பு—1985-86.

### முன்னுரை.

இந்தியாவின் பழம்பெரும் மாநகராட்சிகளுள் ஒன்றான சென்னை மாநகராட்சி கிழக்கிந்திய கம்பெனியால் பிறப்பிக்கப் பட்ட சட்டத்தின்கீழ் 29—9—1688-ல் நிறுவப்பட்டது. 1792-ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டம் சென்னை மாநகராட்சிக்கு சென்னையில் வரிகள் வசூலிக்கும் அதிகாரத்தினை வழங்கியது.

[1985 ஜூன் 12

1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட (அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது) சென்னை மாநகராட்சிக்கான சட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

### மக்கட்தொகை மற்றும் பரப்பளவு.

1978 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 12 பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட்டதன் மூலம் சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டராக பெருகியுள்ளது. அதிகரிக்கப்பட்ட பரப்பளவு முந்தைய பரப்பளவைப்போன்று ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்காகும்.

(1) கொடுங்கையூர்

(2) வில்லிவாக்கம்

(3) கொளத்தூர்

(4) எருக்கஞ்சேரி

(5) விருகம்பாக்கம்

(6) சாலிகிராமம்

(7) கோடம்பாக்கம்

(8) வேளச்சேரி

(9) திருவான்மியூர்

(10) கனகம் தரமணி

(11) கோயம்பேடு

(12) திருமங்கலம்.

1961-ல் 17.2 இலட்சங்களாக இருந்த சென்னை மாநகராட்சியின் மக்கட்தொகை 1981-ல் 34 இலட்சங்களாக அதிகரித்துள்ளது. தற்பொழுதுள்ள ஜனத்தொகை ஏறத்தாழ 36 இலட்சங்களாகும்.

### நிர்வாகம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் 1—12—1973-ல் கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர் மன்றம் மற்றும் நிலைக்குழுக்களின் அதிகாரங்களை நிர்வகித்து வருகிறார். சென்னை மாநகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரி ஆணையர் ஆவார்.



1985 ஜூன் 12]

### நிதிநிலை.

தனி அதிகாரி—மன்றம் மற்றும் நிதி நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 1985-86 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | வரவு. | செலவு. | பற்றாக்குறை. |
|---|---|---|---|
| 1. பொது நிதி .. | 3,811.83 | 3,869.33 | 57.50 |
| 2. ஆரம்பக் கல்வி நிதி | 796.00 | 945.00 | 149.00 |
| 3. மூலதன நிதி .. | 699.26 | 1,717.20 | .. |

### வரவு-செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.
### பொது நிதி.

1985-86 ஆம் ஆண்டின் உத்தேச வருமானம் ரூ. 38.12 கோடியாகும். 1984-85 ஆம் ஆண்டின் வருமானம் திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி ரூ. 34.72 கோடி. ரூ. 3.40 கோடி அதிக வருமானம், கீழ்க்கண்ட இனங்களின் அதிக வசூல் மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது:—

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| (1) சொத்துவரி | 50.00 |
| (2) விற்பனை வரியின் மீதான கூடுதல் உபரி வரி. | 125.00 |
| (3) கேளிக்கை வரி | 50.00 |
| (4) சொத்து மாற்றத்தின் மீதான தீர்வை | 25.00 |
| (5) இதர இனங்கள் | 90.00 |

1985-86 ஆம் ஆண்டின் செலவினம் ரூ. 38.69 கோடியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி செலவு ரூ. 37.06 கோடியாகும். 1985-86 ஆம் ஆண்டின் பற்றாக்குறை ரூ. 0.57 கோடியாகும். கூடுதலாக வழங்கப்பட்டு வரும் பஞ்சப்படி அதிகமான செலவிற்கு முதன்மையான காரணமாகும்.

## ஆரம்பக் கல்வி நிதி.

1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வருமானம் ரூ. 7.96 கோடியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி வருமானம் ரூ. 7.23 கோடியாகும். சொத்துவரி மற்றும் சத்துணவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மானியம் மூலமாக அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

1984-85 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி செலவு ரூ. 8.81 கோடியாகும். 1985-86 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் செலவினங்களாக ரூ. 9.45 கோடி நிர்மானிக்கப்பட்டுள்ளது. சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள செலவே, அதிகமான செலவினத்திற்கு முதன்மையான காரணமாகும்.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை சென்னை மாநகரில் சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்திற்கு அரசு முழு மானியம் அளித்து வருகிறது. அரசு ஆணையின்படி இத்திட்டம் செப்டம்பர் 1984 முதல், மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

36. சத்துணவு மையங்களின் மூலம் 1984-85 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கு வழங்கிய சத்துணவின் எண்ணிக்கை 2,55,53,656 ஆகும். இதற்கான செலவு ரூ. 126.67 இலட்சங்களாகும். 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 150.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## போக்குவரத்து (சாலைப்பணிகள்).

சென்னை மாநகராட்சி மொத்தம் 1,570 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. இவற்றில் பெருந்து வழித்தடங்கள் 268 கிலோ மீட்டர் ஆகும். மற்றவை பஞ்சாயத்து சாலைகள் உட்பட 1,302 கிலோமீட்டர் ஆகும். ஐந்தாண்டிற்கொருமுறை இச்சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்காகும் ஓர் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ. 14.00 கோடி ஆகும். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் சராசரியாக ரூ. 6.00 கோடி மட்டுமே சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.



இதுவரை அரசின் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வந்த மாநகரத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள சாலைகளை சென்னை மாநகராட்சியே பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ள, அரசாணை எண். 247, போக்குவரத்துத்துறை, நாள் 27—3—1985 மூலம் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இச்சாலைகளின் மொத்த நீளம் 39.181 கிலோ மீட்டர் ஆகும். இந்த சாலைகளை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கவும், பராமரிக்கவும் ஓர் ஆண்டிற்கு சுமார் ரூ. 67.5 இலட்சங்கள் தேவைப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டு மூலதன திட்டத்தில் பேருந்து வழித்தட சாலைகள், உட்புறச்சாலைகள், முந்தைய ஊராட்சி சாலைகள், ஆகியவைகளின் மேம்பாட்டிற்கு ரூ. 601.19 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பேருந்து வழித்தடச் சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள்.

1985-86 ஆம் ஆண்டில் 54 பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த ரூ. 258.19 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிட்டுள்ள முக்கியமான பேருந்து வழித்தடச்சாலைகள் 1985-86 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட உள்ளன:—

(1) கோன்னூர் நெடுஞ்சாலை
(2) இராஜாஜி சாலை
(3) தங்கசாலை
(4) டெய்லர் சாலை
(5) வேப்பேரி நெடுஞ்சாலை
(6) தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை
(7) சிமெட்ரி சாலை
(8) வட டெர்மினல் சாலை (கோபதி நாராயண தெருவிலிருந்து)
(9) வில்லேஜ் சாலை
(10) காவல் ஆணையர் அலுவலக சாலை
(11) பீட்டர்ஸ் சாலை

மேலும் 654 உட்புறச் சாலைகளும் ரூ. 275 இலட்சம் செலவில் 1985-86-ல் புதுப்பிக்கப்பட உள்ளன.

## முந்தைய பஞ்சாயத்து சாலைகள்.

சென்னை மாநகருடன் 1978-ல் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துகளில் உள்ள சாலைகள் பெரும்பாலும் மண்சாலைகளாகவே உள்ளன. இவற்றிற்கு தனி கவனம் செலுத்தப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டில் ரூ. 68 இலட்சம் செலவில் 216 சாலைகள் அமைக்கப்பட உள்ளன.

## சாலை பராமரிப்பு.

சாலைகளைப் புதுப்பிப்பதுடன், சாலைகளின் நடைபாதைகள் போடுதல், பராமரிப்பு, சாலைகளில் தோன்றியவற்றை சீர் செய்தல் ஆகியவற்றிற்கு ரூ. 92.00 இலட்சம் 1985-86 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாலங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் மற்றும் ரயில்பாதை இவற்றிற்கிடையே கட்டப்பட்ட பாலங்கள் மிகவும் குறுகியதாக உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளன. இப்பாலங்களை அகலப்படுத்துவதற்கு உதவியளிக்குமாறு அரசுக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

(அ) ரிசர்வ் வங்கிற்கு அருகிலுள்ள சுரங்கப் பாதையை பெரிய அளவில் பழுது பார்க்க 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 23.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. அரசு நெடுஞ்சாலை கிராம பொறியியல் பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பணி 1985-86-ல் நிறைவு பெறும். தற்போதைய திருத்த மதிப்பீட்டின்படி இப்பணிக்கு ரூ. 40.00 இலட்சத்துக்கு மேலாக செலவு ஆகும் என்பதால் அதிக தொகை (அதாவது ரூ. 17.00 இலட்சங்கள்) வழங்குமாறு அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. அரசின் அனுமதியை எதிர்நோக்கி அரசு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறைக்கு சென்னை மாநகராட்சி ரூ. 17.00 இலட்சம் மேற்கொண்டு செலுத்தியுள்ளது.

(ஆ) மைலாப்பூர் முண்டகக்கண்ணியம்மன் கோயில் தெருவில் பக்கிங்காம் கால்வாயிற்கு குறுக்கே உள்ள பழைய பாலத்தை இடித்து புதுப்பிக்க அரசு ரூ. 35.00 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு, 1985-86-ல் நிறைவுபெறும்.



(இ) மணியக்காரர் சத்திரசாலையில் தற்போதுள்ள குறுக்குப்பாதைக்கு பதிலாக 1985-86-ல் ஒரு சுரங்கப்பாதை அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 100 இலட்சமாகும். இவ்வாண்டின் செலவு ரூ. 10 இலட்சமாகும்.

(ஈ) அண்ணா நகர் இரண்டாவது மெயின் சாலையையும், புது ஆவடி சாலையையும் இணைக்கும் வகையில் ஓட்டேரி நல்லாவில் ஒரு பாலம் ரூ. 20 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தனியார் தெருக்கள்.

சென்னை மாநகரில் 1,543 தனியார் தெருக்கள் உள்ளன. அரசு ஆணை எண் 1822, ஊர் வளர்ச்சி உள்ளாட்சி துறை, நாள் 27—11—1980-படி தனியார் தெருக்களில் சாலை அமைத்தல், தெரு விளக்கு அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகள் வீடுகளின் உரிமையாளர்கள் அபிவிருத்தி செலவில் 25 சதவிகித தொகையை முன்னதாக செலுத்தியபிறகே மேற்கொள்ளப்படுகின்றன. மீதமுள்ள 75 சதவிகிதம் வேலை முடிந்தவுடன் தவணை முறையில் வசூல் செய்யப்படும். 1985-86 ஆம் ஆண்டில் தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்ய ரூ 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர்களிடமிருந்து 25 சதவிகிதம் முன்பணம் பெறாமல் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும், இதற்கு அரசின் நிதி உதவி கோரியும், அபிவிருத்தி செலவை வேலைகள் முடிந்தபிறகு உரிமையாளர்களிடமிருந்து வீட்டுவரியுடன் 10 ஆண்டுத் தவணைகளில் சேர்த்து வசூலிக்கப்படவும் அனுமதிகோரி அரசிடம் அணுகப்பட்டுள்ளது.

## குடிசைப் பகுதிகள்.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் நிறுவப்பட்டபின், குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்தவும், அவர்களுக்கு மாற்று இடம் மேம்படுத்தி அமைத்துத் தரவும் சென்னையில் அநேக இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மக்கட் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பாகம் 1,700 குடிசைப் பகுதியில் வசிக்கின்றனர். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் மேம்படுத்தப்பட்டு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட இடங்களில்

மாநகராட்சி அவற்றின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கி வருகிறது. குடிசைப் பகுதியிலுள்ள சாலைகள், தெரு விளக்குகள், மழைநீர் வடிகால்கள், பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பிற்கு, 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 24.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கழிப்பிடங்கள்.

சென்னை மாநகரிலுள்ள 894 பொதுக் கழிப்பிடங்களை மாநகராட்சி பராமரித்து வருகிறது. இவற்றில் 99 கழிப்பிடங்கள் கட்டணக் கழிப்பிடங்கள் ஆகும். எஞ்சியுள்ள 795-ம் பொதுக் கழிப்பிடங்களாகும். இவற்றைச் சுத்தம் செய்ய 1,112 ஊழியர் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். கட்டணக் கழிப்பிடங்களின் மூலம் ஆண்டிற்கு ரூபாய் 4.96 இலட்சம் வருமானம் வருகிறது. பொதுக் கழிப்பிடங்கள் யாவற்றிற்கும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் வசதி இல்லாத கழிப்பிடங்களுக்கு 'இந்தியா மார்க்-2' பம்புடன் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிக்க 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பீஹார் மாநிலத்தில் பாட்னா நகரத்தில் ஒரு புதிய மாதிரி அமைப்பில் 'பொதுக் கழிப்பிடம்' நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அமைப்பில் கழிப்பிடத்தைச் சுத்தம் செய்ய மிகக் குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும். அத்தகைய 'புதிய அமைப்புக் கழிப்பிடங்களை' சென்னையிலும் அமைக்க அரசுக்கு எழுதப்பட்டு கீழ்க்காணும் 8 இடங்களில் புதிய அமைப்புக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(1) லோன் சதுக்கம்.
(2) கிருஷ்ண பிள்ளை தெரு, பொம்பூர்.
(3) பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.
(4) வ.உ.சி. சாலை.
(5) ஜி.என். சாலை.
(6) கிரியப்பா சாலை.
(7) கனால் சாலை.
(8) மைலாப்பூர் குளம் அருகில்.

இந்த கழிப்பிடங்கள் 1985-86 ஆம் ஆண்டில் கட்டப் பெறும்.



மேலும் தற்போதுள்ள பொதுக் கழிப்பிடங்களுக்கு அருகே குழந்தைகளுக்கான கழிப்பிடங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மழைநீர் வடிகால்.

சென்னை மாநகரின் முழுவதும் முறையான அமைப்பில் மழைநீர் வடிகால்கள் அமையப்பெறவில்லை. மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏற்பட்டு பொதுமக்கள் அநேக இடைஞ்சல்களுக்கு உள்ளாகிறார்கள். மேலும் கொசுக்கள் பெருகவும் இந்த மழை நீர்த்தேக்கங்கள் காரணமாக இருக்கின்றன. தற்போது சென்னை மாநகரில் உள்ள மழைநீர் வடிகால்களின் நீளம் 454.20 கி.மீ. ஆகும். இது நகரிலுள்ள சாலையின் நீளத்தில் நான்கில் ஒரு பகுதியே ஆகும்.

1985-86 ஆம் ஆண்டில் மழைநீர் வடிகால் அமைக்க ரூபாய் 199 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் குடிசைப் பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைக்க குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அளிக்கப்பட்ட தொகையும் அடங்கும். 1985-86-ல் கட்டப்பெறும் மழைநீர் வடிகால்களில் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன :—

(1) பங்களா தெரு விரிவு.
(2) நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை.
(3) பொன்னுசாமி நாயுடு தெரு.
(4) 'எல்' பிளாக், அண்ணா நகர்.
(5) 'ஓ' பிளாக், அண்ணா நகர்.
(6) மாட்லி சாலை.
(7) 11-வது அவென்யூ, இந்திரா நகர்.
(8) செங்குன்றம் சாலை.
(9) வில்லிவாக்கம்.
(10) திருமூர்த்தி நகர் பிரதான சாலை.

## துப்புரவு.

சென்னை மாநகரிலுள்ள 1,650 கி.மீ. சாலைகளிலும், சுமார் 1,700 குடிசைப் பகுதிகளிலும் மகநகராட்சி துப்புரவு வேலைகளைச் செய்து வருகிறது. நாள் ஒன்றுக்கு சுமார் 1,800 டன் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு கொடுங்கையூர், வேளச்சேரி ஆகிய இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்த துப்புரவு

[1985 ஜூன் 12

பணிகளுக்கு 796 மாட்டு வண்டிகளும் 138 லாரிகளும் ஈடுபடுத்தப்படுகின்றன. 6,685 துப்புரவு ஊழியர்கள் துப்புரவுப் பணியினை மேற்கொள்கின்றனர். தற்போதுள்ள லாரிகளில் பெரும்பாலானவை பல ஆண்டுகள் ஆகிவிட்டமையாலும், துப்புரவுப் பணிக்கு தற்போதுள்ள லாரிகளின் எண்ணிக்கை போதாமையாலும் 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 81.40 இலட்சம் செலவில் 37 புதிய லாரிகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்காக, தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தினிடமிருந்து லாரிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டிலும் இம்முறை தொடரப்படும்.

துப்புரவுப் பணியை மேலும் தீவிரப்படுத்தும் நோக்கோடு, பெரும்பாலான லாரிகளை ஒரு நாளைக்கு இருமுறை உபயோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### திடக்கழிவு மேலாளுகை.

உலக வங்கியின் உதவிகொண்டு சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் 2-ன் கீழ் மேற்குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளோர் வசிக்கும் பகுதிகளில் சேரும் திடக்கழிவுப் பொருட்களை அகற்றுவதில் துரிதப்படுத்த இத்திட்டம் வழி வகுக்கிறது. அதிகரித்து வரும் மக்கட் தொகைக்கேற்ப சேர்ந்துவரும் கழிவுப் பொருட்களை சேகரிக்கவும், அகற்றவும் ஆகும் செலவினைக் குறித்த தொலைநோக்குத் திட்டங்களை மேற்கொள்ளவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

மேற்குறித்த திட்டத்தில் இதுவரை கீழ்க்கண்ட தளவாடங்கள் வாங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) கைவண்டிகள் | 3,000 |
| (2) கழிவுப் பெட்டிகள் | 6,000 |
| (3) சிறிய மோட்டார் வண்டிகள் | 10 |
| (4) புல்டோசர்கள் | 2 |
| (5) முன்புறமாக செயல்படும் லோடர்கள் | 2 |
| (6) டிப்பர் டிரக் | 6 |

இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட வேண்டிய கட்டிடங்கள் யாவும் முடிவுறும் நிலையில் உள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 25 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 12]

திடக்கழிவில் துப்புரவுப் பணியை மேம்படுத்தவும், மாநகராட்சியின் பராமரிப்புப் பணியினை மேம்படுத்தவும் ஆலோசனைக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை முடிவினை ஆராய்ந்து திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### தெரு விளக்குகள் அமைத்தல்.

ஏறக்குறைய எல்லா சாலைகள், வீதிகள், மற்றும் குடிசைப் பகுதிகள் அனைத்திலும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லா பெரும் சாலைகளும், சாலை சந்திப்புகளும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டு நன்றாக எரிகின்றன. சென்னை மாநகராட்சி 52,060 மின் விளக்குகளைப் பராமரித்து வருகின்றது, அவையாவன :—

| | |
|---|---|
| (1) சோடியம் ஆவி விளக்குகள் | 3,799 |
| (2) பாதரச ஆவி விளக்குகள் | 2,122 |
| (3) குழல் விளக்குகள் | 37,057 |
| (4) மிகு ஒளிவிளக்குகள் மற்றும் பிற விளக்குகள் | 1,628 |
| (5) பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள விளக்குகள் | 7,454 |
| மொத்தம் | 52,060 |

1985-86 ஆம் ஆண்டில் தெருவிளக்குகள் அமைத்தல், சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல், புதைக் கம்பிகள் புதுப்பித்தல் ஆகியவைகளுக்காக ரூ. 221 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் சாலைகளில் 1,000 சோடியம் ஆவி விளக்குகள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) சாந்தோம் நெடுஞ்சாலை.
(2) சர்தார் படேல் சாலை (ஒரு பகுதி).
(3) ராஜ்பவன் சாலை.
(4) 2 மற்றும் 3 அவின்யு, அண்ணா நகர்.
(5) எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை.
(6) திருவொற்றியூர் நெடுஞ்சாலை.
(7) பல்லவன் சாலை.
(8) சூரிய நாராயணா சாலை.
(9) மேடவாக்கம் குளம் சாலை.

658 தெருவிளக்குகள் 48 குடிசைப் பகுதிகளில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 1,150 விளக்குகள் அமைக்கப்படும்.

### கட்டிடங்கள் கட்டுதல்.

மாநகர பள்ளிகள், மகப்பேறு நிலையங்கள், மாநகர அலுவலகங்கள், சலவைத்துறை, இடுகாடு, சுடுகாடு, கழிவறைகள், அங்காடிகள் ஆகியவைகளுக்கான கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் கட்டப்படுகின்றன. அடையாறில் மகளிர் தங்கும் விடுதி மற்றும் நவீன கட்டணக் கழிப்பிடங்கள் போன்ற முக்கியமான வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு வழங்கும் நிதியிலிருந்து அந்த நிதியிலிருந்து கட்டப்படவேண்டிய குறிப்பிட்ட வேலைகளும், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மூலமாக மற்ற வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ. 114 இலட்சம் செலவில் 1985—86 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கட்டிட வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) பள்ளிக் கட்டிடங்கள் (விஞ்ஞானக்கூடங்கள் சேர்த்து) | 10 |
| (2) மருந்தகக் கட்டிடங்கள் | 4 |
| (3) அங்காடிகள் | 6 |
| (4) மகளிர் தங்கும் விடுதி | 1 |
| (5) அலுவலகக் கட்டிடங்கள் | 4 |
| (6) பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் | 3 |
| (7) சலவைத்துறைகள் | 4 |
| (8) இடுகாடு, சுடுகாடு | 5 |

### ஆரம்பக் கல்வி.

சென்னை மாநகராட்சி 370 ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,69,500 ஆகும். ஆசிரியர் மற்றும் மற்ற நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை 4,792. மேற்கண்ட 370 பள்ளிக்கூடங்களில் 28 பள்ளிக்கூடங்கள் தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிக்கூடங்களை நாளடைவில் மாநகராட்சியின் சொந்தக்கட்டிடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில், புதிய கட்டிடங்கள் கட்டவும், தனியார் கட்டிடங்கள், காலிமனை வாங்கவும் ரூ. 57.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்விக்காக 1985-86-ல் ரூ. 945.33 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### உயர்நிலை, மேல் நிலைக்கல்வி.

சென்னை மாநகராட்சி 25 உயர்நிலை, 10 மேல்நிலைப்பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருகிறது. எல்லாப்பள்ளிக் கூடங்களும் மாநகராட்சியின் சொந்தக்கட்டிடங்களில் உள்ளன. இவற்றில் பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 32,650, ஆசிரியர் மற்றும் இதர ஊழியர்களின் எண்ணிக்கை 1,529 ஆகும்.

மேற்கண்ட பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பராமரிக்க 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நிலை, மேல்நிலைக் கல்விக்கு 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 254.15 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் நுங்கம்பாக்கம் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் 'கம்பூட்டர் கல்வி' மேற்கொள்ளப்படும். இதற்காக மூன்று முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள். தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தினரால் நன்கொடையாக வழங்கப்பட்ட கம்பூட்டர் மேற் குறித்த பள்ளிக் கூடத்தில் நிறுவப்பெற்றுள்ளது.

### பரிசுத் திட்டங்கள்.

மாநகராட்சிப் பள்ளிக்கூட மாணவர்களை அதிக மதிப்பெண்கள் பெற ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பரிசுத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

### பத்தாம் வகுப்பு.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மிக அதிக மதிப்பெண்கள் பெறும் மாநகராட்சிப்பள்ளி மாணவ மாணவியர்க்கு கீழ்க்கண்டபடி ரொக்கப் பரிசு அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. ஆதி திராவிட மாணவ மாணவியர். | ஒரு மாணவர் ரூ. 250<br>ஒரு மாணவி ரூ. 250 |
| 2. மற்ற (ஆதி திராவிடரல்லாதவர்) மாணவ மாணவியர். | ஒரு மாணவர் ரூ. 250<br>ஒரு மாணவி ரூ. 250 |

மேலும் ஒவ்வொரு பாடத்திலும் மிக அதிக மதிப்பெண் பெறும் ஒவ்வொரு மாணவ மாணவியர்க்கு தலா ரூ. 100 ரொக்கப் பரிசும் அளிக்கப்படுகிறது.

## 12-ஆம் வகுப்பு.

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மிக அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவியர்க்கு கீழ்க்கண்டவாறு ரொக்கப்பரிசு அளிக்கப்படுகிறது :—

**1. மூன்றாம் பிரிவு பாடங்கள்.**

| | |
|---|---|
| மிக அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவன் ஒரு மாணவி | ஆதி திராவிடர் மாணவர், மாணவி தலா ரூ. 200. |
| | மற்ற (ஆதி திராவிடரல்லாதார்) மாணவர், மாணவி தலா ரூ. 200. |
| 2. எல்லாப் பாடங்களிலும் சேர்ந்து மிக அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவன், ஒரு மாணவி. | ஆதி திராவிடர் மாணவர், மாணவி தலா ரூ. 250. |
| | மற்ற (ஆதி திராவிடர் அல்லாதார்) மாணவர், மாணவி தலா ரூ. 250. |

## ஆசிரியர்கள்.

பத்தாம் வகுப்பு ஆசிரியர்களின் செயல் திறனை சிறப்பிக்கவும் ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. பொதுத் தேர்வில் 100 விழுக்காடு மாணவர்கள் தேர்வடைந்தால் | எந்தப் பாடத்தில் 100 விழுக்காடு தேர்வு பெற்றிருக்கிறார்களோ அந்தப் பாடங்களின் ஆசிரியர்க்கு தலா ரூ. 100. |
| 2. 75 முதல் 99 விழுக்காடுகள் வரை தேர்வடைந்தால் | எந்தப் பாடங்களில் 75 முதல் 99 விழுக்காடு வரை பெற்றிருக்கிறார்களோ அந்தப் பாடங்களின் ஆசிரியர்க்கு தலா ரூ. 50. |

இத்தகைய ரொக்கப்பரிசு வழங்க 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



## பொது சுகாதாரம்.

மற்ற அலுவல்களுக்கிடையில் சுகாதாரம் பராமரிப்பு, தொற்று நோய் தடுப்பு, பிறப்பு-இறப்பு புள்ளிவிவரங்கள் சேகரித்தல், மகப்பேறு நிலையங்கள் அமைத்தல், மற்றும் குடும்ப நலத் திட்ட நிலையங்கள் அமைத்தல் போன்ற வேலைகளையும் மாநகராட்சி நிறைவேற்றி வருகிறது.

கீழ்க்காணும் மருந்தகங்கள், மகப்பேறு நிலையங்கள், போன்றவைகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| (1) மருந்தகங்கள் | 69 |
| (2) மகப்பேறு நிலையங்கள் | 40 |
| (3) குடும்ப நல நிலையங்கள் | 24 |
| (4) குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்கள் | 4 |
| (5) தொற்று நோய் மருத்துவமனை | 1 |
| (6) காசநோய் மருந்தகம் | 2 |

சுகாதார மேம்பாடுகளுக்காக 1985-86 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| (1) மருந்துகள் | 50.00 |
| (2) கொசுத் தொல்லை ஒழிக்க பூச்சி மருந்துகள் | 15.00 |
| (3) குடும்பநலத் திட்டம் | 10.00 |
| (4) நோயாளிகள் உணவு | 1.52 |
| (5) மற்ற மருந்தகச் செலவுகள் | 4.00 |
| (6) நோய் பாதிக்கா நிலை உருவாக்கும் திட்டம் | 1.00 |

கூவம் நதி, அடையாறு, பங்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் நீர் நிலைகளைக் கொண்டு உள்ளதுதான் கொசுத் தொல்லைக்கான மூல காரணம் ஆகும். அந்நீரில் உள்ள நீர்த் தாமரைகள் கொசுத் தொல்லைகளைப் போக்கும் திட்டங்களுக்கு

எதிரிகளாக உள்ளன. எனினும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தல், 60 புகை கக்கும் இயந்திரங்கள் உபயோகித்தல் (1984-85-ல் வாங்கி தீவிரமாக பயன்படுத்தப்பட்டவை) தொடர்ந்து நடைபெறும். மாநில சுகாதார இயக்கம் டி.டி.டி. தெளிப்பதற்குத் தேவையான மருந்தை சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. இதன் மூலம் குடிசைப்பகுதிகளிலும், தாழ்வான பகுதிகளிலும் மருந்து தெளித்தல் மேற்கொள்ளப்படும்.

1985-86 ஆம் ஆண்டிற்கான குடும்பநலத் திட்டத்தின் குறியீடு 46,300 ஆகும்.

## இதர பணிகள்.

பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், சமூகக்கூடங்கள், சலவை நிலையங்கள் மற்றும் இடுகாடு, சுடுகாடு முதலியவற்றைப் பராமரிப்பதும் சென்னை மாநகராட்சியின் இதர பணிகளில் அடங்கும். தற்பொழுது சென்னை மாநகரில் அமைந்துள்ள அவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பராமரிக்க 1985-86-ல் ஒதுக்கியுள்ள தொகை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| பெயர். | எண்ணிக்கை. | 1985-86 ஆம் ஆண்டின் செலவு மதிப்பீடு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 பூங்காக்கள் .. .. .. | 88 | 53.68 |
| 2 விளையாட்டு மைதானங்கள் | 80 | 12.90 |
| 3 விளையாட்டுத்திடல்கள் .. | 3 | 11.98 |
| 4 அங்காடிகள் .. .. | 14 | 8.45 |
| 5 சமூகநலக்கூடங்கள் .. | 10 | 4.33 |
| 6 சலவை நிலையங்கள் .. | 10 | 1.44 |
| 7 இடுகாடு, சுடுகாடு .. | 30 | 3.75 |



ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு நகர்ப்புற வளர்ச்சியின்கீழ் ரூ. 25.00 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநில திட்டக்குழு அறிவித்த தொகையாகும். அவற்றின் விவரங்களாவன :—

| | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| (1) தெரு விளக்கு அபிவிருத்தி | 277.00 |
| (2) திடக்கழிவு மேலாளுகை (சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2) | 173.00 |
| (3) குடிசைப்பகுதிகள் அபிவிருத்தி | 50.00 |
| (4) பலவகைப்பட்ட மானியம் | 1,300.00 |
| (5) பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடன்கள். | 500.00 |
| (6) மழை நீர் வடிகால்கள் | 200.00 |
| மொத்தம் | 2,500.00 |

## 1985-86 ஆம் ஆண்டுத் திட்டம்.

சென்னை மாநகராட்சிக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் 1985-86 ஆம் ஆண்டு அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 924.26 இலட்சம் கடனாகவும், மான்யமாகவும் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது :—

| தலைப்பு. (1) | மானியம். (2) | கடன். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1 சென்னை நகர் வளர்ச்சித்திட்டம்-2-ன் கீழ் திடக் கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கு உதவித் தொகை. | 25.00 | .. | 25.00 |
| 2 பலதர மான்யம் (விற்பனை வரியின் மீதான உபரி வரியில் நிதி அளிப்பது). | 325.00 | .. | 325.00 |
| 3 துப்புரவுப் பணிக்காக லாரிகள் வாங்க. | .. | 57.00 | 57.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 மழை நீர் வடிகால் அமைத்தல், மின்புதைக் கம்பிகள் மாற்றி அமைத்தல் போன்ற வற்றிற்கு உதவித் தொகை. | 262.50 | .. | 262.50 |
| 5 பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைக்க. | 7.50 | 7.50 | 15.00 |
| 6 மழை நீர் வடிகால் முதலிய வேலைகட்கு. | .. | 234.00 | 234.00 |
| 7 பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிக்க. | 5.76 | .. | 5.76 |
| மொத்த தொகை. | 625.76 | 298.50 | 924.26 |

## முடிவுரை.

நிர்வாகத்திறமையினை அபிவிருத்தி செய்ய பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநகராட்சியின் பராமரிப்புப்பணியினை அபிவிருத்தி செய்வதற்கும், திடக்கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கும் ஆலோசனைக் குழுமத்தின் பணி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிவடைந்ததும் பரிந்துரையின்படி நிர்வாகச் சீரமைப்பு மேற்கொள்ளப்படும். சொத்துவரி வருமானத்தைப் பெருக்கவும், சிறந்த முறையில் சொத்துவரி வசூல் செய்யவும், ஒரு ஆலோசனைக் குழுமம் அமைக்கப்பட்டு, ஆரம்பக்கட்டப் பரிசீலனை முடிவடைந்துள்ளது. முழுமையான பரிசீலனை 1985-86-ல் முடிவடையும். சொத்துவரி வசூல், மாநகராட்சியின் வரவு-செலவுக் கணக்கு, ஊழியர்களின் ஊதியக் கணக்கு இவைகளை 'கம்ப்யூட்டர்' மூலம் கணக்கு வைக்க அரசு அனுமதியளித்துள்ளது. இதன் ஆரம்பக்கட்ட செலவை உலக வங்கி மேற்கொள்கிறது. பிறகு ஆகும் செலவை மாநகராட்சியே மேற்கொள்ளும்.

மாநகராட்சியின் சொத்து வரி, பிற வரிகள், வருமானங்களைப் பெருக்க மாநகராட்சி தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் இந்த அதிகரித்துள்ள வருமானம், அதிகரித்து வரும் நிர்வாகச் செலவு, பொருட்களின் விலை



உயர்வு, முதலியவற்றிற்கு ஈடு கட்ட இயலாமையால் மாநகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையாகவே உள்ளது. பராமரிப்புச் செலவு இனங்களை குறைத்துக் கொண்டு பற்றாக்குறை மிகக் குறைவான அளவிலேயே நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் நிதி பற்றாக்குறையின் காரணமாக சாலைப் பராமரிப்பு, தெருவிளக்குப் பராமரிப்பு, துப்புரவுப் பணி ஆகிய இனங்களில் கூடுதலான ஊழியர்களை நியமிக்க முடியாத நிலை உள்ளது. பெருவாரியான மூலதனச் செலவினங்களுக்கு அரசின் நிதியுதவியையே மாநகராட்சி தொடர்ந்து நாடி வருகிறது. மாநகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

சென்னை பெருநகரின் தூய்மை, வளர்ச்சி தொடர்பான குறைகளை களைவதற்காகவும், மேம்பாட்டுப் பணிகளை தொடர்ந்து கண்காணிப்பதற்காகவும் சென்னை பெருநகர் மேம்பாட்டுக்குழு ஒன்று முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுமத்தில் மாநில அரசு உயர் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு மாதம் ஒரு முறைகூடி தக்க பரிந்துரைகள் செய்யும்.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

## மதுரை மாநகராட்சி.

## 1985—86.

**முன்னுரை :**

மதுரை நகராட்சி 1—5—1971-ல் மாநகராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்குப்படி 2,24,810 ஆக இருந்த மக்கள் தொகை 1981-ல் 8,18,333 ஆக உயர்ந்துள்ளது. இதில் புதிதாக சேர்க்கப்பட்ட 13 கிராமங்களின் மக்கள் தொகையும் அடங்கும். 1961-க்கும் 1981-க்கும் இடையே மக்கள் தொகை 3,93,523 ஆக அதிகரித்துள்ளது. இது 91.6 சதவீத உயர்வு என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது தெளிவாகிறது. மதுரை மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 51.85 ச.கிலோ மீட்டர்களாகும். சமீப ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. மேலும் புதிதாக கிராமங்களில் இருந்து வந்து நகரப்புறங்களிலும் நகரத்திலும் குடியேறுகிறவர்களின்

தொகையும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. வளர்ந்து வரும் நகரத்தின் பல்வகைப்பட்ட இடர்ப்பாடுகளிடையே மக்களுக்கு தேவையான அடிப்படை வாழ்க்கை வசதிகளை அளிக்கும் வேலைப்பளு பல மடங்காக உயர்ந்துள்ளது.

தன்னுடைய குறைந்த வருமானத்தைக் கொண்டு மதுரை மாநகராட்சியால் பொது மக்களுடைய தேவைகளை ஈடு செய்வதோடு அபிவிருத்தி திட்டங்களுக்கான செலவுகளையும் ஏற்றிட இயலவில்லை. ஆகையால் மாநில அரசிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் பொருளாதார உதவி தேவைப்படுகிறது.

**லாபம் தரும் திட்டங்கள்.**

கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களையும் நல்வாழ்வுத் திட்டங்களையும் நகர மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நிதி உதவி பெற்று நிறைவேற்ற வேண்டியுள்ளது.

**(எ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம்.**

தற்போது மதுரை மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறை உள்ளது. நிர்வாகச் செலவு, பொருள்களின் விலை ஆகியவை பெருமளவு அதிகரித்து வருவதை சமாளிக்க இயலவில்லை. இதன் காரணமாக பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க இயலாமல் உள்ளது. மாநகராட்சியின் நிதி நிலைமையை பெருக்குவதற்காக பின்வரும் வருவாய் ஈட்டக்கூடிய மேம்பாட்டுத் திட்ட பணிகளுக்காக மாநகராட்சிக்கு அரசு கடனுதவி வழங்கியுள்ளது. அவையாவன: கடைகள், சிறுகடைகள், அங்காடிகள், பேருந்து நிலையங்கள், வாடகை கார்கள் நிற்கும் இடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் ஏற்படுத்துதல் முதலியனவாகும். இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு ரூ. 223.98 லட்சம் கடனுதவி வழங்கியுள்ளது. இந்த பண உதவியில், கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகள் முடிவடைந்துள்ளன :—

(1) வைகை நதிக்கு வடபாகத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

(2) பெரியார் பேருந்து நிலையத்திற்கு எதிர்புறத்தில் கடைகள் தொகுதி கட்டப்பட்டுள்ளது.

(3) கீழ்ச்சந்தைப் பேட்டையில் கூடுதல் சாக்கடை நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.



இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கிறது. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேறு பல திட்டங்களையும் நிறைவேற்ற மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

(1) ரூ. 51 லட்சம் செலவில் அண்ணா பேருந்து நிலையத்தில் கடைகள் தொகுதியையும், கூடுதல் அறைகளையும் கட்டுதல்.

(2) ரூ. 15 லட்சம் செலவில் சென்ட்ரல் மார்க்கெட்டில் மொத்த வியாபார மார்க்கெட் கூடங்கள் கட்டுதல் மற்றும் முக்கிய இடங்களில் கடைகள் கட்டுதல்.

(3) வாடகை கார்கள் நிற்குமிடங்கள்.

(4) லாரிகள் மற்றும் டிரக் நிற்குமிடங்கள் ஏற்படுத்துதல்.

(5) ரூ. 3 லட்சம் செலவில் ஒர்க்ஷாப் ரோடு பகுதியில் புதிய மார்க்கெட் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. மற்றும் பனையூர் வாய்க்கால், அனுப்பானடி வாய்க்கால், பழங்காநத்தம் வாய்க்கால்களின் கரைகளில் அங்காடி கட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

**சாலைகளும் பாலங்களும்.**

மதுரை மாநகராட்சி தற்பொழுது 474.635 கிலோ மீட்டர் நீளமுள்ள கீழ்க்கண்ட சாலைகளை பராமரித்து வருகிறது:—

சாலைகளின் விபரங்கள் :

| | கி.மீ. |
|---|---|
| (1) சிமெண்ட் கான்கிரீட் சாலை | 4.190 |
| (2) தார் சாலை | 238.364 |
| (3) மெட்டல் சாலை | 83.276 |
| (4) கிராவல் சாலை | 55.616 |
| (5) கல்தள குறுக்குச்சந்துகள் | 51.739 |
| (6) கல்தள நடை மேடைகள் | 41.450 |

வர்த்தக, போக்குவரத்து வாகனங்கள் மேற்கண்ட சாலைகளை அடிக்கடி உபயோகிப்பதால் அவைகள் பெருமளவு சேதமடைகின்றன. மேலும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக சாலைகள் பெருமளவு சேதமடைகின்றன. இதன் காரணமாக மாநகராட்சி தனது வருமானத்திலிருந்து கணிசமான தொகையை இச்சாலைகளை நன்கு போக்குவரத்திற்குத் தகுதியானவைகளாக பராமரித்திட

வேண்டியுள்ளது. மாநகராட்சி 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 50 லட்சம் செலவில் சாலைகளை செப்பனிடுதல், புதிய சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. இதில் மாநில அரசு 1985-86-ன் இரண்டாம் பகுதித் திட்டத்தில் ரூ. 5 லட்சம் மதுரை மாநகராட்சிக்கு சாலைகள் போட கடன் உதவி வழங்க முடிவு செய்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள மற்ற திட்ட வேலைகளாவன :—

(1) அரசினர் மீனாட்சி கலைக் கல்லூரியின் இரண்டு பகுதிகளையும் இணைக்கும் ரூ. 2.5 லட்சம் நடைபாதை பாலம் கட்டும் வேலை பொதுப்பணித் துறை மூலமாக நிறைவேற்றப் படும்.

(2) புட்டுத்தோப்பையும் தத்தனேரியையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 50 லட்சம் செலவில் பாலம் கட்டும் வேலை நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட் உள்ளது.

(3) ரூ. 10 லட்சம் செலவில் குருவிக்காரன் சாலை பாலம் விஸ்தரிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வேலையை டிபாசிட் வேலையாக மேற்கொள்ளும்படி நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(4) அருப்புக்கோட்டை சாலையில் ரயில் பாதையின் மேல் ரூ. 80 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டும் வேலை நெடுஞ்சாலைத் துறையினரால் செய்யப்பட்டு வருகிறது. இதற்குரிய விகிதாச்சார செலவை செலுத்த மாநகராட்சி ஒப்புக்கொண்டுள்ளது.

(5) தமிழ்ச் சங்கம் ரோடில் மதுரை கோட்ஸ் நூற்பாலை அருகில் இருப்புப் பாதையின் மீது மேம்பாலம் கட்டும் திட்டம் நெடுஞ்சாலைத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(6) கட்டபொம்மன் சிலை அருகில் பெரியார் பேருந்து நிலையத்தை இணைத்து பாதசாரிகளுக்காக சுரங்கப் பாதை ரூ. 25 லட்சத்தில் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

## தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

மதுரை நகரின் மூலமாக ஏழு ஆறுகளும், கால்வாய்களும் ஓடுகின்றன. இந்த ஆறுகளும், கால்வாய்களும் தற்பொழுது பாசனத்திற்காக முழுமையாக பயன்படுவதில்லை. அவைகளில் அதிக அளவு வண்டல் படிந்துள்ளன. மேலும் அனேக ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையால் கழிவு நீர்



அவற்றின் மூலம் தாராளமாக ஓட தடை ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்காக ஆறுகளின் கரை ஓரங்களில் தடுப்புச் சுவர்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86-ல் ரூ. 25 லட்சம் செலவில் இவ்வேலை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும். மாநில அரசு தன்னுடைய 1985-86 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தில் ரூ. 5 லட்சம் இவ்வேலைக்காக கடன் உதவி செய்ய முடிவு எடுத்துள்ளது.

## பொதுச் சுகாதாரம்.

தத்தனேரி இடுகாட்டில் ரூ. 20 லட்சம் செலவில் 1985-86-ல் மின் மயானம் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு மாநில அரசு 1985-86 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தில் ரூ. 10 லட்சம் கடனுதவி வழங்க முடிவு செய்துள்ளது.

## மகப்பேறு மனைகள் மற்றும் மருந்தகங்கள்.

அருள்தாஸ்புரத்திலும், புதூரிலும் ரூ. 5.80 லட்சம் செலவில் இரண்டு மகப்பேறு மனைகள் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதைத் தவிர அனுப்பானடியில் ஒரு ஆயுர்வேத மருந்தகமும், செல்லூரில் ஒரு மருந்தகமும், கீரைத்துறையில் ஒரு மருந்தகமும் ஆக மூன்று மருந்தகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை அமைத்தல்.

மதுரை நகர் குடிநீர் விநியோக திட்டத்திற்கும் சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டு இருந்த நிதிவசதி போதுமானதாக இல்லாதபடியால் இத்திட்டங்களை நிறைவேற்ற ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி வசதி தேவைப்படுகிறது.

| வரிசை எண். (1) | திட்டம். (2) | திருத்தப்பட்ட மதிப்பீடு. (3) (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மதுரை வடபகுதி குடிநீர் விநியோக திட்டம். | 96.50 |
| • | வேலச்சந்தை பேட்டை சாக்கடைத் திட்டம். | 7.97 |
| 3 | இஸ்மாயில்புரம் சாக்கடைத் திட்டம் | 24.61 |
| 4 | அவனியாபுரம் சாக்கடைத் திட்டம் | 44.90 |
| | மொத்தம் | 173.98 |

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்படி வேலைகளுக்கு ரூ. 42.85 லட்சங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது போதுமானதாக இல்லாதபடியால் பாக்கி தொகையான ரூ. 131.13 லட்சங்களை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்படி திட்டங்களை நிறைவேற்ற கடனாக பெறுவதென்று மாநகராட்சி மன்றம் தனது 25—1—1984 தேதிய 492 ஆம் எண் தீர்மானம் மூலம் தீர்மானித்துள்ளது.

குடிநீர் வழங்குதல்.

1981 ஆம் வருட மக்கள் தொகை கணக்குப்படி மதுரை நகரில் 8.18 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அவர்களுக்கு வைகை நதி மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மதுரை மக்களுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 45 மில்லியன் காலன் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இது தற்போதைய ஒரு நாள் குடிநீர் தேவையான 90 மில்லியன் காலன் தேவையில் 50 சதவீதமே பூர்த்தி செய்யும். 90 மில்லியன் காலன் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு தற்போதுள்ள நீர் வழங்கும் திட்டத்தில் மேலும் 45 மில்லியன் காலன்களுக்கு அதிகரிக்கத் தேவைப்படுகிறது. மேற்படி குறைவான 45 மில்லியன் காலனை பூர்த்தி செய்திட ஒரு விரிவாக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நிறைவேற்ற ரூ. 32.52 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகையில் 80 சதவிகிதம் உலக வங்கியில் இருந்து 8.5 சதவிகிதம் வட்டி மற்றும் 25 வருடங்களில் திருப்பிக் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கடன் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை 5 வருடங்கள் கழித்து திருப்பிக் கட்ட ஆரம்பிக்கப்படும். மதிப்பீட்டில் 20 சதவிகிதம் மாநில அரசால் மான்யமாக வழங்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் வழங்கப் பட்டுள்ளது. தற்போதைய குடிநீர் விநியோகத்தைப் பராமரிக்கும் வேலையும் புதிய திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பும் நீண்ட கால அடிப்படையில் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கியிடம் கடன் வசதி பெறலாம் என்ற குடிநீர் வடிகால் வாரிய தீர்மானத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



உலக வங்கியால் சிபாரிசு செய்யப்பட்ட நிதி உதவி அளிக்கும் மாதிரி திட்டம் தண்ணீர் விநியோக விலை விகிதத்தை ஏற்றுதல், மேற்படித் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆலோசனைகளை 31—3—1983 தேதிய ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 483 ஆம் எண் ஆணை மூலம் ஏற்றுக்கொண்டு உத்தரவு இட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்தின் உபவிதிகளை மாநகராட்சி மன்றம் தனது 25—1—1984 தேதிய 491 எண் தீர்மானம் மூலம் அங்கீகரித்துள்ளது.

பணியாளர்கள் குறித்த உலக வங்கியின் ஆலோசனைப்படி குடிநீர் விநியோக மற்றும் சாக்கடைத் திட்டங்களின் கணக்குகளை பராமரிக்க புதிய ஊழியர் அமைப்புகளை தோற்றுவிக்க வேண்டியுள்ளது.

கல்வி.

(அ) ஆரம்ப பாடசாலைகளை கட்டுதல்.

இம்மாநகராட்சி 58 ஆரம்பப் பள்ளிகளையும் 12 நடுத்தரப் பள்ளிகளையும் தற்போது நடத்தி வருகிறது. இந்தப் பள்ளிகளில் 30,719 மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த 70 ஆரம்ப மற்றும் நடுத்தர பள்ளிகளில் 9 ஆரம்பப்பள்ளிகள் வாடகை கட்டிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. வருடத்திற்கு வாடகையாக ரூ. 98,000 கொடுக்கப்பட்டு வருகிறது. 7 ஆரம்பப் பாடசாலைகள் கீற்றுக் கொட்டகைகளில் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான பள்ளிகளில் போதுமான இட வசதியில்லை.

மாணவர்களின் இட வசதிக்காக மாநகராட்சி நிதியிலிருந்து கூடுதல் கட்டிடங்களை கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. கே. கே. நகர் மற்றும் அண்ணா நகரில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

(இ) உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கட்டுதல்.

மாநகராட்சி தற்பொழுது 12 உயர்நிலைப் பள்ளிகளையும், 8 மேல்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. தத்தனேரி, கோரிபாளையம், செனாய்நகர், சொக்கிகுளம் உயர்நிலைப்

பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான பகுதிகள் ரூ. 16 லட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அரசு 1985-86 இரண்டாம் பகுதித் திட்டத்தில் ரூ. 5 லட்சத்தை ஆரம்ப பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்கள் கட்ட கடனுதவி செய்ய முடிவு செய்துள்ளது.

## முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.

15—9—1982 முதல் 5 வயதுக்கு மேல் 9 வயதிற்குள்ளும் 9 வயது முதல் 10 வயதுக்குள்ளும் உள்ள சிறுவர்களுக்கு 72 மையங்கள் மூலமாகவும், 15—9—1984 முதல் 10 வயதுக்கு மேல் 14 வயதுக்குள்ளும் உள்ள சிறுவர்களுக்கு 20 மையங்கள் மூலமாகவும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 32,909 வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை சேர்ந்த குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநகராட்சிப் பகுதியில் தற்பொழுது கீழ்க்கண்ட விபரப்படி சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. | வாடகையில்லா கட்டிடங்கள் (மாநகராட்சி) | 2 |
| 2. | வாடகை கட்டிடங்கள் | 2 |
| 3. | புதியதாக கட்டப்பட்ட சத்துணவுக்கூடங்கள் | 88 |

இத்திட்டத்தின் கீழ் உணவு மையங்கள் கட்ட அரசு நிதியிலிருந்து ரூ. 67,08,000 உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது முன்னாள் ராணுவ வீரர்களுக்கும் அவர்களது விதவைகளுக்கும் வயதான ஓய்வூதியக்காரர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

## வறட்சி நிவாரணப் பணி.

தொடர்ந்தாற்போல் 3 ஆண்டுகாலத்திற்கு பருவ மழை பெய்ய தவறியதன் காரணமாக வைகை அணைக்கட்டில் தண்ணீர் மட்டம் குறைந்துவிட்டபடியாலும் மதுரை மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சி நிலவியதாலும், மதுரை மாநகரில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. ஏற்கனவே இருக்கும் குடிநீர் அமைப்பு மூலம் வழக்கமாக வழங்கப்பட்டும் குடிநீர் வழங்க இயலவில்லை.



30—9—1983 தேதிக்கு முன் மாநில அரசு மின்சார வெட்டை அமுல்படுத்தியதால் மின்வெட்டு காரணமாக நீரேற்று நிலையங்களில் இருந்தும் வேறு சில இடங்களில் இருந்தும் நீரை வெளியே கொண்டுவர இயலவில்லை. தலைமை நீரேற்று நிலையத்தில் மோட்டார் சாதாரணமாக 24 மணி நேரமும் செயல்படும். அந்த மோட்டார் கூட மின்வெட்டு காரணமாக போதுமான நேரம் இயக்கப்பட முடியவில்லை. இதன் காரணமாகவும் பொது மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலவில்லை. இருப்பினும் தேவையான இடங்களில் குடிநீர் மெயின் அமைத்தும், தண்ணீர் கிடைக்கும் சாத்தியக் கூறு உள்ள இடங்களில் எல்லாம் ஆழ்துளை கிணறு அமைத்தும், ஆழ்துளை கிணறு அமைக்க இயலாத இடங்களில் லாரிகள் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டும் நிலைமை சமாளிக்கப்பட்டது.

## துப்புரவு ஊழியர்களுக்கு சலுகைகள்.

அரசு மதுரை மாநகராட்சி துப்புரவு ஊழியர்களுக்கு கீழ்க்கண்ட பல சலுகைகளை வழங்கியுள்ளது :—

(1) ஆரோக்கிய அலவன்ஸ் வழங்குதல் ;

(2) இரண்டு அரை நாள் விடுப்புகளுக்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட நாளில் வாராந்திர விடுமுறை வழங்குதல் ;

(3) சீருடைகள் வழங்குதல் ;

(4) அடிப்படை ஊழியர்களுக்கு வழங்கப்படு எல்லா சலுகைகளையும் துப்புரவு ஊழியர்களுக்கு வழங்குதல் (சம்பள விகிதம் நீங்கலாக) ;

(5) மறுநியமனத்தின்போது வருடாந்திர ஊதிய உயர்வு அளித்தல் ;

(6) கூடுதல் துப்புரவு ஊழியர்களை அடிப்படை ஊழியர்களாகவும் துப்புரவு மேற்பார்வை ஊழியர்களாகவும் நியமித்தல் ;

அடிப்படை ஊழியர்களுக்கு வழங்கப்படும் எல்லா சலுகைகளும் துப்புரவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் அடிப்படை ஊழியர்கள் போல் நடத்தப்படுகின்றனர். அரசினரால் வழங்கப்பட்ட சலுகைகள் யாவும் மாநகராட்சியால் வழங்கப்படுகிறது. பண்டிகை முன்பணம், திருமண முன்பணம் போன்றவை மாநகராட்சி துப்புரவு ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

தற்போது 2,206 முழு நேர துப்புரவு ஊழியர்களோடு 151 பகுதி நேர ஊழியர்களும் உள்ளனர். நகரை சுத்தமாக வைத்துக் கொள்ள மேலும் 600 துப்புரவு ஊழியர்களை வேலைக்கமர்த்த வேண்டியுள்ளது.

1984-85-ல் அரசு மேலும் 222 துப்புரவு ஊழியர்களை வேலைக்கமர்த்த ஒப்புதல் அளித்துள்ளது.

## கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாநகராட்சியின் 1985—86 ஆம் ஆண்டின் பலதரப்பட்ட திட்டங்களின் கொள்கை விளக்கக் குறிப்பு.

### முன்னுரை.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981-ன் கீழ், முன்பு விரிவாக்கப்பட்ட கோயம்புத்தூர் நகராட்சி 1—5—1981-லிருந்து மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது.

மாநகராட்சியின் ஆட்சிக்குள் கோயம்புத்தூர் வருவாய் கோட்ட கிராம முழுவதுடன், தெலுங்குபாளையம், ராமநாதபுரம், கிருஷ்ணராயபுரம், சங்கனூர், அனுப்பர்பாளையம், புலியகுளம், குமாரபாளையம், சவுரிபாளையம் மற்றும் கணபதி ஆகிய வருவாய் கோட்ட கிராமங்களின் பகுதிகளும் அடங்கும்.

கூடுதலான நிலப் பரப்பு சேர்க்கப்படுவதற்கு முன்பு கோயம்புத்தூர் நகராட்சியின் பரப்பளவு 23.5 ச.கி. மீட்டராக இருந்தது. கோயம்புத்தூர் நகராட்சியுடன் 1—12—1978-ந் தேதி முதல் கீழ் குறிப்பிட்ட பகுதிகள் சேர்க்கப்பட்டன.

(1) சிங்கநல்லூர் நகராட்சி (முழுப் பகுதி)
(2) குமாரபாளையம் பேரூராட்சி (முழுப் பகுதி)
(3) தெலுங்குபாளையம் பேரூராட்சி (முழுப் பகுதி)
(4) சங்கனூர் பேரூராட்சி (முழுப் பகுதி)
(5) கணபதி பேரூராட்சி (முழுப் பகுதி)
(6) கோவை புறநகர் கிராம பஞ்சாயத்து (முழுப் பகுதி)
(7) விளாங்குறிச்சி பேரூராட்சி (ஒரு பகுதி)



இவ்வாறு விரிவாக்கப்பட்ட கோவை நகராட்சியின் பரப்பளவு 105.60 ச.கி. மீ. ஆக அதிகரிக்கப்பட்டது.

1971 ஆம் வருட கணக்கெடுப்பின்படி, கோவை நகராட்சி விரிவாக்கப்படும் முன்பு அதன் மக்கள்தொகை 3,58,683 ஆக இருந்தது. 1981 ஆம் வருட கணக்கெடுப்புப்படி, தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியின் மக்கள் தொகை 704,514 ஆக அதிகரித்துள்ளது.

மாநகராட்சியின் பொது நிர்வாகம் தனி அதிகாரி அவர்கள் பொறுப்பில் உள்ளது. செயல்முறை அதிகாரங்கள் ஆணையர் அவர்களின் பொறுப்பில் உள்ளது.

1985—86 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட வரவும், செலவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | வரவு. | செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்) | |
| (1) சாதாரணம் .. .... | 1,161.06 | 1,084.56 |
| (2) மூலதனம் .. — .. | 337.87 | 531.03 |
| | 1,498.93 | 1,615.59 |

இது பற்றாக்குறை வரவு-செலவு திட்டமானாலும், 1981—82 ஆண்டில் ஆரம்பக் கல்வி கணக்கிற்கு, அரசினரிடமிருந்து வழங்கப்பட வேண்டிய பற்றாக்குறை மான்யம் சுமார் ரூ. 200 இலட்சங்கள் பெறப்பட்டதும், பற்றாக்குறை சரிக்கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 1985—86 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

1985—86 ஆம் ஆண்டில், செயலாற்றிட மாநகராட்சி பலதரப்பட்ட திட்டங்களை உருவாக்கி அவற்றைக் கீழ்க்கண்ட வகைகளில் நிறைவேற்றிட உள்ளது.

#### (1) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

1982 ஆம் ஆண்டு முதல் 2 வயது முதல் 4 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மக்கள் தொகை 7,04,514. ஒரு நாளைக்கு இத்திட்டத்தின்

கீழ்ப் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 27,218. இத்திட்டத்தில் 396 சத்துணவு மையங்கள் உள்ளன. இவைகள் சத்துணவு திட்டத்திற்காக மாநகராட்சி கட்டியுள்ள கட்டிடங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் 928 வயதான ஓய்வு ஊதியம் பெறுபவர்களும் இதனால் பயனடைகின்றனர்.

இத்திட்டம் இம்மாநகராட்சியின் ஆரம்ப பள்ளிகளில் பயிலும் 5 வயது முதல் 9 வயது குழந்தைகளுக்கும் மாநகராட்சி உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் 10 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 35,957 குழந்தைகள் பயன் அடைந்து வருகின்றனர்.

இத்திட்டம் மாநகராட்சியால் புதிதாக கட்டப்பட்ட 95 சமையற் கூடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(2) சாலை பராமரிப்பு.**

இம்மாநகராட்சி, மொத்தத்தில் 410.137 கி.மீ. நீளத்திற்கு கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தப்பட்ட சாலைகளைப் பராமரித்து வருகிறது.

| | கி.மீ. |
|---|---|
| (1) தார்ரோடு மற்றும் சிமெண்ட் ரோடுகள், சந்துகள் | 354.137 |
| (2) கல்பரப்பப்பட்ட சாலைகள் .. .. | 50.140 |
| (3) மண்ரோடுகள் மற்றும் கல் பரப்பப்படாத சாலைகள். | 5.860 |
| மொத்தம் | 410.137 |

நடப்பு ஆண்டில், 5.86 கி.மீ. மண் சாலைகளும், 8.20 கி.மீ. கல் பரப்பப்பட்ட சாலைகளும், 50.20 கி.மீ. கல் பரப்பப்பட்ட சாலைகளை தார் சாலைகளாகவும், அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள தார் சாலைகளை, ஒப்பந்தக்காரர்களாலும், தினக் கூலிகளாலும், 28 கி.மீ. புதுப்பிக்க, நடப்பாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வேலைகளுக்காக, வரவு-செலவு திட்டத்தில் மாநகராட்சி நிதியிலிருந்து, இவ்வாண்டில் ரூ. 180.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.





மேற்சொன்னவைகளைத் தவிர, நடப்பாண்டில் மாநில திட்டம், பகுதி 2-ன் கீழ், இணைக்கப்பட்ட பஞ்சாயத்து பகுதிகளில் சாலை வேலைகளுக்காக ரூ. 5.00 இலட்சம் கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தனியார் மனைப் பிரிவில், சாலைகள் மற்றும் சாக்கடை, அபிவிருத்திக்காக இம்மாநகராட்சி 'சுழல் நிதி' ஒன்று அமைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 15 கி.மீ. நீளத்திற்கு சாலை வேலைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

**3 (அ) கல்வி (ஆரம்பக் கல்வி) :**

மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் உள்ள 77 ஆரம்ப மற்றும், உயர் ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்கள், இம்மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 42,048 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். பல்வகைப்பட்ட 1,331 ஆசிரியர், ஆசிரியைகள், இப்பள்ளிகளில் பணி புரிந்து வருகிறார்கள். நடப்பாண்டில், 13 ஆரம்பப் பள்ளிகளில், 37 வகுப்பு அறைகள் கூடுதலாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகவும், தற்போதுள்ள கட்டிடங்களைப் பராமரிப்பதற்காகவும், 1985-86-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 14.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி வரி, அரசு மான்யம் மற்றும் பொதுக் கணக்கிலிருந்து உதவித் தொகை ஆகிய எதிர்ப்பார்க்கப்பட்ட நிகர வருமானம் ரூ. 90.47 இலட்சத்திற்கு எதிராக, வரவு-செலவுத் திட்டத்தில், பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்திற்காகவும் மற்றும் சாதாரண செலவினங்களுக்காகவும் ரூ. 175.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இறுதியில், ஆரம்பக் கல்வி கணக்கு ரூ. 314.57 இலட்சம் பற்றாக் குறையாக முடியும் என எதிர்பார்க்கபடுகிறது. 31—3—1973-ந் தேதிய அரசு ஆணை எண். 643-ன்படி, பற்றாக் குறை மான்யம் வழங்கப்படும்போது இப்பற்றாக்குறை சரிக்கட்டப்படும்.

**3 (இ) கல்வி (மேல்நிலை மற்றும் உயர்நிலை):**

மாநகராட்சி, 9 மேல்நிலைப் பள்ளிகளையும், 9 உயர்நிலைப் பள்ளிகளையும் மற்றும் ஒரு செவிடர் மற்றும் ஊமைகள் பள்ளியையும் பராமரித்து வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் 11,965

மாணவர்களுக்கும். உயர்நிலைப் பள்ளிகளில் 5974 மாணவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. செவிடர் மற்றும் ஊமையர் பள்ளியில் உள்ள 224 மாணவர்களுக்கும் இம் மாநகராட்சி இலவச கல்வி, உணவு மற்றும் தங்குமிடமும் அளித்து வருகிறது.

இப்பள்ளிகளில், மொத்தமாக எல்லா வகையிலும் 697 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

நடப்பாண்டில் கீழ்க் குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(1) குப்பக்கோனாம்புதூர் நடுநிலைப்பள்ளி.

(2) ரத்தினபுரி நடுநிலைப்பள்ளி.

(3) பீளமேடு நடுநிலைப்பள்ளி.

(4) ராமலிங்கம் காலனி நடுநிலைப்பள்ளி.

(5) மரக்கார நஞ்சப்ப கவுண்டர் நடுநிலைப்பள்ளி.

ஒக்கிலியர் காலனி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியிலும், செல்வபுரம் உயர்நிலைப் பள்ளியிலும், ஒரு விஞ்ஞானக்கூடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள், மாநகராட்சி பொறியியற் பிரிவு ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஆர். எஸ். புரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், ராசாபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், செல்வபுரம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், நடப்பாண்டில், பொதுப்பணித்துறை வாயிலாக, வைப்புத் தொகை வேலையாக கூடுதல் இட வசதிகள் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வேலைகளின் மொத்த மதிப்பீடு ரூ. 8.4 இலட்சம் ஆகும். மேற்குறிப்பிட்ட வேலைகளுக்காகவும் தற்போதுள்ள கட்டிடங்களைப் பராமரிப்பதற்காகவும், மொத்தமாக ரூ. 10.00 இலட்சம் 1985-86-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(4) கம்பியூட்டர் பயிற்சி:**

கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சிக்கான, தேசிய கழகத்தின் மூலமாக, பிரிட்டிஷ் பிராட்காஸ்ட் கார்ப்பரேஷன் மாநகராட்சிக்கு இரண்டு கம்பியூட்டர்கள் வெகுமதியாக கொடுத்துள்ளது. இந்த கம்பியூட்டர்கள் கோவை மாநகராட்சி ராசாபுரம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கம்பியூட்டரின்



விலை சுமார் 2 லட்சங்களாகும். இந்த கம்ப்யூட்டர் 9, 10 மற்றும் பிளஸ்-2 வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக பெரிதும் உபயோகப்படுத்தப்படும். செவிடர் மற்றும் ஊமையர் பள்ளிகள் உள்ளிட்ட உயர்நிலைக் கல்விக்காக, நடப்பு ஆண்டில் ரூ. 153.69 லட்சம் செலவிட உத்தேசித்துள்ளது. இத்தொகையில் கட்டிட வேலைகளுக்காக, செலவிட உத்தேசித்துள்ள தொகை சேராது.

**(5) தண்ணீர் வழங்குதல்:**

கோவை நகர மக்களுக்கு, 1934 ஆம் ஆண்டிலிருந்து, கோவையிலிருந்து 50 கி.மீ. தூரத்தில் கேரள மாநிலத்தில் பாயும் சிறுவாணி நதியிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 1982 ஆம் வருடம், ஜூலை மாதம் வரை, நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் 340 லட்சம் லிட்டர்கள் தண்ணீர் மட்டுமே எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது. ரூ. 21.65 கோடி மதிப்பீட்டில், கோவை தண்ணீர் விநியோகத் திட்டம் இயங்கி முடிந்த பின், தற்போது 450 இலட்சம் லிட்டர்கள் தண்ணீர் தினந்தோறும் எடுக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் முழுமையாக முடிந்த பிறகு தினமும், 1,014 இலட்சம் லிட்டர்கள் தண்ணீர் வழங்கப்படும். தற்போது அணைக்கட்டில், தேக்கப்பட்ட தண்ணீரில் ஒரு நாளைக்கு 450 லட்சம் லிட்டர்கள் வீதம் செப்டம்பர் மாத இறுதி வரை எவ்வித சிரமமும் இல்லாது தண்ணீர் எடுக்க முடியும். இதற்கிடையில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மழையின்றி மிகவும் பாதிக்கப்பட்டால், அணைக்கட்டில் தேங்கியுள்ள தண்ணீர் பம்பு செய்யப்பட்டு, மழை பெய்யும் வரை வழங்கப்படும். சுமார் 500 கி.மீ. நீளமுள்ள குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடி தண்ணீர் கிடைக்காத பகுதிகளுக்கு மாநகராட்சி லாரிகள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இணைக்கப்பட்ட நகராட்சி பகுதியில் 28,000 வீட்டு இணைப்புகளும், 784 பொதுநீர் ஊற்றுகளும் உள்ளன. இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு, சிறுவாணி குடிநீர் வழங்குதல் விஸ்தரிக்கப்பட்டு எந்த எந்த இடங்களுக்கு முடியுமோ, அந்த இடங்களில் தற்காலிக பொதுநீர் ஊற்றுகளாலும், முன்னோடித் திட்டத்தின் மூலமாக நீர் தொட்டிகள் கட்டி, தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கணபதி, சிங்காநல்லூர், பீளமேடு, ஒண்டிப்புதூர் ஆகிய பகுதிகளில் வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

[1985 ஜூன் 12

இணைக்கப்பட்ட பகுதிகளில், மோட்டார் பம்ப்செட் பொருத்தப்பட்ட 250 ஆழ் குழாய் கிணறுகளும், திறந்த கிணறுகளும் உள்ளன. இவைகளில் போதியளவு தண்ணீர் இருந்தும், மின்சார தடையினால், தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனினும் குறைந்தபட்ச அளவு தண்ணீர் விநியோகத்திற்கு மின்சாரம் கிடைக்கிறது. மின்சார தடை அதிகமானால், தேவைப்படும் பகுதிகளுக்கு, மாநகராட்சி லாரிகள் மூலம், தண்ணீர் விநியோகிக்கப்படும். இணைக்கப்பட்ட பகுதிகளில் தேவைப்பட்ட இடங்களில், 50 குழாய் கிணறுகள் தோண்டவும், குழாய் கிணறுகளை ஆழப்படுத்தவும், பிரேரணைகள் மாவட்ட ஆட்சியாளர் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட கடனுதவிகள் கிடைத்துள்ளன :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| எல்.ஐ.சி. | 5.00 |
| அரசு கடன் | 13.1,763 |
| மொத்தம் .. | 18.1,763 |

மேலே குறிப்பிட்ட தொகை, இத்திட்டத்தை செயல்படுத்த, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நேரிடையாக பெற்றுக் கொண்டுள்ளது. இந்த வேலைகளைத் தவிர, தண்ணீர் விநியோகத்தை பராமரிக்கும் ஊழியர்களுக்காகவும் தண்ணீர் இணைப்புகள் கொடுப்பதற்காகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, உடனடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட வேண்டிய பாக்கி தொகைக்காகவும் ரூ. 119.27 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயமுத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மேலும் ஒரு திட்டம் ரூ. 17.80 கோடி மதிப்பீட்டில், பவானி ஆற்றிலிருந்து உலக வங்கி திட்டத்தின்கீழ் (மொத்த செலவு ரூ. 4,110.54 இலட்சங்கள்) தண்ணீர் விநியோகத்திற்காக, அனுமதித்து நடப்பாண்டில் இந்த வேலை துவங்க உள்ளது. இத்திட்டம் முடியும்



1985 ஜூன் 12]

போது, சிறுவாணி திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீருடன் சேர்த்து மாநகராட்சியின் வளரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும்.

கோயமுத்தூர் மாநகரம், மாவட்டத் தலைநகராகவும், தமிழ் நாட்டிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் உள்ளது. இது சென்னையிலிருந்து சுமார் 490 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு பாதுகாக்கப்பட்ட சிறுவாணி குடிநீர்த் திட்டம், செயல்பட்டு வருகின்றது. ஆகையால் இங்கு பாதாள சாக்கடைத் திட்டம் அவசியம். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன :—

**(6) வடிகால் திட்டம் :**

நகரில் உள்ள கழிவு நீரை சேகரித்து சுகாதாரமான முறையில் வெளியேற்றுவது உள்ளாட்சி நிறுவனத்தின் கடமை என்பதையறிந்து, மாநகராட்சி இப்பிரச்சனைக்கு கவனம் செலுத்தியது. பெரும்பாலான தெருக்களில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயமுத்தூரில் கழிவு நீரகற்றும் திட்டம் 1979-ல் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது வளர்ச்சியடைந்த நகர்ப்பகுதி, தற்போதுள்ள நகர அளவில் $\frac{1}{3}$ பகுதியாகும். பழைய நகர்ப் பகுதிகளான சுக்கிரவாரப்பேட்டை, உப்பிலிபாளையம், அரசு மருத்துவமனைப் பகுதி, சிதம்பரம் பூங்கா பகுதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதி, பெரிய கடை வீதி முதலியவைகளுக்கு 1954-ம் ஆண்டு முதல் கழிவு நீரகற்றும் வசதி செய்யப்பட்டது. இதனை திட்டமிடவும், நிறைவேற்றவும் மண்டலம் I என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த நகரம் வேகமாக வளர்ந்து வருவதால், மாநில அரசு ரூ. 597.51 இலட்சங்கள் செலவில் நிறுவி, ரூ. 18.75 இலட்சங்கள் செலவில், ஆண்டுதோறும் பராமரிப்பதற்கான ஒரு விரிவான கழிவு நீரகற்று திட்டத்திற்கு, மண்டலம் I மற்றும் மண்டலம் III -ல் கழிவு நீரகற்று வசதிகள் அமைப்பதற்காக ஒப்புதல் அளித்துள்ளது. நகர வடிவமைப்பைக் கொண்டு, கழிவு நீரகற்று திட்டங்களை நிறைவேற்ற மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

மேலும் திட்டத்தில்விடுபட்ட ராமலிங்கம் காலனி, முருகன் மில் காலனி, வடகோயமுத்தூரின் வடக்கு பகுதி, எஸ்.ஆர்.பி. நகர், நெசவாளர் காலனி, ராமலிங்கம் நகர் அஞ்சல் துறை

[1985 ஜூன் 12

குடியிருப்பு, லாலிரோடு, கடாகம் ரோடு, ராபட்சன் ரோடு, ராயப்பாபுரம், பொன்னையராஜபுரம் மேலும் செல்வபுரம் ஆகிய பகுதிகளுக்கு ஆய்வுப் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. கூடியுள்ள விலைவாசியின் காரணமாகவும், திட்டத்தின் நோக்கத்தில் உள்ள மாறுதல் காரணமாகவும் 750 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டுக்கு அனுமதி அளித்துள்ளது. மேலும், மாநகராட்சியின் 1985-86-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 70.05 இலட்சம் தற்போது உள்ள வடிகால்கள் பராமரிப்பிற்கும், புதிய வடிகால்கள் அமைப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(7) நகர் அமைப்பு:**

கீழ்க்கண்ட பொது நோக்கங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டங்களை மாநகராட்சி ஏற்கெனவே தொடங்கியுள்ளது:—

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பள்ளிக்கூடங்கள் .. .. .. .. | 9 |
| 2 | சாலைகள் மற்றும் சாலை விஸ்தரிப்பு முதலியன | 16 |
| 3 | லாரிகள் நிறுத்துமிடம் .. .. .. | 1 |
| 4 | இடுகாடுகள் .. .. .. .. | 2 |
| 5 | கழிவு உர கிடங்குகள் .. .. .. | 1 |
| 6 | தினசரி சந்தை .. .. .. .. | 2 |
| 7 | பொது கழிப்பிடம் .. .. .. .. | 1 |
| 8 | வடிகால் .. .. .. .. | 1 |
| | மொத்தம் .. | 33 |

மேற்படி திட்டங்கள் பெரிதும் பொது நன்மைக்கானவைகளாகயிருப்பினும் மாநகராட்சியின் எளிய நிதி நிலைமையால் அமுல்படுத்த முடியவில்லை. எனினும் கிடைக்கக் கூடிய நிதியை பொருத்து அவைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

நகர் அமைப்பு திட்டம் பற்றிய விபரங்கள் நல நகர் அமைப்பு அதிகாரியால் கவனிக்கப்படுகின்றன.

நகர் அமைப்பு தலைப்பின் கீழ் 1985-86-ம் ஆண்டில் ரூ. 15.26 இலட்சம் செலவழிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.



1985 ஜூன் 12]

**(8) தெரு விளக்குகள்: ( ) பழைய நகர்.**

இம்மன்றம் தற்போது கீழ்க்கண்ட வகையில் 8,546 தெரு விளக்குகளை பராமரிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | சோடியம் வேப்பர் விளக்குகள் .. .. | 1,031 |
| 2 | மெர்குரி வேப்பர் விளக்குகள் .. .. | 1,025 |
| 3 | குழல் விளக்குகள் .. .. .. | 6,361 |
| 4 | ஏனைய விளக்குகள் .. .. | 129 |
| | மொத்தம் .. | 8,546 |

நகரத்தின் முக்கிய இடங்களில் பேரொளி பெறச் செய்ய 22 இலட்சம் மதிப்பீடு செலவில் 300 சோடியம் வேப்பர் விளக்குகள், 200 மெர்க்குரி விளக்குகள் 1,000 குழல் விளக்குகள் பொருத்த ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

முந்தைய டிரான்ஸ்பார்மர்களின் திறன் அதிகரிப்பதன் மூலமும் மேலும் 20 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவுவதன் மூலமும் மின் திட்ட முறை அபிவிருத்திப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பூமிக்கடியில் செல்லும் கேபிள்கள் மற்றும் முந்தைய மேல்நிலை கம்பிகள் ஆகியவைகளை மாற்றி அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேற்படி திட்டங்களுக்காக ரூ. 49.00 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள வீதி விளக்குகள் பராமரிப்புக்காக பொது மதிப்பீட்டில் தொகை ரூ. 27.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**(ii) சேர்க்கப்பட்ட பகுதி:**

கோவை மாநகராட்சியின் சேர்க்கப்பட்ட பகுதியிலுள்ள 4,668 மின் விளக்குகள் (கீழ்க்கண்டுள்ளவாறு) தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பராமரிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | சோடியம் வேப்பர் விளக்குகள் .. .. | 6 |
| 2 | மெர்குரி வேப்பர் விளக்குகள் .. .. | 33 |
| 3 | குழல் விளக்குகள் .. .. .. | 4,629 |
| | மொத்தம் .. | 4,668 |

[1985 ஜூன் 12

மேலும் 1,000 விளக்குகள் அதிகப்படியாக இவ்வாண்டில் நிறுவ உத்தேசித்துள்ளது.

**(9) பொது சுகாதாரம் :**

மாநகராட்சியின் வருவாயில் பெரும் பகுதி பொது நலம் மற்றும் துப்புரவு வேலைகளுக்காக செலவிடப்படுகிறது. இதற்காக 1985-86 ஆம் ஆண்டுக்கு வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 300.00 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1608 துப்புரவு பணியாளர்களும், கண்காணிப்பாளர் மருத்துவர் உட்பட பொதுநலப் பிரிவில் 1,926 பணியாளர்களும் இருக்கின்றனர். வருவாயில் பெரும் பகுதி பொதுநலம் மற்றும் துப்புரவு வேலைகளுக்கு செலவிடப்பட்டும், விஸ்தீரணம் மற்றும் பெரும் ஜனத்தொகையின் காரணமாக நகரத்தை சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள தற்போது போதுமான பணியாளர்கள் இல்லையென கருதப்படுகிறது. எனவே, இத் தலைப்பின் கீழ் பற்றாக்குறை நிதி நிலைமையினால் அதிகப்படியாக தொகை ஒதுக்கப்பட முடியவில்லை. எனினும் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளுக்கொப்ப 500 கூடுதல் பொதுநல வேலையாட்களை நியமனம் செய்வதற்கான பிரேரணை நடப்பு வரவு-செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது 16 லாரிகள் வாங்கவும் அதற்காக கூடுதல் பணியாட்களை நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது ஒரு குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

கொசு தொல்லை அகற்றுவதற்கு ரூ. 16.70 இலட்சத்திற்கான திருத்திய கொசு ஒழிப்பு திட்டத்திற்கான பிரேரணைகள் மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் மூலமாக அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

கடந்த பத்தியில் குறிப்பிட்ட ரூ. 300.00 லட்சம் தவிர, பொது நலம் மற்றும் மருத்துவ மனைகள் பராமரிப்புக்காகவும் கழிப்பிடங்கள் மற்றும் நவீன கழிப்பிடங்கள் கட்டவும், மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பு மனைகளுக்காகவும் வரவு-செலவு மதிப்பீட்டில் தொகை ரூ. 12.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



1985 ஜூன் 12]

ரூபாய் 2.60 இலட்சம் மதிப்பீட்டில் பாப்பநாயக்கன்பாளையத்தில் ஒரு மின்சார சுடுகாடு கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. நகரத்திலுள்ள எல்லா ரோட்டரி சங்கங்களும் இதற்குத் தேவையான உபகரணங்களை இனாமாக தர இசைந்துள்ளன. மாநில திட்டத்தின் 2-ம் பகுதி திட்டத்தின் கீழ் நொய்யல் ஆற்றில் ஒரு மின்சார சுடுகாடு ஏற்படுத்த மற்றுமொரு திட்டத்தினை அரசு அங்கீகரித்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில் கடனாக ரூ. 10.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**(10) பலவகையினங்கள் :**

(1) மறைமுக வரிகள் மூலம் மாநகராட்சி தனது வருவாயை அதிகப்படுத்தும் பொருட்டு, தினசரி சந்தைகள் மற்றும் பல பகுதிகள் கொண்ட கடைகள் கட்ட மாநகராட்சி திட்டமிட்டு அதற்காக நடப்பு ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 17.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

(2) மேலும் ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்டவும், ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் விலங்ககம் அபிவிருத்தி செய்யவும், மற்றும் ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில் வரதாராஜபுரத்தில் கல்யாண மண்டபம் கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையும் சேர்த்து, மாநகராட்சி பலதரப்பட்ட திட்டங்களுக்காக மேலே விளக்கப்பட்ட சில முக்கியமான இனங்களுக்காக மொத்தமாக ரூ. 1,239.33 இலட்சங்கள் செலவழிக்க உத்தேசித்துள்ளது.

### ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த உத்தேசித்துள்ள திட்டங்கள்.

மன்றத்தின் பற்றாக்குறை நிதி நிலைமையை உத்தேசித்து, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்களை அமுலாக்க, அரசு 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 640.00 லட்சங்கள் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|---|
| | தியாகி குமரன் மார்க்கெட் அபிவிருத்திக்காக | 100.00 |
| 2 | மாநகராட்சியின் பல பகுதிகளில் கடை மனைகள் கட்ட .. .. .. .. | 125.00 |

[1985 ஜூன் 12

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்.) |
| 3 | குரு ஓட்டலுக்கு சமீபம் கடை மனைகள் கட்ட | 100.00 |
| 4 | உக்கடம் பகுதியில் நகர் பேருந்து நிலையம் கட்டுதல் .. .. .. .. | 10.00 |
| 5 | உக்கடம் பகுதியில் லாரி நிறுத்துமிடம் கட்டுதல் | 60.00 |
| 6 | ஆடு அறுக்கும் தொட்டி கட்ட .. .. | 30.00 |
| 7 | பொள்ளாச்சி சாலை கண்டைக்காமுத்தூர் சாலைகளுக்கு இடையில் இணைப்பு சாலை ஏற்படுத்த .. .. .. .. | 15.00 |
| 8 | முக்கிய இடங்களில் பொது மக்கள் நடைபாதை மற்றும் மிதிவண்டி அடையாள பாதை ஏற்படுத்த .. .. .. .. | 105.00 |
| 9 | 2,000 புதிய சோடியம் வேப்பர் விளக்குகள் மற்றும் 4,000 மெர்குரி விளக்குகள் அமைக்க .. .. .. .. | 50.00 |
| | மொத்தம் .. .. | 640.00 |

## இணைப்பு II

(58 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சமுதாய வளர்ச்சி:

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவுகளும், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கோட்பாடுகளும் :**

இந்திய அரசும், மாநில அரசும் கிராமப் பகுதிகளில் வறுமையைப் படிப்படியாகக் குறைத்து இறுதியில் அதனை அறவே அகற்றுவதையே தலையாய நோக்கங்களுள் ஒன்றாக அமைய வேண்டுமென கருதுகின்றேன். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் பல்வகையான நிலைகளைக் கருதிப் பார்த்து, சீராகவும், பன்முறைகளிலும் பற்பல நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.



1985 ஜூன் 12]

2. திட்டமிடல், வளர்ச்சி, நவீனப் படுத்தல், தன்னம்பிக்கை சமூக நீதி போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு தேசிய கருத்து ஒருமைப்பாட்டை பிரதிபலிப்பதாக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85) வகுக்கப்பட்டுள்ளது. இந்நான்கு அடிப்படை நோக்கங்களுள் கடைசியாக குறிப்பிட்டதற்குக் கடந்த 5 ஆண்டுகளில் மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு தீட்டும் திட்டங்களில் கிராமப் பகுதிகளில் "வறுமையை அகற்றுவது வேறுபாடுகளை குறைப்பது" போன்றவற்றிற்கு சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதன் மூலமாக அரசு சமூக நீதிக்கு சாலச் சிறந்த முறையில் தீவிர கவனம் கொடுத்து வருகிறது என்பது புலனாகிறது.

3. கடந்த முப்பதாண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது இந்திய மக்கட்தொகையின் நபர்வாரி வருமானம் கணிசமான அளவு உயர்த்துவதற்குக் காரணமாயிருந்தாலும், நாட்டில் நிலவும் வறுமை நிலையை ஒழிப்பதற்கு வளர்ச்சி நடைமுறைக்கு அப்பாற்பட்டு இந்த முறையில் தீர்வு ஒன்றைக் காணவேண்டும். உற்பத்தித் திறனைப் பெருக்குதல், நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றுடன், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு உதவும் திட்டப் பணிகளை வகுக்க வேண்டும். ஏழை மக்களுக்குச் சாதகமாக அரசுக் கொள்கைகள் பாரபட்சமின்றி இருக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. வேறு வகையில் சொல்வதானால், ஊரகப் பகுதிகளில் தொழிலாளர் நல மும்முரத் திட்டங்களை மேம்படுத்துவது குறித்து வலியுறுத்தப்பட்டது. அப்போதுதான் வேலையளிப்பதன் மூலமும் ஏழை மக்களில் ஏனைய பிரிவினரின் வசதி வாய்ப்புகளுக்கு வகைசெய்வதன் மூலமும் வேலையில்லாப் பிரச்சினையைத்திறம்பட சமாளிக்கலாம். உதவி அளிக்க வேண்டியவர்களையும் குடும்பங்களையும் கண்டறியும், அவர்களுக்கு உதவுவதற்கு உண்மையான இலக்குகளை நிர்ணயிக்கவும், உதவி செய்யக் கருதியுள்ள குடும்பங்களுக்கான திட்டங்களை வகுக்கவும் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

4. வளர்ச்சி, சமத்துவம், சமூக நீதி, தன்னம்பிக்கை, மேம்படுத்தப்பட்ட திறமை, உற்பத்தித்திறன் ஆகியவை ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளாகத் தொடர்ந்து இருக்கவேண்டும். இந்த அமைப்பிற்குள் சமூக நீதி

[1985 ஜூன் 12

குறித்த இயக்கம் விரைவாக செயல்பட வேண்டிவரும். வேலை வாய்ப்பைப் பெருக்குவதிலும், ஏழ்மையைப் போக்குவதிலும் சிறந்த நாட்டம் செலுத்தப்படவேண்டும். எனவே, உணவு தானிய உற்பத்தியில் பெருக்கம், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவற்றையும் முக்கியமாக உற்பத்தித் திறனை உயர்த்தக் கூடியதையும் விரைவுபடுத்தும் கொள்கைகள், திட்டங்களை ஏழாவது திட்டம் வலியுறுத்த வேண்டும்.

5. ஆதாயந்தரும் வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதானது, மக்கள் தாங்கள் சுயமாகவே காலிலேயே நிற்கவும், தன்னம்பிக்கையுடனும் தன்மானத்துடனும் (வளர்ச்சிப் பணிகளில் மக்கள் பங்குகொள்வதை உறுதி செய்வதற்கு இவையே தலையாய அம்சங்களாகும்) பணி புரியவும் வகை செய்யும். வேலை வாய்ப்பை பெருக்குவதையே நோக்கமாகக்கொண்ட திட்டங்களுக்கான தனி நடவடிக்கைகளை எடுக்காமல், வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்குப் பொதுவான பொருளாதார வளர்ச்சியை நம்பியிருப்பதற்குப் பதிலாக, வேலை வாய்ப்பை பெருக்குவதையே நேரடி குறிக்கோளாக கொண்டு கொள்கை வகுப்பது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனினும், வேலை வாய்ப்பு ஆதாயத் தரத் தக்கதாயும், தொடர்ந்து உற்பத்தியும் வருமானமும் வரத்தக்கதாயும் இருந்தால்தான் வேலை வாய்ப்பை தொடர்ந்து அளிக்கலாம். பயிரிடும் பகுதியை அதிகரித்தல், குறைந்த உற்பத்தியுள்ள இடங்களிலும் சிறு உழவர்களும், வேளாண்மை பற்றிய புதிய தொழில்நுட்ப உத்திகளை அறியச் செய்தல் ஆகியவற்றின் மூலமும், ஆதாயந் தரத்தக்க சொத்துக்களை ஏற்படுத்துவதில் மிகவும் பயனுள்ள ஊரக வளர்ச்சித் திட்டங்களை வகுக்க நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும், வீட்டுவசதி, நகர்ப்புற வசதிகள், சாலை, சமூக அடிப்படை வசதி ஆகியவற்றுக்கு வகை செய்வதற்காக அதிகத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி கட்டுமானப் பணிகளை விரிவுபடுத்தல் மூலமும் தொழில் வளர்ச்சியின் நிலையிலும் ஏற்படும் மாற்றங்கள் மூலமும் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கோட்பாடுகள் ஆதாயந்தரும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாய் இருக்கும். வேலையை நாடிவரும் ஒவ்வொருவருக்கும் உற்பத்தித் திறனுடனான வேலை வாய்ப்பை அளிக்கும் நோக்கத்துடன் திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்படவேண்டும். ஒவ்வொரு துறையிலும் இந் நோக்கத்தைச் செவ்வியமுறையில் செயல்படுத்தும் நடவடிக்கை



1985 ஜூன் 12]

களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். ஏழைகளுக்கான வேலை வாய்ப்புக்கள் பெருகவும், அவற்றின் மூலம் உற்பத்தி பெருகவும் வகைசெய்யும் திட்டங்களை மாற்றியமைத்து அவற்றின் மூலம் கிடைக்கும் பலன்களைக் கணக்கிட வேண்டும்.

6. கிராமப்பகுதி வேலைவாய்ப்புத் தேசியத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மூலமாக கிராமப் பகுதியில் வேலைவாய்ப்பை முனைப்பாகச் செயல்படுத்த அவற்றை சிறந்த முறையில் திட்டமிட்டு, உன்னிப்பாகக் கண்காணித்து, நிருவாகிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். தொழில் துறையில் பிற்பட்ட பகுதியையும் முன்னேறியுள்ள பகுதியையும் இணைக்க வகை செய்யப்பட வேண்டும். அப்போதுதான் பயனடைவோர் கிடைக்கும் நிதியுதவியை முழுவதுமாகப் பயன்படுத்தமுடியும். தற்போது தனிப்பட்டோரையே பெரிதும் நோக்கமாகக் கொண்ட ஒருகிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு அவசியமான இடங்களிலெல்லாம் திட்டத்தை தனித்து இயங்கும் தன்மையை மேம்படுத்தும் பொருட்டு, ஒரே தொகுதியினாக அமைத்து வடிகால், கண்ணி வாய்க்கால் போன்ற அடிப்படை வசதிகளையும், சிறுதொழில் வளர்ச்சிக்குத் தேவையான சமூக அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துவதற்காக இத்திட்டங்களை பயன்படுத்துவதன்மூலம், இத்திட்டங்களை, வேளாண்மை-கிராம வளர்ச்சியுடன் இயன்றவரை ஒருங்கிணைக்கப்படும் கிராமப் பகுதிகளில், வேளாண்மை மூலமும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஊரகத் தொழில்கள் பணிகளில் பண்ணைத் தொழில் அல்லாத வேறு தொழில்களில் வேலை வாய்ப்பை விரிவுபடுத்துவதன் மூலமும் வேலைவாய்ப்பை பெருக்க வேண்டும். வேலைவாய்ப்புத் திட்டங்களின் பயனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு கற்றோர் அளவை உயர்த்தவும் குறிப்பாகக் கல்வியின் பயனைப் பெறவும், புதிய திறமைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெருக்கவும் திட்டவட்டமான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

7. ஏழாம் திட்டத்திற்கான அடிப்படை முன்னுரிமை உணவு, வேலை, வாய்ப்பு, உற்பத்திதிறன் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படுகிறது. உயர் வேளாண்மை வளர்ச்சி வேலை வாய்ப்பை உருவாக்குதல், உற்பத்திதிறமை, உற்பத்திதரம் ஆகியவற்றை மேம்படுத்துதல் தொழிலிலும், அடிப்படை வசதியிலும் தொழில் நுட்ப

[1985 ஜூன் 12

முறைகளை மேம்படுத்தல், குறைந்த அளவு மூலதனத்தைப் பயன்படுத்துதல், அதிக எண்ணிக்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல், வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் பலரும் பயன்படுத்தும் பொருட்கள் உற்பத்திக்கும், நடவடிக்கைக்கும் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவற்றிற்கான கோட்பாடு ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

8. வேலை வாய்ப்பைப் பெருக்குவது மட்டுமே வறுமையை ஒழிக்காது. அதிலும் முக்கியமாக நிதி வாயில்கள், தொழில் நுட்ப உத்திகள் ஆகியவை கிடைப்பதிலுள்ள ஏற்றத்தாழ்வுடன் கூடிய ஒரு நிறுவன அமைப்பில் வேலை வாய்ப்பைப் பெருக்குவதாலேயே வறுமையைக் குறைக்க இயலும் என்று கருதமுடியாது என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதனால், வறுமையை அகற்றுவதற்கான திட்டம் நிறுவன மாற்றங்களை முக்கியமாக கொண்டிருக்கவேண்டும். மேலும் தனிப்பட்டோர் பயனடையக்கூடிய திட்டங்கள் போன்றவற்றால்தான் வறுமையை ஒழிக்க முடியும். இந்த திட்டம் சிறந்ததாக ஏற்றுக் கொள்வதனால், நிறுவன அமைப்பை மாற்றியமைக்க நாம் தொடர்ந்து முயற்சி செய்து வருவதால், வேலைவாய்ப்பின் மூலம் கிடைக்கும் பலன்களால் வறுமையைக் குறைப்பதற்கான வாய்ப்புகளை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டுள்ளோமா என்பதை நாம் சிந்திப்பது அவசியமாகும்.

9. கிராம வளர்ச்சித் திட்டங்களின் செயல்திறன் கிராம வளர்ச்சி நிருவாகத் திறமை ஆகியவற்றில் பெருந்தடையாக உள்ள அடிப்படைக் குறைப்பாடுகள் இரண்டு உள்ளன என்று அனுபவத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உள்ளனவாகும்.

10. வளர்ச்சி நடவடிக்கைகளோடு இணைந்த நடைமுறை இடர்பாடுகளையும் ஏனைய இடர்பாடுகளையும் களைவதற்கு ஒருமித்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். 1950 ஆம் ஆண்டு முதல் 1959 ஆம் ஆண்டு பின் பாதியில் சமுதாய நல வளர்ச்சி அமைப்புகளும் பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புகளும் கல்வி குறித்து எடுத்த முயற்சிகளை மேலும் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. தென்கொரியாவில் 'புதிய கிராம இயக்கத்தை' ஏற்படுத்திய அனுபவத்திலிருந்து



1985 ஜூன் 12]

இதன் முக்கியத்துவத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். இதனுடைய கோட்பாட்டுச் சொற்கள் என்னவெனில், அமைப்பு, கல்வி, பங்கேற்றல் ஆகியவையேயாகும். இவை நமக்குப் புதியதல்ல. ஆனால், இப்புதிய கிராம இயக்கத்தில் பங்கேற்கக் கூடியவர்கள் போதிய அளவு நமக்கு இல்லை. இக்குறைபாட்டினைக் களைய, எல்லா நிலைகளிலும் உள்ள நிறுவன நிருவாக அமைப்புகளின் செயல்திறனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தற்போதுள்ள நிலைமை, நாம் பெற்ற அனுபவத்தின் மீதான நம்பிக்கையின் வெற்றியாகக் கருத முடியாது. கிராம வளர்ச்சியில் நாம் அதிக சாதனை பெறுவதற்கான நம்பிக்கையை இந்த அனுபவங்களிலிருந்து வலியுறுத்தும் வகையில் தெரிந்து கொள்ளலாம்.

### கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் அலுவலகம்.

1. கிராம வேலைவாய்ப்பு தேசியத் திட்டம்.

நோக்கங்கள்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம வேலை வாய்ப்புத் தேசிய திட்டமானது இம்மாநிலத்தில் 1980 அக்டோபர் திங்கள் முதல் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் குறித்து ஏற்படும் செலவை, மத்திய அரசும்—மாநில அரசும் சம விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) கிராமப் பகுதிகளிலுள்ள வேலைவாய்ப்பற்ற, போதியளவு வேலை வாய்ப்பற்ற ஆண், பெண் இருபாலருக்கும் பயனுள்ள வேலைவாய்ப்பினை கூடுதலாக உருவாக்குதல்.

(2) கிராம அடிப்படை வசதிகளை வலுப்படுத்தும் வகையில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல், கிராமப் பொருளாதாரம் விரைவாகப் பெருகி, கிராமத்திலுள்ள ஏழை மக்களின் வருவாய் சீராக உயரவும் ஓரளவுக்கு இது வழி வகுக்கும்.

(3) சத்துணவுத் தரத்தை உயர்த்தி கிராமத்திலுள்ள நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

முதலீடு—உழைப்பு நாட்கள்.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை ரூ. 164.18 கோடியாகும். ஆறாம் திட்டக் காலத்தில் செய்யப்பட்ட முதலீட்டின் அளவையும் உருவாக்கிய உழைப்பு நாட்கள் பற்றிய விவரங்களையும் கீழ்க்காணும் அறிக்கையில் காணலாம்.

| | முதலீட்டின் அளவு (ரூபாய் கோடியில்). | உருவாக்கப் பட்ட உழைப்பு நாட்கள். (இலட்சத்தில்). |
|---|---|---|
| 1980—81 .. .. .. | 10.59 | 146.75 |
| 1981—82 .. .. .. | 34.54 | 448.15 |
| 1982—83 .. .. .. | 32.12 | 495.13 |
| 1983—84 .. .. .. | 35.82 | 341.29 |
| 1984—85 .. .. .. | 51.11 | 366.73 |
| | 164.18 | 1,798.05 |

இத்திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டிற்காக மத்திய அரசு ரூ. 41 கோடி நிதி ஒதுக்க ஏற்பளித்துள்ளது.

இந்த முதலீட்டைக் கொண்டு 243.75 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த அளவு ஊதியங்கள் :

இத்திட்டத்தின் கீழ், 30—9—1984-ஆம் நாள் வரையில், நாள் ஒன்றுக்கு ஒரு தொழிலாளருக்கு 1 கிலோ அரிசியுடன் 5.15 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்கப்பட்டது. 1—10—1984-ஆம் நாள் முதற்கொண்டு ஒரு தொழிலாளருக்கு நாளொன்றுக்கு 1 கிலோ அரிசியும், 6.15 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. ஆக நாளொன்றுக்கு மொத்தம் ரூ. 8 கொடுக்கப்பட்டு வருகிறது. கிராம மக்களுக்கு இத்திட்டத்தின் முழுப்பயன்களும் கிட்டும் வகையில் இப்பணிகள் நேரடியாக மேற்கொள்ளப் படுகின்றன.





நிறைவேற்றப்பட்ட பணிகள்.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கிராமப்புறச் சாலைகள், சமூகக் கூடங்கள், ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆகியோருக்கு தொகுதி வீடுகள் போன்ற சுமார் 1,73,265 பணி முடிக்கப்பட்டன. 1984—85 ஆம் ஆண்டில் 33,813 பணிகள் முடிக்கப்பட்டன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கிராம வேலைவாய்ப்பு தேசிய திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்ட பணிகள் குறிப்பிடத்தக்க சில முக்கியப் பணிகள் வருமாறு :—

| | முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. பள்ளிக் கூடங்கள் .. .. .. .. | 2,000 |
| 2. சமூகக் கூடங்கள் .. .. .. | 5,429 |
| 3. ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான குடியிருப்புகள். | 9,358 |
| 4. சாலைகள் .. .. .. .. .. | 63,639 கிலோ மீட்டர்கள். |
| 5. காடு வளர்ப்பு .. .. .. .. | 37,460 எக்டேர்கள். |
| 6. நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல் (கண்ணி வாய்க்கால்கள், முக்கிய குறுக்கு வடிகால்கள், வெள்ளத் தடுப்பு—தண்ணீர் தேங்கியிருக்காமல் தடுப்பது தொடர்பான பணிகள்). | 4,361 |

பணிகளை நிறைவேற்றுதல்.

இத்திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றியங்களின் கிராம நல அலுவலர்கள் அல்லது சாலை ஆய்வாளர்கள் மூலமாக பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படுகின்றன. இந் நடைமுறையை அரசு ஆய்வு செய்துள்ளது. இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் என்பதைக் கருத்தில் கொண்டு இனி மேலும், ஊராட்சி தேர்தல்கள் முடியும் வரையிலும் இப்பணிகளை கீழே குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதிகளில்

ஏதாவது ஒன்றை அல்லது பல தகுதிகளை பெற்றுள்ள வேலை வாய்ப்பற்ற நபர்கள் ஒருவரிடம் (இப்பணியை நிறைவேற்ற மிகவும் தகுதியுள்ளவர் என்று மாவட்ட ஆட்சியர் கருதியுள்ளார்). அல்லது மாவட்ட ஆட்சியர் தேர்ந்தெடுத்த உள்ளூர் ஆய்க்கட்டு தாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று 1985-ஆம் ஆண்டு மே திங்களில் அரசு உத்திரவிட்டுள்ளது.

(1) பி.இ. (சிவில் பொறியியல்).
(2) பி.இ. (இயந்திரம் பொறியியல்).
(3) பி.இ. (மின் பொறியியல்).
(4) தகுதிப்பட்டயம் பெற்றவர் (சிவில் பொறியியல்).
(5) தகுதிப் பட்டயம் பெற்றவர் (இயந்திரப் பொறியியல்).
(6) தகுதிப்பட்டயம் பெற்றவர் (மின் பொறியியல்).
(7) பட்ட மேற்படிப்பு (அறிவியல்).
(8) பட்ட மேற்படிப்பு (கலை).
(9) பட்டதாரி (அறிவியல்).
(10) பட்டதாரி (கலை).

**2. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டம்.**

மத்திய அரசு முழு அளவில் பொறுப்பு ஏற்கும் திட்டங்களில் ஒன்றான ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் 1983-84-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2) இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

(அ) வேலை வாய்ப்பில்லாத நிலமற்ற குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ஒருவருக்கேனும் வேலை வாய்ப்பு அளித்தல்.

(ஆ) பின் தங்கிய பகுதிகளில் நிலையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

(3) 1983-84-ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசு ரூ. 890 இலட்சம் அனுமதித்தது. 1984-85-ல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூ. 4,450 இலட்சம் வழங்கியது. இத்திட்டத்தின் கீழ், இது வரை ரூ. 6,982.02 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



(4) மத்திய அரசு நிர்வாக அனுமதி வழங்கிய பணிகளின் மொத்த எண்ணிக்கையும், முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | ஏற்பளிக்கப்பட்ட பணிகளின் மொத்த எண்ணிக்கை. | 31-3-1985 அன்றுள்ளபடி முடிக்கப்பட்ட பணிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 இணைப்பு சாலைகள் அமைத்தல் | 605 | 237 |
| 2 நிலமட்ட நீர், சிறு பாசனம் .. | 2,089 | 535 |
| 3 கசிவு நீர்க் குட்டைகள் .. | 1,078 | 1,035 |
| 4 ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான வீட்டுவசதி. | 20,000 | 19,042 |

(5) 31-3-1985 அன்றுள்ளபடி, ஆன மொத்த செலவு ரூ. 5,724.32 இலட்சமாகும்.

(6) 1984-85-க்கு, மத்திய அரசு 298.16 இலட்சம் மனித நாட்கள் என இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்க, 1985 மார்ச்சு இறுதிக்குள் அந்த இலக்களவுக்கு மேல் அதாவது 314.43 இலட்சம் சாதனை நிகழ்த்தப்பட்டது.

(7) இத்திட்டம் கிராமப் பகுதிகளில் பேரார்வத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மேலும் மேலும் பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது. உயர் அதிகாரக் குழு ஒன்றை தமிழ்நாடு மாநிலம் தான் முதன் முதலில் அமைத்தது. இக் குழுவின் மாநில அளவு திட்ட ஏற்பளிப்புக் குழு என மறு பெயர் இடப்பட்டது. இதற்கு தலைமைச் செயலாளர் தலைவராவார். இக்குழு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்கான அனைத்து முடிவுகளையும் எடுத்து உள்ளது. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் நிகழ்த்தியுள்ள சாதனை, நாட்டிலேயே சிறந்ததாக போற்றப்பட்டுள்ளதால் இந்த ஏற்பாட்டினை பிற மாநிலங்களிலும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

(8) ஓர் ஆண்டில், நூறு நாட்களுக்கு ஊரக நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கும் நோக்கத்துடன் 7-வது ஐந்தாண்டு திட்டத்

திலும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 1985-86-ஆம் ஆண்டிற்கு ரூ. 34.57 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த முதலீட்டின் பயனாக 1985-86-ல் 164.20 இலட்சம் மனித நாட்களில் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.**

நாடு விடுதலை பெற்ற பின்னர், நமது பொருளாதார வளர்ச்சி நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தற்சார்பு நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் நல்லதோர் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், பொருளாதார வளர்ச்சி போற்றத்தக்க வகையில் இருந்த போதிலும் பெருவாரியான கிராம மக்களுக்கு எந்த விதத்திலும் சம்பந்தப்பட்டதாக அமையவில்லை. 6-ஆம் ஐந்தாண்டுத் திட்ட கால தொடக்கத்தில் மாநிலத்தின் 55 சதவீத கிராம மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து வந்தனர் என மதிப்பீடுகள் காட்டின. வளர்ச்சியின் பலன்களில் பெரும் பாலானவை ஒரு பக்கம் நல்ல வளமை பெற்ற பகுதிகளில் உள்ள வர்களாலும் மற்றொரு பக்கம் கிராமப் பகுதிகளில் நல்ல நிலைமையில் உள்ளவர்களாலும் அனுபவிக்கப்பட்டுள்ளன என்பது அனுபவ வாயிலாக உணரப்பட்டுள்ளது. வேறு வகையில் கூறப் போனால், பிரிவு அல்லது திட்ட வகையில் மேற்கொள்ளப் படும் முயற்சிகள் அனைத்தும் கிராம மக்களின் வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் பயனளிப்பதாய் அமையவில்லை. "திட்ட இலக்குக் குழு" உறுப்பினர்களால் ஏழ்மையில் வாடும் மக்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குக் கடன், இடுபொருள் உதவித் தொகை, விற்பனை வசதிகள் முதலியவற்றைச் செய்து கொடுப்பதன் மூலம் நேரடியான ஒரு முயற்சியை எடுத்தாலொழிய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தேவையான அல்லது அவசியமான அளவிற்கு ஏழை மக்களுக்குப் பயனை விளைவிக்காது என்று உணர்வதற்கு வழி கோலியது.

(2) பின்வரும் இரண்டு நோக்கங்களை எய்துவதற்காக, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது :—

(1) கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பின்மையையும், தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பின்மையையும் போக்குதல்.

(2) கிராமப் பகுதிகளில் உள்ள மக்களில், ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் வாழ்க்கை தரத்தினை பெரும் அளவிற்கு உயர்த்துதல்.



(3) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு உள்ளதால், வறுமை நிலையிலுள்ள குடும்பங்களை கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படவிருக்கும் அடிப்படை கூறு குடும்பத்தின் வருமானமாக இருக்க வேண்டும். ஆண்டுக்கு நபருக்கு ரூ. 700 என்பது வறுமைக் கோட்டளவாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. 5 நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு இது ஆண்டுக்கு ரூ. 3,500 ஆகும்.

(4) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வட்டாரத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. அதில் ஒரு வட்டாரத்தின் ஆதாரங்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அக்குடும்பங்களுக்கு குறிப்பான உதவியை செய்வதற்கான திட்டங்களை தீட்டுகிறது. 6-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில், ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு வட்டாரத்திலும், சராசரி 600 குடும்பங்களுக்கு உதவி வழங்கப் பட்டுள்ளது. இம்மாநிலத்தில் அப்போது இருந்த 376 வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும், இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. தற்போது 2—10—1980 லிருந்து 378 வளர்ச்சி வட்டாரங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

(5) 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ஒதுக்கப்பட்ட உதவித் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1980—81 | வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 5 இலட்சம் வீதம் 376 வட்டாரங்களுக்கு. |
| 1981—82 | வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 6 இலட்சம் வீதம் 376 வட்டாரங்களுக்கு. |
| 1982—83 | வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 8 இலட்சம் வீதம் 376 வட்டாரங்களுக்கு. |
| 1983—84 | வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 8 இலட்சம் வீதம் 377 வட்டாரங்களுக்கு. |
| 1984—85 | இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு ரூ. 6.00 இலட்சம். |

(6) மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான தொகுதித் திட்டங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்புகளின் திட்டக் குழுக்களால் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படுகின்றன. தொகுதித் திட்டங்களும், மாவட்ட ஒருங்கிணைப்புத் திட்டங்களும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பளிக்கப்படுகின்றன. அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கான உதவி, மொத்தச் செலவில் 10 சதவீதம் அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் 7½ சதவீதம் நிர்வாகம் தொடர்பான செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒதுக்கீட்டில் மேலும் 2½ சதவீதம் பயிற்சி, அளவை முதலியன தொடர்பான செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(7) ஒதுக்கீட்டில் எஞ்சியுள்ள 80 சதவீதம் வேளாண்மை, சிறுபாசனம், கால்நடை வளர்ப்பு, வனம், மீனளம், பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவற்றின் கீழ் பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதற்காக கிராம மக்களுக்கு நேரடி உதவித் தொகை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. தொழில்கள், பணிகள் வியாபாரம் (ISp ) துறைகள் ஆகியவற்றிற்கு உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. மொத்தத்தில், கிராமப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒருங்கிணைந்த கிராமப்பகுதிகளில் மேற் கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒருகிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

(8) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. பொதுவாக, ஒரு குடும்பத்திற்கு வருவாய் ஈட்டித்தரும் சொத்தை ஏற்படுத்துவதற்கு உயரளவு உதவித் தொகை சொத்து மதிப்பில் 33 சதவீதமாகும். எஞ்சிய மதிப்பு அக்குடும்பத்திற்கு வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுத் தரப்படுகிறது. இவ்வாறாக ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் வங்கி நிதி பெரும்பங்காற்றுகிறது.

(9) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவை மாடுகளுக்கு, மருத்துவ வசதி செய்து கொடுக்க கால்நடை வளர்ப்பு என்பதின் கீழ் கால் நடை சிகிச்சை



சுற்றூர்திப் பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பாலைக் குளிரவைக்கும் நிலையங்களுக்குப் பாலை கொண்டு செல்வதற்கும் பாலை குளிரவைக்கும் நிலையங்களை ஏற்படுத்துவதற்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மை தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வேளாண்மை என்பதன் கீழ் மண்வள சோதனை சுற்றூர்தி ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், பெருமளவில் பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள நெசவாளர்களுக்கு உதவும் வகையில், நெசவாளர் தொழில் சங்கங்களில் தறிகள் நிறுவுவதற்காக விசைத் தறித் தொகுதிகள் நிறுவப்பட்டுள்ளன.

(10) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்காக உதவித் தொகை வழங்கிய வகையில் ஏற்பட்ட செலவு, வழங்கப்பட்ட வங்கிக்கடன், உதவி அளிக்க இலக்கிடப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை உண்மையில் உதவி அளிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | உதவித் தொகை. | வழங்கப் பட்ட கடன். | மொத்தம். | இலக்கிடப் கிடப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | உதவி பெற்ற குடும்பங்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1980–81 | 1,691 | 2,967 | 4,658 | 2,25,600 | 2,55,323 |
| 1981–82 | 2,810 | 4,736 | 7,546 | 2,25,600 | 2,58,225 |
| 1982–83 | 3,416 | 6,287 | 9,703 | 2,25,600 | 2,71,563 |
| 1983–84 | 3,369 | 5,975 | 9,344 | 2,26,650 | 2,77,641 |
| 1984–85 | 3,375 | 5,763 | 9,138 | 2,26,650 | 2,33,264 |
| மொத்தம் | 14,661 | 25,728 | 40,389 | 11,30,100 | 13,96,016 |

6-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி பெற்று 13.96 இலட்சம் பயனடைந்தோரில் 4.85 இலட்சம் பேர் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள், 3.30 இலட்சம் பேர் பெண்கள்.

(11) கிராமப் பகுதி இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்—

கிராமப் பகுதி இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கிழ் ஒரு பகுதித் திட்டமாகும். இதன்கீழ், கிராமப்பகுதி மக்கள் தாங்களே சுய வேலை வாய்ப்பை தேடிக் கொள்ள இயலும் வகையில், குறிப்பிட்ட ஒன்றில் பயிற்சி பெற்றுச் சிறக்க அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அத்தகைய பயிற்சிக்கு ஆகும் முழுச் செலவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து செய்யப்படுகிறது. ஆண்டுக்கு வட்டாரம் ஒன்றிற்கு குறைந்தது 40 இளைஞர்களுக்காவது பயிற்சி அளிக்க வேண்டும் என்பது இலக்காகும். பயிற்சிக்காலத்தில், ஆறுமாதகால அளவிற்கு பயிற்சி உதவித்தொகை அனுமதிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்னர், பயிற்சி பெற்றவர்கள் தாங்களே சொந்தத்தில் தொழில் தொடங்க இத்திட்டத்தின் கீழ் ஏற்ற உதவி வழங்கப்படுகிறது. கிராமப்பகுதி இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் எய்திய சாதனை வருமாறு :—

| ஆண்டு. | பயிற்சி அளிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. | ஆதாரம் தரத்தக்க தொழிலில் ஈடுபடுத்த பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980–81 .. .. .. | 16,297 | 9,555 |
| 1981–82 .. .. .. | 61,117 | 47,929 |
| 1982–83 .. .. .. | 40,468 | 42,289 |
| 1983–84 .. .. .. | 30,970 | 29,503 |
| 1984–85 .. .. | 17,250 | 10,116 |
| மொத்தம் .. | 1,66,102 | 1,39,392 |



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், பெரும்பான்மையான கிராம ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பை அளிப்பதில், போற்றத்தக்க திட்டம் ஆகும். அத்திட்டத்தை செயல்படுத்துவதில் விரும்பத்தக்க மேம்பாடுகளைக் கொண்டுவர இயலும் வகையில், இத்திட்டத்தைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பயனீட்டாளர்களில் 90 சதவீதம் பேருக்கு முதல் முறையாக நிதி உதவி வழங்கப்பட்டது; பயனீட்டாளர்களில் சுமார் 10 சதவீதம் பேருக்கு மட்டும் இரண்டாம் முறையாக நிதியுதவி வழங்கப்பட்டது. முதல் முறை நிதியுதவியினால் பயனீட்டாளருக்கு சொற்ப அளவுக்கு வருமானம் உயர்ந்துள்ளபோதிலும் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள சில பயனீட்டாளருக்கு அந்த நிதியுதவி போதுமானதாக இல்லை. எனவே 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் வறுமைக்கோட்டிற்கு மேலே வராத பயனீட்டாளர்களுக்கு அவர்கள் வறுமைக்கோட்டிற்கு மேலே வர இயலும் வகையில், அவர்களுக்கு 1985-86-ல் மீண்டும் நிதியுதவி வழங்க வேண்டுமென்று இந்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது. அவ்வாறே, 1985-86-ல் 2,05,060 பயனீட்டாளர்களுக்கு இரண்டாம் முறையாக நிதி உதவி வழங்கப்படும். இத்துடன் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள 68,353 புதிய குடும்பங்களுக்கு அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே வர நிதியுதவி வழங்கப்படும். இக்காரியத்திற்காக 1985-86 ஆம் ஆண்டிற்காக இந்திய அரசு, மொத்தம் ரூ. 2,776.85 இலட்சம் உதவித் தொகை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த உதவித்தொகையானது மத்திய மாநில அரசுகளால் சரிசமவீத அடிப்படையில் வழங்கப்படும்.

(12) மதிப்பீடு

ஓர் திட்டத்தைச் செவ்விய முறையில் நிர்வகிக்க மதிப்பீடானது இன்றியமையாத தேவையாக இருப்பதால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயல் விளைவுகள்

குறித்து அவ்வப்போது மதிப்பீடு ஆய்வுகள் நடத்த அரசு விரும்பியுள்ளது. இதுவரை நடத்தப்பட்டுள்ள மதிப்பீட்டு ஆய்வுகள் பின்வருவனவற்றைத் வெளிப்படுத்தியுள்ளன:—

(1) பயனீட்டாளர்களுக்குக் கூடுதல் வருமானத்தைத் தருவதோடு மட்டுமல்லாது அவர்களுக்குச் சத்துணவு உட்பட்ட தங்களுடைய உணவு பழக்க முறைகளில் ஓர் மாற்றத்தையும் இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது.

(2) சுய வேலைவாய்ப்பும் அதன் காரணமாக கடன் சுமையிலிருந்து நிவாரணமும், சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதலும் இத்திட்டத்தின் பெரிய நன்மைகளாகும்.

(3) சுய வேலைவாய்ப்பிற்காக பயனீட்டாளர்கள் பெற்றுள்ள கடன்தொகை உரிய கால அளவில் திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது.

(4) இத்திட்டம் குறித்து, பயனீட்டாளர்களில் 95 சதவீதம் பேர் தங்களுடைய மனநிறைவைத் தெரிவித்துள்ளனர்.

**4. வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காக சிறு உழவர்கள், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்கள் ஆகியோருக்கு உரிய விரிவான நிதியுதவித் திட்டம்:**

(1) வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு உழவர்கள், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்கள் ஆகியோருக்குரிய விரிவான நிதியுதவித் திட்டம் தமிழ்நாட்டில் 1983-84-ல் கொண்டு வரப்பட்டது. பாசனக் கிணறுகள் தோண்டுதலின் அல்லது தற்போதுள்ள கிணறுகளைப் பழுதுபார்த்தலின் அல்லது நீரேற்றுப்பொறிகளை நிறுவுதலின் மூலம் சிறுபாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. நிலத்தைப் பண்படுத்தல், விறகு, பழ மரங்களை வளர்த்தல், தீவனப் பயிர்களை வளர்த்தல் ஆகியவற்றிற்காகவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. சிறு உழவர்கள், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்கள் ஆகியோருக்கு விதைகள்-உரங்கள் அடங்கிய சிறு பெட்டிகள் வழங்கப்படுகின்றன. வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் உதவித் தொகையாக ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்காக பின்பற்றப்படுகிற விதிமுறைகள் இத்திட்டத்திற்கும் பின்பற்றப்படுகின்றன. இத்திட்டத்திற்கான செலவுகளை, மத்திய மாநில அரசுகள் சம அளவில் ஏற்றுக்கொள்கின்றன.



(2) மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்புகளின் மூலம் ஊரக வளர்ச்சித்துறை சிறுபாசன நில மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. இத்திட்டத்தின் ஏனைய கூறுகள் அதாவது உரங்கள், விதைகள் ஆகியவற்றை இலவசமாக விநியோகித்தல், விறகு மரங்கள், பழரகங்களை வளர்த்தல் ஆகிய திட்டங்களை வேளாண்மைத்துறை இயக்குநர், தோட்டக்கலை இயக்குநர், எண்ணெய் வித்துக்கள் இயக்குநர் ஆகியோர் செயல்படுத்துகின்றனர்.

(3) இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | அனுமதிக்கப் பட்ட நிதி. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983–84 .. .. .. | 1,468.52 | 972.38 |
| 1984–85 .. .. .. | 1,393.84 | 1,431.49 |

1985-86-ல் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் ஈடுபடுத்தி இத்திட்டங்களை மிகவும் இசைவான ஒருங்கிணைந்த முறையில் தீவிரப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,511.15 இலட்சமாகும்.

(4) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் பெருந்திட்டத்தின் கீழ் எய்தப்பெற்ற திட்டச் சாதனை பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | 1983–84 | 1984–85 |
|---|---|---|
| I. சிறுபாசனம்— | | |
| 1. பயனடைந்த குடும்பங்கள் எண்ணிக்கை. | 27,061 | 48,551 |
| 2. பயனடைந்த எக்டேர் .. | 30,238 | 56,502 |
| II. நில மேம்பாடு— | | |
| 1. பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை. | 1,242 | 7,409 |
| 2. பயனடைந்த எக்டேர் .. | 932 | 9,522 |

மேலும், சிறுபாசனத் திட்டத்தின் கீழ், தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை, நிறுவப்பட்ட நீரேற்றுப்பொறிகளின் எண்ணிக்கை முதலியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | 1983–84 | 1984–85 |
|---|---|---|
| | எண்ணிக்கை. | |
| 1. கிணறுகள் தோண்டுதல் .. | 2,756 | 3,066 |
| 2. குழாய்க் கிணறுகள் தோண்டுதல். | 1,115 | 1,169 |
| 3. நிறுவப்பட்ட நீரேற்றுப் பொறிகள். | 1,276 | 1,890 |
| 4. நிறுவப்பட்ட டீசல் என்ஜின்கள். | 17,375 | 27,136 |
| 5. நிறுவப்பட்ட மின்சார மோட்டார்கள். | 921 | 2,896 |

5. புதிய எரிசக்தி திட்டங்கள் : ..

மீண்டும் பயன்படுத்தத்தக்க, மாற்று எரிசக்தி வாயில்களைக் கண்டறியவும், அவற்றை மேம்படுத்தவும், தேசிய அளவில் முயற்சிகள் மேற்கொள்வதாக ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசின் புதிய எரிசக்தி வாயில்கள் துறை, கரிம வாயு மேம்பாட்டிற்காகத் தேசிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. இத் திட்டம் மத்திய அரசின் முழு ஆதரவையும் பெறும் திட்டமாகும். இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நல்ல முறையில் செயலாற்றியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் VI ஆம் திட்டக் காலத்தில் 21,500 கரிமவாயு எந்திர சாலைகளை நிறுவக் கருதப்பட்டது. ஆனால் VI ஆம் திட்டக் காலத்தில் 30,270 கரிமவாயு எந்திர சாலைகள் நிறுவப்பட்டன.

(1) இலக்கும் சாதனையும்:

இத் திட்டத்தின் இலக்கு இத் திட்டம் செயல்படுத்தத் தொடங்கிய நாள் முதற் கொண்டு எய்தப் பெற்ற சாதனை ஆகியவை பற்றிய விவரம் வருமாறு:—

| ஆண்டு. (1) | இலக்கு. (2) | சாதனை. (3) |
|---|---|---|
| 1981–82 .. | 3,500 பிரிவுகள். | 1,327 பிரிவுகள். |
| 1982–83 .. | 3,000 பிரிவுகள். | 4,644 பிரிவுகள். |
| 19983–84 .. | 5,000 பிரிவுகள். | 6,750 பிரிவுகள். |
| 184–85 .. | 10,000 பிரிவுகள். | 17,549 பிரிவுகள். |



1984-85 ஆம் ஆண்டுக் காலத்தில், அகில இந்திய அளவில் இம்மாநிலம் இரண்டாம் இடத்தைப் பெற்றது. 1985—86 ஆம் ஆண்டிற்காக அரசு 20,000 எந்திர சாலைகளை நிறுவ இலக்கிட்டுள்ளது. 40,000 எந்திர சாலைகளை நிறுவுவதற்காக மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இத் திட்டத்திற்காக 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 182.60 இலட்சம் தற்காலிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எந்திர சாலைகள் அமைப்பதற்கான செலவு, ஆயத்த அடிப்படை பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஆயத்த அடிப்படைக் கட்டணம், தூண்டும் பணியை மேற்கொள்பவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ஆகியவற்றிற்குத் தாராளமாக உதவித் தொகை வழங்குவதற்காக, இத்திட்டத்தின் கீழ் தொகை செலவிடப்படுகிறது. இத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையின் ஆண்டுவாரியான விவரம் வருமாறு:—

| ஆண்டு. | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1981–82 .. .. .. | 10.92 |
| 1982–83 .. .. .. | 46.13 |
| 1983–84 .. .. .. | 143.00 |
| 1984–85 .. .. .. | 302.55 |
| மொத்தம் .. | 502.60 |

(2) பயிற்சி :

கரிம வாயு எந்திர சாலைகளைக் கட்டுவதற்காகப் பெருமளவில் தேர்ச்சி பெற்ற நபர்களை உருவாக்குவதற்காக, கிராமப் பகுதிகளில் உள்ள கொத்தனார்களுக்குத் தீவிரமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1982–83 .. .. .. | 5 வகுப்புகள். |
| 1983–84 .. .. .. | 7 வகுப்புகள். |
| 1984–85 .. .. .. | 59 வகுப்புகள். |

மேற்சொன்ன பயிற்சி வகுப்புகள், கிராமப் பகுதி விரிவாக்கப் பயிற்சி மையங்கள், பவானிசாகரிலுள்ள, கிராமப் பகுதி வளர்ச்சிக்கான மாநில நிறுவனம் ஆகியவற்றில் நடத்தப்படு

கின்றன. கோயம்புத்தூர் சக்தி பவுண்டேஷன், கே. வி. குப்பம் ருஷா ( RUSHA ) ஆகிய தொண்டு நிறுவனங்கள், நாகர்கோவி லில் உள்ள முறையான தொழில் நுட்பவியல் மையம் ஆகியவையும் இப்பயிற்சித் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

பயன்படுத்துவோருக்கான ஒரு நாள் பயிற்சி முகாம்கள் மூலம் கிராமப் பகுதி மகளிரை ஊக்குவிக்கும் பணி, மேற்கொள்ளப் படுகிறது. 1984—85 ஆம் ஆண்டில் 600 பயிற்சி வகுப்புகளை நடத்த மத்திய அரசு அனுமதி வழங்கியதில், 300 பயிற்சி வகுப்புக்கள் ஏற்கெனவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சி யுள்ள 300 பயிற்சி வகுப்புகள் 1985—86 இல் நடத்தப்படும்.

### (3) பராமரிப்பு:

எந்திர சாலைகள் செயல்படுவதைக் கண்காணிக்கவும் தேவையான தொழில் நுட்ப வசதிகள் விவசாயிகளுக்கு சென் றடைவதற்கு வகை செய்யவும், பராமரிப்புத் திட்டம் ஒன்று 1—1—1985 ஆம் நாளிலிருந்து புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். பழுதடைந்த கரிம வாயு எந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக, மூல நிதியாக ரூ. 2.80 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்தது.

### (4) மேம்படுத்தப்பட்ட சூளைகள் :

விறகுப் பற்றாக்குறை, பெருமளவில் காடுகள் அழிக்கப்படுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட சூளை கள் குறித்து, செய்முறை விளக்கம் செய்து காண்பிப்பதற்காக தேசியத் திட்டம் ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 25 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் எரி சக்தியை மிச்சப்படுத்தக் கூடிய மேம்படுத்தப்பட்ட சூளைகளின் பல மாதிரிகள் குறித்துத் தமிழ்நாடு முழுவதிலும் (நிலையான, எடுத்துச் செல்லத்தக்க) செய்முறை விளக்கம் செய்து காட்டி, அவை நிறுவப்படும்.

1984—85 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட 20,000 சூளைகளை நிறுவுவதற்காக திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், 1985 மார்ச்சுத் திங்கள் வரை, 79,751 மேம்படுத்தப்பட்ட சூளைகள் நிறுவப்பட்டுள்ளன. அத்தகைய சூளைகளை நிறுவுவதற்கு வகை செய்யும் பொருட்டு, தன்னிறைவு இயக்கம்



ஒன்று ஏற்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சூளைகளைக் கட்டுவதற்கும் நிறுவுவதற்கும், கிராமப் பகுதிக் குயவர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காகத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை, குயவர்களுக்கு 120 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் சுமார் 2,000 குயவர் கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி பெற்று மேற்சொன்ன குயவர்கள், சூளைகளை நிறுவுவர். இவர்கள், நிறுவப்பெற்ற சூளைகளை மேற்பார்வையிடுவதற்காக, சூளை ஒன்றுக்கு ரூ. 5 என்னும் விதத்தில் மேற் பார்வைக் கட்டணம் பெறத் தகுதியுடையோராவர். இவ்வாறாக, இத்திட்டம், கிராமப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், வகை செய்துள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் சூளைத் திட்டத் திற்கெனத் தனியாகத் தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை. இது, கரிம வாயுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1985—86 இல், 30,000 சூளைகளை நிறுவவும், 20 பயிற்சி வகுப்புக்களை நடத்தவும், புகையில்லாத 250 கிராமங்களை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

### 6. ஊராட்சித் தேர்தல்கள்:

நீண்ட காலமாக, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக் களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை, ஊராட் சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களின் அலுவலகப் பதவிகளுக்கு எந்தவொரு ஒதுக்கீடும் இல்லாமல் அவற்றுக்குத் தேர்தல்கள் நடத்த வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க, மேற்கூறிய அலுவலகங்களின் பதவிகளுக்கான ஒதுக்கீடு குறித்து, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின், இது தொடர்பான விதி முறைகளை அரசு ரத்து செய்துவிட்டது.

மாநிலத்திலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக் களுக்கு 1985, செப்டம்பர், 9 ஆம் நாள் ஒரே தொகுதியாக தேர்தல்கள் நடத்துவதற்கு அரசு கருதியுள்ளது. ஊராட்சித் தேர்தல்கள் நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

**7. ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரித்தல்:**

1985—86 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்களின் படி, கட்டுக்கடங்காமல் இருந்த கீழ்க்காணும் ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:—

1. திருப்பத்தூர் (வடாற்காடு மாவட்டம்).
2. ஊத்தங்கரை (தருமபுரி மாவட்டம்).
3. பாலக்கோடு (தருமபுரி மாவட்டம்).
4. குளித்தலை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
5. ஆண்டிப்பட்டி (மதுரை மாவட்டம்).

**8. பழங்குடியினர் வட்டாரங்களை ஏற்படுத்துதல்:—**

**(1) கல்ராயன் மலைகள்.**

கல்ராயன் மலைப் பகுதிக்காக, அரசு சமுதாய நல வளர்ச்சி வட்டாரம் ஏற்படுத்தியதன் காரணமாக இவ் வட்டாரப் பகுதியில் பஞ்சாயத்து ராஜிய அமைப்புகளை அறிமுகப்படுத்துவது பற்றி பரிசீலனையில் உள்ளது.

**(2) ஜவ்வாது மலைகள்:** ..

பழங்குடியினர் அதிகமாக வாழுகின்ற வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலைகளில், பக்கத்திலுள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சில ஊராட்சிகளை நீக்கிவிட்டு, தனியாக பழங்குடியினர் நல வளர்ச்சி வட்டாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**9. ஊரகத் தகவல் தொடர்பு நலத் திட்டங்கள்:**

கிராம மக்களுக்குக் கல்வி, பொழுது போக்கு ஆகியவற்றை அளிக்கும் நோக்கில் சென்னை தொலைக்காட்சி நிலையம் தொடங்கியவுடன் மக்கள் குழுமி இருந்து பார்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்த அழுத்த 7 டிரான்ஸ்மீட்டர்கள் கொண்ட வேலூர், ஏற்காடு, கோயம்புத்தூர், கொடைக்கானல், கும்பகோணம், பாண்டிச்சேரி, திருச்சிராப்பள்ளி ஆகிய தொலைக் காட்சி தெரியக் கூடிய பகுதிகளின் ஊராட்சிகளில் 1984-85 ஆம் ஆண்டில், 1,100 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ. 33.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.



1985-86 ஆம் ஆண்டில் மாவட்டங்களில் ரூ. 1.52 கோடி செலவில் 24 அங்குலம் திரை அளவு கொண்ட தொலைக் காட்சிப் பெட்டிகள் 3,792 அமைக்குமாறு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இத்தகைய தொலைக் காட்சிப் பெட்டிகளிலிருந்து தனியாக, 250 தொலைக் காட்சிப் பெட்டிகளும் சமூகக் கல்வி உதவியின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. 1985—86 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொலைக் காட்சிப் பெட்டிகளின் மொத்த எண்ணிக்கை 4,042 ஆகும்.

**10. ஏனைய திட்டங்கள்:**

1985—86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 188.74 இலட்சம் நிதி யொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| திட்டம். (1) | நிதி ஒதுக்கீடு. 1984–1985 (2) | 1985–86 (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 இணைப்புச் சாலைகள் .. | 100.00 | 0.01 |
| 2 பள்ளிக் கட்டிடங்கள் .. .. | 150.00 | 0.01 |
| 3 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கல் | 150.00 | 50.00 |
| 4 கால்நடை பராமரிப்பு .. | 12.00 | 12.00 |
| 5 மீனளங்கள் .. .. .. | 8.70 | 8.70 |
| 6 பொதுக் கழிப்பிடங்கள் .. | 100.00 | 100.00 |
| 7 சமூகக் கல்வி .. .. .. | 9.00 | 9.00 |
| 8 கிராமப்புற கைவினைஞர்களுக்கான பயிற்சியும் உற்பத்தி மையமும். | .. | 4.00 |
| 9 பயிற்சி .. .. .. | .. | 0.02 |
| 10 சிறு பாசனம் .. .. .. | .. | 5.00 |
| மொத்தம் .. | 529.70 | 188.74 |

1985—86 ஆம் ஆண்டிலிருந்து இணைப்புச் சாலைகள் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் NREP கீழ் எடுத்துக் கொள்ளப் படும்.

கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கு திட்டத்தின் நிதி யொதுக்கம், ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிகளுக்கும், குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கும், புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்வதற்கும், செயல்படாத திட்டங்களான, எஃகாலான பெரிய நீர்த்தொட்டி, ஏனைய துணைக்கருவிகள் மாற்றி யமைத்தல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தப்படும்.

கால்நடை பராமரிப்பு மானியத்தின்கீழ், 24 கால்நடை மருந்தகங்களுக்கு (இரண்டாம் நிலை) க்கான கட்டிடங்கள் கட்டப்படும்.

**10 (1) மீனளங்கள் :—**

குறிப்பிட்ட பகுதியில் மீனளங்களை தீவிரமாக பெருக்கும் நோக்கில் 1985-86 ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. தீவிரமான மீனளப்பெருக்கத்தை மேற் கொள்வதற்காக, இத்திட்டத்தில் குளங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுக்கு மீனளத்துறையின் மூலம் தேவையான தொழில் நுட்ப உதவிகளும் அளிக்கப்படுகிறது.

**(2) கிராமப்புற துப்புரவு.**

சமூக பொருளாதார மேம்பாட்டு துப்புரவு மிக அவசியமாக கருதப்படுகிறது. இது மக்களின் முக்கியமான அடிப்படை தேவையாகும். துப்புரவு நிலையை மேம்படுத்துவது சிறந்தது. அதேசமயத்தில் நீரினால் வரும் வியாதிகள், மலஜலத்திலிருந்து பரவும் வியாதிகள் (தமிழ்நாட்டில் ஏறக்குறைய 80 சதவிகித நோய் இவைதான்) முதலியவற்றை தடுப்பதற்கு தடுப்பு சுகாதார நடவடிக்கைகளுக்கு ஏற்படும் செலவைக்காட்டிலும் துப்புரவு குறித்து ஏற்படும் செலவு குறைவானதே. திறந்த வெளிகளில் மலஜலம் கழிப்பது அதிகமாக பரவியுள்ளது. ஆனால் அதனால் ஏற்படும் அபாயங்களை அறிவதில்லை அல்லது தெரிந்து கொள் வதில்லை. எனினும், குறிப்பாக குழந்தைகள் அதிக வீதத்தில் இறந்துபோவதற்கும், நோய்வாய்ப்படுவதற்கும் இதுதான் முக்கிய காரணமாகும், மலஜலம் தொடர்பாக ஏற்படும் நோய் களாவன: வயிற்றுப்போக்கு, வாந்திபேதி, டைபாய்டு, கல்லீரல் அழற்சி, வயிற்றில் பூச்சி இருத்தல், சீதபேதி. துப்புரவு கழிப் பிடங்களை மலஜலம் கழிப்பதற்கும் பயன்படுத்தினால் இந்த நோய்களையும் இறப்புக்களையும் தவிர்க்க இயலும். மலஜலம் முறையான இடத்தில் கழிக்கப்பட்டால், இந்நோய்களை கட்டுப் படுத்த இயலும். தமிழ்நாடு முழுவதிலும் துப்புரவு நிலையை மேம்படுத்த இயலும். உரிய துப்புரவு வசதிகளை ஏற்படுத்தாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் மூலமாக மட்டும் பயன்கள் எய்த முடியாது என்று ஆய்வுகள் தெரிவிக் கின்றன.



அனைத்துநாட்டு குடிநீர் வழங்கல் துப்புரவு ஆண்டின் (1981—1990) ஒரு பகுதியாக 1982—83 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்திற்கிணங்க ரூ. 16.00 கோடி செலவில் 11,205 மகளிர் கழிப்பறைகளைக் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. 1985 மே இறுதிவரை 10,450 மகளிர் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த எல்லா கழிப்பறைகளிலும் நீர் வழங்குவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

யூனிசெஃப், மத்திய அரசு, உலகவங்கி ஆகியவற்றின் உடனுழைப்புடன் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் குறைந்த செலவில் தனி கழிப்பறைகள் கட்டுவதற்கான செய்முறை விளக்கத் திட்டம் 1984—85-இல் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் குறைந்த செலவில் 2,100 தனி கழிப்பறைகள் கட்டப்படும். குறைந்த செலவிலான தனிகழிப்பறைகளுக்கு வடிவமைக்கும்போது துப்புரவு சுகாதாரமுறையிலும் சுற்றுப் புறம் பாதுகாப்பாக இருக்கும்வகையிலும், தொழில் நுட்பவகை யிலும், அறிவியல் வகையிலும் பொருத்தமாக இருக்கும்படியும், சமூகவகையிலும் பண்பாட்டு வகையிலும் ஏற்றுக்கொள்ளும்படி யும், பொருளாதார வகையில் ஏற்புடையதாகவும், கட்டுமானம் செயல்பாடு, பராமரிப்பு ஆகியவற்றில் எளிமையாக இருக்கும் வகையிலும் கவனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(3) சமூகக் கல்வி :**

சமூகக் கல்வி மையங்களையும் தகவல் மையங்களையும் பராமரிப்பதற்கும், பொருட்காட்சிகள் நடத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டது.

**(4) கிராம கைவினைஞர்களுக்கு பயிற்சி உற்பத்தி மையம் :**

தற்போதுள்ள பயிற்சித்திட்டத்தை மேம்படுத்தும்பொருட்டு ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆதரவு அளிப்பதற்கு முன்னர் திறமையையும் நடைமுறையும் மேம்படுத்துவதற்காக கிராமப்புற கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்கவும், இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட கிராமத் தொழில்களில் செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்காக விற்பனை அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய தொழில் பிரிவுகளை சீரமைக்கவும், அத்தொழிற்பிரிவுகள் இல்லாத இடங்களில் புதிய மையங்களை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

(5) ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு கிராம விரிவாக்கப் பயிற்சி மையத்தை ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பயிற்சி மையத்தை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இது தவிர, தற்போதுள்ள கிராம விரிவாக்கப் பயிற்சி மையங்களை வலுப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**(6) சிறு பாசனம் :**

ஊராட்சி ஒன்றியங்கள் பாரமரித்துவரும் சிறு பாசன ஏரிகளுக்காக தனித்திட்டம் ஒன்றை எடுத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது. வரை நிலக் கால்வாய்களை விரிவுபடுத்த முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன் ஒவ்வொன்றும் 100 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான ஆயக்கட்டுள்ள இந்த ஏரிகள் படிப்படியான முறையில் எடுத்துக் கொள்ளப்படும்.



**11. கிராமப்புறத்தில் குடிநீர்வழங்கலும், கைப்பம்புகளையும் விசைப்பம்புகளையும் பராமரித்தலும் :**

எல்லா கிராமங்களிலும் குடிநீர் கிடைப்பதைக் கண்காணிக்கவும் உறுதி செய்யும் அரசு உயர் அளவிலான குழு ஒன்றை அமைத்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் கிடைக்கும் நிலைமையொட்டி, பாதகமான பருவ நிலைகளை குழு ஆராய்கிறது. இச்சூழ்நிலைகளை சமாளிக்க மாவட்ட நிர்வாகப் பணியாளரமைப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது. அதன்படி தற்போதுள்ள, திறந்த வெளிக் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 1.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் கைப்பம்புகளும், விசைப்பம்புகளும்தான் குடிநீர் வழங்குவதற்கு முக்கிய ஆதாரமானதால் எல்லா நேரங்களிலும் செயல்படும் நிலையில் அவற்றை வைத்திருக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தற்போது கிராமப்பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வழங்குவதற்காக ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் 78,060 கைப்பம்புகளும் 17,583 விசைப்பம்புகளும் உள்ளன. குடிநீர் கிடைக்காதது புகார்களைத் தவிர்ப்பதற்காக அடிக்கடி குடிநீர் வழங்கும் நிலையை ஆராயுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

விசைப்பம்புகளும், கைப்பம்புகளும் செயல்படும் நிலையில் வைத்திருப்பதற்காக தேவைப்படும் உதிரிப்பாகங்கள் முதலியவற்றை வாங்குவதற்கும், கூடுதலாக இயங்கிரக்கம்மியரை நியமிப்பதற்கும் கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்திரவிட்டுள்ளார். பம்புகளின் (கைப்பம்பு, விசைப்பம்பு) மொத்த எண்ணிக்கை, பழுதுபார்க்கப்பட்டு வருபவை, பழுதுபார்ப்பின் தன்மை ஆகியவை தொடர்பான விவரங்களைக் காட்டும் பதிவேடுகளை ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் வைத்து வருவதைக் கவனிக்குமாறு கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்திரவிட்டுள்ளார். ஒவ்வொரு பம்புகளுக்கும் இலக்கமிடப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட வேண்டும்.

## பேரூராட்சி நிர்வாகம்.

### முன்னுரை.

**பேரூராட்சி நிர்வாகம்.**

பேரூராட்சி நிர்வாகத்தின் தற்போதைய நடைமுறை மூன்றாவது திட்ட துவக்கத்தில் தொடங்கியதாகும். இதுவரை குடிமையியல் பணிகளைக் கவனித்து வந்த மாவட்ட கழகங்களும், வளர்ச்சிப் பணிகளைக் கவனித்து வந்த சமுதாய வளர்ச்சி வட்டாரங்களும் நற்சார்பு அலகுகளாக இயங்கி வந்தன. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம் இவைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து இதன் பணிகளை ஒரே அலகில் செய்யும் வகையில் ஊராட்சி ஒன்றியங்களைத் தோற்றுவித்தது. இதுவரை ஊராட்சி நிர்வாகம் முழுவதும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன.

அரசு பல்வேறு புதிய நலத் திட்டங்களையும், வறுமையை போக்கும் திட்டங்களும் துவங்கியதன் காரணமாக பணிச்சுமை அதிகரித்துவிட்டதென்றும் இதனால் பேரூராட்சிகள் மற்றும் நகரியங்களின் வளர்ச்சியியல் போதிய கவனம் செலுத்த இயலாது என்றும் அரசு கருதியதால் பேரூராட்சிகள் நிர்வாகம் திறம்பட செயல்படவும், அவைகளின் வளமான வளர்ச்சிக்கு வழி அமைத்திடும் வகையிலும் 7-5-1981 முதல் பேரூராட்சிகள் இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணம் தனித்துறைத் தோற்றுவிக்கப்பட்டது.

**1. பேரூராட்சிகளின் நிதி வாய்ப்பு வளம்.**

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பேரூராட்சிகள் கடப்பாடு பணிகளையும், விருப்புரிமைப் பணிகளையும் அரசு ஒப்படைக்கும் இதர பணிகளையும் நிறைவேற்றிவர வகை செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகள் தனது சொந்த முயற்சியால் விதிக்கப்படும் வரி வகைகளை இதன் நிதி வாய்ப்பு வளர்த்திற்கு துணையாக அமைந்துள்ளது.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் வீட்டு வரி, தொழில் வரி மற்றும் வாகன வரிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட உச்ச, குறைந்தபட்ச விகிதங்களின் கட்டாய வகையில் விதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட பயன்களைக் கருத்தில் கொண்டு வேளாண்மை நிலங்கள் மீதும் வரி



விதிக்கலாம். அங்காடிகள், வண்டிப் பேட்டைகளுக்கு விதிக்கப்படும் சட்டங்கள் இதர பலன்தரத்தக்க முயற்சிகள மூலமாகவும், அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமக் கட்டணம், சொத்து மாற்றங்களில் செலுத்தப்படும் கட்டணம், கேளிக்கை வரியில் வரும் விதாச்சார அளவு போன்றவை பேரூராட்சியின் இதர நிதி வாய்ப்புகளாகும். ஊராட்சிகளின் சட்டம் 115-வது பிரிவின்கீழ் வசூலிக்கப்படும் உள்ளூர் வரியின் ஒரு பகுதியும் பேரூராட்சிக்கு அளிக்கப்படுகிறது.

இம் மாநிலத்தில் ஒரு கோடி மக்கட் தொகை அடங்கிய 654 பேரூராட்சிகள் தற்போது உள்ளன. அவற்றின் நிலை வருமாறு :—

| வரிசை எண். | தரம். | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | இரண்டாம் நிலை | 91 |
| 2 | முதல் நிலை | 294 |
| 3 | தேர்வு நிலை | 256 |
| 4 | நகரியம் | 13 |
| | | 654 |

**2. பேரூராட்சிகளுக்கு நிதி உதவி:**

பேரூராட்சிகளுக்கென தனி இயக்கம் அமைப்பதற்கு முன்னர் பேரூராட்சிகள் வடிகால் வசதிகளுக்காக (திட்டப் பணி) ரூ. 0.45 இலட்சமும், சாலைகளுக்குத் தார் போடுவதற்காக (திட்டத்தில் சேராத பணிகள்) ரூ. 15 இலட்சமும் மட்டுமே ஆண்டிற்கு உதவித் தொகையாகப் பெற்று வந்தன.

பேரூராட்சிகள். ஏறத்தாழ ஊராட்சிகளைப் போன்றே உள்ளன. அவற்றில் ரூ. 25-க்கும் குறைவாக நபர் வாரி வருமானம் உள்ள 513 பேரூராட்சிகளும், ரூ. 50-க்கும் குறைவான வருமானமுள்ள 124 பேரூராட்சிகளும் கொண்டுள்ளன. 654 பேரூராட்சிகளில் 455, ஆண்டுக்கு 2 இலட்சத்திற்கும் குறைவான வருவாய் உடையவைகளாய் உள்ளன. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை அகவிலைப்படி திருத்தப்பட்டதின் காரணமாக நிர்வாகச்

செலவு அதிகரித்ததால், பேரூராட்சிகளில் பெரும்பாலானவை தங்களது பகுதிகளில் குறைந்த அளவு அடிப்படை வசதிகளையும் கூட செய்து கொடுக்க இயலாத நிலையில் இருந்தன.

**3. தன்னிறைவுத் திட்டம் :**

பெரும்பாலான பேரூராட்சிகள் பின் தங்கிய நிலைமையில் இருப்பதையும் அவை பற்றாக்குறையான நிதி வசதி பெற்றிருப்பதையும் கருத்தில் கொண்டு, 1982-83-லிருந்து தொடங்கி 3 கட்டங்களில், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் முடிக்கக்கூடிய திட்டம் ஒன்று குறைந்த அளவு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக முழு மானிய அடிப்படையில், பேரூராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை அரசு நீட்டித்தது. இத் திட்டத்தின் பணியின்கீழ் பின் வருபவை அடங்கும் :—

1. குடிநீர் வழங்கல்.
2. இணைப்புச் சாலைகள்.
3. சிறு பாலங்கள்.
4. வடிகால்கள்.
5. ஆதிதிராவிடர் இடுகாடுகளுக்குச் செல்வதற்கான பாதை.
6. சலவைத் துறைகள்.
7. தெரு விளக்குகள்.

( ) முதற்கட்டப்பணி (1982-83) :

தன்னிறைவுத் திட்டம் மூன்று நிலைகளில் கொண்டு வரப்பட்டது. முதல் நிலை 1982-83-ல் பேரூராட்சி ஒன்றுக்கு ரூ. 3.42 இலட்சம் வீதம் 146 பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ. 5 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது. எஞ்சிய பணிகளை முடிப்பதற்காகவும், லெவி அல்லாத சிமெட்டி வாங்கியதால் மதிப்பீட்டுச் செலவில் ஏற்படக்கூடிய கூடுதல் செலவை செய்வதற்கும், கூடுதல் ஒதுக்கீடான ரூ. 101.32 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்தது.

( ) இரண்டாம் கட்டப்பணி (1983-84) :

இரண்டாம் கட்டத்தில் பேரூராட்சி ஒன்றுக்கு ரூ. 2.50 இலட்சம் என்ற வீதத்தில் ரூ. 500 இலட்சம் செலவில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 200 பேரூராட்சிகள் தெரிந்தெடுக்கப்பட்டன.



) மூன்றாம் கட்டப்பணி (1984-85) :

இந்த மூன்றாம் கட்டப்பணி 277 பேரூராட்சிகளை அடக்கிய தாகும். இக்கட்டப்பணிக்கான செலவு பேரூராட்சி ஒன்றுக்கு ரூ. 2.92 இலட்சம் என்ற வீதத்தில் ரூ. 808.84 இலட்சமாகும். 1984-85-ல் அரசு ரூ. 689.65 இலட்சம் அளித்துள்ளது. 31-3-1985 அன்றுள்ளபடி ரூ. 663 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்தியதால் எய்திய திட்ட நிதி சாதனைகள் குறித்த விவரங்களை பின்வரும் விவர அட்டவணையில் இருந்து காணலாம்.

1982-83 முதல் 1984-85 வரையிலான கால அளவில் மூன்று கட்டங்களில் பேரூராட்சிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எய்தபெற்ற சாதனைகள் :

| தொடர் எண். திட்டம். | திட்டச் சாதனை (பணிகளின் எண்ணிக்கை.) | நிதிச்சாதனை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. [illegible] | 1,273 | 255.36 |
| 2. இணைப்புச் சாலைகள் | 3,770 | 486.29 |
| 3. மதகுகள் | 2,601 | 218.94 |
| 4. வடிகால்கள் | 4,699 | 803.98 |
| 5. ஆதி திராவிடர் இடுகாட்டுக்கு நடைபாதை வசதி. | 152 | 14.65 |
| 6. சலவைத் துறை | 26 | 13.53 |
| 7. தெரு விளக்குகள் | 287 | 3.92 |
| மொத்தம் .. | 12,808 | 1,801.67 |

[1985 ஜூன் 12

புதிதாக பேரூராட்சிகள் இயக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது முதல் எய்தப்பெற்ற ஏனைய முக்கிய சாதனைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

**4. நீர் வழங்கல் :**

176 பேரூராட்சிகளுக்காக சீரமைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ரூ. 19.79 கோடி மதிப் பீட்டுச் செலவில் 61 திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 216 பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட ஆய்வுப்பணித் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. நீர் வழங்கு திட்டங்களுக்காகும் அதிகச் செலவினைக் கருதிப்பார்த்து, 1982-83 முதல் பேரூராட்சிகளில் நீர் வழங்குவதற்காக 50 சதவீத உதவித்தொகை அரசு வழங்கி யுள்ளது.

**உலகவங்கி நிதியுதவி :**

ரூ. 74.77 கோடி மதிப்பீட்டுச்செலவில் 72 நீர் வழங்குத் திட்டங்கள், உலக வங்கி நிதியுதவி பெறுவதற்காக தெரிவுசெய்யக் கப்பட்டுள்ளன. மேற்சொன்ன திட்டங்கள் 63 திட்டங்களுக்கு 75 சதவீத நிதி உதவியும், எஞ்சிய 9 திட்டங்களுக்கு 100 சதவீத நிதி உதவியும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 654 பேரூராட்சிகளில், 213 பேரூராட்சிகள் மட்டும் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்குப்படி, நகர்ப்பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 441 பேரூராட்சிகள் நகர்ப்பகுதியல்லாதவையாக அல்லது ஊரகப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்சொன்ன பகுதிகளுக்கு முழு நிதியுதவியுடன் ஊரக நீர் வழங்கு திட்டத்தை நீட்டிக்க, கிராம ஊராட்சிகளுக்கு இணை யாக மேற்சொன்ன 441 பேரூராட்சிகளைக் கருதுவதற்குரிய செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.



1985 ஜூன் 12]

**5. குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் :**

(அ) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் 'யுனிசெப்' நிறுவன நிதி உதவி—

குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணிகளை நிறைவேற்று வதற்காக அனைத்து நாடுகளில் 10 ஆண்டு நிறைவு ஆண்டுடன் இணைந்திருக்கும் வகையில் குறைந்த செலவுத் துப்புரவுத் திட்டத்தின் கீழ் உலர் கழிப்பிடங்களை நீர்வெளியே கசிந்து செல்லாத நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 'யூனிசெப்' நிறுவனம் நிதியுதவித்திட்டத்தின் கீழ் 72 பேரூராட்சிகளில் மேற்சொன்ன பெருந் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) மத்திய, மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் சிறிய நடுத்தர, நடுத்தர நகரங்களுக்குரிய வளர்ச்சித் திட்டம்—

மத்திய அரசு ஆதரவு தரும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சிறிய நடுத்தர நகரங்களான, ஓசூர், கள்ளக் குறிச்சி பேரூராட்சிகளில், குறைந்த செலவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசும் மாநில அரசும் செலவைப் பகிர்ந்து கொள்ளும் முறையில் (மத்திய அரசு 14.60 இலட்சம், மாநில அரசு 12.80 இலட்சம்) ரூ. 27.40 இலட்சத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 739 உலர் கழிப்பிடங்களை, நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றவும் 300 புதிய கழிப்பிடங்களைக் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

**(இ) 1955 ஆம் ஆண்டு சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்- துப்புறவுப் பணியாளர்களை மலம் எடுத்துச் செல்லும் பணி யிலிருந்து விடுவித்தல்—**

இத்திட்டத்தின் கீழ், 16 பேரூராட்சிகளில் பணியாற்றும் துப் புரவுப் பணியாளர்கள் மலத்தை தங்கள் தலையிலேயே சுமந்து செல்லும் அருவருப்பூட்டும் பணியிலிருந்து அவர்களை விடுவித்து

[1985 ஜூன் 12

அவர்களைப் பயனுள்ள பொருளாதாரத் தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவும், உலர்கழிப்பிடங்களைத் துப்புரவான கழிப்பிடங்களாக மாற்றவும் மத்திய அரசின், உள்துறை அமைச்சகத்திற்கு ரூ. 256.79 இலட்சத்திற்குச் செயற் குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

**6. கிராமப் பகுதி வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம் :**

**கிராமப் பகுதி — நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம்.**

கிராமப் பகுதி வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம், கிராமப் புற பகுதி நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 25 சதவீதத் தொகையை பேரூராட்சி பகுதிகளின் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்வதற்கான செயற் குறிப்பிற்கு கிராமப் பகுதி நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒப்புதலளித்துள்ளது.

கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின்கீழ் உள்ள மொத்த நிதி ஒதுக்கத்தில் பேரூராட்சிகளின் பயனுக்கான பணிகளுக்காக 15 சதவீதத்தை ஒதுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின் கீழ் ரூ. 5.85 கோடி செலவில் காடு வளர்ப்பு, சாலைகள் மேம்பாடு, வடிகால், மகளிர் மன்றங்களுக்குக் கட்டிடம் கட்டுதல், பணிக் கொட்டகை — பணி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்களுக்கான கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. நகரிய மேம்பாடு :**

மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி நகரியங்களில் பாதி மானியம், பாதி கடன் அடிப்படையில் ரூ. 58 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களும், போக்குவரத்து பயன் இறுதி முறை, கடைகள், அங்காடிகள், திறந்த வெளி அரங்கம், விளக்கு வசதி, சிறுவர் பூங்கா, கேளிக்கை நிலையங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் முதலிய திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



1985 ஜூன் 12]

**ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் :**

(1) மத்திய அரசுத் துறை திட்டம்—

ஹோசூர், கள்ளக்குறிச்சி பேரூராட்சிகளில் ரூ. 80 இலட்சம் மத்திய அரசுத் துறைத் திட்டமான (IDSMT) செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடைகள், ஆடுமாடு வெட்டுமிடம், பேருந்து நிலையம் ஆகியவை கட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(2) மாநில அரசுத் துறைத் திட்டம் (IDSMT)—

மாநில அரசுத் துறைத் திட்டத்தின் கீழ் அங்காடிகள், பேருந்து நிலையங்கள், கடைகள் முதலியவற்றை மேம்படுத்துவதற்கான பின்வரும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

| தொடர் எண்ணும் திட்டமும். | பதவிகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) பேருந்து நிலையம் | 16 | 150.40 |
| (2) அங்காடிகள், கடைகள் | 13 | 51.76 |
| (3) கட்டணக் கழிப்பிடங்கள் | 21 | 11.65 |
| | 50 | 219.81 |

**9. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :**

ஏறக்குறைய 1 கோடி மக்கள் தொகைக்கு பேரூராட்சிகள் வசதி செய்து கொடுக்கின்றன. மாநில மக்கள் தொகையில் இது ஐந்தில் ஒரு பங்காகும். இருப்பினும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பேரூராட்சிகளின் பங்கு ரூ. 2.25 இலட்சம் மட்டுமே. குடிநீர் வழங்குதல், வடிகால், குறைந்த செலவிலான துப்புரவு வசதி, பேருந்து நிழற்கொடைகள், அங்காடிகள், எல்லையோர நகர் மேம்பாடு, நகர்ப்புற மக்களின் அடிப்படை பணி வசதிகள், கோயில் நகர மேம்பாடு, அலுவலகக் கட்டிடங்கள், நிர்வாக அலுவலருக்கான குடியிருப்புகள், ஆதிதிராவிடர் மேம்பாடு,

[1985 ஜூன் 12

தூசியற்ற மேற்பரப்பு சாலை அமைத்தல், வளர்ச்சி நிலையங் களை மேம்படுத்துதல், மாவட்ட பேரூராட்சி அலுவலர்களுக்கு வண்டி வழங்குதல், சமுதாய தொலைக்காட்சி பெட்டி வழங்குதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 25.05 கோடி கேட்கப்பட்டுள்ளது.

**10. பகுதி II திட்டங்கள் (1985-86).**

1985-86-ல் ரூ. 2.30 இலட்சம் செலவில் மாவட்ட பேரூராட்சி அலுவலர்களுக்கு இரண்டு ஈப்புகள் வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**11. நகர்ப்புற அடிப்படை வசதிகள் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராம்பட்டினம், குத்தாலம், பாபநாசம், திருவையாறு, கூத்தாநல்லூர் ஆகிய பேரூராட்சி களின் அடிப்படை வசதிகளை அளிப்பதற்கான 'யுனிசெப்' ஆதரவு பெற்ற நகர்ப்புற அடிப்படை வசதிப் பணிகள் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

136402
சென்னை-600 008
V211,31 N85
N85.7.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.